# ஒரு வள்ளலின் உதயம்

**தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று. (கு.236)**

*‘ஒரு துறையில் முற்பட்டுத் தோன்றுவதானால் புகழோடு தோன்ற வேண்டும். அத்தகைய சிறப்பு இல்லாதவர் அங்குத் தோன்றுவதைவிடத் தோன்றாமல் இருப்பது நல்லது’*

**உ**லகத்தில் உள்ள நாடுகளில் சிறப்பும், மதிப்பும் பெற்று விளங்கும் ஒரே நாடு, இந்திய நாடாகும். இந்தியா அந்நியர் ஆட்சியில் இருந்து விடுபட்டுப் முழுச் சுதந்திரம் அடைந்து பாரதநாடு என்று விளங்குகின்றது. பெருமை படைத்த பாரத நாட்டில் நிலவளமும், நீர்வளமும், பாடல் பெற்ற புண்ணிய ஸ்தலங்களும், காவிரி ஆறும் கொண்டது தமிழ்நாடு ஆகும்.

தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களில் வட ஆர்க்காடு மாவட்டம் - இன்றைய வேலூர் மாவட்டம் சிறப்பு வாய்ந்த சிறந்த மாவட்டமாக விளங்குகின்றது. வடஆர்க்காட்டின் தலைநகரமான வேலூரில் இருந்து ஆரணி என்னும் ஊர்

25மைல் தொலைவில் உள்ளது, ஆரணிக்கு மேற்கு திசையில் சேத்துப்பட்டு என்னும் ஊர் -14 மைல் தொலைவில் உள்ளது. அவ்விடத்தில் இருந்து தென்னார்க்காடு மாவட்டம் பிரிகின்றது. தென்னார்க்காடு மாவட்டத்தில் சேத்துப்பட்டு என்னும் ஊரில் இருந்து 7வது மைல் தூரத்தில் கோட்டைப்பூண்டி என்னும் ஓர் அழகிய சிறிய கிராமம் உள்ளது.

அவ்வூர் நிறைய மலைகளும், வயலும், பனை மரங்களும், மா மரங்களும், நிறைந்து காணப்படும். சிறிய சிற்றோடைகள் சல சலவென்று ஓடிக்கொண்டு இருக்கும். அவ்வூரின் நடுவில் பொன்னியம்மாள் குளம் என்று ஒரு அழகிய குளம் உண்டு. குளத்தைச் சுற்றி அரசமரமும், வேப்ப மரமும், பூவரசன் மரமும், நாகமரம், ஆலமரம் முதலிய மரங்களும் பூத்துக் குலுங்கும். காற்று சிலு, சிலு என்று எப்பொழுதும் வீசிக் கொண்டே இருக்கும். அவ்வூர் மக்களின் தாகத்தைத் தீர்க்கும் தடாகமாக அமைந்து இருந்தது. தண்ணீர் குடிப்பதற்கு இனிப்பாக மிகவும் சுவையாக அமையப்பெற்று இருந்தது. அதற்கடுத்து அழகிய ஏரியும், கம்பீரமான பெருமாள் கோவிலும், திரௌபதி அம்மன் கோவிலும் அமையப்பெற்று ஒரு அழகிய சிற்றூராம் கோட்டைப்பூண்டி கிராமம் என்று பெயர் பெற்று விளங்கியது.

இயற்கை வளம் பொருந்திய கோட்டைப்பூண்டி கிராமத்தில் வன்னிய மரபினரான சடையப்பபிள்ளை என்பவர் வசித்து வந்தார். கறுத்த மேனியும், பருத்த உடலும், சற்று உயரமாகவும் உருவம் பெற்றவர். மிகவும் நல்லவர், நேர்மையானவர், பெரியவர்களிடத்தில் மரியாதை காட்டுபவர். ஆனால் கொஞ்சம் முரட்டுக் குணம் படைத்தவர். விவசாயக் குடும்பத்தில் பிறந்து, வளர்ந்து, விவசாயத்தைத் தொழிலாக செய்து வந்தார்.

முத்தம்மாள் என்னும் புனிதவதியைத் திருமணம் செய்து கொண்டு சொந்த வீடும், நிலமும் வைத்துக் கொண்டு



இல்லறம் இனிது நடத்தி வாழ்ந்து வந்தார். சடையப்ப பிள்ளையின் மனைவி முத்தம்மாள் மிகவும் சிவந்த மேனியும், ஒல்லியான உருவமும், கணவனுக்கு ஏற்ற உயரமுமாக அமைந்து இருந்தார். முத்தம்மாள் தாய் வீடும் கோட்டைப் பூண்டி கிராமமே ஆகும். முத்தம்மாள் மிகவும் தைரியசாலி, அன்பும், பண்பும் அடக்கமும் நிறைந்த மங்கையாவார். கணவருக்கு மிகவும் உறுதுணையாக இருந்து விவசாயத்தைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வந்தார்கள்.

தினமும் அதிகாலையில் 3 மணிக்கு எழுந்திருக்கும் பழக்கமுடையவர். 3 மணிக்குப் பல்துலக்கி, முகம் அலம்பி, கை, கால் சுத்தம் செய்து கொண்டு வீட்டுத் தெரு வாசப்படிக்குச் சென்று சுத்தமாகப் பெருக்கி, சாணம் தெளித்துக் கோலமிடுவார்கள். பிறகு வீடு முழுவதும் கூட்டி, சாணத்தால் மெழுகிச் சுத்தம் செய்த பிறகு பாத்திரத்தைச் சமையல் செய்வதற்குத் துலக்கி, கழுவி வைத்து விடுவார்கள்.

வீட்டின் பின்புறம் கிணற்றடிக்குச் சென்று வருவார்கள். மஞ்சள் பூசி, குங்குமம் இட்டு, விபூதி பூசி, நூல் ஆடை அணிந்து மகாலட்சுமி போல் வருவார்கள். பிறகு வீட்டிற்கு அருகில், ஊரின் நடுவில் உள்ள பொன்னியம்மாள் குளத்திற்குச் சென்று தலைமேல் தவலையில் தண்ணீர் கொண்டு வருவார்கள். குடிப்பதற்கும் சமைப்பதற்கும் ஊர் மக்கள் குளத்து தண்ணீர்தான் பயன்படுத்துவார்கள். அதிகாலை 4 மணிக்குத் தினமும் குளத்திற்குச் சென்று தண்ணீர் கொண்டு வந்து சமையல் செய்வார்கள். 5 மணிக்குச் சரியாகச் சமையலை முடித்து விடுவார்கள்.

முத்தம்மாளின் கணவர் தினமும் அதிகாலை 4 மணிக்கு எழுந்து தன் சொந்த வயலுக்குச் சென்று வேலைகளை கவனிப்பார். அந்தக் காலத்தில் நிலத்திற்குத் தண்ணீர் இறைக்கப் பம்புசெட் கிடையாது. மாடுகள் பூட்டி,

கவலை இறைப்பது (அ) ஏற்றம் இறைப்பது என்று நிலத்திற்குத் தண்ணீர் பாய்ச்சுவார்கள், வெள்ளிமுளைக்கும் முன் வயல் வேலையில் இறங்கிச் சடையப்பர் வேலை செய்வார்கள்.

முத்தம்மாள் காலை 5 மணிக்கு தனக்கும், தன் கணவருக்கும் ஒரு கூடையில், சமைத்த உணவுப் பொருள்களை எடுத்துக் கொண்டு வீட்டைப் பூட்டி விட்டு, தன்னந்தனியாக ஒரு மைல் தெலைவில் உள்ள தன் வயலுக்குத் தலைமேல் சாப்பாட்டுக் கூடையுடன் செல்வார்கள். அந்தக் காலத்தில் காலில் செருப்பு அணியும் பழக்கம் கிடையாது. கருக்கு இருட்டில் கால் தடுக்கி கல் குத்துமாம். முத்தம்மாள் இவ்வாறாக இடையூறுகளைத் தாங்கிக் கொண்டு தன் கடமை தவறாமல் வயலுக்குச் சென்று தன் கணவருடன் வயலில் இறங்கி மடைமாற்றுதல், களைபறித்தல், நாற்று நடுதல், விதையிடுதல், அறுப்பு அறுத்தல் உட்பட எல்லா வேலைகளையும் இன்முகத்துடன் செய்வார்கள். வேலை முடிந்து உணவருந்திச் சற்று இளைப்பாறிவிட்டு, வெய்யில் தாழ்ந்து மாலை வரும் முன், வீட்டிற்குச் சமைப்பதற்குக் காய்ந்த தென்னை, பனைமரங்களின் மட்டைகள், சிறுகுச்சிகள், விறகுகள் இவற்றைக் கஷ்டப்பட்டுத் தினமும் சேகரித்துச் சாப்பாடு கொண்டு சென்ற கூடையில் விறகு சுமையும் வைத்துக்கொண்டு அந்தி மாலை 5 மணிக்கு வயலில் இருந்து வீட்டிற்குத் திரும்பி வருவார்கள்.

வீட்டிற்கு வந்து மறுபடியும் சமைப்பதற்குக் குளத்திற்குச் சென்று தண்ணீர் கொண்டு வருவார்கள். அப்பொழுதெல்லாம் பித்தளைப் பாத்திரங்கள் கொஞ்சம் குறைவாக இருக்கும். தேவைக்கு அதிகமாக வீட்டில் சாமான்கள் இருப்பதில்லை. மண்பாத்திரங்களில் தான் சமைப்பார்கள். ஆகவே முத்தம்மாள் தண்ணீர் கொண்டு வந்து சமைப்பார்கள். காலையில் கூழும், களியும், குழம்பும் சமைப்பார்களாம். இரவில் மட்டும் சோறு, கீரைக் குழம்பு, காய்கறிகள் இப்படிச் சமைப்பார்கள். மிகவும் சுவையாக சமைப்பார்கள்.



தன் கணவர் வயல் வேலை முடிந்து முத்தம்மாளுடன் வீட்டிற்கு வந்து கை, கால் அலம்பிக் கொண்டு சமையல் முடிப்பதற்குள் ஊர்க் கோடியில் உள்ள மதுக்கடைக்குச் சென்று கொஞ்சம் சாராயம் குடித்துவிட்டு வருவாராம். அளவோடு உடல் வலிக்காக குடிக்கும் பழக்க முடையவர். வீட்டிற்கு வந்ததும் முத்தம்மாள் சுவையாக மீன்குழம்பு, கருவாட்டுக் குழம்பு இப்படிச் சமைத்து உள்ளதை கணவனும், மனைவியும் உணவருந்திவிட்டுப் படுக்கைக்குச் செல்வார்கள்.

அவர்களின் அன்றாட வாழ்க்கை இவ்விதம் தினமும் நடைபெற்று வந்தது. ஒருநாள் முத்தம்மாள் விடியற்காலை 5 மணிக்கு வயலுக்குத் தனியாகச் சாப்பாட்டுக் கூடையுடன் சென்று கொண்டு இருக்கின்றார். அவர் காதில் தோடும் கழுத்தில் அட்டிகையும், காலில் கொலுசும் அணிந்து இருந்தார்களாம். வானத்தில் பொழுது விடியவில்லை. இருட்டாக இருந்தது. வயல் 1 மைல் தொலைவு உள்ளது. முத்தம்மாள் 1/2 மைல் தொலைவு நடந்து சென்று கொண்டு இருக்கும் போது பின்னால் ஒரு திருடன் போர்வை போர்த்துக் கொண்டு நடந்து வந்து கொண்டு இருக்கின்றான். முத்தம்மாள் ‘யார் அது?’ என்று பின்னால் திரும்பிக் குரல் கொடுத்தார்; திருடன் பதில் கொடுக்கவில்லை.

எனவே பின்னால் வரும் உருவம் திருடன்தான் என்று புரிந்து கொண்டார்கள். உடனே அவர்கள் சிறிதும் பயப்படாமல் தன் சமயோசித புத்தியால் வழியில் ஒரு சிறுகுன்றின்மீது ஏறி நின்று கொண்டு ‘டேய் முனியா, கந்தா, வீராசாமி! சீக்கிரம் ஓடி வாங்க, நான் வீட்டில் இருந்து வந்து விட்டேன்’’ என்று உரக்கக் கூவினார்கள். கொஞ்ச நேரம்

அந்தக் குன்றின் மீது உட்கார்ந்து இருந்துவிட்டு கீழே இறங்கி வந்து பார்த்தார்களாம். தன்னைப் பின் தொடர்ந்து வந்த உருவம் காணவில்லையாம். பிறகு தைரியமாக நிலத்திற்குச் சென்று கணவரிடம் விவரத்தைக் கூறினார்களாம். மனைவியின் தைரியத்தையும் சமயோசித புத்திக் கூர்மையையும் நினைத்தும், கேட்டும் சந்தோஷமடைந்து மனைவியைப் பாராட்டினாராம்.

கணவனும், மனைவியும் கருத்து ஒருமித்து இனிது வாழ்ந்து வந்தார்கள். இவ்வாறாகத் திருமணம் ஆகி வாழ்க்கை நடத்தி வருடங்கள் ஓடிக்கொண்டு இருந்தன. 10 வருடங்கள் கழிந்து விட்டன. ஆனால் புத்திரபாக்கியம் வாய்க்கவில்லை. முத்தம்மாள் குழந்தை பிறக்கவில்லையே என்று மிகவும் மனம் வருந்தினார்கள். கடவுள் மீது நம்பிக்கை வைத்துப் பயபக்தியுடன் பூஜை செய்து வந்தார்கள். திருவண்ணா மலைக்குச் சென்று குழந்தை வரம் வேண்டி, கணவனும், மனைவியும் கால் நடையாக மலையைச் சுற்றிக் கிரிவலம் வந்தார்களாம். தினமும் காலையில் குளித்ததும் ஈரப்புடவையுடன் கோட்டைப்பூண்டி கிராமத்தில் உள்ள பிள்ளையார் கோவிலுக்குச் சென்று சுற்றி வருவார்களாம்.

ஒவ்வொரு திங்கட்கிழமையும் விரதம் இருந்து அரசமரம் சுற்றி வருவார்களாம். அன்று சோமவாரம் வீட்டில் பூசை அறையில் தரையை மெழுகி நடுவீட்டில் சாமிக்குப் படைத்துவிட்டு தரையில் உள்ள சோற்றை இரண்டு கைகளையும் பின்னால் கட்டிக்கொண்டு மண்டியிட்டு முன்புறமாகக் குனிந்து தலையைத் தாழ்த்தி வாயாலேயே அந்தச் சோற்றைக் கவ்விச் சாப்பிடுவார்களாம்.

அவ்வாறு ஒவ்வொரு திங்கட்கிழமையும் செய்து வந்தால் குழந்தை பிறக்கும் என்று பயபக்தியுடன் செய்து வந்தார்கள். மடியில் பிள்ளை வந்து படுக்கும் என்று சில



வீட்டில் மடிப்பிச்சை வாங்கி வருவார்களாம். இப்படியாகப் பிள்ளைவரம் வேண்டிக் கடும் தவம் இருந்து வந்தார்கள். முத்தம்மாளின் தவத்தை ஏற்றுக்கொண்டு ஆண்டவன் அருள்புரிந்தார். முத்தம்மாளின் மணி வயிறு மகப்பேறு வாய்த்தது. முத்தம்மாள் கருத்தரித்ததும், கணவனும், மனைவியும் பெரு மகிழ்ச்சியடைந்தார்கள். கடவுளின் அருளை நினைத்து நன்றியுடன் வழிபட்டார்கள். கருவுற்ற சமயத்திலும் முத்தம்மாள் வீட்டு வேலைகளையும் வயல் வேலைகளையும் கவனித்து வந்தார்கள்.

10 மாதம் பூர்த்தியானது. எல்லாம் வல்ல இறைவன் அருளால் நல்ல நாளில், சூரிய உதயாதி கோழி கூவும் விடியற்காலையில் வீட்டில் சுகப்பிரசவமாக ஓர் அழகான ஆண் குழந்தை பிறந்தது. முத்தம்மாளுக்குப் பெரு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. தான் தவமிருந்து பெற்ற தவப்புதல்வனான தலைமகனுக்குத் திருவண்ணாமலையில் கோயில் கொண்டுள்ள எம்பெருமான் திரு அருணாசலேசுவர் பெயரையே வைக்க வேண்டும் என்று கருதினார்.

அவர் அருளால் பிறந்த குழந்தை இது என்று கூறி ஒரு நல்ல நாளில் தன் மகனுக்கு அருணாசலம் என்று திருப்பெயர் சூட்டினார்கள். முத்தம்மாள் சிவந்த மேனியுடையவர்கள், சடையப்பர் கறுத்த மேனியுடையவர். குழந்தை கணவனைப்போல் கறுத்த மேனியுடன் மூக்கும் முழியுமாக கொழு, கொழு வென்று இருந்தது, முத்தம்மாள் உறவினர்களிடம், ‘‘கறுப்பு நிறம் ஆயிரம் பொன் கொண்டது! பரவாயில்லை! என் மகன் அதிர்ஷ்டசாலி!’’ என்று விட்டுக் கொடுக்காமல் பெருமையுடன் பேசுவார்களாம். நாள் கடந்து பிறந்த குழந்தையாதலால் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாகத் தாலாட்டிச் சீராட்டி அன்போடு வளர்த்து வந்தார்கள். சடையப்பரும் குழந்தையைப் பார்த்துப் பெருமகிழ்ச்சியடைந்தார்கள்.

ஒருநாள் முத்தம்மாளும், கணவரும் குழந்தையை நிலத்திற்குத் தூக்கிச் சென்று புல் தரையில் துணி பரப்பிப் படுக்க வைத்து விட்டு முத்தம்மாள் வயலில் இறங்கிப்பயிர் வேலையை கவனித்துக் கொண்டு இருந்தார்கள். அப்பொழுது ஒரு சிறிய பாம்பு குழந்தையின் கால் பெருவிரலில் கடித்து விட்டுச் சென்று விட்டது. இதை சடையப்பர் கவனித்து விட்டார். பதறித் துடித்து தன் மனைவியை உரக்கக் கூவி அழைக்கின்றார். ‘முத்தம்மா நம்ம மகனைப் பாம்பு கடித்துவிட்டது. ஓடி வா’ என்று கூப்பிடுகின்றார். தன் கணவரின் இந்தக் குரலைக் கேட்டதும் வயலில் வேலை செய்வதை விட்டு விட்டு ஓடி வந்து தன் மகனை தோள் மேல் தூக்கிப் போட்டுக் கொண்டு வெகுவேகமாக ஊரில் உள்ள நாட்டு வைத்தியரிடம் ஓடிச் சென்றார். பின்னால் அவர் கணவர் மனைவியின் வேகத்திற்கு ஓடமுடியாமல் மூச்சு வாங்க ஓடிச்சென்று வைத்தியர் வீட்டை அடைந்தார்.

முத்தம்மாள் வைத்தியரிடம் குழந்தையைக் காண்பித்து ‘ஓ’ என்று கதறி அழுதார்களாம். வைத்தியர் முத்தம்மாளின் உறவினர் ஆவார். ஆதலால் வைத்தியரைப் பார்த்து ‘‘மாமா என் பிள்ளையைத் தவம் இருந்து பெற்றேன். அவன் உயிரை காப்பாற்றித் தரவேண்டும். தராவிட்டால் உங்கள் காலடியிலேயே என் உயிரை விட்டு விடுவேன்!’’ என்று துடி, துடித்துக் கதறிக் கண்ணீர் விட்டு அழுதார்கள். உடனே வைத்தியர் சமாதானப்படுத்திப் பச்சிலை மருந்து கொடுத்து, கண்ணில் கலிக்கம் போட்டு, ஒரு மணி நேரம் வைத்திருந்து குணமாக்கிக் குழந்தையை முத்தம்மாளிடம் கொடுத்தாராம். இறைவன் அருளாலும், வைத்தியரின் முயற்சியாலும் தன் குழந்தை பிழைத்தது என்று மகிழ்ச்சியடைந்து குழந்தையை உச்சி முகர்ந்தனர்.

மார்போடு அணைத்துக் கொண்டு, தன் மாமா வைத்தியருக்கு நன்றி கூறி அவர் காலில் விழுந்து வணங்கி



விடை பெற்று வீடு திரும்பினார்கள் கணவனும் மனைவியும்! அதன் பிறகு 5 வருடங்கள் கழித்து ஒரு மகன் - இளைய மகனைப் பெற்றெடுத்தார்கள். குழந்தை முத்தம்மாளைப் போல சிவப்பாக இருந்தது. குழந்தைக்கு வெள்ளையன் என்று பெயரிட்டனர். அதன் பிறகு சில வருடங்கள் கழித்து ஒரு பெண் குழந்தை பிறந்தது. அந்தக்குழந்தை தன் தந்தையைப் போல் மிகவும் கறுப்பாக இருந்தது. அந்தப் பெண் குழந்தைக்கு வீட்டுத் தெய்வத்தின் பெயரான பச்சையம்மாள் என்ற பெயரைச் சூட்டினார்கள். சடையப்பரும் முத்தம்மாளும் மூன்று குழந்தைகள் முத்தாக பிறந்துள்ளது என்று திருப்தியடைந்து அத்துடன் நிறுத்திக் கொண்டார்கள்.

குழந்தைகளின் மழலை மொழிகளைக் கேட்டு, மனம் பூரித்து வாழ்ந்து வந்தார்கள். தன் மூத்த மகன் அருணாசலம் 5 வயது நிரம்பியவுடன், மகனைப் பள்ளியில் சேர்த்து படிக்க வைக்க வேண்டும் என்று கணவரிடம் முத்தம்மாள் கூறினார்கள். அதற்குச் சடையப்பர் மனைவியிடம் நம் மகன் படிக்கக் கூடாது. நம் சாதியில் யாரும் படிப்பதில்லை. அப்படி யாராவது படித்தால், இறந்து விடுவார்கள்’’ என்று சொல்லித் தன் மகனைக் கண்டிப்பாகப் படிக்க வைக்கக்கூடாது என்று பிடிவாதமாகக் கூறிவிட்டாராம். தன் மகன் ஆடு, மாடு மேய்க்கட்டும் என்று ஆடுகள் வாங்கிவிட்டாராம். ‘‘அந்தக் காலத்தில் யாரும் நாங்கள் படிப்பதில்லை. குழந்தை பெரியவன் ஆனதும் ஆடு, மாடுகள் மேய்த்துக் கொஞ்சம் பெரியவன் ஆனதும் வயல் வேலைகளைக் கற்றுக் கொண்டு வேலைகள் செய்வார்கள் என்று கூறிவிட்டாராம். முத்தம்மாள் மிகவும் மனம் வருந்தி கணவரிடம் அழுது முறையிட்டார். ‘‘எதையோ மூடப்பழக்கமாகச் சொல்கின்றீர்களே, இன்னும் அதையே கடைப்பிடித்து நாம் வாழ வேண்டுமா? நம் குழந்தை படிக்காமல் முட்டாளாக வளர்ந்து இறப்பதை விட படித்து நாலு எழுத்து கற்றுணர்ந்து, அவன் வாயால் வாசித்து விட்டு இறப்பது மேல்’’ என்று கூறினார்.

கணவன் இந்தக் கேள்விக்குப் பதில் கூறவில்லை. பேசாமல் இருந்துவிட்டார். அவருக்கும் ஆசை ஒரு பக்கம். பழைய கட்டுப்பாடுகள் பயம் ஒரு பக்கம்! எனவே ஆடுகள் மேய்க்கட்டும் என்று கூறி விட்டார். முத்தம்மாள் துணிந்து வருவது வரட்டும் என்று கடவுள் மேல் நம்பிக்கை வைத்து குழந்தையைப் படிக்க வைப்பது என்று முடிவு செய்து விட்டார். ஊரில் வாரம் ஒருமுறை சந்தை கூடும். சந்தைக்குச் சென்று தன் மகனுக்குப் புதுத்துணி வாங்கி வருவார். பள்ளிக்கு எடுத்து செல்லப் பலகையும், அரிச்சுவடியும் வாங்கி வருவார். வளர்பிறையில் ஒரு நல்ல நாளில் குழந்தைக்குப் புதுத் துணி அணிவித்து, பலகை, அரிச்சுவடியைக் கொடுத்து ஊரில் உள்ள பள்ளிக்கு அழைத்துச் சென்று ஆசிரியரிடம் சொல்லிப் பிள்ளையைப் பள்ளியில் சேர்த்துவிட்டு மனத்திருப்தியுடன் வீட்டிற்கு வந்தார்கள். ஆடுகள் மேய்ப்பதற்காக ஒரு ஆளை கூலிக்கு நியமித்துத் தினமும் ஆடு மேய்க்க ஏற்பாடு செய்து விட்டார்கள். கணவர் அந்திப் பொழுது சாய்ந்து வீட்டிற்கு வருவதற்குள் மகனைப் பள்ளிக்கூடத்தில் இருந்து அழைத்து வந்து விடுவார்கள். ஆடுகளைக் கூலிக்காரன் மேய்த்துவிட்டு வீட்டுப் பட்டியில் அடைத்து விட்டு போய்விடுவான். இவ்வாறே தினமும் நடந்து கொண்டு இருந்தது.

கணவன் வீட்டிற்கு வந்ததும் மகன் ஆடு மேய்த்து முடித்து பட்டியில் அடைத்துள்ளான் என்று நினைத்துக் கொள்வார். வெகு நாள் தன் மகன் படிப்பது சடையப்பருக்குத் தெரியாது. சமயம் பார்த்து முத்தம்மாள் பக்குவமாக சமாதானப்படுத்துவார்கள். சடையப்பர் உள்ளுக்குள் தன் மனைவியை மெச்சிப் பூரிப்பார்.

முத்தம்மாள் தன் வயலில் வேலை இல்லாத சமயத்தில் மற்ற வயல்களுக்குச் சென்று வேலை செய்வார்கள், சில வீடுகளில் நெல் உரலில் இட்டு கூலிக்குக் குத்துவார்களாம். இவ்வாறு நெல் குத்தி, பயிர் வேலை செய்து



அதில் வரும் பணத்தைக் குழந்தைகளுக்காகச் சேர்த்து வைத்தார்கள். முத்தம்மாளின் அக்காள் வேலூரில் குடும்பத்துடன் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் ஊருக்கு வரும்போது பணம் கொடுத்து வேலூரில் இருந்து அழகான ரெடிமேட் சட்டைகள் வாங்கி வரச் சொல்வார்கள். தன் மகனுக்குத் தீபாவளி, பொங்கல் பண்டிகைக்கு அணிவித்து அழகு பார்ப்பார்கள்.

அருணாசலம் பள்ளிக்கூடத்தில் வாத்தியார் இடத்தில் மிகுந்த தெய்வ பக்தியுடன் பழகுவார். தனக்குக் கல்வி கற்பிக்கும் ஆசானைத் தெய்வமாக மதிப்பார்.

படிப்பிலும் சிறந்த மாணவனாக இருந்தார். அதனால் ஆசிரியரிடத்தில் அருணாசலத்திற்கு மிகுந்த அன்பும், பாராட்டுதலும் கிடைத்தது. அருணாசலம் பள்ளிக்கூடத்தில் ஒரு விழா நடந்தது. அப்போது மூன்றாம் வகுப்பு படித்தார். மாணவர்கள் அனைவரும் விழா நாள் அன்று பாட்டுப்பாடி கோலாட்டம் போட்டு வீதியில் ஊர்வலம் வந்தனர். அதில் அருணாசலம் முன்வரிசையில் நின்று கொண்டு அழகாக கோலாட்டம் போட்டு பாடிக் கொண்டு வந்தார். ஆசிரியர்கள் உடன் வந்தனர். இந்தக் காட்சியை முத்தம்மாள் தன் வீட்டு திண்ணையில் ஏறி நின்று கொண்டு தன் மகனைப் பார்த்து எல்லையில்லா மகிழ்ச்சியடைந்தார்கள். மாணவர்கள் வீதி, வீதியாக ஊர் முழுவதும் சுற்றி வந்தார்கள். அருணாசலம் மெதுவாகக் கோலாட்டம் போட்டார். இதைப் பார்த்து விட்ட ஆசிரியர் அருணாசலத்தை கோலாட்டம் போடவேண்டாம் என்று சொல்லித் தன் தோள் மீது உட்கார வைத்துக் கொண்டு மீதி வீதிகளில் ஊர்வலம் வந்தார்.

அருணாசலமோ தன் ஆசிரியர் தோள் மீது உட்காருவதா என்று அஞ்சி, ‘‘வேண்டாம் சார், நான் மெதுவாக நடந்து வருகின்றேன்’’ என்றார். அதற்கு ஆசிரியர்

''வேண்டாமப்பா! உன் பாதங்கள் சிவந்து வீங்கிவிட்டது. பரவாயில்லை நான் தூக்கி வருகின்றேன், பேசாமல் இரு'' என்று சொல்லிவிட்டார். அருணாசலம் தன் ஆசிரியரின் அன்பைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் விட்டார். ஊர்வலம் முடிந்ததும் தோள் மீதே வீடு வரை தூக்கிச் சென்று முத்தம்மாளிடம் ஒப்படைத்து விட்டுக் ''குழந்தையைக் கவனித்துக் கொள்ளுங்கள். வெந்நீர் ஒத்தடம் கொடுங்கள். கால் குணமானதும் பள்ளிக்கு அனுப்புங்கள்'' என்று கூறிவிட்டுச் சென்றார். முத்தம்மாள் அந்த ஆசிரியருக்கு நன்றி கூறினார்.

தன் மகனுக்குத் தன் கண்ணடியே பட்டு விட்டது என்று புலம்பினாள். மகனுக்கு மூன்று வீட்டு கூரைகளின் மஞ்சுகளைக் கொண்டு வந்து, மிளகாய் வைத்து திருஷ்டி சுற்றினாள். கொஞ்சம் கூட மிளகாய் நெடி வரவில்லை. என் மகனுக்கு என் கண்ணும், ஊர் கண்ணும் பட்டுவிட்டது என்று பக்கத்தில் உள்ளவர்களிடம் கூறினாள். தன் மகனுக்கு உடம்பு, கை கால் எல்லாம், வலிக்கும் என்று உடனே அடுப்பை மூட்டி வெந்நீர் காய வைத்துக் குழந்தைக்குக் கை, கால்களை உருவி வெந்நீர் ஊற்றிக் குளிப்பாட்டினாள். சுடசுடச் சோறு சமைத்து ஊட்டி, தூங்கவைத்தாள்.

தன் கணவர் இரவு வீட்டிற்கு வந்ததும் தன் மகனுக்கு நடந்ததைக் கூறி ஆசிரியர் 'தோள்மீது தூக்கி வந்து விட்டதைச் சொல்லி வருந்தினாள். பள்ளிக்கூடத்தில் அப்பொழுது எல்லாம் அவ்வளவாக பலகை, பலப்பம் கிடையாது. சில சமயம் ஓலையில் ஆணி எடுத்து எழுத வேண்டும்.

தரையில், மணலில் விரலால் எழுத வேண்டும். இவ்வாறாகப் பள்ளிக்கூடத்தில் படித்து வந்தார்கள். முத்தம்மாளின் மகன்கள், அருணாசலத்தின் தம்பியும் உடன் பள்ளிக்குச் சென்று வந்தான். இரண்டு மகன்களும் பள்ளிக்குச் சென்று வருவார்கள். குழந்தை பச்சையம்மாள் வீட்டில்



இருப்பாள். பெண் பிள்ளைகளை பள்ளிக்குக் கண்டிப்பாக அனுப்புவது இல்லை. அருணாசலமும், வெள்ளையனும் பள்ளிக்கூடம் விட்டு வீட்டிற்கு வந்ததும். முத்தம்மாள் ஒரே பெரிய தட்டில் சோறு போட்டு குழம்பு ஊற்றி விடுவார்கள். அருணாசலமும், அவன் தம்பியும் சாப்பாட்டு தட்டின் முன்னால் எதிரும் புதிருமாக அமர்ந்து கொண்டு சாப்பாட்டில் நடுவில் ஒரு கோடு போட்டு ஆளுக்குப் பாதி என்று சாப்பிடுவார்கள். சாப்பிட்டுக் கொண்டு இருக்கும் பொழுது தம்பி, அடியில் கையால் தள்ளி, தள்ளி அண்ணன் பாகத்தில் உள்ள சோற்றைத் தன் பக்கம் தள்ளிக்கொள்வார். இருவரும் பேசி, சிரித்துக்கொண்டு சாப்பிடுவார்களாம். சாப்பிட்டுக் கொண்டு இருக்கும் பொழுது தம்பி அடியில் கையால் தள்ளி, தள்ளி அண்ணன் பாகத்தில் உள்ள சாதத்தை தன் பக்கம் தள்ளிக்கொள்வாராம். இருவரும் பேசி, சிரித்துக்கொண்டு சாப்பிடுவார்களாம். அருணாசலம், 'பாவம் தம்பிக்கு அதிக பசி போலும்'' என்று நினைத்துக் கண்டும், காணாமல் சாப்பிடுவாராம். தன் தம்பியின் மீது அவ்வளவு பாசம், இந்தக் குறும்புத் தனத்தை தாயிடமும் சொல்லமாட்டாராம்.

முத்தம்மாள் அசைவ உணவு சமைக்கும் போது அருணாசலத்துக்கு ஊட்டினால் கீழே துப்பி விடுவாராம், வீல் என்று கத்துவாராம். சாப்பாடு வேண்டாம் என்று அழுவாராம். இது முத்தம்மாளுக்கு புரியவில்லையாம். சைவ உணவு சமைத்த அன்று நன்றாகச் சாப்பிட்டு விடுவாராம். இயற்கையாகவே, யாரும் சொல்லாமல் அவருக்கு அசைவ உணவு பிடிக்காமல் சைவ உணவை விரும்பிச் சாப்பிட்டு வந்தார். விவரம் தெரிந்த பிள்ளையாகிப் பள்ளி விட்டு வந்தததும் சாப்பிட உட்காருகின்றார். தாய் தட்டில் சாதம் போட்டு, கறிக்குழம்பை ஊற்ற வருகின்றார். மகன், ''தயவு செய்து வேண்டாம் அம்மா!'' என்று சொல்லிவிட்டுச் சாதத்தில் தண்ணீர் ஊற்றி, உப்பு போட்டுச் சாப்பிட்டு விட்டுச் செல்கின்றார். தன் தாயிடத்தில் எந்தக் கடினமான வார்த்தையும்

சொல்லி அடம்பிடிப்பதில்லை. அடிக்கடி மாமிசக் குழம்பு வைக்கும் போது எல்லாம் அருணாசலம் பேசாமல் தண்ணீர் ஊற்றி உப்பு போட்டுச் சாப்பிட்டுச் சென்று விடுவாராம்.

இதைப்பார்த்த முத்தம்மாள் தன் மகன் தெய்வாதீனமாக, தானே சாப்பிட மறுக்கும் பொழுது நாம் வற்புறுத்தக்கூடாது. குழந்தை இப்படி அடிக்கடி தண்ணீர் சோறு சாப்பிடுகின்றான் என்று வருத்தப்பட்டுத் தனியாக சைவக் குழம்பு சமைத்து வைப்பார்கள். அருணாசலம் இளமை முதல் தாய், தந்தையிடத்தில் அன்பும், பாசமும் வைத்து நடந்து கொள்வார். கடவுள் பக்தி உடையவர், குரு பக்தி மிகுந்தவர். ஆசிரியர் சொல்லும் வேலையைத் தலை மேல் ஏற்று செய்துமுடிப்பார். பள்ளியில் படிக்கும் சக மாணவர்களிடத்திலும் அன்போடு பழகுவார். அந்தக் கிராமத்தில் அப்போது 5 வது வகுப்பு வரையில்தான் பள்ளிக்கூடம் நடைபெற்று வந்தது. அருணாசலம் 5ஆம் வகுப்பு படித்து முடித்ததும், முத்தம்மாள் வேலூரில் உள்ள தன் தமக்கை வீட்டிற்கு அழைத்து வந்து தங்கும்படிச் செய்தார். தன் அக்காவிடம் என் மகனை மளிகைக் கடையில் பொறுப்பாக விட்டுக் ‘‘கணக்குகள் கற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யவும், என் பிள்ளை சாப்பாட்டிற்கு வேண்டிய உணவுப் பொருட்கள் மாதம் ஒருமுறை நான் கொண்டு வந்து கொடுக்கின்றேன்’’ என்று கூறி விட்டு, மகன் அருணாசலத்திடம், ‘மகனே நீ நன்றாக கணக்குகள் கற்றுக்கொண்டு, பெரியம்மா வீட்டில் கீழ்ப்படிந்து நடந்து கொள்ள வேண்டும் என்று அறிவுரை கூறி உச்சி முகர்ந்து பிரியாவிடை பெற்றுச் செல்கின்றார்கள். ஒவ்வொரு மாதமும் தன் மகன் சாப்பாட்டிற்காக அரிசி, பருப்பு, புளி, காய்கறிகள் கொண்டு வந்து கொடுத்துவிட்டு மகனைப்பார்த்துவிட்டுச் செல்வார்கள். அருணாசலம் பகல் முழுவதும் மளிகைக் கடையில் வேலை செய்துவிட்டு மாலை 6 மணிக்கு வீடு திரும்புவார்.



6 மணியிலிருந்து இரவு 7 மணி வரையில் பஜனை கோவிலில் ஒரு பாடகரிடம் தேவாரம், திருவாசகம் கற்றுக்கொள்வார். பிறகு வீட்டிற்கு வந்து 7 மணியிலிருந்து 8 மணி வரையில் 6ம் வகுப்பு புத்தகங்களை வீட்டிலிருந்தே படித்து வருவாராம். பிறகு 8 மணிக்கு எழுந்து குளித்துவிட்டுப் பெரியம்மாவுக்கு உதவி செய்வாராம். பிறகு மளிகைக் கடைக்குச் சென்று விடுவார். இவ்வாறுதான் காலம் கடந்து சென்றது, தன் தாயார் கைச் செலவுக்காக, வரும்பொழுது ஒரு ரூபாய் கொடுத்து விட்டுச் செல்வார்கள். மளிகைக் கடையில் தினமும் வேலை முடிந்து திரும்பும்பொழுது (50 பைசா) எட்டணா கொடுப்பார்களாம். அந்தக் காசுகளை வீண், செலவு செய்யாமல் கண்ணும் கருத்துமாகச் சேர்த்து வைத்துத் தனக்கு 1/2 அரைக்கால் சராய், சர்ட், துணி எடுத்து தைத்துப் போட்டுக் கொள்வாராம். அப்பொழுது விலைவாசி மிகவும் மலிவாக இருக்குமாம். எந்தப் பொருளும் தம்பிடி என்னும் நாணயத்துக்கு கிடைக்குமாம். அம்மாவிற்குத் தொந்தரவு கொடுக்கக் கூடாது. கிராமத்தில் எப்படி கஷ்டப் படுகின்றார்களோ என்று நினைத்துத் தனக்காக அவர் பணம் கேட்பதில்லையாம். தனக்குத் தேவையானதை அந்த எட்டணா சம்பளத்தைச் சேர்த்து வைத்து வாங்கிக் கொண்டு மீதி காசுகளைச் சேர்த்து வைப்பார்.

வேலூரில் இருந்து யாராவது உறவினர்கள் ஊருக்குச் செல்லும் போது, அம்மாவுக்கு வெற்றிலைப் பாக்கும், தங்கைக்குப் பூவும் வாங்கி அனுப்புவாராம். அருணாசலம் 10 வயது ஆனதும் மளிகைக் கடையில் கணக்குகள் கற்றுக் கொண்டது போதும் என்று நின்றுவிட்டார். தான் தங்கி இருக்கும் பெரியம்மாவின் கணவர் நாராயணசாமி கவுண்டர் ரொட்டிக்கடை வைத்து வியாபாரம் செய்து வந்தார். பெரியப்பா அவர் கடையில் வேலை செய்யும்படி சொல்லவே, அவ்வாறே பெரியப்பா கடையில் வேலை செய்துகொண்டு அவர் வீட்டில் தங்கி வந்தார். வாரம் ஒரு ரூபாய் ஊதியமாகக் கொடுப்பாராம்.

மிகவும் கடினமான வேலைகள் செய்ய வேண்டுமாம். காலையில் 4 மணிக்கு எழுந்து கடைக்குப் பெரியப்பா உடன் அழைத்துச் செல்வாராம். அப்பொழுதெல்லாம் மாவு பிசைவதற்கு மிஷன் கிடையாது. மாவைக் கையினால் நன்றாகத் தண்ணீர்விட்டுப் பிசைய வேண்டும். இதற்கு மாசி அடித்தல் என்று பெயர். மாசி அடித்து ரொட்டி, பண், பிஸ்கட்டுகள், செய்ய வேண்டும்.

இவை தயார் ஆனதும் தலை மேல் கூடையில் சுமந்து சென்று வாடிக்கைக் கடைக்காரர்களுக்குக் கொடுத்துவிட்டுக் காசு வாங்கி வர வேண்டும். பிறகு பக்கத்தில் உள்ள ஊர்களுக்கு நடந்தே போக வேண்டும், பஸ் வசதி கிடையாது. அங்குள்ள கடைகளுக்குச் சரக்கு கொடுத்துவிட்டு வர வேண்டும். ரயில் வசதி மட்டும் உண்டு. ஒருநாள் கூட ஓய்வு இருக்காது. பகல் 3 மணிக்கு ஒரு பெரிய கூடையில் ரொட்டியை அடுக்கி எடுத்துக் கொண்டு காட்பாடி ரயில்வே ஸ்டேஷனில் விற்றுவிட்டு வரவேண்டும் என்று பெரியப்பா அனுப்பி வைப்பார். அதற்காகக் கட்டை வண்டியில் செல்வதற்கு அரை அணா கொடுத்து அனுப்புவார் பெரியப்பா. அருணாசலம் அந்தக்காசை வண்டியில் வரப் பயன்படுத்தாமல் நடந்தே தலைமேல் தூக்கி சென்று விற்று விட்டு வருவார். மாலை 6 மணிக்கு ரொட்டி விற்று முடிந்ததும் கால் அணாவுக்கு திண்பண்டம் வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டு நடந்தே வீட்டிற்கு வந்து விடுவாராம். மீதி காலணாவை அப்படியே சேர்த்து வைப்பாராம். ஞாயிற்றுக்கிழமை 1/2 நாள் லீவு கொடுப்பார்களாம். அந்த 1/2 நாள் அவருக்கு மகிழ்ச்சியாக இருக்குமாம்.

அன்று தலை முடி வெட்டிக் கொள்வார். துணி சோப்பு வாங்கிக் கொண்டு தன் அழுக்குத் துணிகளை எல்லாம் சேர்த்து மூட்டை கட்டி எடுத்துக் கொண்டு பாலாற்றில் சென்று நன்றாகத் துணிகளை துவைத்து, உலர்த்திக் குளித்து



விட்டு மாலை வீடு திரும்புவாராம். திரும்பும்போது இருட்டி விடுமாம். பயமாக இருக்குமாம். பயம் தெளிவதற்காக ஏதாவது பாட்டு பாடிக் கொண்டே வீடு வந்து சேர்ந்துவிடுவாராம். சில வாரத்தில் நண்பர்களும் உடன் சென்று வருவார்களாம். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் இவ்வாறே செய்து வருவார். மற்ற நாட்களில் கடும் வேலைகள் இருக்கும். பாடுபட்டுச் சேர்த்து வைக்கும் பணத்தைத் தாயிடம் கொடுத்து விடுவாராம். தாய் ''உடம்பை கவனித்துக்கொள். அதிக சிரமம் வேண்டாம்!'' என்பார்கள்.

அருணாசலம் சிறுவயதில் குடுமி வைத்து இருந்தாராம். வேலூர் வந்து தன் 12வது வயதில் குடுமி எடுத்துக் கிராப்பு வெட்டிக் கொண்டார். அருணாசலத்திற்கு வயது 16 ஆகின்றது. முத்தம்மாள் தன் மகனுக்குப் பெண் பார்க்க ஆரம்பிக்க வேண்டும். அதற்குள் தன் மகளுக்குத் திருமணம் செய்ய வேண்டும் என்று விரும்பி, கோட்டைப்பூண்டி கிராமத்தில் இருந்து 10 மைல் தொலையில் கணப்பாவரம் என்னும் கிராமத்தில் வசிக்கும் தன் சித்தப்பா மகனுக்குத் திருமணம் பேசி முடிவு செய்தார்கள். மணமகன் பெயர் சின்னையா, முத்தம்மாவின் மகளுக்கு வயது 7. பாவாடை, சட்டை அணிந்த பெண், புஷ்பவதியும் ஆகவில்லை. அந்த 7 வயது சிறுமி பச்சையம்மாளுக்குக் கோட்டைப்பூண்டி கிராமத்தில் உள்ள தன் வீட்டில் திருமணம் நடக்கின்றது.

தங்கை பச்சையம்மாளின் திருமணத்திற்காகப் புதுப்பாவாடை, சட்டை, தாவணி எல்லாம் வாங்கி வந்து அன்போடு கொடுக்கின்றார் அருணாசலம். அதை முத்தம்மாள் தன் மகளுக்கு அணிவித்ததும் அசல் பொம்மை மாதிரி இருந்தது என்று தாய்பூரிக்கின்றாள். சிறப்பாகக் கன்னிகாதானம் திருமணம் முடிந்து மாமியார் வீட்டுக்குப் பெண்ணை அனுப்பி வைக்கின்றார்கள். அருணாசலத்திற்குக் கோட்டைப்பூண்டியை



*தங்கை*
*பச்சையம்மாள்*

விட சிறிய கிராமத்தில் பெண் பார்க்கிறார்கள். கொட்டாவூரில் சாதாரண, விவசாய குடும்பம். திரு. நாராயணசாமி, பூங்காவனத்தம்மாள் தம்பதிகளுக்குச் செல்வி உண்ணாமுலை என்ற மகளும், கோபால் என்ற மகனும் இருந்தார்கள். செல்வி உண்ணாமுலைக்கு 10 வயது ஆகின்றது. மிகவும் அதிக சிவப்பாகவும், அழகு தேவதையாகவும் மூக்கும் முழியுமாகவும், தங்கச்சிலை போல் இருப்பார்கள். முத்தம்மாள் தன் கணவருடன் கொட்டாவூர் கிராமத்திற்குப் பெண் பார்க்க திரு. நாராயணசாமி வீட்டிற்குத் தெரிவித்துவிட்டுச் செல்கின்றார்கள். பெண் பார்க்கும் படலம் ஆரம்பிக்கின்றது. செல்வி உண்ணாமுலை அழைத்து வரப்படுகின்றாள். டம்ளரில் தண்ணீர் கொண்டு வந்து கொடுக்கின்றார்கள். முத்தம்மாள் பெண்ணைப் பார்க்கின்றார்.



# திருமணம்

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது. (கு.45)**

*'இல்வாழ்க்கை அன்பும் அறமும் உடையதாக விளங்குமானால் அந்த வாழ்க்கையின் பண்பும் பயனும் அதுவே ஆகும்'*

மகாலட்சுமியே எதிரில் வந்து நிற்பது போல் காண்கின்றார்களாம். கனவா, நனவா என்று நினைத்தார்களாம், இவ்வளவு அழகான பெண்ணைப் பார்த்து எல்லையில்லா மகிழ்ச்சியடைந்தார்களாம், தன் கணவரிடம் இந்தப் பெண் தான் எனக்கு மருமகளாக வர வேண்டும். இனி வேறு பெண் நான் பார்க்க மாட்டேன் என்று உறுதியுடன் கூறினார்களாம். சடையப்பரும் எனக்கும் பரிபூரண சம்மதம் என்றார். உண்ணாமுலை படிக்கவில்லை. நல்ல குணமும் பண்பும், மரியாதையும், கனிவும் பேரழகும் நிரம்பியிருந்தாள். முத்தம்மாள் பெண் வீட்டாரிடம் எங்களுக்கு மிகவும் பிடித்துள்ளது. விரைவில் என் மகனை அழைத்து வந்து தாம்பூலம் மாற்றிக் கொள்கின்றேன் என்று கூறிவிட்டு விடை பெறுகின்றார்கள். தன் மகன் அருணாசலத்தை ஊரில் இருந்து

வரவழைக்கின்றார்கள். ‘மகனே! கொட்டாவூரில் செல்வி உண்ணாமுலையைப் பெண் பார்த்து விட்டு வந்தேன். எனக்கும், உன் அப்பாவுக்கும் மிகவும் பிடித்திருக்கின்றது. கடவுளிடமும்பூப்போட்டு கேட்டேன், நல்ல உத்தரவு கிடைத்துள்ளது.’

‘நீ ஒரு முறை பெண்ணைப் பார்த்துச் சம்மதம் சொல்லிவிட்டால் திருமணம் பேசி முடிப்பேன்’ என்று கேட்கின்றார்கள். அருணாசலம் தன் தாயைப் பார்த்து, ‘அம்மா நான் ஏன் பார்க்க வேண்டும்’? அவசியம் இல்லை. ‘உங்களுக்கு பிடித்து இருந்தால் எனக்கு சம்மதம்’ என்று சொல்லுகின்றார், பெற்றோர்களிடத்தில் அவ்வளவு பக்தி! அவர்கள் எடுக்கும் முடிவு நல்லதாகவே இருக்கும் என்று நம்புகின்றார். முத்தம்மாளும் அறிவில் சிறந்தவர்கள், தன் மகனிடம், ‘‘இது ஆயிரங்காலத்துப் பயிர், இருவரும் எந்தக் கலக்கமும் இன்றி மனம் ஒன்றி வாழ வேண்டும், ஆகவே நீ நேரில் வந்து பார்த்துப் பதில் சொல்’’ என்று ஒரு நல்ல நாள் பார்த்து, பெண் வீட்டிற்குத் தன் மகனை அழைத்துச் செல்கின்றார்கள். பெண் வீட்டிற்குச் சென்று பெண் பார்த்ததும் அருணாசலத்திற்கும் மிகவும் பிடித்து விட்டது, முத்தம்மாள் உண்ணாமுலையிடமும் என் மகனை மணந்து கொள்ள விருப்பமா? என்று கேட்கின்றார்கள். உண்ணாமுலை நாணத்தால் தலையை அசைத்து தன் விருப்பத்தை தெரிவிக்கின்றாள்.

அருணாசலம் பெண் வீட்டாரைப் பார்த்து உங்கள் மகளை கண் கலங்காமல், கஷ்டப்பட்டு உழைத்து சம்பாதித்துச் சாப்பாட்டுக்குக் குறைவில்லாமல் சந்தோஷமாக வைத்திருப்பேன், என் மீது நம்பிக்கையிருந்தால் பெண் கொடுங்கள்! இல்லாவிட்டால் வேண்டாம்! என்று கூறுகின்றார், பெண் வீட்டார் முதலில் பையன் கறுப்பாக, உயரம் குறைவாக இருப்பது கண்டு சற்றுத் தயங்கினார்களாம். பிள்ளையின் தைரியமான பேச்சை கேட்டுப், பாராட்டித் திருமணத்திற்கு



முழு சம்மதம் தெரிவிக்கின்றார்கள். முகூர்த்தம் குறிக்கப்பட்டு, கோட்டைப்பூண்டி கிராமத்தில் பிள்ளை வீட்டில் திருமணம் ஏற்பாடு செய்தார்கள். முத்தம்மாள் தெருவிலும், வீட்டின் உள்ளும் பெரிதாகப் பச்சை பந்தல் போட்டார்கள். எல்லா வேலைகளும் தடபுடலாக நடந்து கொண்டு இருந்தது. உறவினர்கள் நண்பர்கள் உள்ளூர், வெளியூரிலிருந்து எல்லாம் திருமணத்திற்கு அழைக்கப்படுகின்றார்கள்.

திருமணத்திற்கு அருணாசலம் வேலூரில் இருந்து 100 கட்டு வெற்றிலையும் 1/2 மூட்டை பெரும் பாக்கும், கூடை நிறைய பூச்செண்டுகளும் வாங்கிக் கொண்டு தன் நண்பர்கள் அனைவரையும் அழைத்துக் கொண்டு மகிழ்ச்சியாகச் சென்றாராரம். அப்பொழுதெல்லாம் மூன்று நாள் கல்யாணம் நடக்குமாம். முத்தம்மாள் என் மகன் கலியாணத்திற்குப் பந்த சேர்வை செய்கின்றேன் என்று பெருமாளுக்கு வேண்டிக் கொண்டார்களாம். அதன்படி பெண் அழைப்பிற்கு முன் தினம் கரகம் ஜோடித்துப் பிள்ளையின் தலைமேல் வைத்து வீட்டிலிருந்து புறப்பட்டு, கோவிலுக்குச் சென்று வந்தார்களாம். ஒரு பெரிய அண்டா நிறைய பானகம் கரைத்துத் தண்ணீர் பந்தல் நடத்தினார்களாம். 1 கலம் அதாவது 12 மரக்கால் சாதம் வடித்து, சாம்பார், ரசம் பொரியல் எல்லாம் சமைத்து வருகின்றவர் எல்லோருக்கும், இல்லை என்றில்லாமல் சாப்பாடு காலை முதல், இரவு வரையில் முத்தம்மாள் உபசரித்தார்களாம். இதைத்தான் பந்த சேர்வை என்று சொல்வது வழக்கம். முதல் நாள் சேர்வை, இரண்டாவது நாள் பெண் அழைப்பு, மூன்றாவது நாள் திருமணம் என்று நடக்குமாம்.

உறவினர்கள் அனைவரும் மூன்று நாள் தங்கித் திருமணத்தை நடத்துவார்கள். அந்த நாளில் அந்த ஊரில் இப்படித்தான் மகிழ்ச்சியாக கலகலப்பாகத் திருமணம் மூன்று நாள் நடந்ததாம். பெண் அழைப்பு சிறப்பாக நடந்து

முடிந்ததும். மறு நாள் முகூர்த்தம் தினத்தன்று திடீரென நல்ல மழை, விடா மழை பிடித்துக் கொண்டது. அந்த ஊரில் அன்றைய தினம் 25 கல்யாணம் நடந்ததாம். எல்லா திருமணத்திற்கும் ஒரே ஒரு புரோகிதர்தான். வேறு புரோகிதர் அந்த ஊரில் இல்லையாம். முதல் திருமணம் விடியற்காலை அருணாசலம் வீட்டில்தான் நடந்தது.

மழை பெய்து கொண்டே இருக்கின்றது. வாசல் எல்லாம் ஈரமாகி விட்டது. அதனால் வீட்டின் தெருத் திண்ணை மீது புது மணத்தம்பதிகளான அருணாசலம் உண்ணாமுலையைத் தீர்க்க சுமங்கலி பவா' என்று பெரியவர்கள் வாயார, வாழ்த்தி அட்சதை தூவுகின்றார்கள். இறையருளால் திருமணம் இனிது முடிந்தது. விருந்து உபசாரம் நடக்கின்றது. மழையில் வீடு ஈரமாகி விட்டதால் சாப்பாடு பரிமாறக் கடினமாக இருந்ததாம். சாப்பாடு முடிந்ததும் வந்தவர்களுக்கு வெற்றிலை மடி கட்டும் பழக்கம்; இரண்டு கைகள் நிறைய வெற்றிலை வாரிக் கொடுத்து, அவ்வாறே பாக்கும் கொடுக்க வேண்டுமாம். அந்த வழக்கபடியே எல்லோருக்கும் தாம்பூலம் சிறப்பாக வழங்கினார்களாம். பிறகு மாப்பிள்ளையும் பெண்ணும் அந்த ஊரில் உள்ள எல்லா வீட்டிற்கும் சென்று பெரியவர்கள் காலில் விழுந்து நமஸ்காரம் செய்து ஆசீர்வாதம் வாங்கி வரவேண்டுமாம். அதன்படி முத்தம்மாளின் கணவர் மகனையும், மருமகளையும் அழைத்துக் கொண்டு, ஒரு கூடை நிறைய வெற்றிலையும், பாக்கும் எடுத்துக் கொண்டு எல்லா வீட்டிற்கும் சென்றார்கள். அருணாசலம் தன் மனைவியுடன் அவ்வாறே எல்லா பெரியவர்கள் காலிலும் விழுந்து ஆசீர்வாதம் பெற்று, காலையில் சென்றவர்கள் இரவு விளக்கு வைத்தபிறகு வீடு திரும்புகின்றார்கள்.

முத்தம்மா வந்தவர்களை வழி அனுப்பி விட்டு, எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு புது மணத்



தம்பதிகளை வரவேற்க, வாசற்படியில் ஆரத்தி தட்டுடன் காத்திருக்கின்றார்கள். மகனும், மருமகளும் வந்ததும் திருஷ்டி ஆரத்திச் சுற்றி வீட்டிற்கு அழைத்துச் சென்று பால்,பழம் கொடுத்துவிட்டுத் தன் கணவரிடம் செல்லமாகக் கடிந்துக் கொள்கின்றார்கள். ''என் மகன் மருமகளுக்கு கால் வலிக்காதா, ஏன் ஊரை சுற்றி வந்தீர்கள். சீக்கிரம் முக்கியமான வீட்டிற்குச் சென்று விட்டு அழைத்து வந்து விடக் கூடாதா?'' என்று கேட்கின்றார்கள். அதற்கு அவர், பரவாயில்லை ஒரு நாள் சுற்றி வந்தால், ஒரு நாள் தானே கால் வலிக்கப் போகின்றது. ஆனால் அவ்வளவு பெரியவர்களின் ஆசீர்வாதமும் நம் மகனுக்கு வாழ்நாள் பூராவும் தீர்க்க ஆயுசுடன் சுகமாக வாழ அருள்புரியும் முத்தம்மா' என்று அமைதியாகப் பதில் அளிக்கின்றார். தன் கணவர் கூறியதைக் கேட்டு முத்தம்மாள் ஆனந்தக் கண்ணீர் சொரிகின்றார்கள். அடுத்த நாள் அருணாசலம் தன் மனைவியுடன் தாய், தகப்பனை நமஸ்கரித்து விடை பெற்று பெண் வீட்டிற்குச் செல்கின்றார்.

கொட்டாவூரில் திருமண முறைப்படி மூன்று முறை மரு நடத்தல், பெட்டி கட்டுதல், பெட்டி அவிழ்த்தல் எல்லா சுபகாரியங்களும் இனிது நடந்து முடிந்து வீடு திரும்புகின்றார்கள், பிறகு முத்தம்மாள் திருவண்ணா மலைக்குப் புது தம்பதிகளை அழைத்துச் சென்று கோவிலில் அர்ச்சனை செய்து தெய்வத்தை வழிபட்டு மலையை கால் நடையாகக் கிரிவலம் வரச் செய்து கோட்டைப்பூண்டிக்கு அழைத்துச் செல்கின்றார்கள். எல்லாம் முடிந்ததும் அருணாசலம் தன் மனைவி உண்ணாமுலை பருவம் அடையாத மங்கையாதலால் தன், தாய் தந்தையரிடம் விட்டு விட்டு, விடை பெற்று வேலூர் வந்து சேர்கின்றார். பெரியம்மா வீட்டில் வந்து சேர்கின்றார். பெரியம்மா வீட்டில் வந்து தங்கி ரொட்டிக்கடை வேலைகளை வழக்கம் போல் செய்து கொண்டு வந்தார். லீவு கிடைக்கும் பொழுது 15 நாளைக்கு ஒரு முறை ஊருக்குச் சென்று பெற்றோரையும் மனைவியையும் பார்த்து

விட்டு வருவாராம். வேலூரில் இருந்து பெரிய மரக்கட்டில் ஒன்று ஊருக்கு வாங்கி அனுப்புகின்றார். முத்தம்மாள் மருமகளை தன் மகள் மாதிரி மிகவும் அன்போடு கவனித்துக் கொள்கின்றார்கள். கட்டிலில் மருமகளைப் படுக்க வைத்து தானும் படுத்துக் கொள்வார்கள். மருமகளைச் சிறிய பெண் என்று எழுப்ப மாட்டார்களாம்.

வழக்கம் போல், தானே விடியற்காலையில் எழுந்து அனைத்து வேலைகளையும் முடித்து விடுவார்களாம். மருமகள் காலையில் எழுந்து குளித்ததும் தலைவாரி, பூச்சூடி விடுவார்களாம். உண்ணாமலை மாமியாரிடம் மிகவும் அன்பாகப் பழகி அத்தை, அத்தை என்று அழைத்துப் பணிவோடு நடந்து கொள்வார்களாம். சடையப்பர் தன் மனைவி முத்தம்மாளிடம் சில சமயம் வேடிக்கையாக கூறுகிறாராம். எனக்கு வயதாகி விட்டதா, என்னை நெருங்கவே விடாமல், மருமகளை பக்கத்தில் படுக்கவைத்துக் கொண்டு தூக்குகின்றாயே, ஒரு நாளாவது தனியாக வந்து என்னிடம் படுக்கக்கூடாதா!'' என்று கேட்டாராம். அதற்கு முத்தம்மாள் தன் கணவரிடம், ''நான் சொல்வதால் கோபம் கொள்ளாதீர்கள், பருவமடையாத பெண்ணை மகனுக்குத் திருமணம் செய்து விட்டோம். அதனால் மகன் தனியாகப் பிரிந்து, கணவனும் அருகில் இல்லாமல் தனியாக நம்முடன் இருக்கின்றாள்.''

''புது மணம் செய்து கொண்ட நம் மகன் ஆசையை அடக்கி நாள் தள்ளும் பொழுது. நாம் பொறுத்துக் கொள்ளக் கூடாதா? நமக்கு மட்டும் இன்பம் தேவைதானா, யோசித்துப் பாருங்கள்'' என்று அழகாக எடுத்துரைத்தார்கள். சடையப்பர் அன்று முதல் மனைவியைப் புரிந்து கொண்டு அன்போடு இல்லறம் நடத்துகின்றார்களாம். 2 வருடம் அவ்வாறு கழிகின்றது. உண்ணாமுலை அம்மாள் நல்ல நாளில் பருவமடைந்தார்கள். உறவினர்கள் அனைவருக்கும் சொல்லி (பிட்டுச் சுற்றுதல்) மஞ்சள் நீராட்டி விழா சிறப்பாக





*வள்ளல், மனைவி உண்ணாமலை அம்மாள், தாயார் முத்தம்மாள் மகன் பரமசிவம், வளர்ப்பு மகள் ராஜம் மற்றும் மயிலாம்பிகை*

நடத்துகின்றார்கள். 3 மாதம் கழித்து அருணாசலத்தை வரவழைத்துத் திருவண்ணாமலைக்கு அழைத்துச் சென்று சுவாமி தரிசனம் செய்து மலையைக் கிரிவலம் வரச் செய்து கொட்டாவூரில் தாய் வீட்டிற்கு கொண்டு சேர்க்கின்றார்கள். அவ்விடம் நல்ல நாளில் சாந்திமுகூர்த்தம் நடைபெறுகின்றது. உண்ணாமுலை அம்மாள் மிகவும் பயந்த சுபாவம் உடையவர். கணவரிடம் பேசவோ, பழகவோ மிகவும் கூச்சப்பட்டார்களாம்.

அருணாசலம் 5 நாள் தங்கி மாமியார் வீட்டில் இருந்து விடைபெற்றுக் கோட்டைப்பூண்டி கிராமத்திற்கு வருகின்றார். அப்போது சரியாகப் பஸ் வசதி கிடையாது. நடைபாதையாக நடந்து செல்கின்றார்கள். அருணாசலம் முன்னால் சென்றால், பின்னால் 1/2 பர்லாங் தூரத்தில் உண்ணாமலை வருவார்களாம். ஊர் எல்லை தாண்டியதும் அவர் தன் மனைவியுடன் மகிழ்ச்சியாகப் பேசிக் கொண்டு போகலாம் என்று நின்று மனைவியைத் திரும்பிப் பார்த்தாராம். கணவர் நிற்பதைக் கண்டதும் அந்த அம்மாள் பின்னால் எங்கு

வருகின்றார்களா, அங்கேயே நிற்பார்களாம். ஒரு அடி கூட எடுத்து வைக்கமாட்டார்களாம்.

மறுபடியும் அருணாசலம் நடப்பார். அவர் நின்று திரும்பினால், அந்த அம்மாள் பின்னாலேயே நின்று விடுவார்களாம். அருணாசலத்திற்குத் தர்ம சங்கடமாக இருக்கிறது. மனைவியுடன் ஜாலியாக சிரித்துக் கொண்டு, மனம் விட்டுப் பேசிக் கொண்டு நடக்கலாம் என்று அதிக ஆவலுடன் எதிர்பார்க்கின்றார். ஆனால் அவள் இவ்வளவு வெட்கப்படுகின்றாளே என்று வருத்தம் அடைகின்றார். வழியில் டிபன் சாப்பிடுவதற்கு ஓட்டலுக்குப் பக்கத்தில் ஒரு மரத்தடியில் உட்காரவைத்து விட்டு மனைவிக்குத் தோசை, இட்லி, வடை பார்சல் வாங்கி வந்து கொடுத்துச் சாப்பிடும்படிச் சொல்கின்றார். அதையும் சாப்பிட வெட்கப்பட்டுக்கொண்டு எனக்கு பசியில்லை! பிறகு சாப்பிடுகின்றேன்! என்று கூறி மடியில் வைத்துக் கொண்டார்களாம். மீதி தூரத்தைக் கடந்து வீட்டிற்கு வந்து தம்பதிகள் சேர்கின்றார்கள். உண்ணாமுலை மாமியாரிடம், ''அத்தை! அவர் டிபன் வாங்கிக் கொடுத்தார். இந்தாருங்கள்!'' என்று கொடுக்கின்றார்கள்.

மாமியார் இப்படியும் ஒரு பெண் இருப்பாளா, கணவன் ஆசையாக வாங்கிக் கொடுத்து இருக்கின்றான். அதைப் பிரியமாகச் சாப்பிடாமல் வந்து விட்டாயே என்று செல்லமாகக் கடிந்துக் கொண்டு மருமகளை உட்காரவைத்து தானும் கொஞ்சம் எடுத்துக் கொண்டு சாப்பிட வைக்கின்றார்கள். மருமகளின் கள்ளம் கபடமில்லாத குணத்தைப் பார்த்து ஆனந்தக் கண்ணீர் வடிக்கின்றாள். முத்தம்மாள் வீட்டில் இருந்த தம்பி, தங்கை எல்லாம் அண்ணனைப் பார்த்து அதற்குள் மனைவிக்குப் பொட்டலம் வாங்கிக் கொடுக்கின்றாய் பரவாயில்லை என்று கேலி செய்கின்றார்கள். அருணாசலம் 'உன்னால் தானே' என்று கூற மனைவி வெட்கத்தால் தலை குனிந்து நிற்கின்றாள். பிறகு சில நாள் கோட்டைப் பூண்டியில்



தங்கிவிட்டு வேலூருக்கு ரொட்டிக்கார தெருவில் ஒரு வீடு பார்த்துத் தனிக் குடித்தனம் வைத்து விட்டுச் சென்றார்களாம். கிராமத்தில் இருந்து அரிசி, பருப்பு, புளி, தேங்காய், எண்ணெய் முதலிய பொருள்கள் அனுப்பி வைப்பார்களாம். அருணாசலம் தன் மனைவியுடன் குடும்பம் நடத்திக் கொண்டு ரொட்டிக் கடையில் வேலை செய்து வருகின்றார்.

# தொழில்

**செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்**
**எஃகதனிற் கூரியது இல். (கு.759)**

*'ஒருவர் பொருளை ஈட்ட வேண்டும். அவருடைய பகைவரின் செருக்கைக் அடக்கவல்ல வாள் அதைவிடக் கூர்மையானது வேறு இல்லை'*

முத்தம்மாள் தன் இளைய மகன் வெள்ளைக் கண்ணுக்கு தன் முதல் மருமகள் உண்ணாமுலையின் சித்தி மகள் படவட்டாள் என்னும் மங்கையை திருமணம் செய்து வைக்கின்றார். பெற்றோருடன் கூட்டுக் குடும்பமாகப் பயிர் வேலையை கவனித்துக் கொண்டு வாழ்கின்றார் வெள்ளைக் கண்ணு. அருணாசலம் குறைந்த சம்பளத்தில் எளிமையாக இல்லறம் நடத்தி வருகின்றார். 1 தம்படிக்கு கீரை, 1 தம்படிக்கு காய்கறிகள் என்று மலிவாக கிடைக்குமாம். சம்பளத் தினம் எல்லாப் பொருள்களும் வாங்கி குடும்பம் நடத்துவார்களாம். கடுமையாக உழைத்து, லீவு நாட்களிலும் வேலை செய்து குடும்பச் செலவு போக, சிக்கனமாகச் செலவு செய்து கொஞ்சம் கொஞ்சமாகப் பணம் சேர்த்து வருகின்றார். தனியாக ரொட்டிக்கடை வைக்கலாம் என்று ஆர்வம் ஏற்படுகின்றது. தன் பெற்றோர்களிடத்திலும், வேலை செய்யும் கடை முதலாளியிடம் உத்தரவு பெற்று, அவர்கள் நல்லாசியுடன் ஒரு நல்ல நாளில் தனியாக ரொட்டிக்கடை வியாபாரம் ஆரம்பிக்கின்றார். முன்னை விடக் கடுமையாக உழைக்கின்றார். இரவும், பகலும் வேலை செய்து வியாபாரத்தை கவனிக்கின்றார். முதலில் நல்ல முறையில் வியாபாரம் தலை தூக்குகின்றது. ரொட்டிக்காரத் தெருவில் ஒரு சிறிய வாடகை வீட்டில் மனைவியுடன் வசிக்கின்றார்.



பக்கத்து வீட்டில் கெரோஸின் கடை வியாபாரி ராமகிருஷ்ணமுதலியார், தேவகி அம்மாள் தம்பதிகள் குடியிருக்கின்றனர். அருணாசலம் தம்பதிகளும், ராமகிருஷ்ணன் தம்பதிகளும் ஜாதி, மத பேதம் இல்லாமல் நட்புடன் பழகுகின்றார்கள். தேவகி அம்மாள் வயதில் மூத்தவர்கள், டவுனின் வாழ்ந்தார்கள். அதனால் உண்ணாமுலையை கிராமத்துப் பெண் என்று அன்போடு நேசித்து அவர்களுக்கு நாகரிகமாக வாழவும், கற்றுத் தருகின்றார்கள். கோவில்களுக்கு உடன் அழைத்துச் செல்வார்கள். தன் புடவை நகைகளை உண்ணாமுலைக்கு அணிவித்து மகிழுவார்கள். தன் சகோதரி போல கவனித்துக் கொள்வார்கள். உண்ணாமுலையும் தேவகி அம்மாளை உடன் பிறந்தவர்களாக நினைத்து அன்போடு அக்கா, அக்கா என்று அழைத்துப் பழகுவார்களாம். சமையல் செய்முறைகள் எல்லாம் புதுப் புது வகைகள் செய்து கற்றுக் கொடுப்பார்கள். உண்ணாமுலைக்குத் தலைவாரி, பூச்சூடி விடுவார்களாம். இருவரும் இணைபிரியாமல் பழகி வருகின்றார்கள். அருணாசலம் ரொட்டி, பிஸ்கட் செய்து பல கடைகளுக்குச் சப்ளை செய்வார்கள்.

திடீரென்று பணம் தராமல் கடைக்காரர்கள் ஏமாற்றினார்கள். கூட இருந்த வேலைக்காரர்கள் பொருள் களையும் விற்பனை பணத்தையும் திருட ஆரம்பித்து ரொட்டி

வியாபாரம் மிகவும் சரிந்து, நொடிந்து போகின்றது. கடன்கள் நாலா பக்கம் அதிகமாகி விட்டன. கடையை மூடி விடும் நிலைமை வந்து விட்டது. பலரிடம் உதவி கேட்கின்றார். நண்பர்கள், உறவினர்கள் பணம் கொடுக்க முன் வரவில்லை. அருணாசலம் மிகவும் ஏமாற்றம் அடைந்து, விரக்தியாகின்றார். காலையில் வீட்டைவிட்டு வெளியில் சென்றவர், மனவருத்தத்தினால் சாப்பாட்டிற்குச் செல்லவில்லை. எதுவும் சாப்பிடவில்லை. வேலூர் மைதானத்தில் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து என்ன வெல்லாமோ நினைக்கின்றார். இவ்வளவு கடனை எப்படி திருப்பி தருவது என்று கவலைப் படுகின்றார். நாம் இறப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று முடிவு செய்கின்றார்.

இரவு 8 மணிக்கு வீட்டிற்குச் செல்கின்றார். மனைவியிடம் எனக்கு பசியில்லை நீ சாப்பிட்டுவிட்டுப் படுத்துக்கொள் என்று சொல்லிவிட்டு அவர் சென்று படுத்துக் கொள்கின்றார். உண்ணாமுலை இதை கவனிக்கின்றார். காலையில் சாப்பிடாமல் வெளியில் சென்றவர் இரவு தான் திரும்பினார். நாள் முழுவதும் சாப்பிடவில்லை, பசியில்லை என்று பொய் சொல்கின்றார். என்ன வென்று புரியாமல் தவிக்கின்றார். கணவர் சாப்பிடவில்லை என்று காலையில் இருந்து உண்ணாமுலையும் சாப்பிடவில்லை. சாதத்தில் தண்ணீர் ஊற்றிவிட்டு அவரும் படுத்துக் கொள்கின்றார்கள். தன் கணவரிடம் எதைப்பற்றி கேட்கவும் பயப்படுகின்றார். வியாபாரம் நொடிந்து விட்டது. கையில் காசு இல்லை என்பதை அவரும் அறிவார். அதனால்தான் தன் கணவர் துன்பத்தில் ஆழ்ந்துள்ளார் என்று நினைத்து தானும் அழுது கொண்டே தூங்கிவிட்டார். நடு நிசி 12 மணி வரை அருணாசலம் தன் மனைவிக்காகத் தூங்குவது போல் நடித்துவிட்டு, மனைவி தூங்கியதும் மெல்ல 12 மணிக்குப் படுக்கையை விட்டு எழுந்திருக்கின்றார்.



அறையின் கதவை மூடி விட்டு முற்றத்தில் தாம்புக் கயிற்றை மாட்டித் தூக்குபோட்டுக்கொள்ள நாற்காலி மீது ஏறி நின்று கழுத்தில் கயிரை மாட்டிக் கொண்டு சுருக்கு இழுப்பதற்கு முன் திடீரென்று நினைக்கின்றார். தன் மனைவியைக் கடைசியாக ஒரு முறை முகத்தைப் பார்த்து விட்டு வரலாம் என்று நினைத்து உடனே கழுத்தில் உள்ள கயிற்றை அவிழ்த்து விட்டு மறுபடியும் மனைவியின் அருகில் வந்து அமர்கின்றார். சிம்னி விளக்கு வெளிச்சத்தில் மனைவியின் முகம் கள்ளம், கபடம் இல்லாமல் பால் வடியும் பொலிவுடன் பரிதாபமாகத் தெரிகின்றது. கண்ணில் இருந்து நீர் வழிந்து தாடைகளில் ஈரமாக உள்ளது. அருணாசலம் திகைக்கின்றார். உடனே எழுந்து சமையல் அறையைக் கவனிக்கின்றார். செய்த சாப்பாடு ஒரு பிடியும் குறையாமல் அப்படியே உள்ளது. மனைவி காலையில் இருந்து சாப்பிடவில்லை என்று தெரிகின்றது. மறுபடியும் மனைவியின் அருகில் வந்து அமர்ந்து யோசிக்கின்றார்.

பெற்றோர், உற்றார் உறவினர்கள் அனைவரையும் பிரிந்து வந்து நம்மையே நம்பி வாழும் இந்த அபலையை அநாதையாக, விதவையாக விட்டுச் செல்வது எவ்வளவு கோழைத்தனம், பாபகரமான செயல் நம்முடைய வறுமைக்கு அவள் ஒன்றும் குற்றம் செய்யவில்லையே. மேலும் இன்னும் குழந்தைகளும் பெற்றுக்கொள்ளவில்லை. நாம் சென்றால் குழந்தைகளாவது அவளை காப்பாற்றும் என்றால் இன்னும் குழந்தையும் இல்லை. அவளை இப்படி இளம் வயதில் பட்டமரமாக விட்டுச் செல்வது நன்றி கெட்ட செயலாகும் என்று நினைத்து வேதனையடைந்து கடவுளே எனக்கு துணிவைத் தரவும். என் மனைவிக்கு ஒரு போதும் துரோகம் இழைத்துத் தனியாக தவிக்கவிடமாட்டேன்.

'இது உறுதி' என் கஷ்டங்கள் விடியட்டும் இறைவா' இனி நீ அழைக்காமல் நான் கேவலமான மரணத்திற்கு

ஆட்கொள்ளமாட்டேன்'' என்று பிரார்த்தித்துத் தூக்குக் கயிற்றைத் தூக்கி எறிந்துவிட்டு அமைதியாக படுக்கச் செல்கின்றார். காலையில் எழுந்து அமைதியாகக் குளித்துவிட்டு பூஜை முடித்து, மனைவியிடம் வந்து அமர்ந்து ''சாப்பிடலாம் இருவரும். நீராகாரம் கொண்டுவா'' என்று அழைக்கின்றார். உண்ணாமுலை அம்மாள் எலுமிச்சம் பழம் போல் மிகவும் சிவந்த மேனி! கணவருக்கு முன் குளித்து மஞ்சள் பூசிய முகத்தில் குங்குமம் இட்டு லஷ்மியாகக் அளிக்கிறார். சாப்பாடு அப்படியே இருந்ததை எடுத்து வந்து கணவருக்குக் கொடுத்து தானும் உண்டு பசியாற்றிக் கொண்டு சிறிது மகிழ்வடை கின்றார்கள். இரவு நடந்தது உண்ணாமுலைக்கு ஒன்றும் தெரியாது. கணவர் உணவு உண்டதே அவருக்கு திருப்தியாக இருந்தது. அருணாசலம் மனைவியிடம் கடன் தொல்லை காரணமாக மனம் சரியில்லாமல் நேற்று வீட்டிற்கு வராமலும் சாப்பிடாமலும் படுத்துக் கொண்டேன் என்று புறப்பட்டுச் செல்கின்றார். ஒரு நிமிடம் கடவுளை மனதில் நினைத்து இறைவா எனக்கு ஒரு நல்ல வழி காட்டு கடன்காரர்களிடம் இருந்து என் மானத்தை காப்பாற்று என்று மனம் வருந்திப் பிரார்த்தித்துப் புறப்படுகின்றார்.



# திருப்புமுனை

**செய்யமாற் செய்த உதவிக்கு வையகமும்**
**வானகமும் ஆற்ற லரிது. (கு.101)**

*'தான் ஓர் உதவியும் முன் செய்யாதிருக்கப் பிறர் தனக்குச் செய்த உதவிக்கு மண்ணுலகையும் விண்ணுலகையும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஈடு ஆக முடியாது.*

**வீ**ட்டில் இருந்து கடைக்குச் செல்லும் போது வழியில் அவருடைய முஸ்லீம் நண்பர் அப்துல் காதர் எதிரில் வருகின்றார். தன் நண்பன் கவலை தோய்ந்த முகத்துடன் வருவதைப் பார்த்து அருணாசலத்தை தன் கடைக்கு வாப்பா என்று அழைத்துச் செல்கின்றார். அப்துல் காதரும் வியாபாரி. மிகவும் நெருங்கிய நண்பர். அருணாசலம் ஏன் மிகவும் கவலையுடன் இருக்கின்றாய். சாப்பிடாத மேனியும், உறங்காத கண்களுமாக காட்சியளிக்கின்றாயே! உடல் நலம் சரியில்லையா, அல்லது குடும்பத்தில் ஏதாவது தகராறா? என்னிடம் மனம் விட்டுத் தயங்காமல் சொல்லு'' என்று அன்போடு கேட்கின்றார். அருணாசலம் அழுதுகொண்டே தன் சோகக் கதையையும், இரவு தான் எடுத்த முடிவையும்

கூறுகின்றார். உடனே அப்துல் காதர் கடைப் பையனை அழைத்து ஓட்டலில் இரண்டு காபி வாங்கி வரச் சொல்கின்றார். அருணாசலத்திடம் ஒரு டம்ளர் காபியை கொடுத்து முதலில் இதைச் சாப்பிடு என்று கூறி தானும் காபியைக் குடித்து விட்டு அருணாசலம் கொஞ்ச நேரம் கடையில் உட்கார்ந்து இரு. 10 நிமிடத்தில் வந்து விடுகின்றேன்!'' என்று நண்பனிடம் கூறி விட்டுச் செல்கின்றார். சொன்னது போல் ஒரு 10 நிமிடத்தில் வந்து அருணாசலம்'' இந்தா பிடி! இதை வைத்து விற்று உன் வியாபாரத்தை நடத்தி உன் கடன்களை தீர்த்துக் கொள் கவலையை விடு. சந்தோஷமாக இரு. அல்லா காப்பாற்றுவார்.'' என்று கூறி ஒரு துணி மூட்டையைக் கொடுக்கின்றார். அருணாசலம் அதைப் பிரித்துப் பார்க்கின்றார். பெண்கள் அணியும் நகைகள், கால் கொலுசு, காது தோடு இன்னும் முஸ்லீம் பெண்கள் அணியும் சில நகைகள் இருக்கின்றன. அருணாசலம் பார்த்துப் பதைக்கின்றார். அப்துல் காதரைப் பார்த்து ''என்னப்பா இது?'' என்று கண்ணில் நீர் மல்க கேட்கின்றார்.

அதற்கு நண்பர் கூறுகின்றார். அருணாசலம் என் மனைவியின் நகைகள் இவை! ஆபத்தில் உதவுவது தான் நண்பனுக்கு அழகு! அதனால் நீ இதை எடுத்துச் சென்று விற்றுப் பணமாக்கி உன் கஷ்டம் தீர்ந்ததும், உன்னால் முடிந்தால் திருப்பித் தா. நான் கவலைப்படவில்லை. இப்போது அவசரத்திற்கு என்னிடம் பணம் இல்லாததால் நகைகளை கொடுக்கின்றேன். எடுத்துச் செல் என்கின்றார். அருணாசலம் ''வேண்டாம் உன் மனைவி எவ்வளவு வருத்தப்படுவார்கள். நான் எப்படியாவது சமாளிக்கின்றேன்.'' ''நீ இவ்வளவு பெருந்தன்மையுடன் கொடுப்பது மிக்க மகிழ்ச்சி. இருந்தாலும் உன் மனைவியிடம் நகைகளைக் கொடுத்து விடுங்கள்! வேண்டாம்! என்கின்றார்.



அப்துல் காதர் மறுத்து இதை முதலில் எடுத்துச் சென்று ஆக வேண்டிய வேலைகளைக் கவனி என்று நண்பனிடம் கூறுகின்றார். அருணாசலம் வேறு வழியின்றி ஆனந்தக் கண்ணீர் மல்க அந்த நகைகளைப் பெற்றுச் செல்கின்றார். இறைவனே நண்பன் ரூபத்தில் வந்து கொடுத்தகாகக் கருதுகின்றார். நகைகளை அடமானம் வைத்துப் பணம் வாங்குகின்றார். சிறுகச் சிறுக ரொட்டி வியாபாரத்தை ஆரம்பிக்கின்றார். கணவனும், மனைவியும் ஒரு வேளை சாப்பாடுதான் உண்பார்கள். உடுத்திக் கொள்ள ஒரு துணியை தவிர மாற்றுத் துணி கிடையாதாம், தினமும் குளித்து அந்த துணியைத் துவைத்து உடுத்திச் செல்வாராம் அருணாசலம். உண்ணாமுலை அம்மாள் இரவில் படுக்கும்போது பாதிப் புடவையை நனைத்துச் சுத்தம் செய்து பாதிப் புடவையைத் தரையில் உலர்த்தி விட்டு மீதி பாதிப் புடவை உலந்ததும் அதாவது தண்ணீரில் நனைக்காததை உடம்பில் சுற்றிக் கொண்டு தூங்குவாராம். காலையில் எழுந்து குளித்துவிட்டு இரவு உலர்ந்த பாதிப் புடவையை அணிந்து கொண்டு பிறகு வேலை செய்வார்களாம். அவ்வளவு வறுமையில் இருவரும் வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டிக் குடும்பம் நடத்துகின்றார்கள்.




*ஏ.எஸ்.ஏ.*
*பேக்கரியின்*
*அன்றைய தோற்றம்*

ரொட்டி, பண் மட்டும் தயார் செய்து, சில்லரை வியாபாரிகளுக்குச் சப்ளை செய்கின்றார். சந்தைகளுக்கு எடுத்துச் சென்று வியாபாரம் செய்கின்றார். கொஞ்சம், கொஞ்சமாக வியாபாரம் சூடு பிடிக்கின்றது. கடன்காரர்களுக்குக் கடன்களைக் கொடுக்கின்றார். வீட்டிலும் மூன்று வேளை சமைத்துச் சாப்பிடுவதற்கும், உடுத்திக்கொள்ளத் துணிகளும் வாங்குவதற்கும் வசதி உண்டாகின்றது. இவ்வளவு கஷ்டங்களையும் தன் பெற்றோர்களுக்குத் தெரிவிக்கவில்லை. தன் கஷ்டங்கள் போக்க உதவி செய்த தன் நண்பனை மறக்கவில்லை, தெய்வமாகவே நினைக்க ஆரம்பித்துப் பழகினார். அருணாசலத்தின் பிற கடன்கள் எல்லாம் முடிகின்றது. தன் நண்பனின் நகைகளை அடமானத்தில் இருந்து மீட்கின்றார். ஒரு நாள், தன் நண்பன் அப்துல் காதரைப் பார்த்து, உன் மனைவியை அழைத்துக் கொண்டு எங்கள் வீட்டிற்கு நாளை சாப்பிட வாருங்கள் என்று கூறுகின்றார். 'என்ன அருணாசலம்! என்ன விசேஷம்!' என்று நண்பர் சிரித்துக் கொண்டே கேட்கின்றார்.

அதற்கு ''அருணாசலம் ஒன்றும் இல்லை சும்மா கூப்பிடுகின்றேன் என்றார். அவர்களும் சாப்பிட வருகின்றார்கள். அருணாசலமும், உண்ணாமுலை அம்மாவும் மலர்ந்த முகத்துடன் வரவேற்று விருந்து படைக்கின்றார்கள். உணவருந்தி முடிந்ததும், ஒரு தாம்பாளத் தட்டில் வேட்டி, புடவை, சட்டை, தாம்பூலம் வைத்து அதன் மேல் அப்துல்காதர் கொடுத்த துணி மூட்டை நகைகளை வைத்துத் தன் நண்பரிடம் கொடுத்து இந்தாருங்கள் தயவு செய்து பெற்றுக் கொள்ளுங்கள். எங்களை ஆசீர்வதியுங்கள்!'' என்று உண்ணாமுலையுடன், நண்பனின் தம்பதிகள் காலில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்குகின்றார்கள். அப்துல் காதர் தன் நண்பனை வாரி எடுத்துத் தோளோடு தழுவிக் கொள்கின்றார். இருவர் கண்களிலும் ஆனந்தக் கண்ணீர் பொங்கி வழிகின்றது. அப்துல் காதர் அருணாசலத்தை விட வயதில் பெரியவர், அருணாசலம் தன் நண்பனிடம், ''உயிருள்ள வரையில் உங்கள் உதவியை மறக்கமாட்டேன் நான் ஒரு இந்து, நீங்கள் ஒரு முஸ்லீம், மத வேறுபாடின்றி நாம் பழகுகின்றோம்.''



''நீங்களும் உதவி செய்தீர்கள்'' என்று வாயாரப் புகழ்கின்றார். நண்பரும் நன்றியுடன் விடை பெற்றுச் செல்கின்றார். அருணாசலம் மேலும், மேலும் வியாபாரம் பெருக, பழைய கடையை விட்டு, லாங்கு பஜாரில் வாடகைக்குக் கடை அமைக்கின்றார். அதுவும் வேலூரில் பிரசித்தி பெற்ற கடாமார்க் பீடி தொழில் அதிபர் முஸ்லீம் நண்பர் அவர்களின் சொந்த இடம். அந்தக் கடையை வாடகைக்கு எடுத்து வியாபாரம் நடத்துகின்றார். கணவனும் மனைவியும் வறுமை நீங்கி வாழ்கின்றார்கள். இவர்கள் ரொட்டிக்காகத் தெருவில் நீளமான சந்து வீட்டில் குடியிருக்கின்றார்கள்.

அந்த வீட்டில் 5 போர்ஷன்கள் தனித்தனியாக உள்ளன. அதில் ஒரு போர்ஷனில் அருணாசலமும், பக்கத்தில் தேவகி அம்மாள் குடும்பமும் உள்ளது. எல்லோருக்கும் பொதுவாக வீட்டு வெளிவராண்டாவில் குடிநீர்க் குழாய் அமைத்து இருந்தார்கள் 5 போர்ஷனில் உள்ளவர்களும் அந்த குழாயில் தண்ணீர் எடுப்பது வழக்கம். அவர் தண்ணீர் பிடிக்கச் செல்லும் போது பித்தளை தவலையை முகம் தெரியும் அளவிற்கு மிகவும் சுத்தமாகத் துலக்கி எடுத்துச் சென்று, தண்ணீர் வரும் குழாயை நான்கு முறை கழுவிவிட்டு தண்ணீர் பிடித்துகொண்டு போகும் போது, வழியெல்லாம் தண்ணீரை முருகா முருகா என்று தெளித்துக்கொண்டே சென்று வீட்டில் பாத்திரத்தில் கொட்டி விட்டு, திரும்ப, திரும்ப இதே போன்று தண்ணீர் பிடித்துச் செல்வாராம். முத்தம்மாள் கிராமத்தில் இருந்து வேலூர் வந்து மகன் வீட்டில் தங்குகின்றார்கள்.



*ஏ.எஸ்.ஏ. பேக்கரியின் இன்றைய தோற்றம்*

மருமகள் இவ்வாறு தண்ணீர் பிடிப்பதைப் பார்த்து என்ன உண்ணாமுலை ஒவ்வொரு முறையும் தண்ணீர் பிடிக்கும் போது குழாயை கழுவுகின்றாய், வழியெல்லாம் அய்யர் புண்ணியாவசத்திற்கு மாவிலையில் தண்ணீர் தெளிப்பது போல் நீ தவலையில் இருந்து வழியெல்லாம் தண்ணீர் தெளித்துக் கொண்டு செல்கின்றாய் என்று புரியாமல் கேட்கின்றார்கள். உண்ணாமுலை மாமியார் கேட்டதற்கு ஒன்றும் இல்லை அத்தை இந்த போர்ஷனில் உள்ள மற்ற குடித்தனக்காரர்கள் குளிக்காமல் இந்த வராண்டா வழியாக நடந்து வந்து குழாயைத் தொட்டுத் தண்ணீர் பிடிக்கின்றார்கள். நாம் அவர்களை எதுவும் கேட்க முடியாது. குழாயும் நடை பாதையும் குளிக்காமல் தொட்டு, நடப்பதால் எனக்கு தீட்டு மாதிரி பிடிக்கவில்லை. அதனால் குழாயை ஒவ்வொரு முறையும் கழுவி விட்டுத் தண்ணீர் பிடிக்கின்றேன். வழியெல்லாம் புனிதத்திற்காக ஜலம் தெளித்துக் கொண்டு செல்கின்றேன் என்று கூறுகின்றார்கள், மாமியார் சரிதான், நீ



அய்யர் வீட்டில் பிறந்து இருக்க வேண்டியவள்! தப்பிப் பிறந்து விட்டாய் என்று சிரித்துக் கொண்டு கூறுகின்றார்கள். உண்ணாமுலை மிகவும் சுத்தத்தை அனுஷ்டிப்பவள். தினமும் துவைத்த துணிகளைக் கொடி மேல் போட்டுக் காயவைப்பார்கள், இரவு காலையில் உடுத்திக் கொள்ளும் துணிகளை ஒரு சிறிய கம்பு மூலம் கூடையில் எடுத்து வைத்துக் கொள்வார்கள்.

காலையில் எழுந்ததும் துணியைத் தொடாமல் கூடையுடன் எடுத்துச் சென்று வைத்துக் கொண்டு குளித்துவிட்டு உடை அணிந்து கொள்வாராம். கணவர் எழுந்து குளிக்கச் சென்றதும் அவருடைய துணிகளையும் மாற்றிக்கொள்ளக் கொடுத்துவிட்டு அழுக்குத் துணிகளைச் கையில் தொடாமல் சிறிய கொம்பு மூலமாக அல்லது இடுக்கி மூலமாக எடுத்துப் பக்கட்டில் போடுவார்களாம். இவ்வாறு சுத்தத்துடன் குடும்பம் நடத்துகின்றார்கள். மிகுந்த தெய்வபக்தி உடையவர்கள். அருணாசலம் பிள்ளையும் தெய்வ பக்தியுடையவர். கொஞ்சம் நிம்மதியுடன் வாழ்கின்றார்கள். இத்தருணத்தில் இறையருளால் உண்ணாமலை அம்மா கருத்தரிக்கின்றார்கள். அருணாசலமும், உண்ணாமுலையும் கடவுளுக்கு நன்றி சொல்லி மகிழ்ச்சியடைகின்றார்கள்.

முத்தம்மாளும், சடையகவுண்டரும் கேள்விப்பட்டு மகிழ்ச்சியடைகின்றார்கள். முத்தம்மாள் மருமகளை மிகுந்த கவனத்துடன் கவனித்து வருகின்றார்கள். அருணாசலம் மனைவிக்கு நல்ல குழந்தை பிறக்க வேண்டும் என்று பக்தி நிறைந்த புத்தங்களைப் படித்துக் காட்டுவாராம். தன் மனைவிக்கு நன்கு எழுத படிக்கவும் கற்றுக் கொடுப்பார்களாம். உண்ணாமலை அம்மாளுக்கு, வீட்டு வேலைகள் செய்து முடித்தவுடன், கணவர் சொல்லிக் கொடுத்த பாடங்களை படிக்க வைத்து அவரிடம் படித்தும், எழுதியும் காட்டுவார்களாம்.

வீட்டு வரவு, செலவு, டோபி கணக்கு எல்லாம் நீயே எழுதிக் காட்ட வேண்டும் என்று மனைவியிடம் கூற அவரும் அவ்வாறே நடந்து கொள்கிறார்கள்.

உண்ணாமுலைக்கு 9ம் மாதம் பூ முடித்து வைக்கின்றார், முத்தம்மாள்! 10 மாதம் முடிந்ததும் 1935ம் ஆண்டு ஆகஸ்டு 31ம் தேதி ஒரு அழகான ஆண்குழந்தையை ஈன்றெடுக்கின்றாள், உண்ணாமுலை! தாயும், குழந்தையும் சுகப்பிரவசமாக நலமுடன் இருக்கின்றார்கள். குழந்தை தாயைப் போல் சிவப்பாக கொழு, கொழு என்று இருக்கின்றது. அனைவரும் மிகவும் மகிழ்ச்சியடைகின்றார்கள். கிராமத்தில் வசதியில்லை என்று வேலூரில் பிரவசம் பார்த்துப் பிறகு உண்ணாமுலையின் தாய்வீட்டுக்கு முத்தம்மாள் அனுப்பி வைக்கின்றார்கள்.




*புதிய ஏ.எஸ்.ஏ. பேக்கரி திறப்பு விழாவில் வாரியார் சுவாமிகள் பொறியாளர் அன்ஸாரி பேக், வள்ளல் ஏ.எஸ்.ஏ. ஆகியோர்*



1 மாதம் தாய்வீட்டில் இருந்துவிட்டுக் குழந்தைக்கு வேண்டிய சீர் வரிசைகளைப் பெற்று வேலூர் திரும்பு கின்றார்கள். அருணாசலம் சிவபக்தர் ஆகையால் தன் குழந்தைக்கு பரமசிவம் என்று பெயர் சூட்டுகின்றார். முதன் முதலில் அவதரித்த தன் குலக் கொழுந்தான பரமசிவத்தைப் பாலூட்டித் தாலாட்டி நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்க்கின்றார்கள். குழந்தை படு சுட்டியாகவும் கொழு, கொழு என்றும் வளர்கின்றது. குழந்தை பிறந்தவுடன் அருணாசலத்திற்கு நல்ல யோகம் பிறக்கின்றது.

வியாபாரம் முன்னைவிட பல மடங்கு உயர்வாக நடைபெற்று பணவசதி உண்டாகின்றது. உடனே தனக்கு ஒரு சொந்த வீட்டை விலைக்கு வாங்குகின்றார். மனைவி குழந்தையுடன் புது வீட்டிற்குக் குடி செல்கின்றார்கள். குழந்தைக்குக் கண் திருஷ்டி பட்டுவிடும்; மிகவும் சிவப்பாக, கொழு, கொழு என்று இருக்கின்றான் என்று அதிகமாக வெளியில் எடுத்து செல்வதில்லையாம். தினமும் முகத்தில் திருஷ்டி பொட்டு வைப்பார்களாம்.

திருஷ்டி சுற்றியும் போடுவார்களாம். ஒரு நாள் இரவு கணவனும், மனைவியும் குழந்தையை அருகில் படுக்க வைத்துக் கொண்டு தூங்கின்றார்களாம். நடு இரவு குழந்தை வீல் என்று கத்தி அழுகின்றது. உடனே கணவனும் மனைவியும் அலறி எழுகின்றார்கள். உண்ணாமுலை குழந்தையை வாரி எடுத்து மடியில் கிடத்திக் கொண்டு ஓவென்று அழுகின்றார்கள். என் பிள்ளைக்கு என்னவோ ஆகிவிட்டது. உடனே டாக்டரிடம் போகலாம் என்று அழுகின்றார்கள்.

அப்போது இரவு 2 மணி அருணாசலம் குழந்தையை என்னிடம் கொடு அவசரப்படாதே, என்னவென்று பார்க்கலாம் என்கின்றார். உடனே வைத்தியரை அழைத்து வாருங்கள்! என்று தேம்பி, தேம்பி அழுகின்றார்களாம். அருணாசலம் குழந்தையை வாங்கி சட்டையை கழற்றி உதறிவிட்டு

படுக்கையையும் உதறி தட்டிப் போடுகின்றார். குழந்தையை தோள்மீது சாய்த்து தட்டுகின்றார். பிறகு தன் மனைவியிடம் கொடுக்கின்றார். மடி மீது படுக்க வைத்தும் குழந்தை தாயையும், தந்தையையும் பார்த்து துரு, துருவென்று மொச்சக் கொட்டை கண்களால் பார்த்து, பொக்கை வாயைத் திறந்து சிரிக்கின்றானாம். அருணாசலம் மனைவியை பார்த்து, ''குழந்தை சிரிக்கின்றான் பார்! எறும்பு கடித்திருக்கின்றது. அதனால் அழுது இருக்கின்றான்'', என்று சமாதானம் சொல்லிக் ''குழந்தைக்கு பால் கொடுத்து தூங்கவை'' என்று படுத்துக் கொள்கின்றார். பிறகு உண்ணாமுலை பாலூட்டி, குழந்தையை தூங்க வைக்கிறார். காலையில் தன் தாயாரிடம் அருணாசலம் கூறுகின்றார் இரவு நடந்ததை! பிள்ளைப்பாசம் அளவுக்கு மீறி சிறிய எறும்பு கடித்ததற்கு இவள் இப்படி அழுகின்றாள் என்று சிரிக்கின்றார்.

அருணாசலம் தன் மகனுக்கு 5 வயதானதும் நல்ல நாளில் பள்ளியில் சேர்க்கின்றார்கள். தீபாவளி, பொங்கலுக்குக் கிராமத்திற்குச் சென்று தாய், தகப்பனுடன் பண்டிகை கொண்டாடி வருவார்கள். ஒரு சமயம் பொங்கலுக்கு அருணாசலம் தம்பதி கிராமத்திற்குச் செல்கின்றார்கள். கோட்டப்பூண்டி கிராமத்திற்கு அங்கு வீட்டிற்கு தங்கை பச்சையம்மாளும் கணவர் குழந்தையுடன் வந்திருக்கின்றாள். பெரிய பிள்ளை அருணாசலம் குடும்பம், சிறிய பிள்ளை வெள்ளைக்கண்ணு குடும்பம், மகள் பச்சையம்மாள் குடும்பம் அனைவரும் நன்றாகப் பொங்கல் பண்டிகை கொண்டாடுகிறார்கள்.

அப்போது ஒருநாள் ஊரில் உள்ள பொன்னியம்மாள் குளத்திற்குத் தண்ணீர் கொண்டு வரக் குடத்துடன் உண்ணாமுலை அம்மாளும், நாத்தனார் பச்சையம்மாளும் செல்கின்றார்கள். அண்ணியும், நாத்தனாரும் குளக்கரையில் உட்கார்ந்து மகிழ்ச்சியுடன் பேசிக் கொண்டு இருக்கின்றார்கள். அப்போது குளத்தின் அடிப்படியில் உட்கார்ந்து கொண்டு



உண்ணாமுலையும், பச்சையம்மாளும் தண்ணீரில் காலை விட்டு ஆட்டிக்கொண்டு சிரித்துப் பேசுகின்றார்கள். உண்ணாமுலை நாத்தனாரிடம் ''பச்சம்மா சித்தி என் காலை பாருங்கள்; பால் போல் வெண்மையாக உள்ளது. நான் சிவப்பு, எங்க அம்மா, அப்பா சிவப்பு, என் மகன் சிவப்பு நீ கறுப்பு, உன் கணவர், குழந்தை கறுப்பு, உன் அப்பா கறுப்பு, உன் அண்ணன் கறுப்பு உங்க குடும்பமே கறுப்பு'' என்று கூறிச் சிரிக்கின்றாள். பச்சையம்மாளுக்கு அண்ணி விளையாட்டாகச் சொன்னது வினையாகிவிட்டது.

உடனே கண்களில் நீர் தளும்ப, அண்ணி உங்க குடும்பமே சிவப்பு என்று பெருமையுடன் கூறி எங்கள் குடும்பத்தை கறுப்பு என்று எண்ணி நகையாடுகின்றீர்கள். கறுப்பாக என்னைப்போல் ஒரு பெண்குழந்தை பிறக்கணும் கடவுள் அருளால்! அப்போது தான் எனக்கும் மனம் சாந்தியடையும் என்று பதிலுக்குக் கூறுகின்றார்கள். உடனே உண்ணாமுலை கோபிக்காதீர்கள் சித்தி விளையாட்டுக்கு கூறினேன் என்று சமாதானப்படுத்தி வீட்டிற்கு வருகின்றார்கள். பிறகு அவரவர்கள் அவர் ஊருக்குப் பெற்றோரிடம் ஆசி பெற்றுச் செல்கின்றார்கள்.

அருணாசலம் வியாபாரம் நன்கு நடை பெற்ற பிறகு தான் வாடகை இருக்கும் ரொட்டிக்கடை இடத்தின் சொந்தக்காரர் கடாமார்க் பீடி உரிமையாளர் அப்துல்வகாப் என்பவரை சந்திக்கின்றார். பெரியவரைப் பார்த்து ''வணக்கம் முதலாளி உங்கள் தயவால் உங்கள் இடத்தில் வாடகை இருந்து தொழில் புரிகின்றேன். உங்களுக்கு எவ்வளவோ சொந்த இடங்கள் இருக்கின்றன. அடியேன் ஏழை கஷ்டப்பட்டு இப்போதுதான் முன்னுக்கு வந்து கொண்டு இருக்கின்றேன். தாங்கள் பெரிய மனதுடன் அந்த இடத்தை எனக்கு ஒரு நியாயவிலை நிர்ணயித்து கொடுத்தால் நான் சொந்தமாக வாங்கிக் கொள்ளலாம் என்று நினைக்கின்றேன் என்று பணிவோடு கேட்கின்றார். அந்தக்கடையின் சொந்தக்காரர் முஸ்லீம் பெரியவர் மிகவும் பெரிய லட்சாதிபதி: பல

இடங்களுக்கு சொந்தக்காரா் ஆவாா். அவா் அருணாசலம் கஷ்டப்பட்டு முன்னுக்கு வருவதைக் கண்கூடாகப் பாா்த்தவா்.

அருணாசலம் நீ பணிவாகக் கேட்பதை நான் பெரிதும் மெச்சுகின்றேன். எனக்கு இந்த இடம் விற்க வேண்டிய அவசியமே இல்லை. ஒரு ஏழை தொழிலாளி முன்னுக்கு வருவதற்கு நான் உதவி செய்வதால் மகிழ்கின்றேன். உன்னால் முடிந்த பணத்தைக் கொடுத்துவிட்டு அந்த இடத்தை பெற்றுக்கொள் என்று கூறுகின்றாா். அருணாசலம் எதிா்ப்பாா்க்கவே இல்லை. அந்தப் பெருந்தகை இவ்வளவு அன்பாக தனக்குத் தருவாா் என்று! ஒரு நல்ல நாளில் இருவரும் பேசியபடி பணத்தைக் கட்டிவிட்டுக் கடையை தன் பெயருக்கு வாங்கிக் கொள்கின்றாா்.

தன் மகன் பிறந்த அதிா்ஷ்டம் வீடு, கடை சொந்தமாக கிடைக்கப் பெற்றோம் என்று கணவனும், மனைவியும் மகிழ்ச்சியடைகின்றாா்கள். நல்ல நாள் பாா்த்து வாடகை வீட்டில் இருந்து சொந்த வீட்டிற்குக் குடிபோகின்றாா்கள். அருணாசலம் வியாபாரம் நல்ல முறையில் நடைபெறுகின்றது. இன்னும் சில வீடுகளும் நிலமும் வாங்குகின்றாா்கள். மனைவிக்குச் சில நகைகளும், நல்ல புடவைகளும் வாங்கித் தருகின்றாா். உண்ணாமுலை அம்மாவும் மிகுந்த கடவுள் பக்தியும், பதி பக்தியுமாகக் குடும்பம் நடத்தி வருகின்றாா்கள். இவ்வாறு வருடங்கள் கழிகின்றன.



# ஆசைக்கு ஒரு மகள்

**மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்**
**நன்கலம் நன்மக்கட் பேறு (கு.60)**

*'மனைவியின் நற்பண்பே இல்வாழ்க்கைக்கு மங்கலம் என்று கூறுவர். நல்ல மக்களைப் பெறுதலே அதற்கு நல்ல அணிகலம் என்றும் கூறுவர்.'*

ஒருநாள் தன் கணவரிடம் உண்ணாமுலை அம்மாள் விருப்பத்தை கூறுகின்றாா்கள். 'என்னங்க' நம் மகன் பிறந்து ஒன்பது ஆண்டுகள் ஆகிவிட்டன. எனக்கு ஒரு பெண் குழந்தை பிறக்க வேண்டும் என்று ஆவலாக உள்ளது என்கின்றாா். அதற்கு அவா் 'சிங்கம் போல மகன் இருக்கின்றான் இவன் ஒருவன் போதாதா!' என்று சிரிக்கின்றாா். அதற்கு அவள் ''இல்லைங்க! நான் உடல்நலம் இல்லாமல் படுத்துக் கொண்டால் ஓடிவந்து என்னைத் தூக்கி ஒரு டம்ளா் தண்ணீா் கொடுப்பாள்.

இதே ஆண் பிள்ளைகள் விளையாட்டக ஓடி விடுவாா்கள். பெண் பிள்ளைக்கு தான் தாய் மீது பாசம் அதிகமாக இருக்கும்தொண்டு செய்யும் 'என்று கண்களில் நீா்

மல்க கூறுகின்றார்கள்' சரி! உன் விருப்பம் போல் கடவுள் அருளால் நமக்கு ஒரு பெண்பிள்ளை பிறக்கட்டும்! என்று கூறுகின்றார். உண்ணாமுலை அம்மாள் தனக்குப் பெண் குழந்தை வேண்டும் என்று சிவபெருமானை வேண்டித் தவம் செய்கின்றார்கள்.

ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை சோமவாரம் விரதம் மேற்கொண்டு அன்று மடியுடன் சுத்தமாகச் சமையல் செய்து பூஜை அறையில் நடு வீட்டில் மெழுகி சாமிக்குப் படையல் வைத்துத் தீபாராதனை செய்துவிட்டு, மண்டியிட்டுக் கைகள் இரண்டும் புறங்கை கட்டிக் கொண்டு குனிந்து தரையில் உள்ள சாதத்தைச் சாப்பிட்டு விரதம் மேற்கொண்டு பெண்பிள்ளை பிறக்க வேண்டும் என்று மிகவும் பயபக்தியுடன் இறைவனை வேண்டி வருகின்றார்கள்.

சில மாதம் கழித்துச் சிவபெருமானின் அருளால் உண்ணாமுலை அம்மாள் கருத்தரிக்கின்றார்கள். அருணா சலமும், முத்தம்மாளும் மிகவும் மகிழ்ச்சி யடைகின்றார்கள். உண்ணாமுலை அம்மாளை மாமியார் முத்தம்மாள் அன்போடு கவனித்து வருகின்றார்கள். உண்ணாமுலை அம்மாளின் தாயார் பூங்காவனம் அம்மாளும் மகளை வந்து அடிக்கடி பார்த்துக் கவனித்து வருகின்றார்கள்.

சரியாக மகன் பிறந்து 10 வருடங்கள் கழித்து கருவுற்று 10வது மாதம் அடுத்த குழந்தை பிறக்கின்றது. கார்த்திகை மாதம் மூன்றாவது நாள் நல்ல வேலையில் 18.11.1943 ஒரு அழகான பெண் குழந்தை உண்ணாமுலைக்குப் பிறக்கின்றது. உண்ணாமுலை அளவு கடந்த மகிழ்ச்சியடைகின்றாள். இறைவன் தன் விருப்பத்திற்கு இணங்கி, என் விரத பூஜையை ஏற்றுக்கொண்டு விரும்பியபடி பெண் குழந்தை பிறக்கச் செய்தற்கு இறைவனுக்கு நன்றி செலுத்தி மகிழ்கின்றாள்.



அருணாசலமும், வீட்டில் மற்றவர்களும் மகிழ்ச்சி யடைகின்றார்கள். உண்ணாமுலை அம்மாள் குழந்தை பிறந்து ஒரு மாதம் குழந்தைக்குப் பாலூட்டி உடல்நலத்துடன் இருக்கின்றார்கள். பிறகு அவர்களுக்கு மார்பில் கட்டி வந்து விடுகின்றது. அதனால் குழந்தைக்கு டாக்டர்கள் பாலூட்ட வேண்டாம் என்று கூறிவிடுகின்றார்கள். மனம் மிகவும் வேதனையடைந்து வருந்தி அழுகின்றார்கள். பெற்ற பிள்ளைக்குப் பாலூட்ட முடியாமல் நோய் வந்து விட்டதே என்று வருந்துகின்றார்கள்.

பிறகு சிகிச்சைக்குபின் குணமடைகின்றார்கள். குழந்தைக்குப் புட்டிப்பால் கொடுத்து வளர்க்கின்றார்கள். அருணாசலத்தின் தம்பி வெள்ளைக்கண்ணு, கிராமத்தில் வசித்து வரும் சமயம் முதல் மனைவி எல்லம்மாள் உண்ணாமுலை அம்மாளின் சித்தி மகள் - சகோதரி முறை வேண்டும். உண்ணாமுலை அம்மாள், மைத்துனர் வெள்ளைக் கண்ணு மனைவி எல்லம்மாளும் ஒன்று விட்ட சகோதரிகள் ஆகின்றார்கள். எல்லம்மாளுக்கும் ஒரு பெண் குழந்தை பிறந்து 2 வயது இருக்கும் சமயம்; இன்னொரு குழந்தை கருத்தரித்து பிறகு கருக்கலைந்து எல்லம்மாள் இறந்து விடுகின்றார்கள்.

அதனால் வெள்ளைக்கண்ணுவுக்கு இரண்டாவது திருமணம் அந்த ஊரிலேயே உறவுக்கார பெண் அலமேலு என்பவரை மறுமணம் முடிக்கின்றார்கள். முத்தம்மாள் முதல் மனைவிக்குப் பிறந்த பெண்குழந்தை மாற்றாந்தாயிடம் கஷ்டப்படும் என்று தன்னுடன் வேலூருக்கு அழைத்து வந்து உண்ணாமுலையிடம் சொல்கின்றார்கள்.

உண்ணாமுலை இந்தக் குழந்தையை இங்கு வேலூரிலேயே நம் வீட்டில் வளர்க்கலாம் என்று சொல்கின்றார்கள். அதற்கு உண்ணாமுலை அம்மாள் என்

உடன் பிறவா சகோதரி பெற்ற மகள் நல்லபடியாக நாம் வளர்க்கலாம் என்று வளர்த்து வருகின்றார்கள். அந்தக் குழந்தைக்கு ராஜம் என்று பெயரிடுகின்றார்கள். ராஜம் அன்போடு - பேதமில்லாமல் வளர்க்கப்படுகின்றாள். பரமசிவம் சிறு பிள்ளை துரு, துரு வென்று வீட்டில் வம்புகள் செய்து வருவான். தான் பெற்ற இரண்டாவது பெண் குழந்தைக்கு ஜாதக எழுத்து முதல் எழுத்து 'ம' வந்தது என்று ஜோதிடர் கூறியவுடன் மயில் என்று அருணாசலம் பெயர் சூட்டுகின்றார்கள்.

முத்தம்மாளின் மகள் பச்சையம்மாளுக்கு இரண்டு பெண் குழந்தைகள் - முதல் பெண் குழந்தை ஆனந்தாய் என்று பெயர். தன் மகள் சிறு வயதில் திருமணம் செய்து விட்டதால் முத்தம்மாள் தானே கிராமத்தில் பேத்தியை வளர்த்து வந்தார்கள். பச்சையம்மாளுக்கு இரண்டாவதும் பெண் குழந்தை பிறக்கின்றது. அந்தக்குழந்தைக்கு அலமேலு என்று பெயர் சூட்டிப் பச்சையம்மாளுடன் கணப்பாவரம் கிராமத்தில் வளர்ந்து வருகின்றது. முத்தம்மாள் வேலூர் வந்து சேரும் போது மகள் வயிற்று பேத்தி ஆனந்தாய், ராஜம் இரு குழந்தைகளுடன் வருகின்றார்கள். ஆனந்தாய் பாவாடை, சட்டை அணிந்த சிறுமி வீட்டில் பாட்டிக்கும், மாமன் மாமிக்கும் உதவியாக இருந்து வருகின்றார்கள். முத்தம்மாள், அருணாசலம், உண்ணாமுலை அம்மாள், மகன் பரமசிவம், மகள் மயில் பேத்திகள் ஆனந்தாய், ராஜம் ஆகியோர் அடங்கிய குடும்பமாக வாழ்கின்றார்கள்.

முத்தம்மாளின் கணவர் சடையப்பர் வேலூரில் மனைவி முத்தம்மாளிடம் சிறு பிள்ளைத்தனமாகக் கோபித்துக்கொண்டு கிராமத்திற்குக் கிளம்புகின்றார். அன்று கிருத்திகை தினமாம். முத்தம்மாள் கணவனை இன்று கிருத்திகை ஊருக்குச் செல்ல வேண்டாம் என்று தடுத்தும் அவர் சென்றுவிடுகின்றார். கிராமத்திற்குச் சென்றதும் சிலநாள் கழித்து உடல் நலம் சரியில்லாமல் நோய் வாய்ப்பட்டு இறந்து விடுகின்றார். முத்தம்மாள் குடும்பத்துடன் கிராமத்திற்குச் சென்று ஈமக்கிரியை அனைத்தும் முடிந்து வேலூர் திரும்பி மகன் வீட்டில் வசித்து வருகின்றார்கள்.



முத்தம்மாள் தன் கணவர் கிருத்திகை அதுவும் சென்று மறுபடியும் திரும்பாமல் போய்விட்டார் என்று அதனால் குடும்பத்தில் எல்லோரையும் கிருத்திகை அன்று வெளியூர் போக வேண்டாம் என்று சொல்வார்கள். அப்படி முக்கியமான வேலை முன்னிட்டு சென்றாலும் இரவு வெளியூரில் தங்காமல் வீடு திரும்பி விடுங்கள் என்று கூறுவார்கள். அதை எல்லோரும் கடைபிடித்து வருவது வழக்கம். அரச மரம் கூடலூர் செங்கல்வராய முதலி தெருவில் 105/1, நெம்பர் வீட்டில் அருணாசலம்பிள்ளை தன் குடும்பத்துடன் வசித்து வருகின்றார்கள். தாயார் முத்தம்மாள் மனைவி உண்ணாமுலை மகன் பரமசிவம், மகள் மயில், தங்கை மகள் ஆனந்தாய் தம்பி மகன் ராஜம் அனைவரும் உடன் இருக்கின்றார்கள்.

கிராமத்தில் இருந்து நாத்தனார் பச்சையம்மாள் அண்ணன் வீட்டிற்கு வருகின்றார்கள். அண்ணியின் மகள் கறுப்பாகப் பிறந்துள்ளதைப் பார்த்து அவளுக்கு மிக்க மகிழ்ச்சி உடனே அண்ணியிடம் எங்கள் குடும்பமே கறுப்பு என்று அன்று கூறினீர்களே. நான் சொன்னது போல் என்னைப்போல் உங்களுக்கு மகள் கறுப்பாக பிறந்து விட்டது பார்த்தீங்களா!' என்று சொல்லிக்காட்டுகின்றார்கள். உண்ணாமுலை அம்மாள் முகம் வருத்தத்தில் வாடி விடுகின்றது. பச்சையம்மாள் சில நாள் தங்கிவிட்டு ஊருக்குச் சென்று விடுகின்றார்கள்.

குழந்தைகள் பரமசிவம், ராஜம் பள்ளிக்குச் சென்று படித்து வருகின்றார்கள். தங்கை மகள் ஆனந்தாய் உண்ணாமலை அம்மாவுடன் வீட்டில் உதவிக்கு கூடவே வேலை செய்து கொண்டு இருப்பார்கள். முத்தம்மாள் தினமும்

விடியற்காலையில் 4 மணிக்கு எழுந்து தெருவிற்குத் தண்ணீர் தெளித்துக் கோலம் போட்டு, வீட்டைப் பெருக்கிவிட்டு, பிறகு அவர்கள் குளித்துவிட்டு 41/2 மணிக்கு மருமகளிடம் சொல்லிவிட்டு லாங்குபஜாரில் உள்ள ரொட்டிக்கடையை திறந்து வைத்துவிட்டு வியாபாரம் செய்வார்கள்.

குமாஸ்தாக்கள் கடை திறந்ததும் வந்து ரொட்டி, பண் பிஸ்கட் செய்வதற்கு மாவு பிசைவார்கள். அதற்கு மாசி அடித்தல் என்று பெயர். மிகவும் கடினமான வேலை! இரண்டு கைகளாலும் தண்ணீர் விட்டுப் பஞ்சு போல மாவை பிசைந்து கல்லின் மேல் போட்டு அடிப்பார்கள். அந்த வேலையை நேரில் பார்த்தால் மாவுடன் குஸ்தி போடுவது போல் இருக்கும். மாவு அடிப்பவர்கள் மூச்சு இறைக்க, வியர்த்து கொட்டும் அவ்வளவு கடினமான வேலையாகும். இப்போது மாசி அடிப்பது இல்லை. மாவு பிசைவதற்கு மிஷின் வந்துவிட்டது. அந்தக் காலத்தில் தினமும் கூலிக்காக மாசி அடித்துக் கொடுக்க ஆட்கள் வருவார்கள். அருணாசலமும் காலை 5 மணிக்கு கடைக்குச் சென்று விடுவார். அவரும் கடைக்குச் சென்றவுடன் மற்ற குமாஸ்தாவுடன் சேர்ந்து மாசி அடித்துவிட்டு ரொட்டி, பிஸ்கட், பண் செய்வதற்கு உடன் இருந்து வேலைகளைச் செய்வார். பிறகு தன் தாயாரை வீட்டிற்கு அனுப்பிவிட்டு கல்லாமேல் உட்கார்ந்து வியாபாரத்தை கவனிப்பார். காலை டிபன் கடைக்கு வந்து விடும். முத்தம்மாள் வீட்டிற்கு சென்று மருமகளுடன் சமையல் வேலைகள் முடித்துச் சாப்பிட்டுவிட்டு கடைக்கு வந்து தன் மகனைச் சாப்பாட்டிற்கு வீட்டிற்கு சென்றதும் சாப்பிட்டுவிட்டு சிறிது நேரம் ஓய்வு எடுப்பார்.

பிறகு கடைக்குச் சென்று தாயாரை அனுப்பிவிட்டு கடையை மூடிக் கொண்டு இரவு 10 மணிக்கு வீட்டிற்கு வருவார். இப்படி வாழ்க்கை நடந்து வரும் சமயம் வீட்டில் குழந்தைகள் அனைவருக்கும் அம்மை நோய் வருகின்றது. முதலில் சிறுமி ஆனந்தாய்க்கு, அடுத்துப் பரமசிவத்திற்கு,



அடுத்து ராஜத்திற்கு கடைசியில் கைக் குழந்தை மயில் 3 மாதக் குழந்தை பெரிய அம்மை வந்து விடுகின்றது. குழந்தை மயிலுக்கு உடம்பு முழுவதும் நிறைபாரமாகப் பெரிய அம்மை போட்டுள்ளது. குழந்தை மிகவும் கஷ்டப்படுகின்றது. உண்ணாமுலை அம்மாள் மிகவும் மனம் வருந்தி அழுகின்றாள். தவம் இருந்த பெற்ற மகளுக்கு அம்மை வந்துவிட்டது என்று கவலைப்படுகின்றார்கள்.

குழந்தையின் உடலில் எறும்பு ஏறிவிடக் கூடாது என்று வாழை இலையில் எண்ணெய் தடவி அதன்மீது படுக்க வைப்பார்களாம். இரவு, பகலும் கண்விழித்துக் குழந்தையைக் கவனித்து வருகின்றார்கள். குழந்தையை மடி மீது வைத்துக் கொண்டு மாரியம்மன் தாலாட்டுப் புத்தகம் படிப்பார்களாம். இரவில் குழந்தையை மடி மீது வைத்துக் கொண்டு கண்விழித்து உட்கார்ந்து இருக்கின்றார்கள். மாமியார் முத்தம்மாள் மருமகளிடம், ''உண்ணாமுலை குழந்தையை என்னிடம் கொடு நான் வைத்துக் கொள்கின்றேன். நீ கொஞ்சநேரம் தூங்கி எழுந்துக்கொள்!'' என்கின்றார்கள்.

அதற்கு உண்ணாமுலை வேண்டாம் அத்தை உங்களுக்கு வயதாகிவிட்டது. நீங்கள் தூங்கி விடுவீர்கள் நானே வைத்துக் கொள்கின்றேன் என்பார்களாம். குழந்தையின் உள்ளங்கையில் பஞ்சு வைத்து மெல்லிய வெள்ளை வேஷ்டி துணியைக் கிழித்துச் சுற்றி வைக்கின்றார்கள். இரண்டு கைகளிலும் முத்தம்மாள் மருமகளிடம் ஏன் உண்ணாமுலை இவ்வாறு செய்கின்றாய் என்று கேட்கின்றார்கள். குழந்தை அம்மைகள் அரிப்பு நமைச்சல் எடுக்கும் போது முகத்தை நகத்தால் சொரிந்து விடும். என் குழந்தை முகத்தில் அம்மை வடுக்கல் சொட்டை விழுந்து அழகு போய்விடக்கூடாது. அதனால் தான் கைகளில் பஞ்சு வைத்து துணி சுற்றியிருக்கின்றேன். இரவும், பகலும் கண்விழித்து பார்த்துக் கொள்கின்றேன் என்று கூறுகின்றார்கள்.

இந்தப் பெற்ற பாசத்தைக் கேட்டு முத்தம்மாளின் கண்களில் நீர் வழிகின்றது. மாரியம்மன் தாயே என் மருமகளுக்காகவாவது என் பேத்தியை காப்பாற்று என்று மனம் உருக பிராத்திக்கின்றார்கள். அம்பாளின் கடைக்கண் பார்வையால் குழந்தை அம்மை நோய் நீங்கி நாளடைவில் குணமடைகின்றது. முத்தம்மாளும், உண்ணாமுலை அம்மாளும் பொங்கலிட்டுப் பூஜை செய்து பிரார்த்தனையைப் படைக்கின்றார்கள். உண்ணாமுலை அம்மாள் திங்கள் கிழமை, செவ்வாய்க் கிழமை, வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை, கிருத்திகை, ஏகாதசி, சிவராத்திரி என்று எல்லாத் தினங்களில் விரதம் இருப்பதும், கோவில் வழிபாடும் செய்து வருகின்றார்கள். ஏழைகளுக்கு உதவும் தயாளகுணமும் உடையவர்களாக இருந்தார்கள்.

❋



# தாயின் பிரிவு

**குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே**
**உடம்போடு உயிரிடை நட்பு (கு.338)**

*‘உடம்போடு உயிருக்கு உள்ள உறவு, தான் இருந்த கூடு தனியே இருக்க, அதைவிட்டு வேறிடத்திற்குப் பறவை பறந்தாற் போன்றது’.*

ஒரு தள்ளாத வயோதிகர் கவனிப்பதற்கு ஆள் இன்றி அருணாசலம் வீட்டுத் திண்ணையில் வந்து ஜுரத்துடன் படுத்து விடுகின்றார். உண்ணாமுலை அம்மாள் அந்தக் கிழவருக்குச் சாதத்தை தட்டில் வைத்துப் பிசைந்து சிறு, சிறு உருண்டையாக அவருக்கு ஊட்டி, தண்ணீர் குடிப்பாட்டுகின்றார்கள். மருந்து கொடுத்துக் குணமாக்கி அனுப்புகின்றார்கள். வெற்றிலை கொடுத்தால் வினை தீரும் என்று எல்லோருக்கும் வெற்றிலை பாக்கு கொடுப்பதும் மஞ்சள், குங்குமம் கொடுத்தால் மாங்கல்ய பாக்கியம் கிடைக்கும் என்று வீட்டிற்கு வரும் சுமங்கலிகளுக்கு மஞ்சள் குங்குமம் கொடுப்பதும் அவர் வழக்கம்.

உண்ணாமுலை அம்மாள் கோவிலுக்கோ, மற்ற அலுவல்களுக்கோ பட்டுப் புடவை, நகை அணிந்து சென்றால்,

கோவில் அம்மனை பார்ப்பது போல் அழகாக இருப்பார்களாம். முத்தம்மாள் மருமகள் வீட்டிற்கு வந்ததும் கண்திருஷ்டி பட்டுவிடும் என்று ஆரத்திச் சுற்றிப் போடுவார்களாம். மருமகள் வீட்டிற்கு வந்ததும் உடனே நகைகளையும், பட்டு புடவையும் கழற்றிவிடுவார்களாம். மாமியார் மருமகளிடம் ஏன் உண்ணாமுலை கொஞ்ச நேரம் தான் அப்படியே உடுத்தியிருக்கக் கூடாதா, வந்ததும் அவிழ்த்து விடுகின்றாயே என்று ஆதங்கத்துடன் கேட்பார்களாம். புடவை அழுக்காக போய்விடும். இப்படி பட்டு புடவைகள் இல்லாமல் நான் முதலில் எவ்வளவு கஷ்டப்பட்டேன். இருக்கும்போது அதை நல்ல முறையில் பாதுகாக்க வேண்டும் என்பார்களாம்.

ஒவ்வொரு பேச்சும் நிதானத்துடன் அழகாக மாமியாருக்கு எடுத்துரைப்பார்களாம். உண்ணாமுலை அம்மாள், அருணாசலம் குடும்பம் நல்ல முறையில் நடந்து வருகின்றது. மனைவி உண்ணாமுலை அம்மாள் நிமோனியா காய்ச்சலில் உடல் நலம் பாதிக்கப்படுகின்றது, மருந்துகள் சாப்பிட்டுக் கொண்டு வந்தாலும் உடல் குணமடையவில்லை. நாளுக்குநாள் பலவீனம் அடைந்து வருகின்றார்கள். விளையாட்டாக மூன்று மாதங்கள் கடந்து செல்கின்றது உடம்பு குணமடையவில்லை. குழந்தைகளைக் கவனிக்க ஆள் வேண்டும். அதனால் மகனிடம் நீ மறுமணம் செய்து கொள்!'' என்று கூறுகின்றார்கள்.

அருணாசலம் இப்போது வேண்டாம் மனைவி உயிருடன் இருக்கும்போது எனக்குத் திருமணமா, வேண்டாமென்று கூறிவிட்டு கடைக்குச் சென்று விடுகின்றார். மாமியார் தன் கணவனிடம் சொல்லியதை உண்ணாமுலை அம்மாள் காதில் விழுகின்றது. மிகவும் மனவருத்தம் அடைகின்றார். மதியம் தன் கணவர் வீட்டிற்கு வந்து சாப்பிட்டு முடிந்ததும் ஓய்வு எடுக்கச் செல்கின்றார்.



அச்சமயம் உண்ணாமுலை அம்மாள் கணவரின் முன் சோகமே உருவாக அமர்கின்றார். அருணாசலம் தன் மனைவியைப் பார்த்து வா உண்ணாமுலை என்று தன் அருகில் உட்கார வைத்து ஏன் என் உன் முகம் வாட்டமாக உள்ளது. உடம்பு எப்படி உள்ளது. கஷ்டமாக உள்ளதா அல்லது எங்க அம்மா ஏதாவது வருத்தமாகச் சொன்னார்களா? என்று அன்புடனும், பரிவுடனும் கேட்கின்றார்கள். உண்ணாமலை அம்மாள் தலை குனிந்து உட்கார்ந்து இருக்கின்றார்கள். அருணாசலம் தன் மனைவியின் முகத்தைத் தொட்டு நிமிர்த்துகின்றார். கண்கள் சிவந்து கண்ணீர் தளும்பி, கன்னத்தில் வழிந்து உருளுகின்றது.

மனைவியை பாசத்துடன் அணைத்து, ''ஏன் அழுகின்றாய் சொல்லும்மா!'' என்று கேட்கின்றார். உண்ணாமுலை அம்மாள் மெதுவாக, தன் கணவனின் கைகளை பற்றிக் கொண்டு நான் ஒன்று கேட்பேன் நீங்கள் நிதானமாகப் பதில் சொல்ல வேண்டும் என்கின்றார். அழுது கொண்டே தயங்கி, என்னங்க எனக்கு உடம்பு சரியில்லை என்று, நான் பிழைக்கமாட்டேன் என்று முடிவு செய்து, நான் உயிருடன் இருக்கும் போதே உங்க அம்மா மறுமணம் செய்து கொள்ளும்படி கூறுகின்றார்கள். எனக்கு மனம் மிகவும் வேதனைப்படுகின்றது. ஏன் நான் சுகமடைய வாய்ப் பில்லையா? நான் தவமிருந்து பெற்ற குழந்தைகள் கஷ்டப்பட வேண்டுமா? உங்களை ஒன்று கேட்கின்றேன். நீங்கள் என்னைப்போல் உடல் நலம் குன்றியிருந்து நான் ஆரோக்கியமாக இருந்து நீங்கள் பிழைக்கமாட்டீர்கள் என்றால் நான் மறுமணம் செய்து கொள்கின்றேன் என்றால் உங்கள் மனம் எப்படியிருக்கும் நினைத்துப்பாருங்கள். ஆணுக்கு ஒரு நீதி, பெண்ணுக்கு ஒரு நீதியா? ஒரு வேளை என் உடல்நிலை குணமடைந்து விட்டால். என் வாழ்க்கையை நான் பங்கு போட்டு தர விருப்பம் இல்லை. நான் இறந்த பிறகு உங்கள்

விருப்பம் எப்படியாவது செய்து கொள்ளுங்கள். நான் உயிருடன் இருக்கும் போது மட்டும் மறுமணம் செய்து கொள்வதை நான் விரும்பவில்லை என்று தேம்பித் தேம்பி அழுகின்றார். அருணாசலம் தன் மனைவியை மார்போடு அணைத்துக் கொண்டு கண்களில் கண்ணீர் மல்க, நா தழுக்க, தன் மனைவியின் கரங்களைப் பற்றி ''உண்ணாமுலை இது சத்தியம் நீ இருந்தாலும் சரி, இறந்தாலும் சரி நான் மறுமணம் செய்து கொள்வதில்லை, உனக்கும், என் குழந்தைகளுக்கும் துரோகம் செய்யமாட்டேன்!'' என்று சத்தியப் பிரமாணம் செய்கின்றார். இனிமேல் நீ அழக்கூடாது சந்தோஷமாக இரு, விரைவில் குணமடைவாய் என்று சொல்லிவிட்டுக் கடைக்குச் செல்கின்றார். இரவு வீட்டிற்கு வந்ததும் தன் தாயாரிடம் ''அம்மா உண்ணாமுலை கிராமத்துப் பெண்ணாகப் படிக்காதவளாக இருந்தாலும் அவளுக்கு என்ன அறிவு பார்த்தீங்களா!'' என்று தன் மனைவி கூறியதைத் தாயாரிடம் சொல்கின்றார்.

இனிமேல் மறுமணத்தை பற்றி பேசாதீர்கள் என்று கூறுகின்றார். தன் மனைவியை சி.எம்.சி. மருத்துவமனையில் அட்மிட் செய்து 1 மாதம் சிகிச்சைக்குப் பிறகு வீடு திரும்புகின்றார்கள். மறுபடியும் ஒரு மாதம் கழித்து உண்ணாமுலை அம்மாள் உடல்நலம் பாதிக்கப்படுகின்றது. வீட்டிலேயே மருந்து சாப்பிட்டு வருகின்றார்கள். வேலூர் அருகில் உள்ள போளூர் கோவிந்தசாமி நாயுடுவும் அவர் துணைவியார் யசோதா அம்மாளும் அருணாசலம் குடும்பத்திற்கு மிகவும் நெருங்கிய நண்பர்கள். அடிக்கடி வேலூர் வந்து தங்கிச் சகோதர பாசத்துடன் பழகுவார்கள். உண்ணாமுலை அம்மாள் உடல் மிகவும் மோசமாக இருப்பதால் அவர்கள் தாய் பூங்காவனம் அம்மாள் வேலூர் வரவழைக்கப்படுகின்றார்கள். போளூருக்கும் கோவிந்தசாமி தம்பதிகளுக்குத் தகவல் தெரிவிக்கின்றார்கள்.



ஒருநாள் கடைசி இரவு! வீட்டின் கூடத்தில் உண்ணாமுலை அம்மாள் படுக்கையில் படுத்து இருக்கின்றார்கள். அவரை சுற்றி அருணாசலம், முத்தம்மாள், பூங்காவனம் அம்மாள், குழந்தைகள் பரமசிவம், மயில் ஆனந்தாய், ராஜம் அனைவரும் படுத்து இருக்கின்றார்கள். இரவு 1 மணி அனைவரும் அரை தூக்கத்தில் இருக்கின்றார்கள். கதவு மட்டும் தட்டும் சத்தம் கேட்கின்றது. உண்ணாமுலை அம்மாள் மட்டும் மரணவேதனையில் தூங்காமல் இருக்கின்றார். தன் மாமியார் இடமும் கணவர் இடமும் போளூரில் இருந்து என் தங்கை வந்திருக்கின்றாள். கதவை திறங்கள்'' என்கின்றார்கள். உடனே கதவை திறக்கின்றார்கள். என்ன ஆச்சரியம்! போளூர் யசோதா, கோவிந்தசாமி தம்பதிகள் வந்திருக்கின்றார்கள்.

உண்ணாமுலை அம்மாள் அருகில் சென்று உட்கார்ந்து கண்கலங்கப் பேசுகின்றார்கள். தங்கை யசோதா கையை பிடித்துக் கொண்டு இனிமேல் நான் பிழைக்க மாட்டேன் என் குழந்தைகளையெல்லாம் பார்த்துக்கொள். அடிக்கடி வீட்டிற்கு வந்து போகவும் என்று கூறுகின்றார்கள். நேரம் மெல்ல மெல்ல நகருகின்றது. விடியற்காலை 4.50 மணிக்கு உண்ணாமுலை அம்மாள் ''அத்தை கூடத்தில் மாட்டியிருக்கும். முருகன் படத்தை எடுத்து வாருங்கள்'' என்றார்கள். அவ்வாறே கூடத்தில் உள்ள அழகிய முருகன் படம் தோகை விரித்த மயில் மேல் உட்கார்ந்திருக்கும் முருகன் படம் - அதைக் கழட்டி எடுத்து வந்து முத்தம்மாள் அருணாசலத்திடம் கொடுக்கின்றார்கள். அந்தப் படத்தை தன் மனைவியின் மார்பு மீது படத்தை நிற்க வைத்து பிடித்துக்காட்டுகின்றார்கள்.

உண்ணாமுலை அம்மாள் சுயநினைவுடன் சுற்றியுள்ள மாமியார், கணவர், குழந்தைகள், யசோதா தம்பதிகள் அனைவரையும் ஒருமுறை பார்த்துவிட்டுத் தன்

மார்புமீது வைத்துள்ள முருகன் படத்தை நேராகப் பார்த்து இரண்டு கைகளையும் கூப்பி முருகா, முருகா முருகா என்று மூன்று முறை கூப்பிட்டுக் கொண்டே கண்களை மூடுகின்றார். அவர் உயிர் உடலை விட்டு பிரிந்து இறைவன் திருவடி சேருகின்றது. அனைவரும் அழுது புலம்புகின்றார்கள்.

முக்கிய உறவினர்களுக்கு மட்டும் ஏ.எஸ்.ஏ. தெரிவிக்கின்றார். 6 மணி நேரத்திற்கு மேல் சடலத்தை வைத்திருக்ககூடாது. விரைவில் அடைக்கலம் செய்ய வேண்டும், கைப் பாடைத்தான் கட்ட வேண்டும். மேள தாளங்கள் வைக்கக்கூடாது. அவர்கள் எல்லாம் குடித்துவிட்டு கும்மாளம் அடிக்கின்றார்கள். அது அவருக்கு பிடிக்கவில்லை. சங்கு, சேமக்கலம் மட்டும் ஊதி, சிவபுராணம் படிக்க ஏற்பாடு செய்து எளியமுறையில் கைப் பாடை கட்டச் சொல்லி, முறைப்படி ஈமக்கிரியைகள் செய்து எளியமுறையில் கைப் பாடை கட்டச் சொல்லி, முறைப்படி ஈமக்கிரியைகள் செய்து காலை 10 1/2 மணிக்கு அடக்கம் செய்ய எடுத்துச் சென்றனர். சவம் வீட்டிலிருந்து புறப்படும் சமயம் குழந்தை மயில் 1 1/2 வயது தேம்பி, தேம்பி அம்மா என்று அழுகின்றாள். பாட்டி முத்தம்மா இடுப்பில் தூக்கி வைத்துக் கொண்டு அம்மா சேண்பாக்கம் கோவிலுக்குச் செல்கின்றார்கள் வருவார்கள் என்று குழந்தைக்குச் சமாதானம் சொல்லி அழைத்து செல்கின்றார்கள்.

மூன்று மாதம் கழித்து ஒருமுறை சேண்பாக்கம் கோவிலுக்கு முத்தம்மாள் பேரன் பரமசிவம், பேத்திகள் ராஜம், ஆனந்தாய், மயில் மூவரையும் அழைத்துச் செல்கின்றார்கள். அந்தக் காலத்தில் ஒத்தை மாட்டுவண்டி பிரயாணம்தான். கோவிலுக்குச் செல்லும்போது பேத்தி மயிலை இடுப்பில் தூக்கிக்கொண்டு மற்றவர்களை அழைத்துக்கொண்டு செல்கின்றார். குழந்தை மயில் சுற்றி, சுற்றிப் பார்க்கின்றாள், முகம் வாடிச் சோகமாக இருக்கின்றது. கோவில் உள்ளே



சென்று சாமி கும்பிட்டு விட்டு வெளியே வருகின்றார்கள். முத்தம்மா, குழந்தை லேசாக விம்மி, விம்மி அழுகின்றாள். ‘‘ஏம்மா கண்ணு அழுகின்றாய்! என்று கேட்கின்றார்கள். குழந்தை ‘‘ஆயா அம்மா இல்லை, அம்மா இல்லை!’’ என்று சொல்ல முடியாமல் சொல்லி கண்கலங்கிக் கேட்கின்றாள். முத்தம்மாவுக்கு தூக்கிவாரிப் போடுகின்றதாம், என்ன சொல்வதென்று தெரியாமல் பேத்தியை உச்சிமுகந்து, அணைத்துக்கொண்டு அழுகின்றார்களாம். குழந்தையை வேறு வகையில் திசை திருப்பித் தின்பண்டம் மிட்டாய் வாங்கிக் கொடுத்துக் கோவிலை விட்டு வண்டியில் ஏறி வீட்டிற்கு வருகின்றார்கள். வீட்டிற்கு வந்து முத்தம்மாள் சோகமே உருவாக அமர்ந்து இருக்கின்றார். இரவு மகன் கடையைமூடிக்கொண்டு வீட்டிற்கு வருகின்றார். மகனுக்கு இரவு சாப்பாடு போடுகின்றார்.

ஏ.எஸ்.ஏ. தாயின் முகத்தை பார்த்துக் கேட்கின்றார் ‘என்னம்மா உடம்பு சரியில்லையா, வேலை மிகுதியா, முகம் வாட்டமாக இருக்கின்றீர்கள்?’ என்று தாயைப் பரிவுடன் கேட்கின்றார். முத்தம்மா மகனிடம் அழுது கொண்டே கூறுகின்றார். என்னவென்று சொல்வதப்பா, உன் மனைவி இறந்தபோது நாம் குழந்தை மயிலுக்கு, ‘‘அம்மா சேண்பாக்கம் கோவிலுக்குச் சென்று இருக்கின்றார்கள், வருவார்கள் என்று சமாதானப்படுத்தினோமே நினைவிருக்கிறதா? இன்று கோவிலுக்கு சென்று இருந்தேன் 3 மாதம் ஆகிவிட்டதே போய் வரலாம் என்று குழந்தைகளை அழைத்து சென்றேன். அங்கு உன் மகள் சுற்றிச் சுற்றிப் பார்க்கின்றாள், முகம் வாடிவிட்டது. அம்மா இல்லையே என்று அழுதாள். அந்த பிஞ்சு மனதின் அடிதளத்தில் 3 மாதமாக மறக்காமல் தாயின் நினைவு உள்ளது பார்.

எனக்கு ஆச்சரியமாகிவிட்டது. ஏதோ நாம் குழந்தையை சமாதானப்படுத்தச் சொன்னது. மூன்று மாதம்

கழித்து கோவிலில் தாயைத் தேடுகின்றாள். எனக்குத் துக்கம் தொண்டையை அடைக்கின்றது. அதிலிருந்து எனக்கு மனசு சரியில்லையப்பா!'' என்று சொல்கின்றார்கள். ஏ.எஸ்.ஏ.வும் குழந்தையின் செயலை அறிந்து மிகவும் வருத்தத்துடன் தூங்கும் குழந்தையைத் தடவிக் கொடுத்துவிட்டுக் கண்கலங்கப் படுக்கைக்குச் செல்கின்றார். மகளை நினைத்து இரவெல்லாம் தூங்காமல் கஷ்டப்படுகின்றார். காலையில் எழுந்து தினமும் செய்யும் தம் வேலைகளைக் கவனிக்கின்றார். இப்படியாக நாட்கள் நகருகின்றன.

மகன் பரமசிவம், ராஜம் பள்ளிக்குச் சென்று படித்து வருகின்றார்கள். மகள் மயிலுக்கு 3 வயது ஆகின்றது. மேல்மலையனூர் கோவிலில் மொட்டை போட்டுக் கோட்டப்பூண்டியில் உள்ள சொந்த வீட்டில் முத்தம்மாளின் சிறிய மகன் வெள்ளைக்கண்ணுவின் இரண்டு குழந்தை களுடன் ஏ.எஸ்.ஏ.வின் மகள் மயிலுக்கும் சேர்த்துக் காதணி விழா கிராமத்தில் சிறப்பாக நடத்திக் குடும்பத்துடன் வேலூர் வருகின்றார்கள். ஏ.எஸ்.ஏ. வியாபாரத்தைத் திறமையாக நடத்தி வருகின்றார். வியாபாரத்தில் தன் புதிய முயற்சிகளை உபயோகித்து மிகவும் புதுவிதமான கேக், பிஸ்கட், பண் என்று ருசியாகத் தயார் செய்கின்றார். நல்ல பெயருடன் வியாபாரம் நடைபெறுகின்றது.

சிறிய வருக்கி, பண் தயார் செய்து ஆட்கள் மூலம் ரயில்வே ஸ்டேஷன், பஸ் ஸ்டாண்டு இடத்தில் விற்பதற்கு அனுப்பி வைப்பார். ஊழியர்கள் பொருள் அனைத்தும் விற்றுவிட்டுக் காசுடன் வருவார்கள். ஒருநாள் நிறைய சரக்குகள் விற்காமல் மாலை 6 1/2 மணிக்குக் கொண்டு வந்து கொடுத்தார்களாம். இவ்வளவு சரக்கு வீணாகிவிட்டதே நாளைக்கு விற்றால் நன்றாக இருக்காதே என்று யோசிக்கின்றார். வியாபாரம் நஷ்டம் அடையக் கூடாது. பிறகு நல்லயோசனை தோன்றியதாம். வெல்லப்பாகு தயார் செய்து



பண்ணின் மேல் தடவி அதன் மீது எள்ளும், கசகசாவும் லேசாகத் தூவினாராம். இவைகளை ஒரு பெரிய மூங்கில் சடலை - அந்தக் காலத்தில் பெரிய வட்டவடிவமாக தட்டுப்போல் இருக்கும் - அதில் வரிசையாக அடுக்கிவைத்துக் கடையின் முன்பு ஒரு பெரிய மரப்பெட்டி வைத்து அதன் மீது இந்த தட்டை வைத்துப் பெரிய காடை விளக்கை ஏற்றி வைத்தாராம். பார்ப்பதற்குப் பளபளப்புடன் எள்ளுப்போட்டு அழகாக இருந்ததாம். ஒரு அணா பண்ணை பாதிவிலைக்கு 1/2 அணா என்று கூவி விற்றாராம். 1 மணி நேரத்தில் எல்லா பண்ணும் விற்றுவிட்டதாம்.

ஏ.எஸ்.ஏ.வுக்கு மிகவும் மகிழ்ச்சி அடுத்த நாள், வாடிக்கையாளர்கள் வந்து நேற்று வாங்கிச் சென்ற பண் மிகவும் இனிப்பாக, சுவையாக இருந்தது. அந்த பண் கொடுங்கள் என்றார்களாம். அவரின் புத்திக்கூர்மையால் பொருளும் வீணாகவில்லை. நஷ்டமும் ஏற்படவில்லை என்று அவர் கூறினார். வீட்டில் முத்தம்மாள், ஏ.எஸ்.ஏ. அவர் தங்கை மகள் ஆனந்தாய், மகன் பரமசிவம், வளர்ப்பு மகள் ராஜம், மகள் மயிலு இப்படி குடும்பத்தைத் திறமையுடன் முத்தம்மாள் நடத்தி வருகின்றார்கள்.



*வள்ளல் ஏ.எஸ்.ஏ. அவர்கள் குடியிருந்த கோயில் முத்தம்மாள்*

முத்தம்மாள் பேத்தி ஆனந்தாய்க்கு எல்லாச் சமையலும் கற்றுக் கொடுத்து வீட்டைக் கவனிக்கும்படி வழி நடத்துகின்றார்கள். தான் விடியற்காலை கடை திறப்பதும், மகனைச் சாப்பாட்டிற்கு அனுப்புவதும், மகன் சென்னைக்குச் சென்று மாவு வாங்கி வரச்சென்றால் கடையைப்பார்த்துக் கொள்வதும் இப்படி நகருகின்றது. ஏ.எஸ்.ஏ. சென்னை, ஈரோடு, சேலம், பாண்டிச்சேரி இப்படி சென்று கடைக்கு வேண்டிய மைதா, கோதுமைமாவு, கேக்விதை, பிஸ்தா, முந்திரி, திராட்சை இப்படி அனைத்துப் பொருள்களும் வாங்கி வருவார்கள்.

முத்தம்மாள்கிராமத்துப் பெண், படிக்காதவர்கள் வேலூர் மார்க்கெட்டில் திறமையாகக் கடையைத் திறந்து நாள் முழுக்க வியாபாரம் நடத்தி இரவு கடையை மூடிக்கொண்டு வருவார்கள். ஏ.எஸ்.ஏ. தாயார் மீது மிகுந்த பக்தியும் பாசமும் உடையவர். மயிலுக்கு 5 வயது ஆனதும் பள்ளியில் சேர்க்க முடிவு செய்கின்றார்கள். வேலூரில் கூடலூர் செங்கல் வராய முதலியார் தெருவில் 105/1 நெம்பர் வீடுதான் சொந்த வீடு. வீட்டிற்கு எதிர் வரிசையில் 5வது வீட்டில் ஷாட்ராக் ஆரம்ப பாடசாலை நடந்து கொண்டு இருந்தது. அந்தப் பள்ளியில் தான் பரமசிவமும், ராஜமும் படித்தார்கள். அந்தப் பள்ளி ஆரம்பப் பள்ளி, 1 முதல் 5 வகுப்பு வரையில் தான் இருந்தது.

பரமசிவம் 5ம் வகுப்பு முடித்து 6 வது முதல் 8வது வரை மகாதேவ அய்யர் பள்ளியில் படிப்பைத் தொடர்ந்தார். ராஜம் அரசு உயர்நிலைப்பள்ளியில் - வேலூர் மாசிலாமணி தெருவில் உள்ளது - 6வது சேர்க்கப்பட்டார். மயிலுவை ஷாட்ராக் பள்ளியில் விஜயதசமி அன்று ஏ.எஸ்.ஏ. சேர்க்க முடிவு செய்தார். மயிலுவுக்குப் புதுகவுன் அணிவித்தும் கழுத்தில் மாலை போட்டு, புது பலகை, பலப்பம் அரிச்சுவடி வாங்கிச் சென்று பள்ளிக்கு 10 மணிக்கு முத்தம்மாளுடன் அழைத்துப்போகின்றார்.



கூடவே பெரிய கூடையில் சுவையான பிஸ்கட்டும், நிறைய பேப்பர் கட்டிங்கும் எடுத்துச் செல்கின்றார். ஏ.எஸ்.ஏ. பள்ளியின் தலைமை ஆசிரியர் ரூமுக்குச் சென்று ஷாட்ராக் ஆசிரியரிடம் என் குழந்தை மயிலு இந்தப்பள்ளியில் 1ஆம் வகுப்பு சேர்க்க வந்துள்ளேன். முறைப்படி அட்மிஷன் பண்ணிக் கொள்ளும்படி கூறினார். அந்தத் தலைமை ஆசிரியருக்கு மாலை அணிவித்தார். பிறகு ஆசிரியர்கள் அனைவருக்கும் இரண்டு கைகளிலும் அள்ளி பிஸ்கட் - ஒரு நபருக்கு 1 கிலோ இருக்கும் அப்படி கொடுக்கின்றார். பிறகு 4 முதல் 5 வகுப்பு வரையில் உள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் பேப்பரில் பிஸ்கட்டை கொத்து, கொத்தாக அள்ளி வைத்து தருகின்றார். எல்லோரும் மகிழ்ச்சி அடைந்தார்களாம். பிறகு தலைமை ஆசிரியரிடம் நாங்கள் சென்று வருகின்றோம். என் மகள் தாய் இல்லாத குழந்தை செல்லமாக வளர்த்தோம். நன்றாக அன்போடு கவனித்துக் கொள்ளுங்கள் என்று கூறுகின்றார்.

தலைமை ஆசிரியர் அந்தப்பள்ளியில் உள்ள பிரகாசி என்ற ஆசிரியையை அழைத்து என்னை ஒப்படைக்கின்றார்கள். அந்த ஆசிரியை மயிலுவை இடுப்பில் தூக்கி வைத்துக் கொண்டு கிளாஸ் ரூமுக்குச் சென்றார்களாம். ஏ.எஸ்.ஏ. என் மகள் அழாமல் சமர்த்தாக சென்றாள் என்றுவீட்டில் வந்து பெருமையுடன் கூறினாராம். மயிலுவின் படிப்பு அந்தப் பள்ளியில் தொடர்கின்றது. 1வது வகுப்பில் ஆண்டு கடைசியில் ஆண்டு விழா அந்த பள்ளியின் எதிர் வீட்டு மாடியில் நடக்கின்றது. வெங்கோபராவ் என்ற ஜவுளிக் கடைகாரர் வீட்டு மொட்டை மாடியில் நடந்தது. மயிலு ஒரு குரூப் டான்ஸில் நடனம் ஆடுகின்றாள். அப்போது எல்லாம் பாரதியார் பாட்டுகள்தான் இடம்பெறும். அந்த விழாவுக்கு ஊரில் இருந்து பச்சையம்மாள் தங்கையை வரவழைத்து விட்டார். விழா அன்று முத்தம்மாள், ஆனந்தாய், ராஜம், பரமசிவம் அனைவரும் வந்து கலந்து கொண்டார்கள். விழாவில் மயிலு நடனம் ஆடியதை ரசித்துப் பார்க்கின்றார்கள்.

விழா முடிந்ததும் முத்தம்மாளும், பச்சையம்மாளும் கட்டி முத்தமிடுகின்றார்கள். வீட்டிற்குச் சென்றதும் திருஷ்டி சுற்றிப் போடுகின்றார்கள். இரவு கடையில் இருந்து ஏ.எஸ்.ஏ. வந்ததும் என் பேத்தி உன் மகள் அழகாக ஆடினாள் என்று மகிழ்ச்சியுடன் கூறுகின்றார்கள்.

உடனே முத்தம்மா என் மருமகள் கொடுத்து வைக்கவில்லையே என்று மகனிடம் வருத்தப்பட்டார்களாம். இருவரும் ஒருவருக்கொருவர் ஆறுதல் கூறிக் கொண்டார்களாம். மயிலு அதே பள்ளியில் 3ம் வகுப்பு படித்துக்கொண்டு இருக்கின்றாள். முத்தம்மாளின் பேத்தி ஆனந்தாய் பருவமடைகின்றாள். உறவினர்களை அழைத்து மஞ்சள் நீராட்டுவிழா முறைப்படி நடக்கின்றது. பிறகு 1 வருடம் கழித்து உறவினர் பிள்ளை பூங்காவனம் என்பவருக்கு திருமணம் செய்து கொடுக்கின்றார்கள். ஆனந்தாய் மாமியார் வீடு பக்கத்து தெருவில் உள்ளது. பெரிய குடும்பம் மாமனார், மாமியார், இரண்டு மைத்துனர்கள், மூன்று நாத்தனார்கள். பெரிய குடும்பம் பூங்காவனம் திறமைசாலி ஏ.எஸ்.ஏ. கடையில் குமாஸ்தாவாகப் பணிபுரிகின்றார்.

உறவினர் நல்ல பையன் என்று பேசி முடித்தார். ஆனந்தாய் மாமனார், மாமியார் குடும்பம் முறுக்கு, எள்ளடை, மசால் வடை, கடை வைத்து இருந்தார்கள். ஆனந்தாய் பேத்திக்கு முத்தம்மாள் தன் சொந்த வீட்டிலேயே கன்னிகாதான திருமணம் நடத்திச் சீர்வரிசைகளுடன் பக்கத்துத் தெருவில் மாமியார் வீட்டில் விட்டு விட்டு வருகின்றார்கள். மயிலு ஒரே அடம்பிடித்து அழுகின்றாள் கூடவே செல்வேன் என்று! ஆனந்தாய் பால் ஊட்டுவதும், சோறு ஊட்டுவதும் தலைவாரி விடுவதும் அனைத்து வேலைகளும் செய்து வந்தார்கள். அதனால் குழந்தை பிரியமுடியாமல் அழுகின்றாள்.



கூடவே அனுப்பி வைத்தார்களாம். அன்று முழுவதும் விளையாட்டாக இருந்து இரவு குழந்தை தூங்கிவிட்டதும் 8 மணிக்குச் சென்று முத்தம்மாள் வீட்டிற்குத் தூக்கி வந்து விட்டார்களாம். தன்னுடன் அணைத்துப் படுத்துக் கொள்கின்றார்கள். காலையில் எழுந்ததும் அழுதுகொண்டு ஆனந்தாய் வீட்டிற்குப் போகின்றாள் மயிலு. முத்தம்மாளை ஆனந்தாய், பரமசிவம், ராஜம், மயிலு அம்மா, அம்மா என்று தான் கூப்பிடுவார்கள். யாரும் ஆயா என்றே கூப்பிட மாட்டார்கள் ஆனந்தாயை பரமசிவம், ராஜம், மயிலு மூவரும் செல்லமாக அக்கா, அக்கா என்று கூப்பிடுவார்கள். இப்படியாக 1 மாதம் நகருகின்றது. முத்தம்மாளுக்கு சிரமமாக உள்ளது. கடையையும் கவனிக்க வேண்டும், குழந்தைகளையும் கவனிக்க வேண்டும், சமையலும் செய்ய வேண்டும், வீட்டில் பொறுப்பாக ஆளும் இருக்க வேண்டும். மூன்று குழந்தைகளும் பள்ளிக்குச் சென்றால், முத்தம்மாள் கடைக்குச் சென்றால் வீட்டில் ஆள் இல்லை என்ன செய்வது என்று தடுமாறுகின்றார்கள். மீண்டும் மகனைக் கேட்கின்றார்கள். ‘மகனே இப்பவாவது சொல்! நீ திருமணம் செய்து கொள்கின்றாயா! உடனே ஏற்பாடு செய்கின்றேன்’ என்று கேட்கின்றாள்.

‘நான் இருக்கும் வரை ஒத்தாசை! தீடீர் என்று நான் போய்விட்டால். இந்தக் குழந்தைகளை யார் பார்ப்பது என்று முறையிடுகின்றார்கள். ஏ.எஸ்.ஏ. அசையவில்லை. ‘அம்மா என் மனைவிக்கு வாக்கு கொடுத்து விட்டேன் மறுமணம் என்ற பேச்சுக்கே இடம் இல்லை. சமைத்து போட, குழந்தைகளை கவனிக்க நீ இருக்கின்றாய்! ஆஸ்திக்கு ஒரு பிள்ளை: ஆசைக்கு ஒரு பெண் இதுபோதும் எனக்கு! சிற்றின்பத்தில் எனக்கு ஆசையில்லை. கடவுள் அருளால் நீண்டகாலம் நீங்கள் எங்களுக்குத் துணையாக இருப்பீர்கள் அம்மா’ என்று கூறுகின்றார். முத்தம்மாள் ‘‘இருடா குழந்தையைக் கேட்கலாம் என்று மயிலுவை கூப்பிடு

கின்றார்கள். மயிலு விளையாடிக் கொண்டு இருந்தவள் ஆசையுடன் ஓடி வருகின்றாள். ஏ.எஸ்.ஏ. குழந்தையை மடியில் வைத்துக்கொள்கின்றார். முத்தம்மாள் குழந்தையை பார்த்து, மயிலு அப்பாவுக்குக் கலியாணம் பண்ணலாம் உனக்கு புது அம்மா வருவார்கள். உன்னைக் கவனித்துக் கொள்ள ஆனந்தாய் அக்கா இல்லை. அதனால் புது அம்மா கூட்டி வரலாமா? என்று கேட்கின்றார்கள்.

உடனே குழந்தை மயிலு முகம் வாட்டமடைகின்றது. புது அம்மா எனக்கு வேண்டாம். நீங்கள் தான் அம்மா இருக்கின்றீர்களே. புது அம்மா வந்தால் நான் கையை வெட்டிவிடுவேன்! தலையை வெட்டி விடுவேன்! என்று ஆசையாக சொல்கின்றாளாம். அருணாசலம் கொல்லென்று சிரிக்கின்றார். முத்தம்மாளும் சிரிக்கின்றார். ''அம்மா இதோடு நிறுத்துக் கொள்ளுங்கள் இந்த ஆசையை என் மகளே சொல்லி விட்டாள் பாருங்கள்.'' எவ்வளவு வீராவேசமாக இந்த வயதில் பேசுகின்றாள் பாருங்கள்' என்று கூறிவிட்டு இல்லைடா கண்ணு எனக்குக் கலியாணம் வேண்டாம்'' என்று குழந்தையை உச்சி முகருகின்றார். முத்தம்மாளும் அதன் பிறகு திருமணத்தைப் பற்றி பேசவில்லை. இந்த வீட்டிற்கு அவருக்கு ஒரு துணை தேவைப்பட்டது. உடனே ஒரு யோசனை தோன்றியது. தன் மகள் பச்சையம்மாளின் இரண்டாவது மகள் அலமேலு 12 வயது சிறுமி கணிப்பாவரம் கிராமத்தில் இருந்து பேத்தியைத் துணைக்கு அழைத்து வந்து வேலூரில் வைத்துக் கொண்டார்.

பச்சையம்மாளும் தன் அம்மாவுக்குத் துணையாக இருக்கட்டும் என்று அனுப்பி வைத்தார்கள். அடிக்கடி தன் தாய் வீட்டிற்கு வந்து ஆனந்தாய், அலமேலுவை பார்த்துவிட்டுச் செல்வார்கள். தன் மகள் பேத்தி வீட்டு வேலைகளை அனைத்தும் செய்ய முத்தம்மாள் கற்றுக் கொடுத்தார். சமையல் வேலைகளும் சிறுகச் சிறுக ஒத்தாசைக்கு வைத்துக் கொண்டார்.



ரொட்டிக்காரத் தெருவில், முனுசாமி என்பவர் முத்தம்மாளின் அக்கா மகள் அவரும் ஏ.எஸ்.ஏ. கடையில் வேலை பார்த்து வந்தார். முனுசாமிக்கு முதல் மனைவி பாக்கியம் அவருக்கு ஒரு மகன் கண்ணப்பன் என்று பெயர். முனுசாமி மனைவி பாக்கியம் இறந்துவிடுகின்றார். முனுசாமி மகன் கண்ணப்பனை ஏ.எஸ்.ஏ. பொறுப்பில் விட்டு விட்டுச் சிலகாலம் பினாங்கு சென்று விட்டார். வேலை செய்ய அப்போது கண்ணப்பன், சிறிய பையன் முத்தம்மாளே தன் பேரன் பரமசிவத்துடன் வீட்டிலேயே வளர்த்துப் பார்த்துக்கொண்டார். பிறகு முனுசாமி பினாங்கில் இருந்து வந்தவுடன் நீலாவதி என்ற பெண்ணைத் திருமணம் செய்து வைத்தார்கள். ரொட்டிக்காரத் தெருவில் வசித்து வந்தார். நீலாவதிக்கு 2 மகன்கள் குடும்பம் நிறைவாக நடந்தது. கண்ணப்பன் மட்டும் பெரியப்பா, பெரியப்பா என்று ஆசையுடன் ஏ.எஸ்.ஏ. இல்லத்தில் வளர்ந்து படித்து வந்தார். முனுசாமியும் ஏ.எஸ்.ஏ. கடையில் கேக் மாஸ்ட்டராக அயராது உழைத்தார்.

சொந்த வீடு வாங்கி, மங்கள விலாஸ் என்ற ஓட்டலையும் நடத்தி வந்தார். ஏ.எஸ்.ஏ. விடம் அண்ணா, அண்ணி என்று மிகுந்த பக்தியும், பாசமும் உடையவர். முனுசாமி தம்பி ராமசாமி காங்கிரஸ் கட்சி தீவிரவாதி; சுதந்திரப் போராட்டத்தில் சிறை சென்று வந்தவர். அவருக்கும் முத்தம்மாளே தனகோட்டி என்ற பெண் - நீலாவதியின் தங்கையைத் திருணம் தன் வீட்டிலேயே செய்து வைத்துவிட்டார். ஏ.எஸ்.ஏ. வீடு பெரிய வாசலுடன் நான்கு பக்கம் தாழ்வாரம், இரண்டு கூடம் பெரிய பழையகாலத்து வீடு - அந்த வீட்டில் உறவினர்களின் திருமணம், நெருங்கிய நண்பர்களின் திருமணம் நடக்கும் உறவினர்கள் யார் கேட்டாலும் திருமணத்திற்கு வீட்டை விடுவார். நான் வீடு இல்லாமல் எவ்வளவு கஷ்டப்பட்டேன். இன்று இவ்வளவு

பெரிய வீட்டை கடவுள் கொடுத்தான். நல்ல காரியம் நடக்க வீட்டைக் கொடுப்பதில் மகிழ்ச்சி என்பார். முத்தம்மாளும் சந்தோஷமாக உடன் இசைவார்.

சிலகாலம் கழித்துப் பேத்தி அலமேலு பருவமடைகின்றார். அவருக்கும் உறவினரை அழைத்துச் சுப சடங்குகள் நடத்தி வைக்கின்றனர். அதன் பிறகு வளர்ப்பு மகள் ராஜம் பருவமடைகின்றார். அவருக்கும் உறவினர்களை அழைத்துச் சுப சடங்குகள் நடத்தி மகிழ்கின்றார்கள். ராஜம் 8ம் வகுப்பு படித்தவுடன் நிறுத்தி விட்டார்கள். முத்தம்மாளின் சகோதரியின் சம்மந்தி உறவுக்காரர். வேலூர் தோட்டப் பாளையத்தில் உலகநாதபிள்ளை நிலக்கிழார் அவர்களின் இளைய மகன் கோவிந்தசாமி என்பவருக்கு ராஜத்தைத் திருமணம் பேசி முடித்தார்கள். ஏ.எஸ்.ஏ. தன் வளர்ப்பு மகள் ராஜத்திற்குத் தன் வீட்டிலேயே கன்னிகாதானம் திருமணம் சிறப்பாக நடத்திச் சீர் வரிசைகள் கொடுத்து மாப்பிள்ளை வீட்டிற்கு அனுப்பி வைக்கின்றார்கள்.

அலமேலு, ராஜம், பரமசிவம், கண்ணப்பன் குழந்தை மயிலு அனைவரும் பாசத்துடன் பழகி வந்தாள். உள்ளூராக இருந்தாலும் ராஜத்தின் பிரிவால் அனைவரும் கண் கலங்குகின்றார்கள். அடிக்கடி ராஜத்திற்குச் செய்ய வேண்டிய அனைத்து வைபவங்களும் குறைவில்லாமல் எ.எஸ்.எ. நடத்தி வருகின்றார். பிறகு அடுத்து கண்ணப்பனைத் தன் மகன் போல் வளர்த்து வருகின்றார். அவருக்குப் பெண் பார்க்கும் ஏற்பாடுகள் நடக்கின்றது. வேலூரில் செங்கல்வராய நாயக்கர் என்பவர் வேலூரில் காட்பாடி மெயின் ரோடு நேஷனல் தியேட்டர் பக்கத்தில் சிமெண்ட் பொருட்கள் பைப்புகள், தொட்டிகள், சிமெண்ட் சிலைகள், மொசைக் கற்கள் செய்யும் தொழிற்சாலை நடத்தி வந்தார்கள். அருகிலேயே வீடும் இருந்தது. சித்தூரிலும் பேக்டரி வைத்து நடத்தி வந்தார். மிக நல்ல பெருமாள் இறை பக்தியுள்ளவர்.



அவர் இளைய மகள் விசாலாட்சி நற்குணம் நிறைந்த குணவதி. அவர் மகளைப் பார்த்து பேசிப் கண்ணப்பனுக்கு வெகு விமரிசையாகத் திருமணம் நடத்தி வைத்தார். திரு. செங்கல்வராய நாயக்கர் தன் மகளைக் கன்னிகாதானம் செய்து நல்லமுறையில் திருமணம் செய்து வைத்தார்கள். சீர்வரிசை கொடுத்துப் பெண்ணை அனுப்பி வைத்தார். திரு. ஏ.எஸ்.ஏ. யின் கையைப் பிடித்து உங்களுக்காகத் தான் உங்கள் உறவில் பெண் கொடுத்தேன் என் மகளை உங்கள் மகள் போல் பார்த்துக் கொள்ளுங்கள் என்றார். ஏ.எஸ்.ஏ. வும் அப்படியே ஆகட்டும் என்று அழைத்து வந்து முனுசாமி நீலாவதியிடம் ஒப்படைக்கின்றார்.

எல்லாச் சடங்குகளும் முடிந்து கண்ணப்பன் சென்னையில் மனைவியுடன் இல்லறம் நன்கு நடத்துகின்றார். திரு. ஏ.எஸ்.ஏ. மந்திரி மாணிக்கவேலரிடம் சொல்லிக் கண்ணப்பனுக்கு ரயில்வேயில் நிரந்தர வேலை வாங்கிக் கொடுத்தார். கண்ணப்பன் பெரியப்பா, பெரியப்பா என்று அன்போடு மிக்க மரியாதை கொடுப்பார். வேலூர்க்குத் தன் மனைவியுடன் வந்து ஆசீர்வாதம் பெற்றுச் செல்வார். கண்ணப்பன் கடைசி வரையில் பெரியப்பாவிடம் மிகுந்த அன்பு கொண்டு இருந்தார். ஏ.எஸ்.ஏ. வும் சென்னை சென்றால் மகன் கண்ணப்பனுக்கு பிஸ்கட், கேக் எடுத்துச் சென்று கொடுத்து விட்டு வருவார். கண்ணப்பன் தன் இரண்டாவது மகளுக்கு பெரியப்பாவின் பெயர் வைக்க வேண்டும் என்று அருணா என்று பெயர் வைத்தார். இரண்டு பெண் இரண்டு ஆண் குழந்தைகளுடன் நிறைவாக சென்னையில் வாழ்ந்து வந்தார்.

திரு. ஏ.எஸ்.ஏ. வின் அம்மா முத்தம்மாள் மகனிடம், ‘‘தன் பேரன் பரமசிவம் வளர்ந்துவிட்டான். எனக்கும் வயசாகி கொண்டு போகின்றது. அதனால் என் மகள் பச்சையம்மாளின் மகள் அதாவது நம் வீட்டில் இருக்கும் பேத்தி அலமேலுவை

மணம் முடித்து விடலாம் என்று இருக்கின்றேன். உன் விருப்பம் என்ன சொல்லப்பா'' என்கின்றார். மேலும் நம் குடும்பத் தலைவி இல்லை, எனக்கு மருமகள் இல்லை, தாயில்லாத குழந்தை மயிலுவுக்கு அம்மா இல்லை. இப்படி உள்ள குடும்பத்தில் நம் வீட்டு உறவு பெண் என்றால் குடும்பத்தை அனுசரித்து நடந்து கொள்வாள் பாசமுடன் எல்லோருக்கும் பணிவிடை செய்வாள். அதனால் சொந்தம் விட்டு போகாமலும் இருக்கும் நம் குடும்பத்திற்கு நல்லது.

வேறு ஊரில் அசல் இடத்தில் இருந்து பெண் எடுத்தால் நம்மையெல்லாம் அன்போடு அரவணைப்பது கஷ்டம். புருஷனை அழைத்துக் கொண்டு தனிக் குடித்தனம் போய்விட்டால் நம் குடும்பம் கவனிக்க முடியாமல் போய்விடும். இதையெல்லாம் யோசித்து முடிவு எடுத்தேன். நீ உன் விருப்பம் தெரிவிய்யா!'' என்று மகனைக் கேட்கின்றார்கள். ''நீங்கள் அனைத்தும் அறிந்து சொல்கின்றீர்கள் அம்மா அப்படியே செய்யலாம். மகன் பரமசிவம் விருப்பத்தை கேட்கலாம்!'' என்று கூறுகின்றார். பரமசிவம் மகாதேவ அய்யர் பள்ளியில் ஆரம்ப பள்ளி படித்த பிறகு ஊரீசு உயர்நிலைப் பள்ளியில் இன்டர் மீடியட் முடித்தார். உடனே திருமண ஏற்பாடு நடத்த ஏ.எஸ்.ஏ. அழைக்கின்றார். பரமசிவம் படித்தது போதும்; கடையைப் பார்த்துக் கொண்டு வியாபாரத்தை பெருக்கு; பாட்டிக்கு முடியவில்லை.

உனக்குத் திருமணம் செய்யச் சொல்கின்றார்கள். அதனால் உன் அத்தை மகள் அலமேலுவை திருமணம் பேசி முடிக்கலாம் என்று இருக்கின்றோம். உனக்கு விருப்பம்தானே!'' என்கின்றார். பரமசிவம் முகத்தை 'உம்' என்று வைத்துக் கொண்டு எதுவும் பதில் சொல்லவில்லை! ''பிறகு பேசலாம்!'' போய்விடுகின்றார். ஏ.எஸ்.ஏ. மீண்டும் பரமசிவத்தை கேட்கின்றார்கள்.



''அதற்கு அவர் உறவுக்காரப் பெண் என்று எனக்கு சம்மதம்தான். ஆனால் பெண் படிக்கவில்லை, கறுப்பாக உள்ளது. எனக்கு விருப்பம் இல்லை'' என்று கூறிவிட்டார். விடாப்பிடியாக வேண்டாம் என்று இருந்தார். அன்று முதல் வீட்டில் அலமேலுவிடம் பேசுவது இல்லை. அவர் எதிரில் வரக்கூடாது, சாப்பாடு போடக்கூடாது என்று சொல்லுவார். எதற்கெடுத்தாலும் அம்மா (பாட்டி) தங்கை மயிலுவைத்தான் கூப்பிடுவார். நாட்கள் நகருகின்றன. ஏ.எஸ்.ஏ. தங்கை ராஜம், மாப்பிள்ளை சென்னையில் உள்ள கண்ணப்பன், போளூரில் இருந்து நண்பர் கோவிந்தசாமி, யசோதா பரமசிவத்தின் கல்லூரி நண்பர்கள் அனைவரையும் திருமணத்திற்காகத் தூது விடுகின்றனர். அப்போதும் பரமசிவம் ஒத்துக்கொள்ளவில்லை. கண்ணப்பன் தங்கை மயிலுவை அழைத்துத் திகம்பரசாமியார் படத்தில் வரும் பாட்டை பரமசிவம் முன்னால் பாடு என்று கற்றுக் கொடுக்கின்றார். மயிலு சிறிய பெண் 10 வயது பாவாடை, சட்டை அணிந்து இருப்பாள். அண்ணனைப் பார்த்து, ''அண்ணா ஒரு பயித்தியமா ஆயிடுச்சு. அண்ணி மேலே கத்தி, கத்தி, அலமேலு மேலே கத்தி, கத்தி' என்று பாடினாள்.

உடனே பரமசிவம் செல்லமாகத் தலையில் குட்டுகின்றார். ஓடி, ஓடி விளையாடுகிறார்கள். பிறகு பரமசிவம் அஞ்சல் வழியில் பி.ஏ., படித்து வருகின்றார். பச்சையம்மாள் தாயிடமும், அண்ணனிடமும் அழுகின்றார்கள். என் மகளுக்கு 15 வயது ஆகின்றது. இன்னும் காத்திருக்க முடியாது. நான் கிராமத்திற்கு அழைத்துப் போய் நம் சொந்தக்காரர் யாருக்காவது மணம் முடிக்கின்றேன் என்று கேட்கின்றார்கள்.

மறுபடியும் ஒருநாள் எல்லா வேலைகளும் முடிந்து இரவு சாப்பிட்டு படுக்கும் போது மகன் பரமசிவத்தை அழைத்து அருகில் அமர்த்தி அன்போடும், பணிவோடும் கண்கள் கலங்க

மகனிடம் சொல்கின்றார். அலமேலுவைத் திருமணம் செய்து கொண்டால் என்ன நன்மைகள் என்று விரிவாக எடுத்துச் சொல்கின்றார். பட்டினத்து உருவத்தில் வெள்ளையாக இருந்து மனம் கறுப்பாக இருந்தால் என்ன செய்வது? நாம் விவசாய குடும்பத்தில் பிறந்தவர்கள். அன்பும், பாசமும் நிறைந்தவர்கள் பட்டினத்து மக்கள் படாடோபமாக வாழ்பவர்கள். நமக்கு ஒத்துவராது. வயதான பாட்டி, எனக்கு மனைவி இல்லை. உன் தங்கைக்குத் தாயில்லை! இந்த குடும்பத்தைக் கட்டிக் காக்க அலமேலுதான் சிறந்தவள்.

‘‘கறுப்பாக இருந்தாலும் களையோடு இருக்கின்றாள். நல்ல குணம் இருக்கின்றது. அன்பும், பாசமும் உள்ளது. அவளுக்கு படிப்பு சொல்லித்தர ராஜத்தை சொல்லிருக் கின்றேன். அரிச்சுவடி வாங்கிகொடுத்து தினமும் 6 மாதமாக படித்து எழுதுகின்றாள். வண்ணான் கணக்கு எழுதத் தெரிந்தால் போதும்பா. அவள் உத்தியோகமா செய்யப் போகின்றாள். பெண்களை அதிகம் படிக்க வைப்பதில்லை நம் வீடுகளில்! அதனால் அத்தை மகளைத் திருமணம் செய்து கொள் என்கின்றார். அப்படி நீ எங்கள் விருப்பப்படி திருமணம் செய்து கொள்ளாவிட்டால் உன் ஆயா கோட்டைப்பூண்டி கிராமத்திற்குச் சிறியபிள்ளை வீட்டிற்கு செல்கின்றேன் என்கின்றார்கள். உன் தங்கையை விடுதியில் சேர்த்துவிட்டு நான் ஓட்டலில் வாங்கி சாப்பிட்டுக் கொண்டு கடையைப் பார்த்து கொண்டு காலத்தைத் தள்ளுகின்றேன். உன் இஷ்டப்படி திருமணம் செய்து கொண்டு வாழ்க்கையை நடத்து என்கின்றார். உடனே பரமசிவம் யோசிக்கின்றார். தந்தை சொல் மிக்க மந்திரமில்லை, ஆகவே நம் தந்தை நமக்கு நல்லதுதான் நன்றாக யோசித்துச் செய்கின்றார் என்று அரைமனதுடனே உங்கள் விருப்பப்படி செய்யுங்கள்! என்று ஒரே வார்த்தை சொல்லிவிட்டுச் சென்றுவிடுகின்றார்.

❋



# இளம்பாரி பரமசிவம்

**மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்எனுஞ் சொல். (கு.70)**

*‘மகன் தன்தந்தைக்குச் செய்யத் தக்க கைம்மாறு இவர் தந்தை இவரை மகனாகப் பெற என்ன தவம் செய்தாரோ என்று பிறர் புகழ்ந்து சொல்லும் சொல்லாகும்.’*

**ஏ**.எஸ்.ஏ.வுக்கு அளவு கடந்த மகிழ்ச்சி. தன் தாயாரிடமும், தங்கையிடமும் விஷயத்தைக் கூறுகின்றார். முறைப்படி திருமண ஏற்பாடுகள் நடக்கின்றன. பச்சையம்மாள் தன் மகள் அலமேலுவைக் கணப்பாவரம் கிராமத்திற்கு அழைத்துச் சென்று திருமணத்திற்குச் செய்ய வேண்டிய சுவாமி கும்பிடுதல் எல்லாம் செய்வதற்குச் செல்கின்றார். ஏ.எஸ்.ஏ. தன் ஒரே மகன் திருமணம் சிறப்பாக நடத்தத் தடபுடல் ஏற்பாடுகள் செய்கின்றார். பத்திரிக்கை அடித்து அனைவருக்கும் கிராமத்தில் உள்ள உறவினர்கள், வேலூரில் உள்ள உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் கொடுக்கின்றார். திருமணம் வீட்டிலேயே! பந்தல் போட்டு மூன்று நாளாக விழாக் கோலமாக உள்ளது.



*ஏ.எஸ். ஏ. பரமசிவம்-அலமேலு*

முத்தம்மாளுக்குத் துணையாக ரொட்டிக்காரத் தெருவில் உள்ள உறவினர்கள் விசாலாட்சி, நீலாவதி, தேவகி, யசோதா, பட்டம்மாள் சுமங்கலிகள் எல்லாம் கூடவே இருந்து பந்தக்கால் நலங்கு முதல் அனைத்துச் சுபகாரியங்களையும் செய்வார்கள். பெண் அழைப்பு அன்று பெண் வீட்டார் கணப்பாவரத்தில் இருந்து வந்து 4 மணிக்கு வேலூர் வந்ததும் உறவினர் வரதராஜீ பிள்ளை வீட்டில் தங்க வைக்கின்றார்கள். மயிலு அலமேலு 1 வாரம் கணப்பாவரம் சென்றதில் இருந்து தலைவாரிக்கொள்ள முத்தம்மாள் அம்மாளிடம் வம்பு செய்து கொண்டு அதிருப்தியுடன் தலைவாரிக்கொள்கிறாள். அலமேலு வரும் வரை தலைவாரிக் கொள்ளாமல் காத்திருக்கின்றாள். அன்று காலையில் இருந்து மாலை 4 மணிக்கு அலமேலு வந்தது அறிந்ததும் பட்டுப் பாவாடை, ஜாக்கெட் அணிந்துகொண்டு கையில் சீப்பும் புது ரிப்பனுமாக ஓடுகின்றாள். அலமேலு தங்கியிருக்கும் வீட்டிற்குச் சென்று திருமணப்பெண்ணிடம் தலைவாரி இரட்டை பின்னல் போட்டுக் கொண்டு பூச்சூடி விட்டதும் ஆனந்தம்



அடைகின்றாள். அவள் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. எல்லோரும் எவ்வளவு அன்புடன் இருக்கின்றாள் பாருங்கள் அலமேலுவிடம்! என்று உறவினர்கள் கூறுகின்றார்கள். அன்று இரவு பெண் அழைப்பு நடந்து மறுநாள் திருமணம் இனிதே நடைபெறுகின்றது. நிறைய உறவினர்களும் நண்பர்களும் வாழ்த்துகின்றனர். தெரு முழுக்கப் பந்தல் போட்டு அலங்காரமாக ஜொலிக்கின்றது. எதிர்வீட்டில் சாப்பாடு நடக்கின்றது. திருமணம் முடிந்து விட்டதும் மருவிலக்கம் எல்லாம் முடிந்துவிடுகின்றது.

ஆனால் முதல் இரவு மட்டும் இப்போதைக்குக் கூடாது என்று பரமசிவம் கூறிவிட்டார். சரி அவன் இஷ்டப்படி கொஞ்ச நாள் போனதும் செய்யலாம் என்று பெரியவர்கள் தள்ளிப்போட்டனர். ஆனால் பரமசிவம் திருப்தியாக இல்லை. கடைக்கு போவது, படிப்பது, இப்படியாக நடக்கின்றது. முகம் கொடுத்து அலமேலுவிடம் ஒரு வார்த்தை கூடப் பேசுவது இல்லை. தனியாகப் படுப்பது, சாப்பிடுவது என்று இருந்தார். பாத்ரூமில் தண்ணீர் கூட விளாவி வைக்கக் கூடாது. சாப்பாடும் போடக்கூடாது. எல்லாம் நானே செய்து கொள்கின்றேன் என்று சொல்வார். எதற்கெடுத்தாலும் தன் தங்கையை ''மயிலு தண்ணிக்கொண்டுவா, மயிலு சாப்பாடு எடுத்துவை!'' என்பார். முத்தம்மா அம்மா, மயிலு இருவரும் தான் எதையும் எடுத்து வைக்க வேண்டும்! இப்படியே செய்து கொண்டு இருந்தார்.

முத்தம்மாள், ''அவன் அப்படி நடந்து கொண்டாலும் நீ வருத்தப்படாதே நாளடைவில் சரியாகி விடும் உன் மீது பாசம் வரும்!'' என்று பேத்திக்கு ஆறுதல் சொல்லும் பாட்டி அவன் சாப்பிட வரும் போது சாப்பாடு எடுத்துவை ஒதுங்கி நிற்காதே என்று சொல்லிக் கொடுப்பார்கள். அப்படி பொறுமையாக அலமேலு நடந்து கொண்டார்கள். தன் தாய் மாமா மகன், கணவர் இப்படி ஏறெடுத்தும் பார்க்காமல், பேசாமல் இருப்பது அலமேலுவுக்கு மிகவும் வேதனையாக உள்ளது. தனிமையில் அழுது கொண்டே இருப்பார்கள்.

இதை மயிலுவும் முத்தம்மாளும் கவனிக்கின்றார்கள். அவர்களை பார்த்துக் கண் துடைத்துக் கொண்டு சென்று விடுவார்கள். இரவில் பாட்டி, மயிலு, அலமேலு மூவரும் படுத்துக் கொள்வார்கள். பரமசிவம் தனியாக ரூமில் கதவை மூடிவிட்டு படுத்துக் கொள்வார். இதைப் பார்த்து அருணாசலமும், முத்தம்மாளும் வேதனைப் படுகின்றார்கள். ஒருநாள் முத்தம்மாள் வேண்டுமென்றே தன் மகனிடம் கடையில் இருந்து சீக்கிரம் வரச்சொல்லி ஏ.எஸ்.ஏ.வுக்கு சாப்பாடு போட்டுவிட்டு, குழந்தை மயிலுவுக்கும் சாப்பாடு கொடுத்து, தானும் சாப்பிட்டுவிட்டு எல்லோரும் படுத்து தூங்கிவிடலாம்.

அவன் அப்போது அலமேலுவை சாப்பாடு போடச் சொல்லி சாப்பிடுவான் என்று முத்தம்மாள் நினைத்துக் கொண்டு சாப்பாடு எதுவும் எடுத்து வைக்கவில்லை. நீ மட்டும் விழித்திரு உன் கணவர் வந்ததும் சாப்பாடு எடுத்து போடு என்று சொல்லி விட்டு படுத்துவிட்டார்கள். பரமசிவம் இரவு வீட்டிற்கு வந்து பார்க்கின்றார். அனைவரும் தூங்கி விட்டார்கள். அலமேலு உள்ளிருந்து வந்து சாப்பாட்டை எடுத்து வைக்கின்றார்கள். பரமசிவம் பார்த்துவிட்டுச் சாப்பிடாமல் போய்ப்படுத்துக் கொள்கின்றார். அலமேலுவும் அழுது கொண்டே சாப்பிடாமல் படுத்துக்கொள்கின்றார்கள். காலையில் பேரனிடம் கேட்கின்றார்கள்! ஏன்? இப்படி செய்கின்றாய்?'' என்று! அதற்கு அவர் உங்கள் இஷ்டப்படி திருமணம் செய்து விட்டீர்கள். எல்லாம் நல்லபடியாக குடும்பம் நடக்கின்றது. அதுபோதும் என்னை பற்றி கவலைப்பட வேண்டாம் என்று சொல்லிவிட்டுச் சென்று விடுகின்றார். இப்படியே மனைவியிடம் பேசாமல் 6 மாதம் முடிந்துவிட்டது. முதல் இரவே நடக்கவில்லை. பச்சையம்மாள் இதைப்பார்த்து அழுகின்றார்கள். தன் தாயிடம் உன்னால்தான் என் மகள் வாழ்க்கை பாழாகிவிட்டது. நான் கிராமத்தில் ஒரு ஏழை



கூலிக்காரனுக்குத் திருமணம் செய்து கொடுத்து இருந்தால்கூட என் மகள் மகிழ்ச்சியாக வாழ்ந்து இருப்பாள்.

அதனால் என் அண்ணனிடமும் உன் பேரனிடமும் சொல்லிவிடுங்கள். என் மகளை நான் கிராமத்திற்கு அழைத்து போய் யாருக்காவது திருமணம் செய்து கொடுக்கின்றேன் என்று அழுகின்றார்கள். முத்தம்மாளும், மகனிடமும் பேரனிடமும் இந்த விஷயத்தைக் கூறி விட்டார்கள். இனிமேல் நான் பொறுத்து இருக்கமாட்டேன். என் பேத்தி கன்னி கழியாமல் இப்படிக் கண்ணீருடன் காலம் தள்ளக்கூடாது. அதனால் ஒரு நல்லநாள் பார்த்து முதல் இரவு ஏற்பாடு செய்யப் போகின்றேன். நீ வழிக்கு வந்து ஒத்துழைத்தால் பார்ப்பேன் இல்லாவிட்டால் உன் மனைவியை அத்தையுடன் அனுப்பிவிட்டு, நானும் கோட்டைப்பூண்டிக்கு மயிலுவை அழைத்துக்கொண்டு போகின்றேன் என்று பேரன் பரமசிவத்திடம் கூறினார்கள். பரமசிவம் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு ஒன்றும் பதில் சொல்லாமல் சென்று விடுகின்றார்.

உடனே முத்தம்மாள் ''மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி பார்க்கலாம்!'' என்று ஒரு நல்லநாள் பார்த்து முதல் இரவிற்கு ஏற்பாடு செய்கின்றார்கள். பூக்காரனை அழைத்து கட்டில் அலங்காரம் செய்து நறுமணம் கமழ அலங்காரம் செய்கின்றார்கள். பெரிய பேத்தி ஆனந்தாய் வந்து அலமேலுவை அலங்காரம் செய்துவிட்டு பக்கத்துத்தெருவில் தன் வீட்டிற்குச் சென்றுவிட்டார்கள். முத்தம்மாள் பேத்தி அலமேலுவுக்கு எல்லாம் சொல்லிக் கொடுத்துவிட்டார். பச்சையம்மாளும் உடன் சொல்லுகின்றார்கள். ஏ.எஸ்.ஏ. வைச் சீக்கிரம் வரச் சொல்லி எல்லோரும் சாப்பிட்டுவிட்டு விளக்கு அணைத்துப் படுத்துக்கொள்கின்றார்கள்.

அலமேலு மட்டும் பயந்து கொண்டு சமையல் அறையில் விளக்கு போட்டு உட்கார்ந்து இருக்கின்றார்.

முத்தம்மாள் வாசலில் தூங்குவது போல் பாசாங்குடன் கண்ணை மூடிக் கொண்டு இருக்கின்றார். ஏ.எஸ்.ஏ. அவர் அறையில் அதே போல் இருக்கின்றார். இருவரும் இவன் என்ன செய்யப்போகின்றானோ! நாம் இந்த நல்ல ஏற்பாட்டை செய்து இருக்கின்றோம். என்ன முடிவு வரப்போகின்றதோ! என்று பயத்துடன் கடவுளை வேண்டிக் கொண்டு படுத்து இருக்கின்றார்கள். இரவு 10 மணிக்கு பேரன் இன்னும் வரவில்லையே 9 1/2க்கு வந்து விடுவானே என்று இருப்புக் கொள்ளாமல் முத்தம்மாள் பயப்படுகின்றார். 10 மணிக்கு பரமசிவம் வருகின்றார். கடைச் சாவியை வைத்துவிட்டு கை, கால் கழுவிக் கொண்டு தன் ரூமுக்குச் செல்கின்றார். ரூம் அலங்கரிக்கப்பட்டுள்ளது. உடனே உள்ளே சென்று அலமேலுவை இங்கே வா என்று அழைத்தாராம். அலமேலுவுக்குப் பயம் கை கால் நடுங்க வெளியே வந்தாளாம். அவளை அழைத்துக் கொண்டு நேராக தந்தையின் அறைக்கு சென்று லைட் போடுகின்றார். நைனா என்று தான் அழைப்பது வழக்கம். ‘நைனா எழுந்திருங்கள்’ எங்களை ஆசீர்வாதம் பண்ணுங்கள்!'' என்று தன் மனைவியை பார்த்துக் காலில் விழு! என்று சொல்லி இருவரும் காலில் விழுந்து ஏ.எஸ்.ஏ. பாதம் தொட்டு வணங்குகின்றார்கள்.

ஏ.எஸ்.ஏ. தன் மகனை வாரி அணைத்து உச்சி முகர்ந்து முத்தமிட்டு, ‘‘நீ நன்றாக வாழ்வாய்! இறையருளும் உம் அம்மாவின் ஆசியும் துணைபுரியும்! சஞ்சலம் நீக்கி மனநிறைவுடன் அன்பாக வாழ்க்கை நடத்துப்பா'' என்று வாயார நெஞ்சார வாழ்த்துகின்றார். பிறகு பரமசிவம் விடைபெற்று தன் மனைவியுடன் சென்று தன் இனிய வாழ்க்கையை அன்று துவங்குகின்றார். ஏ.எஸ்.ஏ. நிறை மனதுடன் கடவுளுக்கு நன்றி கூறிவிட்டு நிம்மதியாகத் தூங்குகின்றாராம். முத்தம்மாள் களைப்புடன் தூங்கி விட்டார்கள். இரவு நடந்தது அவர்களுக்கு தெரியவில்லை.



காலை 5 மணிக்கு எழுந்து கவனிக்கின்றார். தன் பேத்தி அலமேலு அருகில் படுக்க வரவில்லை. புரிந்துகொண்டு நிம்மதியுடன் அவரும் கடவுளுக்கு நன்றி கூறி எழுந்து வாசலில் தண்ணீர் தெளித்து, கோலமிட்டு வந்து அமர்கின்றாள். ஏ.எஸ்.ஏ. எழுந்து வந்து சிரித்த முகத்துடன் தன் தாயிடம் கூறுகின்றார். அம்மா கடவுள் அருளால் எல்லாம் நல்லபடியாக நடந்துவிட்டது. நம் மனக்கவலையும் தீர்ந்துவிட்டது என்று கூறுகின்றாராம். முத்தம்மாள், ‘‘நான் பயந்து கொண்டே தூங்கிவிட்டேன்; என்ன நடந்தது! ஏதாவது ஆர்ப்பாட்டம் செய்தானா?'' என்று மகனைக் கேட்கின்றார்கள். ‘‘நானும் பயந்து கொண்டே படுத்திருந்தேன். திடீரென்று ரூமில் லைட் போட்டு நைனா என்றான். நானும் பயத்துடன் எழுந்து உட்கார்ந்தேன். உடனே என் மகன் எங்களை ஆசீர்வாதம் பண்ணுங்கள்! என்று காலில் விழுந்து வணங்குகின்றான் அம்மா! அப்போது தான் எனக்கு உயிர்வந்தது போல் ஆனது.

என் மகன் புத்திசாலிம்மா, நல்லது உணர்ந்து நடந்துகொண்டான். இனி கவலையில்லம்மா! என்று கூறித் தாயும், மகனும் அளவில்லா ஆனந்தம் அடைகின்றார்கள். பச்சையம்மாளும் மனநிறைவுடன் ஊர் திரும்புகின்றார்கள். பரமசிவம் மனைவியுடன் இனிது வாழ்கின்றார். தொழிலில் அப்பாவுக்கு உதவியாகக் கவனிக்கின்றார். குடும்பம் கலகலப்பாக நடைபெறுகின்றது. ராஜம் தலைப்பிரசவத்திற்குத் தயாராகி வருகின்றாள். தலைப்பிரசவம்; பெண் குழந்தை பிறக்கின்றது. குழந்தை சிவப்பாக வெள்ளைக்காரக் குழந்தைப்போல் மூக்கும் முழியுமாக உள்ளது. முதன் முதலில் வீட்டில் தவழும் பெண் குழந்தை எல்லோரும் அன்போடு அளவுக்கு அதிகமாகப் பழகுகின்றார்கள். குழந்தைக்குத் தொட்டில் போட்டு உஷா என்று பெயர் வைக்கின்றார்கள். 5 மாதம் குழந்தைக்கு நகையெல்லாம் சீர் செய்து மாமியார் வீட்டிற்கு ராஜம் குழந்தையை அனுப்பி வைக்கின்றார்கள்.

குழந்தையைப் பிரிந்து அனுப்பும்போது எல்லோரும் கண்கலங்குகிறார்கள். அடிக்கடி ராஜத்தைக் குழந்தையுடன் வரச்சொல்லிக் குழந்தையைக் கொஞ்சி மகிழ்வார்கள். அறிவுள்ள குழந்தை சாந்த சொரூபினியான தெய்வக்களை பொருந்திய சிரித்த முகம் ஏ.எஸ்.ஏ. வீட்டில் தெய்வீகச் செல்லக்குழந்தையாக வளர்கின்றாள். அடுத்து ஒரு ஆண் குழந்தை, ராஜத்திற்கு பிறக்கின்றது. அதற்கு குமார் என்று பெயரிட்டனர். மூன்றாவது குழந்தை ஆண் குழந்தை கோபி என்று பெயர். அந்தச் சமயம் அலமேலுவும் கருவுற்றார்கள். நாத்தனார், அண்ணி ஒரே சமயத்தில் பிள்ளைத்தாய்ச்சிகள் பார்க்கக்கூடாது என்று பெரியவர்கள் சொல்லி ராஜம் தாய் வீட்டிற்கு வரும் போது அலமேலுவை அவள் அக்கா ஆனந்தாய் வீட்டிற்கு அனுப்பிவைப்பார்கள். பிறகு அலமேலுவிற்கு ஒரு நல்ல நாளில் வீட்டிலேயே சுகப்பிரசவம் பெண்குழந்தை பிறக்கின்றது. எல்லோரும் மகிழ்ச்சியடைகின்றார்கள். ஏ.எஸ்.ஏ. வும் முத்தம்மாளும் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

குழந்தையைத் தொட்டிலில் இட்டுப் பெயர் சூட்டுகின்றார்கள். அருணாசலம் தன் மனைவி பெயர்- உண்ணாமுலை என்று பெயர் வைக்கின்றார் பரமசிவம் கொஞ்சம் நாகரிகமாகப் பெயர் வேண்டும். அதே சமயம் நம் அப்பா மனமும் புண்படக்கூடாது. நம் அம்மாவின் பெயரும் இருப்பது நல்லது என்று நினைத்து உண்ணாமுலை ராணி என்று பெயர் வைக்கலாம். அப்பாவும், பாட்டியும் பெரியவர்கள் பெயரைக் கூப்பிடலாம். நாம் ராணி என்று கூப்பிடலாம் என்று சொல்கின்றார். எல்லோரும் மனநிறைவுடன் உண்ணாமுலை ராணி என்று பெயர் சூட்டுகின்றார்கள். குழந்தை கிளாஸ்கோ பேபி படம் போல் கொழு, கொழு என்று இருக்கின்றாள். குறு, குறு கண்ணும், பொக்கை வாய்ச் சிரிப்பும்! அளவே இல்லை சொல்வதற்கு! ஏ.எஸ்.ஏ. பேத்தி மேல் அளவு கடந்த பாசம், உள்ளே நுழையும் போதே நேரே தொட்டிலில் படுத்திருக்கும்



குழந்தையிடம் வருவார். உண்ணாமுலை என்பார். என் செல்லம் என்பார். குழந்தை பொக்கைவாயைக் காண்பித்து தாத்தாவைப் பார்த்துச் சிரிக்கும். முத்தம்மாளும் ஏ.எஸ்.ஏ. வும் உண்ணாமுலை, உண்ணாமுலை என்று ஆசை தீரக் கொஞ்சி மகிழ்கின்றார்கள். மயிலுவுக்கும் தனியாக வீட்டில் இருந்தவளுக்கு உஷா, குமார், ராணி என்று மூன்று குட்டிகள் என்று வந்ததும் கொஞ்சி மகிழ்ந்து விளையாடுவார்.

உண்ணாமுலை 6 மாதக்குழந்தையாக இருக்கும் போது மார்பில் சளி கட்டி இருமல் ஜுரம் வந்து அள்ளு தூக்கித் தூக்கிப் போடுகின்றது. இரவு 3 மணிக்கு குழந்தைக்குக் காய்ச்சல் அதிகமாகி இழுப்பு வந்துவிட்டது. அலமேலு ஆயா, மாமா என்று கதறி அழுது எல்லோரையும் கூப்பிடுகின்றார்கள். தூங்கி இருந்த அனைவரும் எழுந்து ஓடி வந்து குழந்தையைப் பார்க்கின்றார்கள். குழந்தை அசைவின்றி இருக்கின்றது எல்லோரும் அழுகின்றார்கள். பரமசிவம் உடனே வைத்தியர் முனுசாமியை (நாட்டு வைத்தியர்) அழைத்து வருகின்றார்கள். அவர் வந்து குழந்தைக்குச் சிகிச்சை அளித்து 1 மணி நேரம் கழித்துக் குழந்தை கண் திறந்து பார்த்து அழுதது. பிறகு வைத்தியர் இனி பயம் இல்லை. பத்திரமாகக் கவனித்துக் கொள்ளுங்கள்'' என்று மருந்துகள் கொடுத்து விட்டுச் சென்றார்கள். பிறகு எல்லோரும் உறங்கச் சென்றோம். காலையில் குழந்தை கொஞ்சம் தெளிவடைகின்றது. மதியம் சாப்பாட்டிற்கு வரும் போது குழந்தை தாத்தாவைப் பார்த்துச் சிரிக்கின்றது. ஏ.எஸ்.ஏ. தன் தாயிடம் கூறுகின்றார். கண்கள் கலங்குகின்றது. என் மனைவி சீக்கிரம் சென்றுவிட்டாள். அவள் பெயர் நிலைக்கட்டும் என்று ஆவலுடன் வைத்தேன்.

நேற்று இரவு எங்கே நம்மை ஏமாற்றிவிட்டு மறுபடியும் பேத்தி சென்று விடுவாளோ என்று பயந்தேவிட்டேன் என்று கூறுகின்றார். கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டும். நன்றாகப் பிரார்த்தனை செய்து கொண்டேன் என்கின்றார். முத்தம்மாவும்

''நானும் அப்படித்தாம்பா நினைத்தேன்'' என்கின்றார். பிறகு குழந்தை நன்றாக வளர்கின்றது. ஆனந்தாய்க்கு தலைப் பிரசவம் பெண் குழந்தை பிறந்தது 1 மாதத்தில் இறந்து விட்டது. பிறகு ஒரு ஆண் குழந்தை பிறக்கின்றது. ராமமூர்த்தி என்று பெயர் வைத்து மூன்றாம் மாதம் சீர் செய்து அனுப்புகின்றார்கள். அடுத்து சேகர் என்ற ஆண் குழந்தை; அடுத்து குமாரி என்ற பெண் குழந்தை பிறக்கின்றது. ஒவ்வொரு பிரசவமும் ஏ.எஸ்.ஏ. வீட்டில் முத்தம்மாள் கவனித்து அனுப்பிவைத்தார்கள். ராஜம் தன் மாமியார் வீட்டுக்குக் குடும்பத்தில் அனைவரையும் அழைத்துக் கொண்டு கோட்டைப்பூண்டிக்குச் செல்கின்றார்கள். குலதெய்வம் மேல்மலையனூரில் மொட்டை போட்டு வருவதற்காக! உடன் அலமேலுவும் குழந்தை உண்ணாமுலைக்கு மொட்டை போட்டு வரும்படி அனுப்புகின்றார்கள்.

மயிலுவும் செல்கின்றாள். நேராகக் கோட்டைப் பூண்டிக்குச் சென்று தங்குகின்றார்கள். அங்கு வெள்ளைக் கண்ணு தம்பியும் மனைவி அலமேலுவும் சம்மந்திகளை நன்றாகக் கவனிக்கின்றார்கள்.

3 மாட்டு வண்டிகளில் எல்லோரும் கட்டுச்சோறு கட்டிக்கொண்டு கோவிலுக்குச் சென்று பொங்கலிட்டு மொட்டை போட்டுச் சாமி தரிசனம் செய்து 1 நாள் அங்கு நண்பர் ரெட்டியார் வீட்டில் தங்கித் தேர் உற்சவம் பார்த்து மறுநாள் கோட்டைப்பூண்டி திரும்புகின்றார்கள். அடுத்த நாள் வேலூர் திரும்புவதற்காகத் தயாராகக் காத்திருந்தார்கள். குழந்தை உஷாவுக்கு நெருப்புபோல் ஜுரம் கொதிக்கின்றது. திடீரென்று குழந்தை ஜுரம் அதிகமாகி இறந்து விட்டது. அனைவரும் கத்தி கதறி அழுகின்றார்கள். வேலூருக்கு வந்து காதணி விழா நடத்துவதாக ஏற்பாடு செய்து இருந்தார்கள்.



இப்படி நடக்கும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை முத்தம்மாள், ஏ.எஸ்.ஏ. பரமசிவம் மூவரும் வேலூரில் இருக்கின்றார்கள். தந்தி கொடுத்து உடனே பரமசிவம் கார் கொண்டு வந்து அனைவரையும் அழைத்து வருகின்றார். குழந்தையின் ஈமச்சடங்கு முடிகின்றது.

அனைவரும் மிகுந்த துயரத்தில் இருக்கின்றார்கள். திரு.ஏ.எஸ்.ஏ. அருணாசலம்பிள்ளைக்கு, சீலேரி துரைசாமிப் பிள்ளை, லிங்கைய்யா கவுண்டர், பேராசிரியர் யோக சுந்தரம், திரு. சாரங்கபாணி, திரு. பூ.மு. ஏகாம்பரம் ஆகியோர் நண்பர்களாக ஆகின்றார்கள். பூங்குளம் கிராமத்தில் இருந்து வந்து தமிழ் பேராசிரியராகத் திரு. செ.யோக சுந்தரம் என்பவர் ஊரீசுக் கல்லூரியில் பணியாற்றி வருகின்றார். மாசிலாமணி முதலியார் தெருவில் மனைவி கண்ணம்மாள் - குழந்தைகளுடன் வசித்து வருகின்றார்.

திரு. பூ.மு. ஏகாம்பரம் பூட்டுத்தாக்கு! ஆசிரியர் திரு. சாரங்கபாணி வாலாஜாவில் பேங்கில் பணியாற்றி வந்தார். இவர்கள் மூவரும் மும்மூர்த்திகள் போல் இணைபிரியாத நண்பர்கள் ஆனார்கள். பூ.மு. ஏகாம்பரம் தாயாருக்கு உடம்பு சரியில்லாமல் ஏ.எஸ்.ஏ. வீட்டில் 1 மாதம் தங்கிச் சி.எம்.சி.க்கு சென்று வைத்தியம் பார்க்கின்றார்கள். ஏகாம்பரம் ஆசிரியர் தங்கைகள் திருமணம் ஆனவர்கள். ஏகாம்பரம் மனைவி, குழந்தைகள் குடும்பம் சகிதமாக அடிக்கடி தாய்வீடு மாதிரி ஏ.எஸ்.ஏ. வீட்டில் தங்கிச் சாப்பிடுவார்கள். முத்தம்மாளும், மருமகள் அலமேலுவும் சளைக்காமல் சாப்பாடு செய்து போடுவார்கள். சாரங்கபாணி மனைவி ஏ.எஸ்.ஏ. வை அண்ணா, அண்ணா என்று அழைத்து அடிக்கடி வந்து தங்கிச் செல்வார்கள். அவர்களுக்குக் குழந்தை இல்லை. அவர்களும் அடிக்கடி தம்பதிகளாக வருவார்கள். பூ.மு. ஏகாம்பரம் பி.எட்., படிக்கச் செல்கின்றார்.

தன் பெரிய மகள் இந்திராணியை ஏ.எஸ்.ஏ. வீட்டில் 1 வருடம் தங்கி படிக்கச் சொல்லிவிட்டுச் சென்றார்கள். நண்பரின் மகளை நன்றாகக் கவனித்துக் கொண்டார்கள். ஈரோடுக்கு மாவு வாங்க வியாபார விஷயமாக ஏ.எஸ்.ஏ. சென்று வருவார். மாவு வியாபாரி சுப்பிரமணிய முதலியார் மிகவும் நெருங்கிய நண்பராகி விடுகின்றார். எ.வி.எம். சுப்பிரமணிய முதலியார் மனைவிக்கு உடல் நலம் சரியில்லாமல் சி.எம்.சி.யில் அறுவைச் சிகிச்சைக்காகச் சேர்க்கின்றார்கள். 6 மாதம் வேலூரில் ஏ.எஸ்.ஏ. வீட்டில் குடும்பமாகத் தங்குவதற்கு ஒரு பெரிய ரூம் தந்து உதவுகின்றார். ஏ.எஸ்.ஏ. சுப்பிரமணிய முதலியாருக்கு 10 குழந்தைகள்! குடும்பத்துடன் சொந்த வீடு போல் சமையல் செய்து சாப்பிட்டு தங்கியிருந்தார்கள். ஏ.எஸ்.ஏ. முத்தம்மாள், அலமேலு, ஆனந்தாய், ராஜம், மயிலு, பரமசிவம் அனைவரும் அந்தக் குடும்பத்துடன் பாசமுடன் பழகி அன்பு செலுத்துகின்றார்கள். அவர்களும் உயிருக்கு உயிராக சாதி வித்தியாசம் இன்றி பழகுகின்றார்கள். இருவர் குடும்பத்துத் திருமணங்களிலும் ஒருவருக்கொருவர் கலந்து கொள்கின் றார்கள். பேரன், பேத்திகள் வரை நட்பு - இன்று வரை நீடித்துள்ளது.

சுசீலா, பத்மா, வசந்தா, சசிரேகா, சுகுமார், ஜெய்குமார், ஜகன்நாதன் என்று பிள்ளைகள். உண்ணா மந்தல் ரெட்டியார் குடும்பம் வந்து தங்கிச் செல்கின்றார்கள். போளூர் யசோதா ஆபரேஷனுக்காக 3 மாதம் வந்து தங்கிச் செல்கின்றார்கள். கோட்டைப்பூண்டி மணியக்காரர், ரெட்டியார் குடும்பம் ஆசிரியர் குடும்பம், உலகம்பட்டு கோபால் குடும்பம். இப்படி எத்தனையோ குடும்பங்கள் அடிக்கடி சி.எம்.சி. வைத்தியத் திற்காக வந்து தங்கிச் செல்வார்கள். அனைவருக்கும் வீட்டில் தங்க உரிமையுடன் வசதியும், சாப்பாடும் அளிப்பது இவருக்கு வழக்கம். 'அந்தக் காலத்தில் விறகு அடுப்பு, மண்பானையில் சமையல், முத்தம்மாளுக்கும், அலமேலுவுக்கும் சமைத்துச் சமைத்துப் பரிமாறுவதுதான் வேலை!



வன்னியகுலஷத்திரிய பெரியவர் ராஜரிஷி வர்மா என்று ஒரு பிரம்மச்சாரி - வயதானவர். ஏ.எஸ்.ஏ. வீட்டில் வருடக்கணக்கில் கடைசி காலத்தில் தங்கியிருந்தார். தினமும் குளித்து விட்டு, விபூதி பூசிக்கொண்டு சாப்பிட்டுவிட்டு ஈஸி சேரில் சாய்ந்துக் கொண்டு இருப்பார். நிறைய புத்தகம் படிப்பதும் எழுதுவதும் தான் அவர் வேலை. ஏ.எஸ்.ஏ. அவரைத் தன் தகப்பனார் போல் கவனித்துக் கொண்டார். இரவில் தினமும் அவருக்கு 1 டம்ளர் பசும்பால், இரண்டு வாழைப்பழம் தர வேண்டும். சாப்பிடும் போது நெய்யை கையில் கரண்டியால் அள்ளி ஊற்றிக் கொள்வார். ஸ்பூனில் எடுக்கமாட்டார். பெரிய கரண்டியால்தான் எடுப்பார்.

அவ்வளவு சுதந்திரமாகச் சாப்பாடு! அவருக்குத் தலைவாழையிலையில்தான் உணவிடவேண்டும். சாப்பாடு சுடச்சுட இருக்க வேண்டும். கொஞ்சம் கூட வீட்டில் சலிப்பே இல்லாமல் அவருக்கு விருந்தோம்பல் நடக்கும். கடையில் இருந்து வந்ததும் ராஜரிஷி வர்மாவை அன்போடு சாப்பிட்டீர்களா என்று கேட்டு உடன் அமர்த்தித் தினமும் சாப்பிடுவது வழக்கம். ஏ.எஸ்.ஏ. வீட்டிற்கு வாழ்க்கைப்பட்ட அன்னபூரணி அலமேலுவை பாராட்டாமல் இருக்க முடியாது. மாமா சொல்லும் வார்த்தை வேதவாக்கு. தினமும் வீட்டிற்கு 5 படி சாதம் வேகும் தினமும் வீட்டிற்கு 5 விருந்தாளியாவது ஏ.எஸ்.ஏ. அழைத்து வருவார். அலமேலு சாப்பாடு ரெடியா? என்பார். சிரித்த முகத்துடன் 'தயாராக உள்ளது மாமா' என்பார். அலமேலு வருத்தப்படவே மாட்டார். அனைவரும் சாப்பாடு மிகவும் ருசியாக உள்ளது என்பார்கள்.

வீட்டில் பால், மோர், கூழ், சாப்பாடு அனைத்தும் தயாராக இருக்கும். தினமும் சைவ சாப்பாடு தான் சாதம், குழம்பு, ரசம், மோர் ஒரு பொரியல் ஒரு கீரை வறுவல் (அ) கூட்டு என்று இருக்கும். ஏ.எஸ்.ஏ. வைப்பார்க்க நகரமோ, கிராமமோ எங்கிருந்து உறவினர்கள், நண்பர்கள் யார் வந்தாலும்

வீட்டிற்கு அழைத்து வந்து சாப்பிடவைத்து அனுப்புவார். காபி, மோர், இப்படி கொடுக்க வேண்டும். அவருக்கு யார் வந்தாலும் சாப்பாடு சாப்பாடு என்றுதான் கவனிப்பார். உண்ணாமுலை அம்மாள். ''தன் மகன் உயிரோடு இருக்க வேண்டும். முருகா ஜன்ம காவடி எடுக்கின்றேன்!'' என்று வேண்டிக்கொண்டாராம், சாகும் தருவாயில்! மாமியாரிடம், ''அத்தை உங்களால் முடியாது. மறக்காமல் மூன்று வருடமாவது திருத்தணி முருகனுக்கு காவடி எடுங்கள்!'' என்று கூறிவிட்டுச் சென்றார்கள். அதை நினைவு கூர்ந்து முத்தம்மாள் தன் பேரன் பரமசிவத்தை மூன்று வருடம் திருத்தணிக்குக் காவடி எடுத்துப் பிரார்த்தனை முடிக்கின்றார். ஒவ்வொரு ஆண்டும் 200 பேருக்குச் சாப்பாடு போட்டுத் தடபுடலாகக் காவடி எடுக்கப்பட்டது. இப்படியாக வியாபாரமும், குடும்பமும் இனிதே நடைபெறுகின்றது.



# கர்ண பரம்பரை

**ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**
**ஊதிய மில்லை உயிர்க்கு (கு.7)**

*'வறியவர்க்கு ஈதல் வேண்டும். அதனால் புகழ் உண்டாக வேண்டும். அப்புகழ் அல்லாமல் உயிர்க்கு ஊதியமானது வேறொன்றும் இல்லை.'*

திரு.ஏ.எஸ்.ஏ. விடம் கிராமத்திலிருந்து படிக்க முடியாமல் கஷ்டப்படும் குழந்தைகளுக்குப் படிப்பு செலவுக்காகப் பணம், புத்தகம், உடை கேட்டு நிறைய பேர்கள் வருவார்கள். ஒவ்வொரு வருடமும் ஏழை பிள்ளைகளுக்குப் பணமும், புத்தகம், உடைகள் வாங்கித் தருவார். கணக்கிட முடியாது. அவ்வளவு பேருக்கும் வாங்கித் தருவார். ஏழைகள் திருமணத்திற்காக உதவி கேட்டு வருவார்கள்.

வேலூரும், வேலூரைச் சுற்றியுள்ள கிராமத்திலிருந்தும் வந்து கேட்டவுடன் இன்முகத்துடன் தங்கத்தாலி, கூரைப் புடவை, கூரைவேஷ்டி வாங்கிக் கொடுத்து விடுவார். இதுவும் கணக்கிடமுடியவில்லை. அவ்வளவு பேர்கள். மாதம்

ஒரு தம்பதிக்காவது தாலி, புடவை, வேஷ்டி வாங்கித்தருவார். அடுத்து யாராவது வந்து தொழில் தொடங்க பணம் இல்லை என்று சொன்னால் போதும், ''இந்தாப்பா இந்த பணத்தை வைத்து தொழில் தொடங்கு, நேர்மையாக தொழில் செய்!'' என்று வாயார, வாழ்த்தி உதவி செய்வார். இவரிடம் வேலைக்கு அமர்ந்து ரொட்டித் தொழிலை நன்றாகக் கற்றுக் கொண்டு பிறகு, ''முதலாளி எனக்கு சம்பளத்திற்கு வேலை செய்தால்



*வேலூர் ஊரீசுக் கல்லூரிக்கு வள்ளல் ஏ.எஸ்.ஏ. பெயரில் ரூ.20,000/- வைப்பு நிதியை நன்கொடையாக ஏ.எஸ்.ஏ. பரமசிவம் மயிலாம்பிகை கல்லூரி முதல்வர் எம்.ஜே.ஜான் அவர்களிடம் வழங்குகிறார்கள்.*



கட்டுப்படி ஆகவில்லை. குடும்பம் ஆகிவிட்டது. அதனால் நான் தனியாக ரொட்டிக்கடை சிறிய அளவில் வைத்து பிழைத்துக் கொள்ளலாம் என்றிருக்கிறேன்.'' என்று பயந்து கொண்டு கேட்பார்கள். ஏ.எஸ்.ஏ. கொஞ்சமும் வருத்தப்படாமல் ''பேஷ், பேஷ் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. நன்றாக வியாபாரம் செய்து முன்னுக்குவா!'' என்று வாழ்த்தி அனுப்புவார். பணம் கேட்டால் கடனும் கொடுப்பார். இவரே நல்ல நாளில் பூஜை போட்டுக் கடையை ஆரம்பித்துக் கொடுப்பார். எத்தனையோ குமாஸ்தாக்கள், ''இப்படிச் சந்தோஷமாகப்பணம் கொடுத்து வாழ்த்தி கடையை ஆரம்பித்து தரும் முதலாளியை நாங்கள் பார்த்ததில்லை!' என்று மிகவும் மகிழ்ச்சியடைவார்கள்.

ஒவ்வொரு குமாஸ்தாவும் அவர்கள் கடையில் சாமி படத்தை இரண்டாவது பட்சமாக வைத்து முதலில் இவர் படத்தைத்தான் கடைகளில் மாட்டி வைப்பார்கள். முதலாளி எங்கள் கண்கண்ட தெய்வம், எங்களை வாழ வைத்த தெய்வம் என்று பெருமையாகப் பேசுவார்கள். வியாபாரம் நன்றாக நடக்கின்றது என்று முதலாளிக்கு தட்டில், பழம், பூ ஸ்வீட் வாங்கி வந்து கொடுப்பார்கள். ஒரு பழம் எடுத்துக் கொள்வார். மீதியை நீ எடுத்துச் சென்று வீட்டில், மனைவி, பிள்ளைகளுக்குக் கொடு என்று அப்படியே கொடுத்துவிடுவார். இப்படி எத்தனையோ குமாஸ்தாக்கள் இன்றும் தனியாக முதலாளியாக வாழ்ந்து வருகின்றார்கள். எத்தனையோ குமாஸ்தாக்களுக்கு இலவசத் திருமணம் சொந்தச் செலவில் செய்துள்ளார்.

கோவிலில் நிறைய திருமணத்திற்கு இவரே கட்டணச் செலவு கட்டி விடுவார். அடுத்து காவியுடை அணிந்து வரும் சாமியார்கள், துறவிகளுக்கு காவிவேஷ்டி, காவி சட்டை இலவசமாக வாங்கி தருவார். துறவிகள் மதியம் வந்து கடையில் ஏ.எஸ்.ஏ.வைப் பார்த்துச் சாப்பாடு கேட்பார்கள். தினம் 10

சாமியார்க்கு, ரொட்டிக்கார தெருவில் உள்ள மங்கள விலாஸ் முனுசாமியின் ஓட்டலுக்குச் சாப்பாடு சீட்டு அனுப்புவார். மாதக்கடைசியில் ஓட்டலுக்குப் பணம் கட்டி விடுவார். வீட்டில் தினமும் பிச்சைக்காரர்களுக்குச் சாப்பாடு போட வேண்டும் என்று உத்தரவு! முத்தம்மாளும் சந்தோஷமாக அன்னதானம் செய்தால் குடும்பம் நன்றாக இருக்கும் என்று சந்தோஷமாக அலமேலுவிடம் சொல்லி விடுவார். அதற்காக அதிகமாக சமையல் செய்வார்கள். தினமும் 10 பிச்சைக்காரர்கள் நினைத்த நேரத்தில் சளைக்காமல் 12 மணி முதல் 2 மணி வரையில் வருவார்கள்.

திண்ணையில் ஒரு குண்டானில் குழம்பும் ஒரு குண்டானில் சாதமும் கொண்டு போய் அலமேலு வைத்து விடுவார்கள். முத்தம்மாள் உட்கார்ந்து கொண்டு இரண்டு கரண்டிசாதம், ஒரு கரண்டி குழம்பு ஊற்றி விடுவார். வருபவர்களுக்கு வெய்யில் காலத்தில் தினமும் ஒரு சிறிய அண்டாவில் நிறைய கூழ் மோர் விட்டுக் கரைத்துத் திண்ணைமேல் அலமேலு வைத்துவிடுவார். நிறைய பிச்சைக்காரர்கள் வந்து கேட்பார்கள் ஒரு பெரிய குவளை நிறைய கூழை மொண்டு கொடுப்பார். கூடவே குடிக்கத் தண்ணீரும் ஒரு பித்தளை தவளையில் வைத்துக்கொண்டு டம்ளரில் எடுத்து கொடுப்பார்கள். இப்படி 9 மாதம் சாப்பாடும் மூன்று மாதம் கூழும் என ஏழைகளுக்கு எ.எஸ்.எ.வீட்டில் அன்னதானம் நடக்கும்.

‘‘நானும் என் மனைவியும் இந்தச் சாப்பாட்டிற்கு எவ்வளவு கஷ்டப்பட்டோம். பசித்தவர்களுக்கு வயிறாரச் சாப்பாடு கொடுத்தால் அவர்கள் வாயார வாழ்த்துவார்கள்’’ என்பார். ஏ.எஸ்.ஏ. தாயார் முத்தம்மாள், மருமகள் அலமேலு மூவரும் இணைந்து சந்தோஷமாக இந்த ஏற்பாட்டை செய்து வந்தார்கள். ஏ.எஸ்.ஏ. வீட்டுத் தலைவாசப்படி அருகே இரண்டு பக்கம் பெரிய திண்ணைகள் இருக்கும். யார் வேண்டுமானாலும்



சற்று இளைப்பாறிச் செல்வார்கள். சில பெண்கள் பூ வியாபாரம் செய்ய பூவும் கூடை கூடையாகக் கட்டி எடுத்துச் செல்வார்கள். பீடி இலையும் வெட்டிச் செல்வார்கள். எல்லோருக்கும் உதவும் மனப்பான்மையுடன் அந்த வீடு இருந்தது. அப்போது எல்லாம் வேலைக்காரிகள் கிடையாது. வீட்டு வேலைகள் அனைத்தும் மருமகள் அலமேலு தான் செய்வார்கள்.

எப்போதும் சிரித்தமுகம். மாமனார், ஆயா, நாத்தனார், குழந்தைகள், கணவர் அனைவருக்கும் எல்லா வேலைகளும் செய்து கொடுத்துத் திறமையாகக் குடும்பத்தை நடத்தி வந்தார்கள். பச்சையம்மாள் கிராமத்தில் இருந்து வந்து தாய்வீட்டில் அனைவரையும் பார்த்துச் செல்வார்கள். ஏ.எஸ்.ஏ. செல்ல மகள் மயிலு ஷாட்ராக் பள்ளியில் 5ம் வகுப்பு முடித்து கவர்மெண்ட் பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் 6ம் வகுப்பு சேர்க்கின்றார்கள். நன்றாகப் படித்து வருகின்றாள். முத்தம்மாள் ஏ.எஸ்.ஏ. அண்ணன் பரமசிவம் அனைவரும் பாசத்தைப் பொழிவார்கள். என் மகளுக்கு தாயில்லை என்ற குறையே இருக்கக்கூடாது என்று சொல்லுவார். தினமும் இரவு வந்ததும் ஏ.எஸ்.ஏ. ரொட்டி பால், வெண்ணெய், வாழைப்பழம் சாப்பிடுவார். ஏ.எஸ்.ஏ. காலையில் டிபன், மத்தியம் சாப்பாடு இரவில் மட்டும் அரிசி சம்மந்தப்பட்டது சாப்பிடமாட்டார். அவர் அறையில் டேபிள் மீது 1/2 ரொட்டி, 2 டம்ளர் பால், ஒரு வெண்ணெய் பாக்கட், 2 வாழைப்பழம் வைத்துவிடுவது வழக்கம்.

அவர் வந்து சாப்பிட உட்கார்ந்ததும் மயிலு என்று கூப்பிடுவார். அதற்காகவே காத்திருந்து ஆவலுடன் தந்தையார் ரூமுக்கு ஓடுவாள்மகள்! தந்தை ரொட்டி, வெண்ணை, பால் பழம் தருவார். அவருடன் கூட அமர்ந்து சாப்பிடுவாள். இது தினமும் நடக்கும். ஏ.எஸ்.ஏ. மத்தியம், இரவு உறங்கும்போது தன் மகள் மயிலு கால் மிதித்து விடுவது பழக்கம். கையால் அழுத்துகின்றேன் என்று மகள் சொல்லுவாள். அதற்கு

ஏ.எஸ்.ஏ. ''உனக்கு வலுவில்லை! நீ அழுத்துவது வலி போகவில்லை! நின்று கொண்டு காலால் மிதித்து விடச் சொல்லுவார். அவருக்கு மனைவியில்லாததால் உழைத்து விட்டு சோர்வோடு வீட்டில் வந்து படுக்கும்போது இரண்டு வேலையும் மகள் கால் மிதித்து விடச் சொல்லுவார். சண்முகக் கவசம், பாரதியார் பாடல்கள், திரு அருட்பா, இவைகள் எல்லாம் மகளுக்கு சொல்லிக் கொடுப்பார். அவர் கண்ணை மூடிக்கொண்டு சொல்லிக் கொடுப்பார். மயிலு கால் மிதித்துக் கொண்டே கேட்க வேண்டும்; திருப்பி சொல்லச் சொல்லுவாள். தவறாகச் சொல்லிவிட்டால் சுட்டிக் காட்டித் திருத்துவார். சில ஆன்மீகப் புத்தகங்களைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிக் கேட்டுக்கொண்டு இருப்பார். நிறைய அறிவுரைகளைச் சொல்லுவார். தான் எப்படியெல்லாம் கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்தார் என்பததைச் சொல்லுவார்.

உன் அம்மாவிடம் இந்த நல்லகுணங்கள் இருக்கும் என்று தன் மனைவியுடன் வாழ்ந்ததையெல்லாம் சொல்லுவார். மகாத்மாகாந்தியின் சுயசரிதை இவருக்கு மிகவும் பிடிக்கும். அந்தப் புத்தகத்தைப் படிக்கச் சொல்லுவார். மயிலுவிடம் வீட்டில் ஆனந்தாய், ராஜம், அலமேலு, பரமசிவம், கண்ணப்பன் அனைவரும் சேர்ந்து பொம்மை கொலு வைக்கும் பழக்கம் உண்டு. பெரியவர்கள் எல்லோரும் சேர்ந்து மயிலுவிடம் வருஷா, வருஷம் அப்பாவிடம் பொம்மை வாங்கி தரச் சொல்லு என்று தூது அனுப்புவார்கள். அப்பா பொம்மை வேண்டும் கொலுவுக்கு என்று கேட்பாள். கைரிக்ஷாவில் மகளை உட்கார வைத்துக் கொண்டு பொம்மைக்கடைக்கு அழைத்துச் செல்கின்றார். என் மகள் என்ன பொம்மை கேட்கின்றாளே கொடு'' என்று சொல்லுகின்றார்.

மயிலு ஆசை தீர நிறைய பொம்மைகள் சொல்லுகின்றாள். எல்லாவற்றையும் வாங்கி வீட்டுக்கு எடுத்து வருகின்றாள். 10 நாளும் வீட்டில் விழாக் கோலம். மயிலு



பட்டுப்பாவாடை அணிந்து எல்லார் வீட்டுக்கும் சென்று குங்குமம் கொடுத்துக் கொலுவுக்கு அழைப்பார். தினம் ஒரு சுண்டல், சுமங்கலிகளுக்குத் தாம்பூலம், கொடுப்பது வழக்கம். ஏழை பணக்காரர் வித்தியாசம் இல்லாமல் வருகின்றவர்கள் அனைவருக்கும் தாம்பூலம் கொடுப்பது வழக்கம். கிருஸ்துமஸ் சமயத்தில் நல்ல வியாபாரம் நடக்கும் அனைவரும் ஏ.எஸ்.ஏ. பேக்கரி கேக் மிகவும் ருசியாக உள்ளது என்று பாராட்டுவார்கள்.

இன்று வரை அதே தரத்துடன் மகன் பரமசிவம் பேக்கரி நடத்தி வருகின்றார். தை மாதம் பெரும் பொங்கல் அன்று குப்புசாமி முதலியார் ஜீப்பில் மூங்கில் புட்டிலில் கேக், பிஸ்கட், ஆப்பிள், சாத்துக்குடி வைத்துக் கொண்டு பூமாலை, எலுமிச்சம்பழம் வாங்கிக் கொள்வார். போகி அன்று மாலை எல்லாம் தயாராக வைத்துக்கொள்வார். பெரும் பொங்கல் அன்று காலையில் குளித்து நெற்றியில் விபூதி அணிந்து கொண்டு கதர் ஆடை உடுத்திக் கொள்வார். மகள் மயிலு பாவாடை போட்டுக்கொண்டு இருக்கும். மகளையும் அழைத்துக் கொண்டு 7 மணிக்குக் கிளம்பி விடுவார். முதலில் கலெக்டர் பிறகு டி.எஸ்.பி. மற்றும் முக்கியமான ஆபிஸர்கள், ஆடிட்டர், டாக்டர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள் இப்படிப் பிரித்துக்கொள்வார்.

ஒவ்வொரு பெரிய ஆபிஸருக்கும் அவரது வீட்டிற்குச் சென்று இன்முகத்துடன் இரு கரம் கூப்பிப் பொங்கல் நல்வாழ்த்துக்கள் என்று கூறிப் பூமாலை போட்டு எலுமிச்சம்பழம் கொடுத்து மூங்கில் கூடையை கொடுப்பார். இந்த இனிய நாளில் எங்கள் கடையில் தயார் செய்த கேக், பிஸ்கட், பழங்கள் இதை அன்போடு கொடுக்கின்றேன் ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கொடுப்பார். ஆபிஸர்கள், மற்றும் வீட்டில் ஆண்கள் இல்லாவிட்டால் அவர்களின் மனைவிமார் களுக்குத் தன் மகள் மயிலுவை மாலை அணிவிக்கச் சொல்லி மரியாதை செலுத்துவார்.

அதற்காகத்தான் மகளை அழைத்து செல்வேன் என்பார். நன்றாக ஞாபகம் உள்ளது. முன்னாள் ரெவின்யூ மந்திரி மாணிக்கவேலு நாயக்கர் வேலூர் ரெட்டியப்ப முதலித் தெருவில் வக்கீலாக இருந்தார். டாக்டர் ராமச்சந்திரன் எம்.பி., இவர்களையெல்லாம் பார்த்துக் கொடுப்பது வழக்கம். எல்லோரும். ''பிள்ளைவாள் வாருங்கள்! வணக்கம்! என்று அன்போடு அழைப்பார்கள். அவரவர்கள் வீட்டில் காபி, டீ, மோர், சர்க்கரை பொங்கல் என்று கொடுத்து உபசரிப்பார்கள். காலையில் சென்றால் பகல் 12 மணியாகும் வீட்டிற்கு வர கடையைப் பரமசிவம், முத்தம்மாள் பார்த்துக் கொள்வார்கள்.

மயிலுவுக்கு வருத்தமாக இருக்கும். பொங்கல் அன்று காலையில் வீட்டில் பொங்கலிட்டுப் பூஜை செய்வதைப் பார்க்கமுடியவில்லையே என்று வருத்தப்படுவாள். அப்பா அழைப்பதால் தட்டாமல் சென்றுவிடுவாள். பண்டிகை வந்துவிட்டால். தீபாவளி, பொங்கலுக்குத் துணி வாங்க மகன் பரமசிவத்தை அழைத்துத் தங்கச்சியை அழைத்துக்கொண்டு போய் நம் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு ஆளுக்கு ஒரு டிரஸ் வாங்கிவா என்று சொல்வார். லாங்குபஜார் கிருஷ்ணா பேன்ஸி ஹால் என்ற நண்பரின் துணிக்கடையில் தான் துணிவாங்க வேண்டும் என்று சொல்லி அனுப்புவார். அந்த கடையின் முதலாளி மகன் துளசி என்பவர் பரமசிவத்தின் பள்ளி நண்பராவார். தங்கை மயிலுவைக் கடைக்கு அழைத்துச் சென்று நல்ல உயர்ந்த துணியாக, புது மாடல் எடுத்து போடச் சொல்லித் தங்கை மேல் வைத்துப் பார்த்துத் தேர்ந்து எடுப்பார். தங்கையின் மீது அளவு கடந்த பாசம். தீபாவளி, நோன்பு என்று இரண்டு நாளைக்குப் புதுத்துணி போட வேண்டும் என்று தங்கைக்கு மூன்று பாவாடை, சட்டை எடுப்பார். முத்தம்மாள், அலமேலு, ராஜம், ஆனந்தாய், பரமசிவம் ஆகியோருக்குத் தலா ஒரு செட் துணி வாங்கி பில் போடச் சொல்லுவார். மயிலுவிக்கு ஒரே குஷியாக இருக்கும்.



வீட்டிற்கு வந்து எல்லோரிடமும் அண்ணன் மூன்று துணி வாங்கித் தந்தார் என்று சொல்லி மகிழ்வாள். பொங்கலுக்குத் துணி எடுக்கும் போது கடையில் தன் அண்ணனிடம் அண்ணா எனக்கு 4 செட் டிரஸ் வேண்டும். போகிப்பொங்கல், பெரும்பொங்கல், மாட்டுப்பொங்கல், காணும் பொங்கல் நான்கு நாளைக்குப் புதியதாகக் கட்ட வேண்டும் என்பாள். அதே மாதிரி அண்ணன் தங்கைக்கு 4 செட் டிரஸ் வாங்குவார். மற்றவர்களுக்கு 1 செட் துணிதான். வீட்டில் இரவு ஏ.எஸ்.ஏ. வாங்கி வந்த துணிகளைப் பார்ப்பார்.

செல்லமாக மகளைப் பார்த்து, ''நான் ஒன்றுதானே வாங்கச் சொன்னேன் நீ மட்டும் நிறைய எடுத்துக் கொண்டாயே மற்றவர்களுக்கு ஆசைவராதா?'' என்பார். ''போப்பா! 4 நாள் பொங்கல் வருகின்றது. தினமும் புதுத் துணி கட்ட வேண்டும்'' என்பாள். எல்லோரும் சிரிப்பார்கள். பரமசிவம் எது வேண்டுமானாலும் அப்பாவை நேரடியாகக் கேட்கமாட்டார். அவருக்கு வேண்டியதை வாங்கிக்கொள்ளத் தங்கை மயிலுவிடம் சொல்லி, ''அப்பாவிடம் சொல்லு. எனக்கு கேமரா வேண்டும், வாட்சு வேண்டும், பணம் வேண்டும்'' என்பார். மயிலுவும் அப்பாவிடம் அண்ணனுக்கு இது வேண்டுமாம் என்பாள். ஏ.எஸ்.ஏ. சிரித்துக்கொண்டே பணம் கொடுப்பார்.

தந்தையிடம் அவ்வளவு பயபக்தி மகனுக்கு! முத்தம்மாள் மண் உண்டி வாங்கிப் பேரன், பேத்திகளுக்குக் கொடுத்து நீங்கள் உங்களுக்கு கொடுக்கும் காசை இந்த உண்டியலில் போட்டுச் சேர்த்து வைக்க வேண்டும். இப்படி சேர்த்து வைத்தால் உங்களுக்குப் பிடித்த பொருள் வாங்கிக்கொள்ள உதவும், நல்ல பழக்கம்; வீண் செலவு செய்யக்கூடாது என்று சொல்லிக் கொடுப்பார்கள். தினமும் முத்தம்மா எல்லோருக்கும் காலணா கொடுப்பார். தொண்டி காலணா என்று பெயர். அதை வாங்கி உண்டியலில் போட்டு வைப்போம்.

காணும் பொங்கல் அன்று ஏ.எஸ்.ஏ.வீட்டில் திருமண விழா போல் இருக்கும். அன்று கடை லீவு. வீட்டில் 5 தார் வாழைப்பழம் 2 கட்டு வெற்றிலைப் பாக்கு, உதிரி ரோஜாப்பூ, வேஷ்டி, புடவை என்று வந்து இறங்கும். காணும் பொங்கல் அன்று ஏ.எஸ்.ஏ.ஆபிஸ் ரூமில் நிறைய சேர்கள் போட்டு இருக்கும். பெரிய ஜமக்காளம் தரையில் விரித்து இருக்கும். டேபிள் மீது தட்டில் சந்தனம், குங்குமம் இருக்கும். வெற்றிலை, பாக்கு, பூ, பழம் துணிகள் இவைகள் அடுக்கி வைக்கப்பட்டு இருக்கும். நான்கு தாம்பாளத் தட்டுகள் இருக்கும். 1/2 ரூபாய், 1/4 ரூபாய், 1 ரூபாய், 1 அணா, 2 அணா போன்ற நாணயங்கள் தனித் தனி குவியல்களாக 5ரூ 10ரூ நோட்டுக்கள் டேபிள் மீது வைத்துக் கொள்வார். சரியாக 8 மணிக்கு டேபிள் முன் நாற்காலியில் சிரித்தமுகத்துடன் உட்கார்ந்து கொள்வார்கள். மேளக்காரர்கள் வந்து நாதஸ்வரம் வாசிப்பார்கள்.

மயிலு சந்தனம் கொடுப்பாள், தட்டில் வெற்றிலை, பாக்கு, ஒரு வாழைப்பழம், ஒரு ரோஜா வைத்துக் காசு வைத்து இனாம் கொடுப்பார். அதை எடுத்து வாத்தியக்காரருக்குக் கொடுக்கச் சொல்லுவார். மயிலு, பரமசிவம் இருவரும் மாற்றி, மாற்றி கொடுத்துக்கொண்டே இருப்பார்கள். இப்படி நிறைய 20 வாத்தியக்காரர் செட்டு வருவார்கள். காலை முதல் 1 மணி வரை நாதஸ்வரம் ஒலித்துக் கொண்டே இருக்கும் தெருவில் பிச்சைக்காரர்கள் 100 பேர் வருவார்கள். எல்லோருக்கும் 1 அணா வீதம் கொடுப்பார். நானும், அண்ணாவும் கொடுப்போம்.

சாமியார்கள் வருவார்கள். அவர்களுக்கு வேஷ்டி, துண்டு, ஏழைப் பெண்களுக்குப் புடவை இப்படி தட்டில் வைத்து அவரே கொடுப்பார். அவரை விடப் பெரிய துறவிகள் சாமியார்கள் வந்தால் அவர்களிடம் துணியைக் கொடுத்துவிட்டு கீழே குனிந்து பாதத்தைத் தொட்டு வணங்குவார். ஏழை சாமியார்கள் என்று கொஞ்சமும் தயங்கமாட்டார்.



பெரியவர்களிடம் ஆசி வாங்குதல் நல்லது என்பார். கடை குமாஸ்தாக்கள் நண்பர்கள், உறவினர்கள் இப்படி எல்லோரும் வந்து இனாம் வாங்கிச் செல்வார்கள். சில பேருக்குக் காபி, டீ, மோர் கொடுக்க வேண்டும். சில பேருக்குச் சாப்பாடும் போட வேண்டும்.

மருமகள் அலமேலு இவையெல்லாம் தயார் செய்து தருவார். எல்லோரும் இனாம் வாங்கிச் சென்று முடிய 2 மணி ஆகும். பிறகு வீட்டில் உள்ள அனைவரையும் அழைப்பார். தன் தாயார் முத்தம்மாளிடம் தாம்பூலத்தில் ரூ.100 வைத்து நெடுஞ்சாணாக வீழ்ந்து பாதங்களைத் தொட்டு வணங்குவார். பிறகு பரமசிவம் என்று அழைப்பார். நீலகண்டன், ராஜம், அலமேலு, ஆனந்தாய், மயிலு என்று ஒவ்வொருவராகக் கூப்பிட்டு இனாம் கொடுப்பார். ஆனந்தாய்க்கு ரூ.25, ராஜம், பரமசிவம் ரூ.10, நீலகண்டன், மயிலுவுக்கு 5 புது நோட்டுகளாக கொடுப்பார். அனைவரும் மகிழ்ச்சியுடன் ஏ.எஸ்.ஏ. காலில் வீழ்ந்து வணங்கி வாங்கிக்கொள்வார்கள்.

முத்தம்மா காலிலும் வீழ்ந்து வணங்குவார்கள். இருவரும் அட்சதை போட்டு வாழ்த்துவார்கள். இப்படியாக காணும் பொங்கல் இனிமையாக நடக்கும். கார்த்திகை தீபமும் இனிது நடக்கும். மயிலு குழந்தையாகக் கவுன் போட்டு இருக்கும் போது ஒருநாள் வீட்டு முன் உட்கார்ந்து இருந்தாள். ஒரு திருடன், உங்கப்பா புது சட்டை, வாங்கிக்கொடுத்து உள்ளார். நான் டெய்லர்! அளவு கொடுக்கக் கடைக்கு வா என்று அழைக்கின்றான்.

மயிலு கூடவே சென்று விடுகின்றாள். அவன் ரொட்டிக்கடையைத் தாண்டி போகவே மயிலு நம் கடை இங்கு உள்ளது. இந்த ஆள் எங்கோ அழைத்துச் சொல்கின்றானே என்று அவனுக்குத் தெரியாமல் திரும்பி ஓடி வந்து கடையில் அப்பாவை பார்த்து, அப்பா என்னை ஒரு ஆள்

கூப்பிட்டுச் செல்கின்றான். துணி அளவு கொடுத்து வா, என்றான், உங்கப்பா சொன்னார் என்றான், அவன் நம் கடையை விட்டுத் தூரமாக அழைத்து போகவே ஓடி வந்து விட்டேன்!'' என்கின்றாள். உடனே ஏ.எஸ்.ஏ. மகளை தூக்கி வைத்துக் கொண்டு, குமாஸ்தாவிடம் ஓடிப்போய் பாருங்கள் யார் அவன்? என்று விரட்டுகின்றார். மகளை உச்சி முகந்து நான் அனுப்பவில்லை கடவுள் தான் காப்பாற்றினார். இனிமேல் யார் கூப்பிட்டாலும் நீ போகக் கூடாதும்மா என்று மகளைப் பார்த்து சொல்லிப் பிறகு குழந்தையை மகனுடன் வீட்டில் கொண்டு விடச் சொல்கின்றார். மறுபடியும் இரண்டாவது முறை மயிலு ஒரு திருமணத்திற்குச் சென்று வருகின்றாள். பட்டுப் பாவாடை, நகை அணிந்து இருக்கின்றாள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. அன்றும் ரொட்டிக்கடை இருக்கும். லாங்கு பஜாரில் நிறைய கடைகள் மூடி இருந்தன. மயிலு பக்கத்தில் உள்ள ஆனந்தாய் வீட்டிற்குச் சென்று கொண்டு இருந்தாள். அப்போது ஒரு திருடன் வந்து, ''பாப்பா இங்க வா; உங்க அப்பா உன்னிடம் மாம்பழம் வாங்கி கொடுத்து அனுப்பச் சொன்னார். வீட்டில் கொண்டு போய்க்கொடு வாம்மா!'' என்று கூப்பிடுகின்றான். மயிலுவும் அப்பா சொன்னார் என்று சொல்லவே கூட செல்கின்றாள். அவன் வேறு வழியாகக் குழந்தையை அழைத்துச் சென்று ஒரு கூடையில் வைத்து விற்றுக் கொண்டு இருக்கும் ஆளிடம் ஒரு மாம்பழத்தை வாங்கி மயிலு கையில் கொடுக்கின்றான்.

''வா பாப்பா வேறு இடத்தில் பழம் வாங்கலாம்!'' என்று அவன் முன்னே நடந்து செல்கின்றான். மயிலு பின்னே நடந்து செல்கின்றாள். திடீரென்று மயிலு பின்பக்கம் திரும்பி பார்க்கின்றாள். அவள் கண்ணுக்கு அவள் அப்பாவின் கடை தூரமாகத் தெரிகின்றது. அதாவது இப்போது உள்ள ராதா ஸ்டோர் அருகே வரை அழைத்துச் சென்றிருக்கின்றான். உடனே அந்த ஆளிடம் சொல்லாமல் வேகமாக ஒரே ஓட்டமாக



ஓடி வந்து கடையைச் சேர்ந்து விட்டாள். மூச்சு இரைக்கின்றது. கையில் மாம்பழத்துடன் ''அப்பா, அப்பா யாரோ ஒரு ஆள் உன்னிடம் மாம்பழம் வாங்கி வீட்டிற்குக் கொடுத்து அனுப்பச் சொன்னார் உங்க அப்பா என்று அழைத்துச் சென்றார். ரொம்ப தூரம் போகவே நம் கடையில் பின்னால் உள்ளதே என்று ஓடி வந்து விட்டேன் என்று படபடப்புடன் கூறுகின்றாள். உடனே ஏ.எஸ்.ஏ.மகளைத் தூக்கிக் கொண்டு வீட்டிற்குச் செல்கின்றார். அப்பா, சொன்னார்னு சொல்லிக் குழந்தையைத் தனியாக வீட்டிலிருந்து அனுப்ப வேண்டாம். நகைக்ககாக நம் குழந்தையை அழைத்துச் செல்கின்றார்கள் திருடர்கள். நல்ல காலம் நம் குழந்தை கடவுள் அருளால் திரும்பி வந்துவிட்டாள். தம் குழந்தை முதலில் ஏமாந்து விட்டாலும் நம் கடையை கண்டு வந்துவிட்டதைப் பார்த்து மகிழ்கின்றார்.

3வது முறை மறுபடியும் ஒரு தவறு நடக்கின்றது. அண்ணாமலையார் கார்த்திகை தீபம் மாலை 6 மணிக்குத் தெருவில் அழகாகத் தீபம் ஏற்றி வைக்கின்றார்கள், முத்தம்மாவும், அலமேலுவும், திண்ணை மீது பரமசிவம், மயிலு உட்கார்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள். பரமசிவம் தங்கையிடம் 4 அணா கொடுத்து. ''மோட்டா சேவு வாங்கி வாம்மா நாம் சாப்பிட்டுக் கொண்டே வேடிக்கை பார்க்கலாம்!'' என்கின்றார். மயிலு மோட்டா சேவு வாங்க ரொட்டிக்காரத் தெரு முனையில் இருக்கும் அண்ணுக்குட்டி கடைக்குச் சென்று கொண்டு இருக்கின்றாள். அந்தச் சமயம் அண்ணுகுட்டி மிட்டாய் கடைப் பக்கத்து வீட்டில் வசிக்கும் ராமகிருஷ்ணசாமி முதலியார் குடும்பம் தேவகி அம்மாள் மகள் அற்புதா, ஈஸ்வரி இவர்கள் பேரி சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்குச் செல்ல வீட்டிலிருந்து வெளியே வருகின்றார்கள்.

ஈஸ்வரி மயிலுவுக்கு நெருங்கிய பள்ளித் தோழி. ''மயிலு வாம்மா நாங்கள் எல்லாம் கோவிலுக்குப் போகின்றோம். நீயும் வாம்மா!" என்று எல்லோரும் கூப்பிடுகின்றார்கள்.

மயிலுவும் ஆசையாகக் கோவிலுக்குச் சென்றுவிட்டாள். அண்ணன் மோட்டா சேவு வாங்கி வரச் சொன்னதைவிட்டு விட்டு அவர்களுடன் சந்தோஷமாகக் கோவிலுக்குச் சென்று விட்டாள். அண்ணன் கொடுத்த 4 அணாவைக் கையில் பத்திரமாக வைத்திருக்கின்றாள். கோவிலுக்குச் சென்று அனைவரும் சாமியைப் பார்த்துக் கும்பிட்டுக்கொண்டு இருக்கின்றார்கள். நிறைய கூட்டம் குழந்தையாக இருப்பதால் கூட்டத்து நடுவில் இருக்கின்றாள். அற்புதா அக்கா பக்கத்தில் நின்று கொண்டு இருக்கின்றார்.

சுவாமிக்குத் தீபாராதனை மேளம், மணியோசையுடன் நடக்கின்றது. அனைவரும் அரோகரா என்ற முழக்கத்துடன் சாமி கும்பிடுகின்றார்கள். மயிலு 7 வயது பெண்: அவளுக்கு கூட்டத்தில் சாமியே தெரியவில்லை. அவள் கழுத்தில் ரெட்டைவடம் காஞ்சிகாமணி செயின் என்பார்கள். 10 சவரன் சங்கிலி போட்டு இருந்தாள். காதில் கல் வைத்த கம்மல், கல் வைத்த லோலாக்கு, கையில் தங்க வளையல் நான்கு அணிந்து இருந்தாள். அந்தச் செயின் ஆனந்தாய்க்கு ஏ.எஸ்.ஏ.போட்டது. ஆனந்தாய் தீபத்திற்கு வீட்டிற்கு வந்து இருந்த சமயம் மயிலுவுக்குக் கழட்டிப் போட்டு இருந்தார்கள். அந்தச் செயினை மயிலுவின் பின்னால் இருந்த ஒருவன் மும்முரமாகச் சாமி கும்பிடும் சமயத்தில் மயிலுவின் கழுத்தில் இருந்து கழட்டி எடுக்கின்றான்.

✳



# பத்துச் சவரன்

**கறுத்துஇன்னா செய்தவக் கண்ணும் மறுத்துஇன்னா செய்யாமை மாசற்றார் கோள் (கு.312)**

*'ஒருவன் கறுவுகொண்டு துன்பம் செய்த போதிலும் அவனுக்குத் திரும்பத் துன்பம் செய்யாதிருத்தலே மாசற்றவரின் கொள்கையாகும்.'*

மயிலு கழுத்தில் இருந்து அவன் அலக்காக எடுக்கும்போது விரல் மட்டும் தெரிந்ததாம். உடனே ''அற்புதா அக்கா! யாரோ என் கழுத்தில் செயினை தூக்கினார்கள்! என்கின்றாள். கூட்டத்தில் திரும்பிப் பார்த்தால் யார் என்று தெரியவில்லை. குழந்தை பயந்து அழுகின்றாள். யாரம்மா நீ பார்த்தாயா என்று தேவகி அம்மா கேட்கின்றார்கள். எனக்கு சாமியும் தெரியவில்லை நான் உங்கள் பக்கத்தில் நின்று கொண்டு இருக்கும்போது ஒரு விரல் மட்டும் செயினைத் தூக்குவது தெரிந்தது. உடனே உங்களிடம் சொன்னேன் என்று அழுகின்றாள்.

உடனே குழந்தையை அழைத்து வந்து முத்தம்மாளிடம் விட்டு விட்டுச் செல்கின்றார்கள். முத்தம்மாள் கோபமாகக் குழந்தையைத் திட்டி விட்டார்கள். ''அய்யோ 10

சவரன் நகையாச்சே! அதுவும் நம்முடையது அல்ல; ஆனந்தாயினுடையது. அவளுக்கு மாமியார் வீட்டில் திட்டுவார்கள். உன்னைக் கடைக்கு அனுப்பினால், யார் கூப்பிட்டாலும் கோவிலுக்குப் போவதா? இது மூன்றாவது முறை இப்படியே யார் கூப்பிட்டாலும் செல்கின்றாய் ஏமாந்தும் போகின்றாய்!'' என்று திட்டி விட்டார்கள். பரமசிவத்தையும் முத்தம்மாள் திட்டுகின்றாள்.

''சும்மா உட்கார்ந்து இருந்த குழந்தையை ஏன் அனுப்பினாய்? உன்னால் இப்போது நகையைத் தொலைத்து விட்டு வந்து இருக்கின்றாள்'' என்று திட்டினார். மயிலு அழுது, அழுது காய்ச்சல் வந்துவிட்டது. எதுவும் சாப்பிடவில்லை மிகவும் பயந்துவிட்டாள். பாட்டி கால் மீது படுத்துக் கொண்டாள். விஷயம் அறிந்து ஏ.எஸ்.ஏ. கடையில் இருந்து வருகின்றார். அம்மாவைக் கோபிக்கின்றார்.

''நகை போனால் போகுது என் குழந்தையை நகைக்காக தூக்கிச் சென்று கொன்றுவிட்டால் என்ன செய்வது? அந்த முருகன் அருளால் குழந்தையைத் தூக்கிச் செல்லாமல் நகை போனது போகட்டும்!'' என்கின்றார். மகளைத் தூக்கி அழாதே ஜுரம் அடிக்கின்றது. இனிமேல் யார் கூப்பிட்டாலும் எங்கும் போகக்கூடாது என்று சொல்லி மடிமேல் வைத்துக் கொண்டு டம்ளரில் பால் குடிக்க வைத்துப் படுக்க வைக்கின்றார். ஆனந்தாய்க்கு 10 சவரனில் புதியதாக அதே மாதிரி நகை செய்து கொடுத்து விட்டார்.

கிருஸ்துமஸ் சமயத்தில் ஒரு மாதம் வீட்டில் கேக் வேலைகள் நடக்கும். முனுசாமிதான் ஐஸிங் வேலை செய்வார்கள். வீட்டில் பெண்கள் எல்லோரும் ஆலுக்கு ஒரு வேலையாகச் செய்வார்கள். நிறைய கேக்குகள் காலை 8 மணிக்கு ஆரம்பித்தால் இரவு 10 மணி வரை நடக்கும். வித, விதமான அலங்கார கேக்குகள் விற்பனைக்குத் தயாராகும்.



வீட்டின் பின்புறம் ரொட்டி அடுப்பு கட்டி வேலையாட்கள் செய்வார்கள். கிருஸ்துமஸ் சமயத்தில் வேலை ஆட்கள் 6 பேருக்குத் தினமும் டிபன், சாப்பாடு வழங்குவார்கள். இடைவிடாமல் வேலை இருப்பதால் வீட்டில் சாப்பாடு, காபி கொடுக்கச் சொல்லுவார். வேலூர் மக்கள் அனைவரும் கிருஸ்துமஸ், ஜனவரி 1ம் தேதி புது வருஷத்திற்காக நிறைய கேக், பிஸ்கட் ரொட்டி என்று வியாபாரம் இனிது நடக்கும். இந்தச் சமயத்தில் வடஆர்க்காடு மாவட்டம் முழுவதுமாக 20 பிஸ்கட் கடை கிளைகள் ஆரம்பிக்கப்பட்டன. திருவண்ணா மலை, ஆம்பூர், திருப்பத்தூர், வந்தவாசி, ஒடுக்கத்தூர், ஆர்க்காடு, இராணிப்பேட்டை இப்படிப் பல ஊர்களில் கிளைகள் நல்லமுறையில் நடந்து வெற்றிகரமாகத் தொழில் நடத்தி வந்தார்.

பிறகு லாங்கு பஜாரில் உள்ள கடையை இடித்து விட்டுப் பெரிய 4 அடுக்கு மாடியாகக் கட்ட முடிவு செய்தார். அப்போது கடையை வெகு தூரத்தில் மாற்றினால் வியாபாரம் தடைபடுமே என்று வருத்தத்துடன் யோசித்துக் கொண்டு இருந்தார். ஏ.எஸ்.ஏ. பேக்கிரிக்கு பக்கத்தில் எல்.வி. பிரஸ் இருந்தது. அங்குதான் பிஸ்கட் கவர்கள் மற்றும் எல்லா அலுவல்கள் பத்திரிக்கை, நோட்டீஸ் எல்லாம் அச்சுக்குக் கொடுப்பார்கள். எல்.வி. பிரஸ் முதலாளி ஏழுமலை; ஏ.எஸ்.ஏ.வின் நேர்மையும், தயாள குணமும் அவருக்கு மிகவும் பிடிக்குமாம். எல்.வி. பிரஸ் ஏழுமலை ஏ.எஸ்.ஏ.விடம் ''நீங்கள் என் பிரஸ் கடையில் முன் பாகம் பேக்கரி வைத்து நடத்திக் கொள்ளுங்கள். நான் பின்புறம் பிரஸ் நடத்துகின்றேன்!'' என்று சொல்லித் தன் கடையை வியாபாரம் நடத்தக் கொடுத்து உதவி செய்தாராம். கடைக்கு வாடகை கொடுத்தார். ஏழுமலை வாங்க மறுத்துவிட்டாராம்.

ஒரு வருடம் அவர் கடையில் வாடகையில்லாமல் கடை நடத்தினார். புது பில்டிங் அண்டர் கிரவுண்டுடன் கட்டி

முடித்தார். வேலூரில் பாலிக்டெக்னிக் கல்லூரி முதல்வராக இருந்த அன்சாரி பேக் என்னும் முஸ்லீம் இவருக்குப் புதுக்கடைக்குப் பிளான் வரைந்து கொடுத்துக் கட்டிடம் முடியும் வரை ஆலோசனை சொல்லி உதவிபுரிந்தார்.

என் கடையைப் பக்கத்திலேயே வைத்து நடத்தினதால் வியாபாரமும் கெடவில்லை; புது பில்டிங் கட்டிடம் கட்டுவதைப் பார்த்துக் கொள்ளவும் வசதியாக இருந்தது. அதனால் எல்.வி. பிரஸ் ஏழுமலை செய்த உதவியை என் வாழ்நாள் வரை மறக்கமாட்டேன் என்று அடிக்கடி சொல்லுவார். எல்.வி. பிரஸ் ஏழுமலை கடையை 8 மணிக்குச் சாத்தி விடுவாராம். கடைச் சாவியை ஏ.எஸ்.ஏ. பேக்கரியில் தான் கொடுத்துவிட்டுச் செல்வாராம். காலையில் 8 மணிக்குக் கடை திறக்கச் சாவி வாங்கிச் செல்வாராம். அவ்வளவு நட்புடன் பழகினார்கள் இருவரும் வன்னியர்கள். பின்னால் உறவுக் காரர்களாக ஆகிவிட்டார்கள்.

கடையை நல்லமுறையில் கட்டி முடிந்ததும் கிரகப்பிரவேசம் உறவினர்களுடன் நடந்தது. அன்று மாலை கடை திறப்பு விழா அங்கு திருமுருக கிருபானந்த வாரியார் திருக்கரங்களால், திறக்கப்பட்டது. திரு. அன்சாரி பேக் முன்னிலை வகித்தார். கட்டிடத்திற்குத் தன் மனைவி பெயர் உண்ணாமுலை நிலையம் என்று பெயர் சூட்டினார். மேடையில் வாரியார் ஏ.எஸ்.ஏ.வின் வியாபாரத் திறமையை உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றார். ஏ.எஸ்.ஏ. தன் குரு வாரியாருக்கு நன்றி சொல்கின்றார்.

பிளான் போட்டுக்கொடுத்த அன்சாரி பேக்குக்கு நன்றி தெரிவிக்கின்றார். மேடையில் தனக்கு வியாபாரம் நடத்தத் தன் கடையை இலவசமாகக் கொடுத்த எல்.வி. பிரஸ் ஏழுமலைக்கு நன்றி தெரிவித்து அனைவருக்கும் மரியாதை செலுத்துகின்றார். தன் உழைப்புக்குக் கூடத் தொழில் புரிந்த



குமாஸ்தாக்களுக்கு நன்றி கூறுகின்றார். தன்னிடம் வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு நன்றி கூற விழா இனிது முடிந்தது. வியாபாரம் தலை தூக்கிச் சிறப்பாக முன்னேறுகின்றது. கடையில் வாரம் இரண்டு நாள் திங்கள், வியாழன், பிச்சைக்காரர்களுக்குக் காசு கொடுக்கும் வழக்கம். குறைந்தது நூறு பேர் அன்றைய தினம் வந்து வாங்கிச் செல்வார்கள். மகராசியாக வாழ வேண்டும் என்று வாழ்த்திச் செல்வார்கள். கோட்டைப்பூண்டியில் தன் தம்பியின் மகன் நன்றாக படிப்பவன். அவனை ஒருநாள் அவர் அப்பா குடித்துவிட்டு வந்து அடித்து விடுகின்றார். நீ பள்ளிக்கூடம் போக வேண்டாம் மாடு மேய்த்து வா என்று கூறுகின்றாராம். இதைக் கண்டு ஏ.எஸ்.ஏ.மிகவும் வருத்தப்பட்டுக் கிராமத்திற்குச் சென்று தன் தம்பியிடம் நன்றாகப் படிக்கும் பையனை இப்படி அடிப்பதும் ஸ்கூலுக்கு போக வேண்டாம் என்று சொல்வதும் தவறு என்று கூறி நான் வேலூருக்கு அழைத்துச் சென்று படிக்க வைக்கின்றேன் என்று அழைத்து வந்து தன் வீட்டில் மகனாக வளர்த்துப் படிக்க வைக்கின்றார். அவர்தான் நீலகண்டன். நீலகண்டனும், பெரியப்பா என்று சொல்லமாட்டான்.



*புலவர் மு. கண்ணப்பன் அவர்களுடன் நூலாசிரியர் மயிலாம்பிகை*

தன் சொந்த அப்பாவாகப் பாசத்துடன் நைனா, நைனா என்றுதான் கூப்பிடுவான். வீட்டில் நன்றாக அனைவரும் கவனித்துக் கொள்ள, தன் தாய் தகப்பனை மறந்து, வேலூரில் படித்து வருகின்றான். லீவுக்கு மட்டும் ஊருக்குச் சென்று அப்பா, அம்மாவைப் பார்த்து விட்டு வருவான். பள்ளி முடிந்து வந்ததும் கடைக்குச் சென்று பெரிய அப்பாவையும் அண்ணனையும் சாப்பாட்டுக்கு மாற்றுவான். கடையில் உட்கார்ந்து பொறுப்பாக வியாபாரத்தைக் கவனிப்பான்.

ஏ.எஸ்.ஏ.க்குப் பெருமையாக இருந்தது. இப்போது நீலகண்டனும், மயிலுவும் பள்ளிக்குச் சென்று படித்து வருகின்றார்கள். நீலகண்டன், மயிலுவை விட நான்கு வயது பெரியவன். முத்தம்மாளும் அலமேலுவும் நீலகண்டனையும் கவனித்துக் கொள்வார்கள். தங்கை மயிலுவிடம் அன்பாகப் பழகி ஸ்கூல் வீட்டுப் பாடங்கள் முக்கியமாகக் கணக்கு பாடம் சொல்லிக் கொடுப்பார். ஏ.எஸ்.ஏ. அரசமரம்பெருமாள் கோவில் தர்மகர்த்தாவாகப் பொறுப்பு ஏற்று அந்தக் கோவில் முன்னாள் தர்மகர்த்தா சரியாக நிர்வாகம் செய்யாமல் கோவில் சொத்தை ஏமாற்றி வந்ததைக் கண்டுபிடித்து அவர்மேல் கேஸ் போட்டு ஜெயித்துவிட்டார்.



# இறைபணி

**தனக்குவமை இல்லாதான் தான்சேர்ந்தார்க் கல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது (கு.7)**

*'தனக்கு ஒப்புமை இல்லாத தலைவனுடைய திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்க்கு அல்லாமல், மற்றவர்க்கு மனக்கவலையை மாற்ற முடியாது.'*

தன் சொந்தப் பணத்தில் கோவிலுக்காகக் கேஸ் போட்டு ஜெயித்துக் கோவிலை வென்று திறம்பட நடத்தினார். மார்கழி மாதம் கோவிலில் 4 மணிக்கு பூஜை நடக்க வேண்டும் என்று உத்திரவு! தினமும் திருப்பாவை, பெருமாள் துதி ரிக்கார்டு போட வேண்டும் என்று உத்திரவு. ஒருநாள் அந்த ஆள் ரிக்கார்டு போடாமல் தூங்கிவிட்டான், ஒருநாள் சினிமா பாட்டு போட்டுவிட்டான், அவனைக் கண்டித்து ஆள் மாற்றினார். அவ்வளவு பொறுப்பாகக் கவனிப்பார். மார்கழி மாதம் விடியற்காலை 3 மணிக்கு எழுந்து குளித்து வீட்டில் பூஜை முடித்து கோவிலுக்கு 4 மணிக்குச் சென்று விடுவார். 4 1/2 மணிக்கு அய்யர் ரெடியாகக் காத்து இருப்பார். பிள்ளைவாள் வந்ததும் பூஜை செய்வார். நெய்வேத்தியம் காட்டி வருபவர்களுக்கு வழங்கச் சொல்வார். அமைதியாக



*காந்தி ஜெயந்தி விழாவில் வள்ளல் பேசுகிறார்*

உட்கார்ந்து ஒரு மணி நேரம் கோவிலில் இருந்து விட்டு அர்ச்சகர்-ஐயர்க்கு எது வேண்டும், குறை, நிறை எல்லாம் கேட்டுத் தெரிந்துகொண்டு கிளம்புவார். அய்யர் இவருக்குப் பிரசாதம் நிறைய கொடுப்பாராம், தர்மகர்த்தா என்று! பிள்ளைவாள் மறுத்து விடுவாராம். எல்லோருக்கும் கொடுப்பது போல் ஒரு கரண்டி போதும் என்று கண்டிப்பாகச் சொல்லிவிடுவாராம்.

ஒரு மந்தார இலையில் ஒரு கரண்டி வெண்பொங்கல் வாங்கி ஒரு ஸ்பூன் அளவு வாயில் போட்டுக்கொண்டு மீதியை மடித்து இலையுடன் வீட்டிற்குக் கொண்டு வந்து கூடத்தில் உள்ள மாடத்தில் வைத்துவிட்டுக் கடைச்சாவியை எடுத்துக் கொண்டு கடைக்குச் சென்று விடுவார். வீட்டில் எல்லோரும் மார்கழி மாதம் விடியற்காலையில் எழும் பழக்கம் வேண்டும் என்று சொல்லுவார். அதன்படி வீட்டில் அனைவரும் 5 மணிக்கு எழுந்து கொள்வார்கள். விடியற்காலையில் தெருவில் தாசரிகள் வெண்கல மணி அடித்துத் திருவாசகம் பாடிச் செல்வார்கள். தவறாமல் தினமும் பஜனை செல்லும்.



பஜனைக்கு முன்னால் விளக்கு எடுத்துச் செல்வார்கள். பஜனைக்கு எண்ணெய் ஒரு கிண்ணத்தில் எடுத்துச் சென்று ஊற்ற வேண்டும்.

ஒரு அணா காசு போட வேண்டும், இது முத்தம்மாள் ஏற்பாடு, இதை அலமேலு, நீலகண்டன், மயிலு யார் வேண்டுமானாலும் பஜனை வீட்டு வாசற்படியில் வந்து நிற்கும் போது கவனித்து இதை ஓடிப் போய் செய்வோம். காலையில் எழுந்து குளித்து விட்டு வந்ததும் மாடத்தில் வைத்து இருக்கும் வெண்பொங்கலை மயிலு ஆவலுடன் எடுத்துச் சாப்பிடுவாள். சுடச் சுட நெய் மணக்க மிகவும் ருசியாக இருக்கும். அண்ணன் நீலகண்டனுக்கு கொஞ்சம் கொடுத்து விட்டுச் சாப்பிடுவாள். மயிலு சாப்பிடும் வழக்கம்; குழந்தை பிரியமாக சாப்பிடட்டும் என்று முத்தம்மாளோ, அலமேலுவோ தொடமாட்டார்கள். மயிலுவுக்குச் சாமி பிரசாதம் அவ்வளவு பிரியம். பிறகு பூஜை அறையில் திருப்பாவை சொல்ல வேண்டும். அப்பாவின் உத்தரவு. அதன்படி சொல்லிவிட்டு, பிறகு படிக்கச் செல்வாள். நீலகண்டனும், மயிலுவும் படிக்கும் போது சண்டை போடுவார்கள். நீ கத்திப்படிக்காதே! எனக்குத் தொந்தரவாக உள்ளது என்று அண்ணன் சொல்ல, தங்கை நீ சத்தம் போடாதே! மெதுவாகப் படி! என்று சொல்ல; பிறகு வேறு, வேறு அறைக்குச் சென்று படிப்பார்கள். 7 மணி வரை படிக்க வேண்டும் என்னும் பழக்கத்தை வைத்துக் கொண்டு நன்றாக இருவரும் படிப்பார்கள். மார்கழிமாதம் முழுவதும் ஏ.எஸ்.ஏ. பூஜை செய்வார். மீதி நாட்களில் மயிலுவும், நீலகண்டனும் பூஜை செய்வார்கள்.

தினமும் மாலை பூஜைக்குப் பூ, பழம் நீலகண்டன் வாங்கி வரும் பழக்கம். இப்படி நல்லபழக்கங்களுடன் வளர்கின்றார்கள். பெருமாள் கோவில் அய்யர் குப்புசாமி என்று பெயர். இவர் வக்கீல் குமாஸ்தாவாக பணியாற்றிக் கொண்டு, கோவில் வேலைகளைக் காலையும், மாலையும் செய்து வந்தார்.

இவர். ''பிள்ளைவாள் பெருமாளுக்குச் சமம்!'' என்று புகழ்வார். பெரியவர்கள் கறை படாத கை என்று சொல்லி பயபக்தியுடன் பழகி வந்தார். பிள்ளைவாளும் அவருக்கு நல்ல சன்மானம் கொடுத்து அன்போடு நடத்தி வந்தார். ஏ.எஸ்.ஏ. வுக்கு தனியாகக் கார் கிடையாது. வேலூர் சாய்நாதபுரத்தில் குப்புசாமி முதலியார் என்பவர் ஒரு டூரிஸ்ட் ஜீப் வைத்துக் கொண்டு சொந்தமாக நடத்தி வந்தார். அவரே டிரைவர், முதலாளி. அவருக்குக் குழந்தைகளே இல்லை. ஏ.எஸ்.ஏ. வுக்கு நெருங்கிய நண்பராகி இவருக்கே கார் ஓட்டிக் கொண்டு இருந்தார், வாழ்நாள் முழுக்க! இவருக்கு வேலையில்லாத சமயம், வேறு நபருக்கு வாடிக்கை செல்வார். மற்ற நேரம் முழுக்க இவருக்குத்தான் வண்டி ஓட்டுவார்.

குப்புசாமியை டிரைவராகக் கருதாமல் தன் சொந்த தம்பிபோல் நடத்தினார். அவருக்கு அதிகமாகவே சம்பளம் கொடுப்பார். சாப்பாட்டுச் செலவு, மற்ற செலவுகள் அனைத்தும் தாராளமாகக் கொடுத்து உதவுவார். குப்புசாமியும் இவர் மீது அளவுக்கு அதிகமாக அன்பும், பக்தியுமாக இருந்து சேவை புரிந்தார்.

இந்தச் சமயத்தில் திரு செ. யோகசுந்தரம், பூ.மு. ஏகாம்பரம், சாரங்கபாணி மூவரும் உட்கார்ந்து ஏ.எஸ்.ஏ. வீட்டில் இவர்களுடன் கலந்துரையாடல் செய்வர்! மூவரும், நம் வன்னியகுலஷத்திரிய மக்கள் மிகவும் கிராமப்புறங்களில் பின் தங்கி இருக்கின்றார்கள். போதிய படிப்பறிவு இல்லை. வசதியுடன் வாழ வழியில்லை, நல்ல உத்தியோகம் இல்லை, நல்ல வியாபாரத் திறமைகள் வளரவில்லை என்று ஒருவருக் கொருவர் மனம்விட்டு பேசுவார்கள். நம் சமூகத்தை முன்னுக்கு கொண்டு வந்து மக்கள் மத்தியில் தலை நிமிர்ந்து வாழ வழி செய்ய வேண்டும். பிள்ளைகள் நன்கு படித்து முன்னுக்கு வர வேண்டும் என்று பேசி இதற்கு நாம் ஒன்றுபட்டு செயல்பட வேண்டும் என்று உறுதி எடுக்கின்றார்கள். முதலில் ஏ.எஸ்.ஏ.



நண்பர் யோக சுந்தரத்திடம் எனக்கு கொஞ்சம் ஆங்கிலம் கற்றுக் கொடுங்கள் என்று கேட்டார். தினமும் மாலை வேலையில் கல்லூரி முடித்து வந்ததும் ஏ.எஸ்.ஏ. வுக்கு ஆங்கிலம் டியூஷன் எடுத்தார். ஏ.எஸ்.ஏ. ஆங்கிலத்தில் கையெழுத்து போடவும் சிறிய வார்த்தைகள் பேசவும், புரிந்து கொள்ளவும் கற்றுக் கொண்டார்.

பிறகு வாரம் ஒருநாள் ஊரீசுக் கல்லூரியில் படிக்கும் நம் இனத்து மாணவர்களை ஞாயிற்றுக்கிழமைகளில் ஏ.எஸ்.ஏ. வீட்டிற்கு வரச்சொல்லி அவர்களிடம் நேர்முக உரையாடல்கள் நடக்கும். அவ்வாறு மாணவர்களின் எதிர்காலத்திட்டத்திற்கு வழிவகுத்து ஆலோசனை கூறுவார்கள். பிறகு வன்னிய குலக்ஷத்திரிய சங்கம் என்று ஒன்று ஆரம்பித்து அதற்கு ஏ.எஸ்.ஏ. தலைவர், திரு. செ.யோகசுந்தரம் செயலாளர்; பொருளாளர் சாரங்கபாணி, பூ.மு.ஏகாம்பரம் துணைத்தலைவர் என்று அமைத்துக்கொண்டார்கள். ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் ஏ.எஸ்.ஏ. வீட்டில் கூட்டம் நடக்கும். காரியக்கமிட்டி என்று அடிக்கடி கூடிப் பேசுவார்கள். முதலில் 10 பேர் என்று ஆரம்பித்து 50 பேர்வரை கூடும் நிலைக்கு உயர்ந்தது. வருபவர்களுக்கு பிஸ்கட், காபி, காரம் என்று தன் சொந்த செலவில் ஏ.எஸ்.ஏ. வழங்குவார். இவர்கள் அனைவரும் மகாத்மா காந்தியின் பக்தர்கள். காங்கிரஸ் கட்சியில் ஈடுபாடு கொண்டவர்கள்.

இந்தச் சமயத்தில் தென்னமரத் தெருவில் மாணிக்கவேலர் என்பவர் வக்கீல் தொழில் நடத்தி வந்தார். மிகவும் நல்லவர். எம்.ஏ.பி.எல்., படித்த வக்கீல். ஏ.எஸ்.ஏ. விடம் மிகவும் நட்பு கொண்ட தோழர். வக்கீல் மாணிக்கவேலர் அவர்களைக் காங்கிரஸ் கட்சி சட்டமன்றத் தேர்தலில் நிற்க வைத்து ஜெயிக்க வைக்க திரு. ஏ.எஸ்.ஏ. பெரும்பாடுபட்டார். மாணிக்கவேலர் ஜெயித்ததும் அவருக்கு ரெவின்யூ மந்திரி பதவி கிடைத்தது. மந்திரி ஆனதும் ஏ.எஸ்.ஏ. வீட்டிற்கு வந்து

முதல் விருந்து சாப்பிட்டார். மந்திர ஆனாலும் ஏ.எஸ்.ஏ. அவர்களை மறப்பதில்லை. மிகுந்த பாசத்துடன் நட்புகொண்டு இருந்தார். பிள்ளைவாள் எங்கே பிஸ்கட்? என்று கேட்பார். இவரும் தவறாமல் நிறைய பிஸ்கட், கேக் என்று கொடுக்கும் பழக்கம். விரும்பிச் சாப்பிடுவார்கள். மாணிக்கவேலரின் சம்மந்தி என்.ஆர். முனுசாமி என்பவர் ராணிப்பேட்டை எம்.பி., யாக இருந்தவர். அடிக்கடி வேலூர் வரும்போது ஏ.எஸ்.ஏ. வீட்டில்தான் தங்குவார். என்.ஆர். முனிசாமியின் பிள்ளைகளுக்கு திரு.ஏ.எஸ்.ஏ. தான் திருமணத்திற்குப் பெண்பார்த்து கொடுத்தார். என்.ஆர். முனுசாமிக்கு ஏ.எஸ்.ஏ. வை மிகவும் பிடிக்கும்! ''வாய்யா, போய்யா'' என்று அன்பு மிகுதியாகப் பேசுவார்கள்.

திரு என்.ஆர். முனிசாமி அவர்களும் காரியக்கமிட்டி கூட்டத்திற்குத் தவறாமல் வருவார்கள். பிறகு டாக்டர் ராமச்சந்திரன் என்பவர் நம் இனத்தவர். அவரும் திரு பிள்ளைக்கு உற்ற நண்பரானார். டாக்டர் ராமச்சந்திரன் ஏ.எஸ்.ஏ. குடும்பத்திற்குக் குடும்ப டாக்டர் ராமச்சந்திரன் அவர்களையும் இந்தக் காரியக்கமிட்டி கூட்டத்தில் உள்ள அனைவரும் ஒருமனதாக தேர்தலில் நிற்க வைத்து மிகவும் பாடுபட்டு அனைவரும் செயல்பட்டார்கள்.

அந்தத் தேர்தலில், ஏ.எஸ்.ஏ. வின் பங்கு மிகவும் முக்கியமானதாக இருந்தது. இவர்களின் கடும் முயற்சியால் டாக்டர் ராமச்சந்திரன் வெற்றி பெற்று எம்.பி. ஆனார். திரு. ஏ.எஸ்.ஏ. - யோகசுந்தரம் போன்றோர்க்கு மிகவும் மகிழ்ச்சி. நம் இனத்தவர்கள் மாணிக்கவேலர் எம்.எல்.ஏ. என்.ஆர். முனுசாமி நாயக்கர் எம்.பி., டாக்டர் ராமச்சந்திரன் எம்.பி., என்று அடிக்கடி பெருமையாகப் பேசுவார்கள். இவர்கள் மூவரும் பதவி வந்தாலும் சிறிது கூடக் கர்வம் கொள்ளவில்லை. நம் சமூகம் உயர வேண்டும் என்று ஒத்துழைப்பு கொடுத்தார்கள். ஏ.எஸ்.ஏ. விடம் மூவரும் மிகுந்த அன்புடன் மரியாதையும் வைத்து



இருந்தார்கள். கடைசி வரையில் மூவரும் ''வாருங்கள் பிள்ளைவாள் நலமா!'' என்று கேட்பார்கள். ஒருவருக்கொருவர் வீட்டிற்குச் சென்று நெருக்கமாக அன்புடன் பழகி வந்தார்கள். எல்லோருடைய பிள்ளைகளும் அண்ணன் தங்கைகளாகப் பழகி வந்தார்கள். டாக்டர் ராமச்சந்திரன் மகள் சித்ரா, மயிலுக்கு பள்ளித் தோழியாவாள். இருவரும் ஒன்றாக ஒரே பள்ளியில் படித்து வந்தார்கள். இவர்கள் வீட்டுத் திருமணங்களில் ஒன்றாகக் கலந்து செயல்படுவார்கள்.

இப்படியாக அனைவரும் ஒன்று சேர்ந்து காரியக்கமிட்டிக் கூட்டங்கள் நடத்தித் தவறாமல் புதிய திட்டங்கள் வகுத்தார்கள். ஏ.எஸ்.ஏ. வீட்டில் வாரம் ஒரு முறை கூடும் மாணவர்கள் கூட்டத்தில், ''நாங்கள் கிராமத்தில் இருந்து வந்து தங்கிப் படிக்க எங்களுக்கு ஆஸ்ட்டல் வசதியில்லை. உறவினர் வீடுகளும் இல்லை. ஓட்டலில் சாப்பாடு அதிக விலையாக உள்ளது'' என்று இப்படித் தங்கள் குறைகளை வெளிப்படுத்தினார்கள். அப்போது இந்தக் குழு, ''ஏன் நாம் வேலூரில் ஒரு மாணவர் இல்லம் கட்டக் கூடாது!'' என்று கேள்வி கேட்டுப் பதிலும் அளித்தார்கள். நாம் கண்டிப்பாக



*திரு. ஏ.எஸ்.ஏ ஆரம்ப நாளில் நிதி திரட்டப் பயன்படுத்திய குப்புசாமி முதலியாரின் கார்*

முயற்சி செய்து மாணவர் இல்லம் கட்டலாம் என்று ஏகமனதாக முடிவு எடுத்தார்கள். முதலில் இடம் தேடினார்கள். மாணிக்கவேலர் பதவியில் இருந்ததால் அவர் உதவியுடன் கோட்டை பின்புறச் சாலையில் ஒரு இடம் தேர்ந்தெடுத்து வாங்கி விட்டார்கள். அதைக் கட்டுவதற்குக் கிராமம், கிராமமாக நம் இன மக்களிடம் சென்று ஒரு ஆள் ஒரு ரூபாய் கொடுத்தால் போதும். அப்படி வசூல் செய்யலாம் என்று திரு ஏ.எஸ்.ஏ.தான் ஆலோசனை கூறினார். மிகவும் உற்சாகமாக குப்புசாமி முதலியாரின் டூரிஸ்ட் காரில் திரு ஏ.எஸ்.ஏ. திரு சே.யோ திரு.பூமு. ஏகாம்பரம், திரு.சாரங்கபாணி இந்த ஐந்து பேரும் கிராமம், கிராமமாகச் சென்று வசூல் செய்வார்கள். முக்கியமாகத் தவறாமல் ஏ.எஸ்.ஏ. செல்லுவது கண்டிப்பாக இருக்கும்.

மற்றவர்கள் சில சமயம் சில காரணங்களால் செல்லாமல் இருப்பார்கள். ஆனால் ஏ.எஸ்.ஏ. மட்டும் நிற்பதில்லை. காருக்குத் தன் சொந்தச் செலவில் பெட்ரோல் போடுவார், டிரைவருக்குச் சம்பளம் கொடுப்பதும் இவர் பணமேயாகும். எல்லோருக்கும் காபி,டீ, சாப்பாடு என்று வாங்கி தருவதும் இவர் செலவேயாகும். ஒற்றுமையாக அனைவரையும் அழைத்துக் கொண்டு சிரித்தபடி காரில் பல அனுபவங்களையும், ஆலோசனைகளையும் கூறிக்கொண்டே செல்வாராம்.

அவருக்குப் பிடித்த தேவாரப்பாடல்களையும், தியாகராஜ பாகவதர், பி.யூ.சின்னப்பா பாடிய ஆன்மீகப் பாடலையும் பாடுவாராம். இப்படி சந்தோஷமாகச் சென்று வசூல் செய்வார். ஒரு கிராமம் சென்றால் தெருத்தெருவாக ஒரு வீடு தவறாமல் சென்று வருவது வழக்கம். முதலில் அந்தக் கிராமத்து மணியக்காரரைச் சந்தித்து விஷயத்தைக் கூறி அவரையும் அழைத்துக் கொண்டு செல்வது வழக்கமாம். ஒரு வீட்டிற்குச் சென்றதும் திண்ணைமேல் உட்கார்ந்து



கொண்டு கணீரென்ற குரலில், ''அம்மா, அய்யா வாருங்கள்!'' நாங்கள் வேலூரில் இருந்து வந்து இருக்கின்றோம். நம் இன மக்களின் பிள்ளைகள் தங்கிப் படிக்க மாணவரில்லம் கட்டப் போகின்றோம்.''

'அதற்காகத் தாங்கள் ஒவ்வொருவரும் ஒரு ரூபாய் கொடுத்தால் நலமாக இருக்கும்' என்று நயமாகச் சிரித்த முகத்துடன் கூறுவாராம். எவருமே இல்லை என்று சொல்வதே இல்லையாம். அவரவர் விருப்பப்படி தாராளமாக பணம் கொடுத்தார்களாம். ஒரு வீட்டில் ஒரு அம்மா, ''கையில் காசு இல்லை! அதற்கு பதில் இந்த மூக்குத்தியை தருகின்றேன்!'' என்று கழட்டப்போனதாம். உடனே இவர், ''வேண்டாம்மா உனக்குக் கொடுக்க வேண்டும் என்று மனம் வந்ததே அதுவே போதும்; உன் பெயரில் நானே பணம் போட்டுக் கொள்கின்றேன்!' என்று அந்த அம்மா பெயர் எழுதிக் கொண்டு ரசீது கொடுத்தாராம். இதையெல்லாம் கூடச் சென்றவர்கள் வந்து சொல்லித் தெரியும். சில வீடுகளில் 'அய்யா வெய்யிலில் களைத்து வந்து இருக்கின்றீர்கள். மோர் சாப்பிடுங்கள்!' என்று கொடுப்பார்களாம். சில பேர் கூழ் கரைத்துக் கொடுப்பார்களாம். இதைப் பசி இருந்தால் மட்டும் மறுக்காமல் வாங்கி அனைவரையும் சாப்பிடச் சொல்லித் தானும் சாப்பிடுவாராம். சில இடங்களில், ''நீங்கள் எதுவும் தயார் செய்ய வேண்டாம் நாங்கள் சாப்பிட்டு விட்டுத்தான் வந்தோம்!'' என்று அவர்களிடம் கூறுவாராம்.

✶

# மாணவர் விடுதி

**செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்**
**செயற்கரிய செய்கலா தார் (கு.26)**

*‘செய்வதற்கு அருமையான செயல்களைச் செய்ய வல்லவரே பெரியோர்; செய்வதற்கு அரிய செயல்களைச் செய்ய மாட்டாதவர் சிறியோர்’*

இப்படியாக வடஆர்க்காடு முழுவதும் உள்ள கிராமங்கள் தென் ஆர்க்காடு இவர் பிறந்த மாவட்டம் இப்படி இரண்டு மாவட்டங்களில் உள்ள அனைத்துக் கிராமங்களுக்கும், வெய்யில், மழை என்று பாராமல் கடுமையாகச் சென்று சிரமம் பார்க்காமல் வசூல் செய்தாராம். ஒருநாள் ஏதோ காரணமாக வசூலுக்கு இவர் செல்ல முடியவில்லை. மற்றவர்களை மட்டும் சென்று வாருங்கள் என்று அனுப்பி வைத்தாராம். அன்று வசூலே சரியாக ஆக வில்லையாம். இவர் சென்று வசூலாகும் 1 பங்கில் 1/4 பாகம் தான் வசூலானதாம் அதிலிருந்து உடன் செல்லும் மற்ற மூவரும் ஏ.எஸ்.ஏ. விடம் நீங்கள் வராமல் நாங்கள் செல்வதில் பயன் இல்லை. நீங்கள் அதிர்ஷ்டக்காரர்; முகராசிக்காரர் என்று நினைக்கிறோம். நீங்கள் வந்தால் எல்லோரும் தாராளமாகப்



பணம் கொடுக்கின்றார்கள். நீங்கள் இல்லாமல் நாங்கள் சென்றால் யாரும் பணம் கொடுக்கத் தயங்குகின்றார்கள்.

கார் பெட்ரோல் தான் வேஸ்ட், அதனால் நீங்கள் வந்தால் செல்கின்றோம். சந்தர்ப்பம் இல்லாத நாள் போகாமல் விட்டுவிடலாம்’’ என்று கூறி முடிவு செய்தார்களாம். அதற்காகவே திரு ஏ.எஸ்.ஏ. மகனைக் கடையைக் கவனிக்கச் சொல்லிவிட்டு 6 மாதகாலம் வசூலிலேயே ஈடுபட்டு இருந்தார். எல்லாப் பணமும் ஒழுங்காக கணக்கு வைத்து ரசீது தந்து பத்திரமாக வைத்துத் தானும் நிறைய பணம் கட்டிடத்திற்குப் போட்டு உதவி செய்தார்.



*மாணவர் விடுதிக்கு பூமி பூஜை*

ஒரு நல்ல நாளில் பூமி பூஜை போட்டுக் கட்டிடம் ஆரம்பிக்கப்பட்டது. தினமும் கட்டிடவேலையைச் சென்று நேரில் பார்த்து அங்கேயே உட்கார்ந்து கவனிப்பார். செங்கல், சுண்ணாம்பு, சிமெண்ட், மணல், மரம் எல்லாம் இவர் நேரடியாகச் சென்று வாங்கிக் கொடுப்பார். சனிக்கிழமை கூலி பட்டு வாடா எல்லாம் கவனித்துக் கொடுப்பார்.

ஒவ்வொன்றையும், பார்த்து, பார்த்துத் தன் சொந்த வீடு போல் கட்டினார். மற்றவர்களும் கூட ஆலோசனை சொல்வார்கள்.

திடீரென்று பணம் பற்றாமல் வேலை நிற்கின்றது என்றால், உடனே தன் கடையில் இருந்து பணத்தைக் கொடுத்து அனுப்புவாராம். திரு. சாரங்கபாணி நாயக்கர் ஆடிட்டராக இருந்தவர். அவர் எல்லாக் கணக்குகளையும் அப்பழுக்கு இல்லாமல் எழுதி கொடுப்பாராம். திரு. ஏ.எஸ்.ஏ. அவரை மிகவும் பாராட்டுவாராம். திரு. சாரங்கபாணி, ஏ.எஸ்.ஏ. தன் பணத்தை நிறைய கட்டிடத்திற்குக் கொடுத்து உதவுகின்றார் என்று புகழ்ந்து சொல்லுவாராம். இப்படியாக அந்தக் கட்டிடம் திருப்திகரமாக இரண்டு அடுக்கு கட்டி முடிக்கப்படும் தருவாயில் இருந்தது. திரு. ஏ.எஸ்.ஏ. பில்டிங் ஆரம்பம் ஆனது முதல் சரியாக நேரத்திற்குச் சாப்பிடுவது இல்லை, சரியாகத் தூங்குவது இல்லை. ஒருநாள் வசூல் முடிந்து வீட்டிற்கு மாலை 4 மணிக்கு வந்தாராம்.



*வளர்ந்து வரும் மாணவர் விடுதி*



வீட்டில் மோர் சாதம் மட்டும் போதும், எனக்கு வயிறு வலிக்கின்றது என்று கூறிவிட்டுச் சாப்பிட்டு முடித்து விட்டு மாடியில் உள்ள அறையில் படுத்து தூங்கிக் கொண்டு இருந்தாராம். மயிலு பள்ளி முடித்து வீட்டிற்கு வந்து விளையாடிக்கொண்டு இருக்கின்றாள். அப்போது மயிலு, மயிலு என்று ஏ.எஸ்.ஏ. கூப்பிடுகின்றார். உடனே அலமேலு அண்ணி ‘‘மயிலு அப்பா கூப்பிடுகின்றார். போய் பார்! என்று சொல்லுகின்றார். மயிலு மேலே ஓடி பார்க்கின்றார். அப்பா வாந்தி எடுக்கின்றார். கட்டிலில் இருந்து எழுந்து உட்கார்ந்து அவர் நடக்கமுடியாமல் அப்படியே மகளை சைகைகாட்டி அழைக்கின்றார். மகள் தோள் மீது பிடித்துக் கொண்டு கீழே குனிந்து வாந்தி எடுக்கின்றார். ரத்தம், ரத்தமாக கொட்டுகின்றது. அவர் மகளைப் பார்த்து அழுகின்றார்.

மயிலுவுக்கு ஒன்றும் புரியவில்லை. 10 வயது சிறுமி ‘‘நைனா, நைனா ஏன் அழுகின்றீர்கள், ஏன் ரத்தம் வருது? என்று கேட்கின்றாள். ஏ.எஸ்.ஏ.வால் ஒன்றும் பேசமுடியவில்லை கண்களில் மட்டும் கண்ணீர் வருகின்றது. வயிறு வலிக்குதும்மா என்கின்றார். உடனே மயிலு, அண்ணி, அண்ணி, ஆயா வாருங்கள்! என்று சத்தம் போட்டுக் கூப்பிடுகின்றாள். உடனே முத்தம்மாவும், அலமேலுவும் ஓடி வந்து பார்க்கின்றார்கள், விட்டு விட்டு வாந்தி எடுக்கின்றார். ரத்தம் வருகின்றது. அனைவரும் பயப்படுகின்றார்கள். முத்தம்மாவும் மகனே, மகனே என்று அழுகின்றார். அலமேலு மாமா, மாமா என்று அழுகின்றாள். வீடே அழுகை சத்தம்! ஏ.எஸ்.ஏ. மயக்கமாகச் சாய்ந்து விட்டார். அப்போது போன் வசதி இல்லை. யாரோ ஓடிப்போய் கடையில் பரமசிவத்திற்குத் தகவல் சொல்ல, உடனே அவர் ஓடி வந்து நடந்ததைப் பார்த்து வாடகைக் காரில் சி.எஸ்.சி. மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று அட்மிட் செய்கின்றார். ஆனந்தாய், ராஜம், கண்ணப்பன் அனைவரும் விஷயம் அறிந்து ஓடி வந்து விட்டார்கள். அப்பாவைப் பார்த்து எல்லோரும் சோகமாக

இருக்கின்றார்கள். ஏனென்றால் ஏ.எஸ்.ஏ. ஒருநாள் கூட உடம்பு சுகமில்லாமல் படுத்ததே கிடையாது.

அதனால் அவர் ரத்தவாந்தி எடுக்கவே குடும்பமே பயந்து நடுங்கி விட்டார்கள். ஆஸ்பத்திரியில் எல்லா சோதனைகளும் செய்து விட்டு வயிற்றில் அல்சர் ஏற்பட்டுள்ளது. அதனால் ஆப்ரேஷன் செய்ய வேண்டும். அப்போதுதான் சரியாகும் என்கின்றார்கள். ஏ.எஸ்.ஏ. டாக்டரைக் கேட்கின்றார். ''ஆப்ரேஷன் இல்லாமல் மருந்து மாத்திரையில் சரி பண்ண முடியாதுங்களா!'' என்று கேட்கின்றார். அதற்கு டாக்டர்,'' உங்களுக்கு சர்க்கரை நோய், இரத்தக் கொதிப்பு எதுவும் இல்லை! மற்ற எந்தக் கோளாறும் இல்லை எல்லா உறுப்புகளும் நன்றாக உள்ளது. நீங்கள் சரியாக, சரியான நேரத்தில் சாப்பிடாமல், அலைச்சலும் இருந்ததால் இரைப்பை ரணமாகி உள்ளது. அதனால் தான் இரத்த வாந்தி எடுத்தீர்கள். ஆப்ரேஷன் பண்ணாமல் உடனே குணமாகி விடும். ஆனால் நீங்கள் 6 மாதம் காரம் சாப்பிடக் கூடாது. கஞ்சி, பால், மோர் இப்படித்தான் சாப்பிட வேண்டும். அப்படி இருந்தால் மருந்து சாப்பிட்டுக் கொண்டு குணமாகி விடும் என்றார். நான் அப்படியே இருக்கின்றேன். டாக்டர் என்னை வீட்டிற்கு அனுப்பி விடுங்கள் என்று கேட்கின்றார். டாக்டர் 1 வாரம் இங்கு ஓய்வாக தங்கியிருந்து மருந்து கொடுத்து வயிற்று வலி, வாந்தியெல்லாம் நின்றபிறகு அனுப்புகின்றோம் என்று கூறி, அவ்வாறே ஒரு வாரத்தில் டிச்சார்ஜ் செய்து அனுப்பி விட்டார்கள். மருத்துவமனையில் இருக்கும் போது யாரும் அடிக்கடி வந்து பார்க்க வேண்டாம் எனக்கு ஒன்றும் இல்லை. அவரவர்கள் வேலையைக் கவனியுங்கள் என்று உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் கூறுவார். இரவில் துணைக்குக் கூட யாரும் வேண்டாம் என்று சொல்லிவிட்டுத் தனியாகவே இருந்து விட்டு வீட்டிற்கு வந்தார். வீட்டில் வந்து 10 நாட்கள் ஓய்வுடன் இருந்தார்.






*மாணவர் விடுதி விழாவில் அமைச்சர் திரு மாணிக்கவேல் நாயக்கர், முதல்வர் கு. காமராசர் மற்றும் வள்ளல்*

மிகவும் கண்டிப்புடன் ஆகாரத்தைச் சாப்பிட்டார். டாக்டர் கூறியது போல் காரமே சாப்பிடுவது இல்லை. காலை, மாலை, இரவு வெறும் அரிசி கஞ்சிதான், பால், மோர், இளநீர் இப்படித்தான் சாப்பிட்டார். டாக்டர் 6 மாதம் கூறினார். இவர் 7 மாதம் அப்படியே உணவு கட்டுப்பாடுடன் இருந்தார். தாய் சில சமயம் மகன் இப்படி ஒன்றுமே சாப்பிடாமல்



*முதல்வர் கு. காமராசர் மாணவர் விடுதியைத் திறந்துவைக்கிறார்*



*முதல்வர் கு. காமராசர் மாணவர் விடுதியைத் திறந்துவைக்கிறார்*

இருக்கின்றானே என்று ஏதாவது பொரியல் கஞ்சிக்குக் கூட எடுத்துக்கொள்!'' என்றாலும் வேண்டாம் என்று மறுத்து விடுவார். அவ்வளவு வைரநெஞ்சம் படைத்தவர். இவரின் திறமையால் உடல் பரிபூரண குணம் அடைந்தது.

வெளியூர் வசூலை நிறுத்தி விட்டார். தன் தாயிடம் நான் எடுத்த வேலையை எங்கு முடிக்காமல் போய் விடுவேனோ என்று எனக்குக் கவலையாக இருந்தது, அம்மா!' என்று வருந்தினாராம். அவ்வளவு அக்கரை காட்டினார் அந்த மாணவர் இல்லம் கட்டி முடிக்க! மாணவர் இல்லம் குறையின்றி வெற்றிகரமாக கட்டி முடித்து விட்டார். பிறகு திறப்பு விழாவுக்கு எல்லோரும் ஆலோசனைக் கூட்டம் கூட்டினார்கள்.

மாணிக்கவேலு நாயக்கர் அப்போது ரெவின்யூ மந்திரியாக இருந்தார். முதலமைச்சர் திரு. காமராஜர் அவர்களை மாணவர் இல்லம் திறக்க அழைப்பது என்று முடிவு செய்தார்கள். வடஆர்க்காடு வன்னியகுலஷத்திரிய மாணவர் இல்லம் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

அழைப்பிதழ்கள் நிறைய அச்சிடப்பட்டுப் பணம் கொடுத்த அத்தனை கிராம மக்களுக்கும் நன்றியுடன்





*மாணவர் விடுதி திறப்புவிழாவில் காமராசர் அவர்களுடன் சான்றோர் பெருமக்கள்*

அனுப்பிவைத்தார்கள். மாணவர் இல்லம் முன்பு பெரிய அளவில் பந்தல் போட்டு சாப்பாடு எல்லாம் ஏற்பாடு செய்தார்கள். ஒரு திருமண வைபவம் போல் நடந்தது. மாணிக்கவேலர் தலைமையில் முதல்வர் காமராஜர் அவர்கள் திருக்கரங்களால் மாணவர் இல்லம் திறப்பு விழா இனிது நடந்தது. மாணவர் இல்லத்தை 7-9-1958 கே. காமராஜர் அவர்கள் திறந்து வைத்தார். நல்ல காற்றோட்டம், வெளிச்சம் அமைந்த அழகிய கட்டிடத்தை அனைவரும் பாராட்டினார்கள். விழாவில் திரு. காமராஜரும், மாணிக்கவேலுவும் ஏ.எஸ்.ஏ.வை மிகவும் புகழ்ந்து பாராட்டினார்கள். ''வீட்டைக் கட்டிப்பார், கல்யாணம் பண்ணிப்பார்!'' என்று பெரியவர்கள் பழமொழி கூறுவார்கள். ஏனென்றால் அவ்வளவு சிரமம் இருக்கும் அந்த வேலையில்! திரு ஏ.எஸ்.அருணாசலம் பிள்ளை அவர்கள் முழுக்க, முழுக்கத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டு பிரதி பலன் பார்க்காமல் இந்த மாளிகையைக் கட்டி முடித்துள்ளார்.

அவரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்! என்று கூறி வாயார, வாழ்த்தினார்களாம்.



*மாணவர் விடுதி திறப்புவிழாவில் வள்ளல் ஏ.எஸ்.ஏ. மாவட்ட ஆட்சியர் திரு. இராமமூர்த்தி, திரு. வீரராகவ அய்யர்*

விழாவுக்கு வந்த அனைத்து மக்களும் வியந்து, பாராட்டுத் தெரிவித்துச் சென்றார்களாம். அன்று இரவு கலை நிகழ்ச்சியும் நடந்தது. அவ்வளவு சிறப்பாக விழா இனிது முடிந்தது. பிறகு மறுபடியும் கூட்டம் கூட்டி மாணவர் இல்லத்திற்கு திரு.ஏ.எஸ்.ஏ. தலைவராகவும், திரு செ.யோகசுந்தரம், செயலாளர், திரு. சாரங்கபாணி பொருளாளர், திரு.பூ.மு.ஏகாம்பரம் துணைச் செயலாளர், திரு. மாணிக்க வேலர் கௌரவத் தலைவர்; பிறகு கமிட்டி மெம்பர்கள் என்று பதவி ஏற்றுக் கொண்டார்கள். மாணவர்கள் சேர்க்கை ஆரம்பித்து ஆஸ்ட்டல் துவங்கப்பட்டது. சாப்பாட்டுக்கு வேண்டிய பொருட்களைத் தரமாக மூட்டை, மூட்டையாக திரு.ஏ.எஸ்.ஏ.நேரடியாகப் பார்த்து வாங்கி அனுப்புகின்றார். காய்கறி, பால், மளிகை வாங்கத் தன் கடை குமாஸ்தாக்களை





*மாணவர் விடுதி திறப்பு விழாவில் திரு. வீரராகவ அய்யர் பேசுகிறார் அருகில் மாவட்ட ஆட்சியர் திரு. இராமமூர்த்தி, வள்ளல் ஏ.எஸ்.ஏ., பேராசிரியர் செ. யோகசுந்தரம் உள்ளனர்*

ஏற்பாடு செய்துவிட்டார். எல்லாம் ஒழுங்காக வாங்கி அன்றாடம் அனுப்பி வைக்கப்பட்டன. நல்ல சமையல்காரரை ஏற்பாடு செய்துவிட்டார்கள்.

சமையல்காரர்கள் விடுதியில் தங்க ஏற்பாடும் செய்து பகல், இரவு வாட்சுமேன்கள்! இப்படி எல்லா ஏற்பாடும் ஒழுங்காக செய்து ஆஸ்ட்டல் பராமரிக்கப்பட்டு வந்தது. தினமும் காலை 5 மணிக்குக் கடையைத் திறந்து விட்டுத் தன் தாயாரை, அல்லது மகனைக் கவனிக்கச் சொல்லிவிட்டுச் சரியாக 6 மணிக்கு ஆஸ்ட்டலுக்குச் சென்றுவிடுவார். அவ்வாறே திரு. யோகசுந்தரமும் சென்று விடுவார். இருவர் முன்னிலையிலும் எல்லா மாணவர்களும் குளித்து விட்டு நெற்றியில் விபூதி பட்டை தரித்துக் கொண்டு வந்து கடவுள் வணக்கம் பாட நிற்க வேண்டுமாம். திரு. ஏ.எஸ்.ஏ. தூய வெள்ளைக்கதராடை தான் அணிவார். கதர் வேஷ்டி, கதர் ஜிப்பா, கதர் குல்லா, கதர் துண்டு தோள் மீது! நெற்றியில்

விபூதி பட்டை, கழுத்தில் உத்திராட்ச மாலை இதுதான் அவர் தோற்றம். திரு. செ. யோ., வும் வெள்ளை வேஷ்டி, வெள்ளை சட்டை, விபூதி பட்டையுடன் சைக்கிளில் மாசிலாமணி தெருவில் இருந்து வந்து விடுவார். இருவரும் ஒரு நிமிடம் கூடத் தாமதிக்காமல் சரியாக 6 மணிக்கு வந்து விடுவார்களாம்.

பிள்ளைகள் அனைவரும் பயபக்தியுடன் நின்று இறை வணக்கம் பாடுவார்களாம். பிறகு அவர்களுக்கு நல்ல அறிவுரைகள் கூறப்பட்டு எல்லோரும் ரூமுக்குச் சென்று 'ஸ்டடி அவர்ஸ்' படிக்க வேண்டும். பிறகு டிபன் சாப்பிட வேண்டும். பிறகு கல்லூரிக்கு 9 மணிக்குக் கிளம்ப வேண்டும். ஒவ்வொரு வேலையும் மணி அடிக்க வேண்டும். அதன்படி மாணவர்கள் முதல் மணி இறை வணக்கம். இரண்டாவது மணி ஸ்டடிஸ்! மூன்றாவது காலை உணவு! என்று ஏற்பாடு செய்து இருந்தார்கள். திரு.செ. யோ. மாணவர்கள் படிப்பதை உலாவிக் கொண்டு பார்த்து வருவாராம். திரு.ஏ.எஸ்.ஏ.



*மாணவர் விடுதிக் கட்டிட குழுவினர்*



சமையல் அறையில் காலை உணவு சமைப்பதைக் கவனிப்பாராம். இருவரும் 6 மணியில் இருந்து 8 மணிவரை மேற்பார்வை பார்த்துவிட்டு அவரவர் வேலைகளுக்குச் சென்று விடுவார்களாம். அதே போல் மாலை 6 மணிக்குச் சென்று 1 மணி நேரம் ஆஸ்டலைச் சுற்றிப்பார்த்து அனைத்து வேலைகளையும் செவ்வனே நடக்கின்றதா என்று கவனிப்பார்களாம். மாலையும் 6 மணிக்கு பிரேயர், 8 மணிக்கு இரவு சாப்பாடு என்று ஏற்பாடு செய்து இருந்தார்கள்.

இவர்கள் இருவரும் ஆஸ்ட்டலை இரண்டு கண்களாக இருந்து கவனித்து வந்தார்கள். சிறப்பான முறையில் நடந்து வருகின்றது. ஆஸ்ட்டல் பீஸ், மெஸ்பீஸ், எல்லாம் குறைந்த கட்டணத்தில் ஏற்பாடு செய்து மாணவர்களுக்கு உதவி செய்தார்கள். காரணம், இவர்கள் எல்லாம் கிராமத்தில் இருந்து கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்தவர்கள். அந்தக் கஷ்டத்தை உணர்ந்து மாணவர்களுக்கு நல்ல சலுகை முறையில் திறம்பட ஆஸ்ட்டலை நடத்தி வெற்றிகரமாகச் செய்து வந்தார்கள். ஒவ்வொரு வருடமும் வருடாந்திர கூட்டம் நடந்தது. ஏகமனதாக இவர்களே பதவிப் பொறுப்பேற்று வாழ்நாள் வரை நடத்தி வந்தார்கள். இவர்கள் முயற்சியால் கடன் இல்லாமல் லாபகரமாக நிர்வாகத்தை நடத்தி அவல்காரத்தெருவில் ஒரு ஆஸ்ட்டல், கஸ்தமேட்டுத் தெருவில் ஒரு ஆஸ்ட்டல் என்று மூன்று இடங்களில் ஆஸ்ட்டல்கள் விரிவடைந்தன. ஆஸ்ட்டலுக்கு என்று ஒரு ஜீப்பு, ஒரு வேன் சொந்தமாக வாங்கப்பட்டன. எந்தவித நஷ்டமும் இல்லாமல் லாபகரமாக திறம்பட நடத்தினார்கள். ஒவ்வொரு வருடமும் எல்லோரையும் கூட்டி வரவு, செலவு கணக்குகள் காட்டினார்கள். அவ்வளவு நேர்மையுடன் நடத்தி வந்தார்கள்.

பிறகு கராத்தே, கோல் சண்டை கற்றுக் கொடுக்கும் ஒரு அமைப்பை துக்காராம் என்பவர் நடத்தி வந்தார். அதற்கு திரு. ஏ.எஸ்.ஏ.வைக் கௌரவத் தலைவராக நியமித்து



*வள்ளலுடன்*
*யோகாசன குரு பெங்களூர்*
*அண்ணாமலை*

இருந்தார். பிள்ளைவாளும் சென்று பயிற்சி அளிப்பதை நேரடியாகப் பார்த்து வருவார். ஒருமுறை முகரம் பண்டிகை விழாவின் போது லாங்கு பஜாரில் ஊர்வலமாக கோல் சண்டை நடத்திக் கொண்டு சென்றார்கள். மக்கள் திரளாக வேடிக்கை பார்த்துக் களித்தார்கள்.

கோல் சண்டை போட்டுக் கொண்டு செல்லும் மாணவர்கள் முன் மாஸ்டர் துக்காராமும், ஏ.எஸ்.ஏ.வும் ஊர்வலத்தில் சென்று கொண்டு இருக்கும் சமயம் இவர் முகத்தில் கோல் பட்டு முன் பல் இரண்டு உடைந்து விட்டன. இரத்தம் வந்து முகம் உடனே வீங்கி விட்டது. எல்லோரும் பயந்து விட்டார்கள். உடனே ஏ.எஸ்.ஏ.யாரும் நிறுத்த வேண்டாம். ஊர்வலம் போகட்டும் என்று சொல்லிவிட்டு டாக்டரிடம் சென்று மருத்துவம் செய்து கொண்டு வீட்டிற்கு வந்தார். முத்தம்மாள் பயந்து விட்டு மகனை ‘‘ஏன் நீ இதற்கெல்லாம் போகின்றாய்!’’ என்று சொல்லி அழுகின்றார்கள். ‘‘ஒன்றும் இல்லையம்மா பயப்படவேண்டாம் எதிர் பாராமல் நடந்து விட்டது!’’ என்று தாய்க்குச் சமாதானம் சொல்கின்றார். அந்த பயிற்சிப் பள்ளிக்கு நன்கொடை கொடுத்து உதவி செய்தார். இளங்கோ நாடக மன்றம் என்று கோவிந்தசாமி என்பவர் ஆரம்பித்தார். அவர் கலெக்டர் ஆபிஸில் பணிபுரியும் கிளார்க் ஆவார்.



இளங்கோ நாடக மன்றத்திற்கு ஏ.எஸ்.ஏ.வைத் தலைவராக்கிவிட்டு, ஏ.எஸ்.ஏ. கொடுக்கும் மூலதனத்தில் தன்னுடன் பணிபுரியும் சக நண்பர்களை நடிக்க வைத்துதானே கதை, வசனம் எல்லாம் எழுதி அவல்காரத்தெருவில் உள்ள அவர் வீட்டில் மாலையில் தினமும் நாடகத்திற்கு ஒத்திகை நடத்துவார். ஒரு நாடகத்தில் கலெக்டர் பாஸ்கர தொண்டைமான் அவர்களை ஒரு கதா பாத்திரத்தில் நடிக்க வைத்து திரு. ஏ.எஸ்.ஏ.வும் ஒரு சீனில் வந்து போகும் படி செய்து, சிறுமி மயிலுவையும் அந்த நாடகத்தில் இரண்டு நடனம் ஆட வைத்துச் சிறப்பாக ‘அண்ணா கலை அரங்கில்’



*இளங்கோ நாடக மன்றத் தலைவர் திரு கோவிந்தசாமி*
*அவர்களுடன் வள்ளல் பெருந்தகை ஏ.எஸ்.ஏ.*

நாடகம் நடத்தினார். இப்படிப் பெண்ணின் பெருமை, மங்கையர் திலகம், சாம்ராட் அசோகன், போன்ற பல நாடகங்கள் வருடத்திற்கு ஒன்றுவீதம் நடத்தி அதில் வரும் பணத்தைச் செலவு போக மீதியைப் புயல் நிவாரணம் மற்றும் சமூக சேவைகளுக்குக் கொடுத்து வந்தார்கள். வேலூரில் திரு. கோவிந்தசாமி நடத்தும் நாடகங்களை அனைவரும் நன்றாக

உள்ளன என்று பாராட்டினார்கள். வேலூர் டவுன் ஹால், அண்ணா கலை அரங்கம், முள்ளிப்பாளையம் கொட்டகை இப்படி மூன்று இடங்களில் நடக்கும். ஏ.எஸ்.ஏ. முகம் கோணாமல் கோவிந்தசாமி நடத்தும் நாடகக் கம்பெனிக்கு இனாமாகப் பணம் கொடுத்து உதவினார். கோவிந்தசாமியும் 'என்னை வாழ வைத்த தெய்வம்' என்று ஏ.எஸ்.ஏ. வை அனைவரிடமும் சொல்லுவார். இப்படி பல பேருக்கு பல கோணங்களில் தர்மம் செய்தார்.

1966-இல் வேலூர்க்கு அரசினர் கலைக் கல்லூரி கொண்டு வரப்பட்டது. இதில் ஏ.எஸ்.ஏ. பங்கு மகத்தானதாகும். மகள் மயிலு 8ம் வகுப்பு முடித்ததும் பருவமடைகின்றாள். ஆடம்பரம் இன்றிச் சடங்குகள் நடத்துகின்றார். காரணம் படிப்புக் கெடக்கூடாது. எல்லோருக்கும் சொல்லி ஊரைக் கூட்ட வேண்டாம். முக்கிய உறவினர்களுக்கு மட்டும் சொல்லிச் சடங்கு நடத்தினார்கள். முத்தம்மாள் படித்தது போதும்! பெண்கள் வயதுக்கு வந்தால் வெளியில் செல்லக் கூடாது. இத்துடன் பள்ளிக்குப் போவதை நிறுத்திவிடலாம் என்று மகனிடம் சொல்கின்றார்கள். மயிலு நான் படிப்பேன் என்று சாப்பிடாமல் தேம்பி, தேம்பி அழுகின்றாள். அப்பா, அம்மாவிடம், ''குழந்தை அழுகின்றாள்! இந்தக் காலத்தில் ஆண், பெண் இருவரும் நன்றாகப் படிக்க வேண்டும் அம்மா! அந்தக்காலம் போல் கிராமத்து பழக்கம் வேண்டாம் அம்மா! பத்திரமாக அனுப்பிவைக்கலாம் படித்து விட்டு வருவாள்!'' என்கின்றார். அண்ணன் பரமசிவம் பாட்டியிடம் கண்டிப்பாக என் தங்கை படிக்க வேண்டும். நிறைய படித்தால் தான் டாக்டர் மாப்பிள்ளை வருவார் என்று சொல்கின்றார். இவ்வாறு மகனும், பேரனும் சொல்லப் பாட்டி சம்மதம் தெரிவித்து விட்டார்கள். ஒழுங்காக பள்ளிக்கூடம் சென்று படித்துவிட்டு உடனே வீட்டிற்கு வந்து விட வேண்டும். எங்கும் வெளியில் பிள்ளைகளுடன் செல்லக்கூடாது என்று கண்டிஷன்



போட்டார்கள். ஏ.எஸ்.ஏ. வீட்டிற்கு மூன்றாவது வீட்டில் குப்புசாமி செட்டியார் வசித்து வந்தார். அவர் லாங்கு பஜாரில் 'இந்தியாகபே' ஓட்டல் நடத்தி வந்தார்.

அவர் ஏ.எஸ்.ஏ.வுக்கு நெருங்கிய நண்பர். குப்புசாமி செட்டியாரின் தம்பி பெயரும் பரமசிவம். அவர் தம்பியும் ஏ.எஸ்.ஏ.வின் மகன் பரமசிவமும் காலேஜில் ஒன்றாகப் படித்த நண்பர்கள். குப்புசாமி செட்டியார் பெரிய மகள் ராணி என்பவள் தினமும் சைக்கிள் ரிக்ஷாவில் ஸ்கூல் செல்லும் வழக்கம். அதே ரிக்ஷாவில் வாடகை பேசி மயிலுவையும் பள்ளிக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டது. அதன்படி தினமும் காலை 8 1/2 மணிக்கு மயிலுவும், ராணியும் சைக்கிள் ரிக்ஷாவில் சென்று அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் படித்து வந்தார்கள். காலையில் சென்றால் மாலை 4 மணிக்குப் பள்ளிவிட்டதும் ரிக்ஷாவில் வீடு திரும்புவது வழக்கம்.

மத்திய உணவு பள்ளிக்கு ஆள்மூலம் அனுப்பி விடுவார்கள். முத்தம்மாள் தெருத்திண்ணை மீது பேத்தி வரும் வரை பார்த்துக் கொண்டே இருப்பார்கள். 5 மணிக்கு பேத்தி வந்ததும் திருப்தியடைவார்கள். கொஞ்சம் தாமதமாக வந்தால் ஏன் இவ்வளவு நேரம்? என்று பயத்துடன் கேட்பார்கள். பள்ளியில் ஸ்பெஷல் கிளாஸ், விளையாட்டுகள் நடந்தால் தாமதம் ஏற்படும் என்று பேத்தி சொன்னவுடனே சரிம்மா!'' என்று சொல்வார்கள். அவ்வளவு அக்கறையுடன் பேத்தியைக் கவனித்துக் கொள்வார்கள்.

# வாரியார் சுவாமிகள் நட்பு

**தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்**
**வன்மையுள் எல்லாம் தலை (கு.444)**

*'தம்மை விட (அறிவு முதலியவற்றால்) பெரியவர் தமக்குச் சுற்றத்தாராகுமாறு நடத்தல், வல்லமை எல்லாவற்றிலும் சிறந்ததாகும்.'*

மயிலு பாட்டுப்போட்டி, மாறுவேடப் போட்டிகளில் முதல் பரிசு வெள்ளிடாலர் பெற்று வீட்டிற்கு வந்து பரிசுப் பொருளைக் காண்பித்ததும் அனைவரும் மகிழ்ச்சியடைகின்றார்கள். பேத்திக்குக் கண் திருஷ்டி சுற்றிப் போடுகின்றார் பாட்டி! அண்ணன் உடனே தங்கையைப் போட்டோ ஸ்டூடியோவுக்கு அழைத்துச் சென்று படம் எடுத்து வருகின்றார். வீட்டில் செல்லக்குட்டியாக இருக்கும் தங்கையை கேமராவில் வித, விதமாகப் படம் எடுப்பது வழக்கம். மேமாதம் விடுமுறை நாளில் கண்ணப்பன், பரமசிவம், ராஜம், நீலகண்டன், மயிலு அனைவரும் 10 நாள் கோட்டைப்பூண்டி கிராமத்தில் சித்தப்பா வீடு, கொட்டாவூரில் அம்மாவின் பாட்டி வீடு, கணப்பாவரத்தில் அத்தை வீடு என்று சென்று சந்தோஷமாகக் கழித்துவிட்டு வருவார்கள். ஏ.எஸ்.ஏ.வின்



மாமியார் பூங்காவனம் அம்மாள் 6 மாதத்திற்கு ஒருமுறை வேலூரில் வந்து 20 நாள் தங்கிப் பேத்தி பேரனைப் பார்த்துவிட்டுச் செல்வார்கள். தன் மகள் சீக்கிரம் இறந்து விட்டாள் என்று அடிக்கடி அழுவார்கள். பேத்தியைத் தன்னுடன் படுத்துறங்கச் சொல்வார்கள். மயிலு தினமும் முத்தம்மா பாட்டியுடன்தான் அணைத்துக் கொண்டு படுக்கும் பழக்கம். அம்மம்மா பாட்டி வந்ததும் அவர்கள் இருக்கும் வரை அவர்களுடன் படுத்துக் கொள்வாள். பாட்டிகள் எப்போதும் இருவரும் உண்ணாமுலை அம்மாள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதைப் பேத்திக்குச் சொல்லிச் சொல்லிப் புகழ்பாடுவார்கள். அவ்வளவு குறுகிய காலத்தில் வாழ்ந்து விட்டுச் சென்றிருக்கின்றார்கள். பூங்காவனம் பாட்டி, 'என் மகளுக்கு கொடுத்து வைக்கவில்லையே!' என்று அழுதுகொண்டே சொல்வார்கள். மயிலு பாட்டுப்பாடுவதையும், நடனம் ஆடுவதையும் பாட்டிகள் பார்த்து ரசித்து மயிலுவை கையால் வருடி திருஷ்டி சுற்றி உடைப்பார்கள். இப்படியாக இரண்டு பாட்டிகளும் செல்லமாகக் கவனிப்பார்கள்.

இரவில் படுத்திருக்கும் போது நிறைய அறிவுள்ள பாட்டிக் கதைகள் சொல்வார்கள். ஏ.எஸ்.ஏ. தன் மாமியாரை மிகவும் அன்பாகக் கவனித்து அனுப்புவார். அந்த அம்மாள் மகள் இருந்தால் எப்படி கவனித்து அனுப்புவாள் என்று ஏக்கம் கொள்ளாமல் நாம் கவனித்து அனுப்ப வேண்டும் என்று தன் தாயிடமும் மருமகள் இடமும் சொல்லி வடை, பாயாசம், பிரியாணி என்று நல்ல நல்ல சமையலாகச் செய்து போடச் சொல்லுவார். மாமியார் ஊருக்குப் போகும் போது புதுப் புடவை பிஸ்கட், கேக், பழங்கள், வெற்றிலை, பாக்கு ஸ்வீட், காரம் எல்லாம் வாங்கிக் கொடுத்து அனுப்புவார்.

ஊரில் மச்சான் அவரது மனைவி, பேரப்பிள்ளைகள் 3 பேர், பேத்தி, ஆக ஆறு பேர்கள். மச்சானுக்குக் கிராமத்தில் விவசாயக் குடும்பம் அதனால் பிள்ளைகள் சாப்பிடட்டும்

என்று தாராளமாக வாங்கிக் கொடுத்தனுப்புவார். மச்சான் கோபாலும் வேலூர் வந்து தன் அக்கா புருஷன் மாமா ஏ.எஸ்.ஏ.விடம் வந்து தங்கிச் செல்வார். அவருக்கும் போகும் போது வேஷ்டி, சட்டை, குழந்தைகளுக்குத் துணி, நோட்டுப் புத்தகம், பேனா, பென்சில் என்று அவர் கேட்பதைத் திருப்தியாக வாங்கி கொடுத்தனுப்புவார். தன் தங்கை பச்சையமாளுக்கும் அண்ணனின் சீர் புடவைகள் எடுத்துக் கொடுத்து அவருக்கும் திருப்தியாக வாங்கிக் கொடுத்து அனுப்புவார். கோட்டைப் பூண்டியில் வசிக்கும் இவருடைய வாத்தியார், அவரது மனைவி இருவருக்கும் தவறாமல் வருடம் ஒருமுறை துணிகள் தாம்பூலம், பழம் என்று வாங்கிச் சென்று அவர்களிடம் கொடுத்து சாஷ்ட்டாங்கமாக தரையில் விழுந்து நமஸ்காரம் செய்து விட்டுக் கொடுப்பார். அந்த வாத்தியாருக்கு இறக்கும் வரையில் அப்படி கொடுத்து வந்தார். எனக்குக் கல்வி கற்றுத் தந்த குரு, தெய்வம் என்பார். வாத்தியாரும் மனைவியும் வேலூர் வந்து நான்கு நாள் தங்கிவிட்டுச் செல்வார்கள். அவர்களையும் அன்புடன் கவனித்து அனுப்புவார். விருந்தோம்பல் என்றால் ஏ.எஸ்.ஏ.க்கு அவ்வளவு மகிழ்ச்சி. பிறகு வேலூர் சண்முகனடியார் சங்கத்திற்குத் தலைவராக நியமிக்கப்பட்டார். அங்கும் சிறப்பாக அந்தச் சங்கத்தைக் கவனித்துக் கொண்டார்.

அப்போதுதான் திரு. முருக கிருபானந்த வாரியாரின் நட்பு கிடைத்தது. வாரியார் சுவாமிகள் சஷ்டிக்கு 7 நாள் சண்முகனடியார் சங்கத்தில் இரவு 8 மணிமுதல் 10 மணி வரையில் பிரசங்கம் செய்ய ஏற்பாடு செய்து இருந்தார்கள். வேலூர் தெய்வசிகாமணி முதலியார் ஆடிட்டர் வீட்டில் 7 நாளும் தங்கியிருப்பார். மாலையில் சங்கத்தில் கதைச் சொல்லுவார். தினமும் வாரியாருக்குப் பசும்பால் நன்றாகக் காய்ச்சி வெள்ளி ரயில் கூஜா நிறைய எடுத்துக் கொண்டு ஒரு வெள்ளி டம்ளரும் உடன் எடுத்து ஏ.எஸ்.ஏ. கடைக்குச் செல்வார்.



வாரியார் இருக்கும் வரையில் இப்படித்தான் சஷ்டிக்கு நடக்கும். ஏ.எஸ்.ஏ. வீட்டில் இருந்து தான் பால் அனுப்புவார்கள். வாரியாருக்கு நெருங்கிய அபிமான நண்பர் இவர். வாரியார் சுவாமிகள் சஷ்டி இல்லாத மற்ற சமயங்களில் ஏ.எஸ்.ஏ.வீட்டில் தங்குவது வழக்கம். வாரியாரைத் தன் குருவாக மதித்தார். சித்திரை மாதம் விடுமுறையில் மாணவர் இல்லத்தின் முன்பாக வாயிலுக்கு அருகில் பெரிய மேடை அமைத்து தெரு வெளியில் பெரிய பந்தல் போட்டு 500 பேர் உட்காரும் அளவுக்கு பந்தல் அமைத்து, வாரியார் சுவாமிகள் மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரையில் 30 நாள் பிரசங்கம் சொல்ல ஏற்பாடு செய்தார்.

ஒரு வருடம் மகாபாரதம், ஒரு வருடம் ராமாயணம், ஒரு வருடம் கந்தபுராணம், ஒரு வருடம் பெரியபுராணம், ஒரு வருடம் திருமூலர் திருமந்திரம், இப்படி 5 வருடங்கள் நடத்த ஏற்பாடுகள் செய்தார். அப்போது ஏ.எஸ்.ஏ.வீட்டில் இருந்து பால் போகும். தினம் மருமகள் அலமேலு, மயிலுவை அழைத்துக் கொண்டு கதைக்கு வரும்படி ஏ.எஸ்.ஏ. உத்ரவு. இரவு உணவு மாலையே தயாரித்து வைத்து விட்டு வந்து விடுவார்கள். அலமேலு அவ்வாறே சென்று கதை கேட்டு வந்தார்கள். சுவாமி அந்த ஒரு மாதம் ஆஸ்டலிலேயே தங்க ரூம், சாப்பாடு, சமைத்துப் போட எல்லா ஏற்பாடுகளும் ஒழுங்காகச் செய்து கொடுத்தார். வேலூரே அசந்துவிட்டது. மாணவர் இல்லம் முதல், நீளவாக்கில் மைதானத்தில் காந்திசிலை வரை கூட்டம் நிரம்பிவழியும். வேலூர் மக்கள் அவ்வளவு ஆர்வமுடன் வாரியார் உரையைக் கேட்டார்கள். சுவாமிகளும் அற்புதமாகக் கதைகள் கூறினார் என்று ஏ.எஸ்.ஏ. சொல்லிப் பெருமைப்பட்டார்.

அப்போது வேலூரில் பல பிரமுகர்கள் இவருக்கு உற்ற நண்பர்கள் ஆனார்கள். இரும்பு பட்டறை விநாயக முதலியார், மு. பெருமாள், வாரியார் சம்மந்தி, வாரியார்

தம்பிகள், மரக்கடை பாலசுந்தர முதலியார், சண்முக முதலியார், இந்தியா கபே குப்புசாமி செட்டியார், ராதா கிருஷ்ணசெட்டியார், இப்படி அளவுக்கு அதிகமான பெரிய, பெரிய ஆட்கள் நண்பர்களாக நெருக்கமாகப் பழகினார்கள். வாரியாருக்கு ஏ.எஸ்.ஏ.வின் நேர்மை, நாணயம், ஒழுக்கம் அனைத்தும் மிகவும் பிடித்து விட்டது. ஏ.எஸ்.ஏ.வைப் பொருளாளராக வைத்துக் கொண்டார். வள்ளிமலை திருக்கோவில் திருப்பணிக்கு வசூல் செய்ய ஏ.எஸ்.ஏ.வை முக்கியமாக உடன் அழைத்துச் செல்வார். மாணவர் இல்லத்திற்கு எப்படி வசூலுக்கு சென்று விடுவாரோ அப்படியே செல்வார். அப்போது குப்புசாமி முதலியார் டூரிஸ்ட் வண்டியை விற்றுவிட்டார். மிகவும் பழைய மாதிரி ஆகி வண்டி தேய்மானம் ஆகவே! பிறகு ஏ.எஸ்.ஏ. புது அம்பாஸிடர் கார் வாங்கி அதை ஓட்ட குப்புசாமியையே டிரைவராக வைத்துக் கொண்டார். டிரைவர் வண்டி ஓட்டாத சமயத்தில் ஏ.எஸ்.ஏ.வுக்கு உதவியாக கடையில் கல்லாமீது உட்கார்ந்து சாப்பாட்டுக்கு மாற்ற ஏற்பாடு செய்தார். அவ்வளவு நம்பிக்கை அவர்மீது! அதற்கு விசுவாசமாக அவரும் நடந்து கொண்டார்.

வாரியாருடன் வசூலுக்குப் போகும்போது சுவாமிகள் சொன்ன நல்ல, நல்ல கருத்துக்களை எல்லாம் மகள் மயிலு கால் அழுத்தும் போது சொல்லுவார். சுவாமிகள் பணத்தை மட்டும் ஏ.எஸ்.ஏ. விடம் கொடுத்துவிடுவார். ஸ்தபதிகளைப் பேசி விட்டுவிட்டார். அவர் வெளியூர் கதைகளுக்குச் சென்று வசூல் செய்து கொண்டு வந்து கொடுப்பார். ஏ.எஸ்.ஏ. எல்லாம் பார்த்துக் கொள்வார். அவர் மீது முழு நம்பிக்கை உள்ளது என்பாராம். ஏ.எஸ்.ஏ.வும் இறைவனுக்கும், சுவாமிக்கும் பயந்து சிரமம் பார்க்காமல் தினமும் வேலூரில் இருந்து வள்ளிமலை சென்று திருப்பணி வேலைகளைக் கவனித்து வந்தார். கார் பெட்ரோலுக்குக் கூடப் பணம் எடுக்கமாட்டார். தன் சொந்த செலவு தான் போகவர, சாப்பிட! ஒரு பைசா கூடத் தவறாமல் கணக்கு புள்ளி விவரத்துடன் இருக்குமாம். சுவாமிகளே



ஆச்சரியப்பட்டாராம். ''இப்படி பட்ட நேர்மையான மனிதனை நான் இதுவரை பார்க்கவில்லை'' என்று மு. பெருமாளிடம் கூறுவாராம்.

எப்போதும் சந்தோஷமாக துரு, துரு என்று இருப்பார். கொஞ்சம் கூட சலிப்போ, களைப்போ காட்டிக் கொள்ள மாட்டாராம். உடன் இருந்தவர்கள் கூறுவார்கள். வள்ளிமலை திருப்பணி முடிந்ததும், விரிஞ்சிபுரம் திருமண மண்டபமும் கட்ட வாரியார் இவரிடமே பொறுப்பைக் கொடுத்தார். வாரியாருடன் வெளியூர்களுக்கும் சென்று வருவது வழக்கம் வள்ளிமலை திருக்குளம் கட்டும்பணியும் ஏ.எஸ்.ஏ. விடம் வாரியார் சுவாமிகள் ஒப்படைத்தார். அதையும் தன் தலைமேல் பொறுப்பு ஏற்றுக்கொண்டு நல்லமுறையில் கட்டிக் கொடுத்தார். இவர் எடுத்த ஒவ்வொரு காரியமும் வெற்றிகரமாக முடித்துக் கொடுத்தார். வடலூர் இராமலிங்க சுவாமிகள் இவருக்கு மிகவும் பிடிக்கும், திருஅருட்பா தினமும் பாடுவார். அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை என்று அடிக்கடி கூறுவார். வருடா வருடம் தைப்பூசத்தன்று வாரியார் வடலூர் செல்வார். இவரும் சென்று வருவது வழக்கம். சண்முகனடியார் சங்கத்திலும் தைப்பூசத்தன்று ஜோதி தரிசனம் காட்ட முறைப்படி பூஜைகள் நடந்தது. சென்னை சி.ஆர். லிங்கம் என்பவர் மருந்து கடை வைத்து இருந்தார். அவர் அங்கு ஒரு மடம் நிறுவி இருந்தார். சொந்தமாக ஒவ்வொரு மாதமும் அங்கு சென்று அன்னதானம் செய்துவிட்டு வருவார். அவரும் இவருக்கு நல்ல நண்பர். அவர் மடத்தில் தங்கி தரிசனம் கண்டு வருவார்.

ஏ.எஸ்.ஏ.வும் அன்னதானத்திற்குத் தன் மனைவி பெயரில் நன்கொடை நிரந்தரமாக வைத்து இருந்தார். திரு.ஏ.எஸ்.ஏ. கோவில், குளம் மற்றும் எந்த நல்ல காரியத்திற்கும் நன்கொடை கொடுத்தாலும் தன் மனைவி, தாயார் பெயரில்தான் கொடுப்பார். வீட்டில் அனைவரிடமும் கூறுவார். என்னைப் பெற்றெடுத்த தாய் கண்கண்ட தெய்வம்:

என்னை நல்ல பழக்கத்துடன் அறிவுரைகள் கூறி கிராமத்தில் இருந்து டவுனுக்கு வந்து கஷ்டப்பட்டு வளர்த்து ஆளாக்கினவர்கள். என் மனைவி கஷ்டப்படும் போது உறுதுணையாக வாழ்ந்து சுகம் பெறும்போது அனுபவிக்காமல் விரைவில் சென்றுவிட்டாள். அதனால் இவர்கள் பெயர் நிலைத்து நிற்க வேண்டும். அவர்களுக்கு நான் செய்யும் உதவியின் மூலம் அந்த ஆத்மாக்களுக்கு புண்ணியம் சேரட்டும் என்று அடிக்கடி என்னிடம் கூறுவார். நான் இறந்து விட்டபிறகு என் மகன் வேண்டுமானால் விருப்பப்பட்டால் என் பெயருக்கு செய்யட்டும்.

அவன் விருப்பம் என்று கூறுவார். இன்றும் அவருக்குப் பிறந்த, அதே தயாள குணம் படைத்த என் தமையன் பரமசிவம், எல்லா நன்கொடையையும் தன் தகப்பனார் ஏ.எஸ்.அருணசலம்பிள்ளை தன் தாயார் உண்ணாமுலை அம்மாள் பெயரில் அதிகமாகச் செய்து வருகின்றார். புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?' என்னும் பழமொழிக்கு ஏற்ப அதே மாதிரி நன்கொடைகள் வழங்கி வருகின்றார். தன் நண்பர்கள் வினாயக முதலியார், பெருமாள் முதலியார், குப்புசாமி ஆகியோர் காரில் முன்னால் உட்கார பின் சீட்டில் ஏ.எஸ்.ஏ. மகள் மயிலு மருமகள் அலமேலுவுடன் குப்புசாமி கார், பின்னால் ஒரு வேனில் தன் தங்கை பச்சையம்மாள் தம்பி வெள்ளைக்கண்ணு அவர் மனைவி அலமேலு, தன் வளர்ப்பு மகள் ராஜம், மருமகன் கோவிந்தசாமி அனைவரையும் அழைத்துக்கொண்டு தெற்கே உள்ள அனைத்துக் கோவில்களுக்கும் கன்னியாகுமாரி வரை அழைத்துச் சென்று காண்பித்தார்.

முருகனுடைய ஆறுபடைவீடும் அடங்கும். எல்லா செலவுகளும் இவரே செய்வார். காரில் செல்லும் போது பேசிக் கொண்டும் பல ஆன்மீகக் கதைகள் கூறிக்கொண்டும் செல்வார். இன்னொரு முறை ஒரு வேனில் ஏ.எஸ்.ஏ. மகள்



மயிலு, மருமகள் அலமேலு எதிர்வீடு சப்இன்ஸ்பெக்டர் தம்பதிகள் பெரிய கடை குமாஸ்தாக்கள். ஆம்பூர் கிளை அண்ணாமலை தம்பதிகள் உலகம்பட்டு கோபால், வடிவேலு இப்படிச் சிலரை பழனி, மதுரை, திருச்செந்தூர், சிதம்பரம், கும்பகோணம், திருச்சி, திருநெல்வேலி, குற்றாலம் முதலிய இடங்களில் உள்ள கோவில்களுக்கு அழைத்துச் சென்று காண்பித்தார்.

எப்போதும் தன் மகள், மருமகளை அழைத்துச் செல்வார். எல்லோரும் பார்க்க வேண்டும் என்று முக்கிய உறவினர்கள், நண்பர்கள், குமாஸ்தாக்களை அழைத்துச் சென்று எல்லாச் செலவுகளும் தானே ஏற்றுக் கொண்டு காண்பித்தார். இந்த நல்ல குணம் யாருக்கும் வராது. தன் தாயாரும் மகனும் வீட்டையும், கடையையும் பார்த்துக் கொள்வார்கள். இப்படியாக காலம் கடந்தது. எல்லாம் அது, அது நல்ல முறையில் நடத்தி வந்தார். மகள் மயிலு எஸ்.எஸ்.எல்.சி. முடித்துவிட்டார். இன்ட்டர் மீடியட் படிப்பு படிக்க ஊரீஸ் காலேஜ் செல்ல வேண்டும்.

அப்போது பெண்கள் கல்லூரி கிடையாது. ஆண்களுடன் சேர்ந்து படிக்க வேண்டும். அண்ணன் பரமசிவம் படிக்க வைக்க ஆசைப்பட்டார், மயிலும் படிக்க ஆசைப்பட்டாள். ஆனால் முத்தம்மாள் உறுதி கலந்த கண்டிப்புடன் கூறிவிட்டார்கள். வயசு வந்த பொண்ணு இதுவரை பெண்கள் பள்ளியில் படித்தாள் நானும் உங்கள் விருப்பத்திற்கு விட்டு விட்டேன். அவளும் 11வது எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்து முடித்துவிட்டாள். அது போதும்! பெண்கள் அதிகம் படிக்கக்கூடாது. இதுவே அதிகம்! அதுவும் ஆண்களுடன் கலந்து கண்டிப்பாகப் படிக்கக்கூடாது.

எனக்கும் வயதாகி வருகின்றது. என் பேத்திக்கு கல்யாணம் பண்ணிவிட்டால், என் கடமை முடிந்துவிடும்

என்று கண்கலங்கக் கூறுகின்றார்கள். ஏ.எஸ்.ஏ.வும், பரமசிவமும் மறு பேச்சு பேசாமல் முத்தம்மாளின் விருப்பப்படி மயிலுவுக்கு எடுத்துக்கூறிப் படிப்பை நிறுத்திவிட்டார்கள். மயிலுவும் உடனே, ''என்னை வீட்டை விட்டு அனுப்பிவிடாதீர்கள். நான் ஒரு வருடமாவது வீட்டில் உங்களுடன் அனைவருடனும் இருக்க வேண்டும்!'' என்று அழுதுகொண்டே கூறுகின்றாள். சிரித்துக்கொண்டு சரி என்கின்றார் ஏ.எஸ்.ஏ.! உடனே ஒரு வருடத்தில் தாங்கள் வசிக்கும் வீட்டை இடித்து புதிய இரண்டு அடுக்குமாடி வீடாகக் கட்டுகின்றார்கள். கீழ்த்தளம் பேக்கரி குடோனாகவும், முதல் மாடி குடியிருப்பாகவும், இரண்டாவது மாடி மகனுக்கு பெட்ரூம் என்றும் கட்டுகின்றார்கள். இதுவே அந்தத் தெருவில் முதன் முதல் கட்டிய மாடி வீடாகும். நல்ல நாளில் கிரகப்பிரவேசம் இனிது நடந்தது.

★



# மயிலுக்குக் கல்யாணம்

**மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்**
**வளத்தக்காள் வாழ்க்கைத் துணை (கு.51)**

*'இல்வாழ்க்கைக்கு ஏற்ற நற்பண்பு உடையவளாகித் தன் கணவனுடைய பொருள் வளத்துக்குத் தக்க வாழ்க்கை நடத்துகின்றவளே வாழ்க்கைத் துணை ஆவாள்!'*

அதுவரை அரசமரம்பேட்டை பிள்ளையார் கோவில் தெருவில் உள்ள இன்னொரு சொந்த வீட்டில் வசித்தார்கள். வீடே இல்லாது கஷ்டப்பட்டு வந்த ஏ.எஸ்.ஏ. அவர்கள் தன் அயராத உழைப்பால் முன்னேறிப் பல வீடுகள் வாங்கினார். மயிலு 16 வயதில் எஸ்.எஸ்.எல்.சி., முடித்தாள். 1 வருடம் வீட்டில் இருக்கும்போது திருமணப்பேச்சு ஆரம்பித்தார்கள். தன் இனிய நண்பர் திரு.செ.யோகசுந்தரத்திடம் என் மகள் மயிலுவுக்குத் திருமணம் செய்ய வேண்டும். நல்ல குடும்பத்து நல்ல பிள்ளையாகப் பார்த்துச் சொல்லுங்கள். நீங்கள் ஆசிரியராக இருப்பதால் உங்களுக்கு மாணவர்கள் நிறைய பேர் தெரிந்திருப்பார்கள். அதனால் உங்களிடம் கூறுகின்றேன் என்று கூறினார். உடனே அவர் என் மகளைப் போன்றவள் மயிலாம்பிகை. நான் நல்ல வரனாகப் பார்க்கின்றேன் என்று

கூறினாராம். மேலும் ஏ.எஸ்.ஏ. யோகப்பாவிடம் என் மகள் தாயில்லாமல் வளர்ந்தவள் அதனால் நல்ல பையனாக பார்த்துச் சொல்லுங்கள் என்று கூறுகின்றார். திரு. யோகப்பாவும் கண்டிப்பாக அவ்வாறே செய்கின்றேன் என்று கூறிச் சில நாட்கள் கழித்து மேலரசம்பட்டு கிராமம் தஞ்சி கவுண்டர் என்பவர் பாரஸ்ட் காண்ட்ராக்டர், நிலச்சுவான்தார், நடுத்தரக்குடும்பம். அவர் மகன் குமரகுரு என்பவர் ஊரீஸ் கல்லூரியில் படித்தவன். எனக்கு மிகவும் பிடித்த மாணவன். நல்ல குணங்கள், திறமையுள்ள மாணவன். அவர்கள் குடும்பமும் ஆடம்பரம் இல்லாத விவசாயக் குடும்பம். இப்போது அந்தப் பையன் எம்.பி.பி.எஸ். முடித்துவிட்டு பிராக்டீஸ் செய்து கொண்டிருக்கின்றான். அவர்கள் பெற்றோரிடம் கேட்டு ஜாதகம் வாங்கித் தருகின்றேன். பொருத்தமாக இருந்தால் இந்த வரன் நம் மகளுக்கு ஏற்றதாக இருக்கும் என்று நினைக்கின்றேன் என்று கூறினார். அதன்படி ஜாதகமும் வாங்கி வந்து கொடுத்தார். ஜாதகம் வாங்கி மாதஜோதிடம் அய்யர் வெங்கட் சுப்பிரமணி - ஏ.எஸ்.ஏ.வின் குடும்ப ஜோஸியர் - எதிர்வீட்டில் மாத ஜோதிடம் பத்திரிக்கை நடத்தி வந்தார். அவரிடம் கொடுத்து மயிலு ஜாதகத்துடன் ஒப்பிட்டுப்பார்க்கச் சொன்னார். ஜோஸியர் பார்த்துச் சொன்னார். ஜோஸியர் பார்த்துப் பொருத்தம் நன்றாக உள்ளது என்று கூறினார். ஏ.எஸ்.ஏ.வும் குமரகுரு ஜாதகத்துடன் தன் மகள் ஜாதகத்தை இணைத்து யோகப்பாவிடம் கொடுத்துப் பிள்ளைவீட்டாரைப் பார்க்கச் சொல்லுங்கள். அவர்களும் பார்த்தவுடன் பெண் பார்க்க வரச் சொல்லலாம் என்று கூறினார். பிள்ளை வீட்டாரும் பார்த்து ஜாதகம் எங்களுக்கும் நன்றாக உள்ளது. பெண் பார்க்க வருகின்றோம் என்று கூறி அனுப்பினார்கள். அதற்குள் பரமசிவம் நான் முதலில் ஆஸ்ட்டலில் சென்று பையனைப் பார்த்து வருகின்றேன். பிறகு பெண் பார்க்க அழைக்கலாம் என்று கூறினார். எம்.எம்.சி. மெடிக்கல் காலேஜ் ஆஸ்ட்டலில் குமரகுரு தங்கியிருந்தார்.



*நூலாசிரியரின் பாசமிகு மாமனார் திரு. நா. தஞ்சி கவுண்டர்- பாசமிகு மாமியார் த. சாலம்மாள்*

அதே எம்.எம்.சி. மெடிக்கல் காலேஜில் தன் தம்பி மகன் நீலகண்டன் பள்ளிப்படிப்பும், இன்ட்டர் மீடியட் ஊரீதக் கல்லூரியிலும் முடித்து விட்டு பி.பார்மசி சேர்ந்து முதலாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தார். எம்.எம்.சி. ஆஸ்ட்டலில் தான் நீலகண்டனும் தங்கியிருந்தார். திரு. யோகப்பா பரமசிவத்தைச் சென்னைக்கு அழைத்துச் சென்று ஆஸ்ட்டலில் டாக்டர் த. குமரகுருவை அறிமுகப் படுத்துகின்றார். நீலகண்டனையும் அறிமுகப்படுத்துகின்றார். இரண்டு அண்ணன்களும் டாக்டர் குமரகுருவை பார்த்துப்பேசிவிட்டு வேலூர் வருகின்றார்கள். பரமசிவம் மாப்பிள்ளை நன்றாக இருக்கின்றார். அங்கு உடன் இருக்கும் மாணவர்களையும் விசாரித்தோம். நல்ல பையன் எந்தக் கெட்டப்பழக்கமும் இல்லை என்று கூறுகின்றார்கள். நீலகண்டனும் அந்த ஆஸ்ட்டலில் இவருக்கு நல்ல மரியாதை எல்லோரும் குருஜி, குருஜி என்று அழைப்பார்கள். ஆஸ்டல் மெஸ்ஸுக்கு இவர்தான் தலைவர், நல்ல அடக்கமாக இருப்பார்

என்று கூறுகின்றார். ஏ.எஸ்.ஏ.வும், முத்தம்மாளும் மகிழ்ச்சியடைந்து பிள்ளை வீட்டிற்குப் பெண் பார்க்க அழைக்கின்றார்கள். ஒரு நல்ல நாளில் பிள்ளையின் தாய், தந்தை, சகோதரர், சகோதரி அனைவரும் வந்து பார்த்துவிட்டு எங்களுக்கு மிகவும் பெண் பிடித்துள்ளது. ஜாதகமும் நன்றாக உள்ளது. பிள்ளையை அனுப்புகின்றோம். பிறகு நீங்களும் எங்கள் வீட்டிற்கு வாருங்கள் நாங்கள் கிராமத்தில் வசிப்பவர்கள். உங்கள் அளவுக்கு மாடி வீடு இல்லை. ஓட்டு வீடுதான். சொந்த வீடு நிலம் நிறைய உள்ளது. என் மகன் நகரத்தில்தான் வசிப்பான். அதனால் நீங்கள் தயங்க வேண்டாம். உங்கள் பெண்ணைக் கிராமத்தில் கொடுப்பதா என்று யோசிக்காதீர்கள்!'' என்று கூறுகின்றார்கள். ஏ.எஸ்.ஏ. நாங்களும் கிராமத்தில் இருந்து வந்தவர்கள்தான் ''நாங்கள் உங்கள் வீட்டிற்கு வருகின்றோம்'' என்று விடை கொடுத்து அனுப்புகின்றார்கள். பிறகு ஒருநாள் திரு.யோகசுந்தரம் அவர்கள் குமரகுரு அவர்களைப் பெண் பார்க்க அழைத்து வருகின்றார். அவரும் பார்த்து விட்டுச் செல்கின்றார். போகும்போது யோகப்பாவிடம் பெண்ணின் போட்டோ வேண்டும், பெண்ணை நான் சரியாகப்பார்க்கவில்லை என்று கூறுகின்றார். திரு.செ.யோ. நீ சென்று உன் பதிலைச் சொல்: பிறகு ஏற்பாடு செய்யலாம்! என்று சொல்லி அனுப்பினாராம். ஊருக்குச் சென்று குமரகுரு தன் சக நண்பனிடம் போட்டோவைக் காண்பித்து விட்டுப் பிறகு திரு.யோக சுந்தரத்திற்கு ஒரு கடிதம் எழுதி பெண்ணின் போட்டோவையும் உடன் வைத்து திருப்பி அனுப்பிவிட்டார். அந்தக் கடிதத்தைப் பார்த்து அவர் நிலை குலைந்து போய்விட்டார்.

மிகவும் வருத்தம் அடைந்திருக்கின்றார். ஒளிவு, மறைவு இல்லாமல் சோகமான முகத்துடன் வீட்டிற்கு வந்து குமரகுரு அனுப்பிய கடிதத்தைக் கொடுத்து விட்டு இதை



படித்துப்பாருங்கள். கவலைப்படவேண்டாம். அந்தப் பையனுக்கு நம் மகளை கட்டிக் கொள்ள (கொடுப்பினை இல்லை) பிராப்தம் இல்லை. விடுங்கள். வேறு சில நல்ல மாணவர்கள் இருக்கின்றார்கள். நான் பார்த்து அனுப்புகின்றேன். நான் எவ்வளவோ உயர்வாக நினைத்தேன் அவனைப்பற்றி! அவன் இப்படி என்னைத் தலை குனிய வைத்துவிட்டான்! என்று வருத்தத்துடன் கூறுகின்றார். ஏ.எஸ்.ஏ.வும் கடிதத்தைப் படித்து விட்டு வருத்தத்துடன் ''சரி விடுங்கள்! எல்லாம் நல்லதுக்கு! என்று எடுத்துக் கொள்வோம். ஆண்டவன் விதிப்படி எல்லாம் நடக்கும்!' என்று கூறிவிட்டு செ.யோ., அவர்களை அனுப்பி விட்டாராம். வீட்டில் மற்றவர்களுக்கு ஒன்றும் சொல்லவில்லையாம். அவர்கள் வேறு எங்கோ பார்க்கின்றார்கள் போல் உள்ளது. நாமும் வேறு இடம் பார்க்கலாம் என்று கூறிவிட்டார். இப்படியே 3 மாதம் கழிந்து விட்டது. குமரகுரு தாய், தந்தையரும் மகனைக் கண்டித்து விட்டு, ''வேலூர் ஏ.எஸ்.ஏ. பெண்ணைத்தான் கட்ட வேண்டும்.''

''நாங்கள் வேறு பெண்ணைப் பார்க்க வரமாட்டோம் என்று மறுத்துவிட்டார்களாம். எப்படிப்பட்ட இடம். ஏ.எஸ்.ஏ. வீட்டில் சம்பந்தம் பண்ணகொடுத்து வைத்திருக்க வேண்டும். நீ வேண்டாம் சென்னையில் பெண் பார்க்கலாம்!'' என்று கூப்பிடுகின்றாயே நாங்கள் வரமாட்டோம்'' என்று மகனைத் திட்டியுள்ளார்கள். மயிலு எப்போதும் தன் தந்தையின் கட்டில், மெத்தை, தலையணை சலவைக்கு வரும் போது புதியதாகத் துணி மாற்றுவது வழக்கம். அப்பா ரூமில் பீரோவில் அவர் உடைகளை அடுக்கி வைப்பது, அழுக்குத் துணிகளை அப்புறப்படுத்துவது, டேபிள் மீது புத்தகங்களை அடுக்கி வைப்பது அனைத்தும் மயிலுதான் பார்த்துப்பார்த்துச் செய்து வைப்பாள். ஏ.எஸ்.ஏ.வும் தன் தாயிடம் என் மகள் எவ்வளவு அழகாக ரூமை சரிப் படுத்துகின்றாள் பாருங்கள்! என்று

பெருமையாகக் கூறுவாராம். அவருக்கு மனைவியில்லாததால் மகள் தான் அவர் ரூமில் எல்லாம் சரியாக அடுக்கி வைப்பார்.

அவ்வாறு அவள் மெத்தைக்கு பெட்ஷிட் மாற்றும்போது ஒரு இன்லேண்ட் கடிதம் கீழே விழுகின்றது. பொதுவாக புதியதாக, முக்கியமானதாக இருந்தால் எடுத்து வைப்பாள். பழைய பேப்பர், பத்திரிக்கைகள், பழைய கடிதங்கள் இப்படி இருப்பதை டேபிள்மீது சரிபார்த்து எடுத்து வைப்பாள். அதன்படி இந்தக் கடிதத்தைப் பிரித்துப் பார்க்கின்றாள். அந்தக் கடிதத்தில் திரு. யோகப்பாவுக்கு குமரகுரு எழுதியிருக்கின்றார். தாங்கள் என்னை முதலில் மன்னிக்க வேண்டும். எனக்கு பெண்ணைப் பிடித்திருக்கின்றது. குடும்பமும் பிடித்து இருக்கின்றது. இருந்தாலும் 2 காரணங்களால் இந்த இடம் வேண்டாம் என்று தோன்றுகின்றது. 1 பெண் கொஞ்சம் குண்டாக இருக்கின்றது. 2வது குண்டாக இருக்கும் பெண்களுக்கு 90 சதவீதம் குழந்தை பிறக்காது. அதனால் தான் யோசிக்கின்றேன். தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள். உங்கள் சிரமத்திற்கு நான் வருந்துகின்றேன் என்று எழுதியிருந்தார். இதை மயிலு படித்து விட்டு மிக்க வேதனையுடன் அந்தக் கடிதத்தை மெத்தையின் அடியில் அப்படியே வைத்துவிட்டு ரூமை விட்டு வெளியில் வந்து தனியாக உட்கார்ந்து அழுது கொண்டு இருக்கின்றாள். அலமேலு சாப்பிடக் கூப்பிடுகின்றார்கள். எனக்குப் பசியில்லை! சாப்பாடு வேண்டாம்'' - என்று கூறிவிட்டுச் சோகமே உருவாகப் பித்துப்பிடித்தவள் போல் உட்கார்ந்து இருக்கின்றாள். அலமேலு முத்தம்மாளிடம் சென்று மயிலுவைப் பற்றி கூறுகின்றாள்.

முத்தம்மாள் ரூமில் உட்கார்ந்து இருக்கும் மயிலுவிடம் வந்து. ''என்னம்மா! ஏன் சாப்பாடு வேண்டாம்! என்கின்றாய். கண்ணெல்லாம் சிவந்து இருக்கின்றது. சோகமாக இருக்கின்றாய். உடம்பு சரியில்லையா'' என்று பேத்தியை



அணைத்தவாறு கேட்கின்றார். மயிலு தேம்பித் தேம்பி அழுகின்றாள். அம்மா, அம்மா என்று ஒன்று சொல்லமுடியாமல் அழுகின்றாள். ''என்ன சொல்லும்மா! நீ அழக்கூடாது. எப்படிப் பார்த்து வளர்க்கின்றோம். என்னம்மா சொல்லு என்று பாட்டி கேட்கின்றார்கள். மயிலு தந்தையின் ரூமில் இருந்த கடிதத்தைப் படித்ததைக் கூறுகின்றாள். அன்றுதான் வீட்டில் அனைவருக்கும் விஷயம் தெரிந்தது. அலமேலு, முத்தம்மாள் அனைவரும் வருத்தப்பட்டு மயிலுவைச் சமாதானம் செய்கின்றார்கள். பிடிவாதமாக மயிலு சாப்பிடமால் அழுது கொண்டே தூங்கிவிட்டாள். இரவு வீட்டிற்கு வந்ததும் முத்தம்மாள் நடந்ததை மகனிடம் கூறி, இப்படியா அந்தப் பையன் கடிதம் எழுதுவது! என் பேத்தியை கஷ்டப்பட்டு எப்படியெல்லாம் வளர்த்தேன். இன்று குழந்தை அழுவது என்னால் தாங்க முடியவில்லை! என்று வருத்தப் படுகின்றார்கள். ஏ.எஸ்.ஏ.வும் இது வெளியில் தெரிந்தால் அவளும், நீங்களும் கஷ்டப்படுவீர்கள் என்று நான் யாருக்கும் சொல்லவில்லை, என்று வருத்தப்பட்டார்.

அடுத்த நாள் மயிலுவிடம் நீ வருத்தப்படாதே! இவனை விட நல்ல பையன் வருவான் என்று கூறுகின்றார். அன்று முதல் மயிலு பிடிவாதமாகச் சரியாகச் சாப்பிடுவது இல்லை. அவள் அதிகமான குண்டு இல்லை. கொஞ்சம் ஆரோக்கியமாக இருப்பாள். அந்தக் கடிதத்தில் குண்டு என்று சொல்லவே உடம்பை பாதியாக இளைத்து விட்டாள். மறுபடியும் தஞ்சிகவுண்டர் குடும்பம் யோகப்பாவிடம் சென்று தன்மகன் செய்ததற்கு மன்னிப்பு கேட்டு விட்டு என் மகனை நாங்கள் சம்மதிக்க வைத்துவிட்டோம். எங்களுக்கு அவர்கள் பெண்தான் வேண்டும். நீங்கள் அவர்களுக்குச் சொல்லுங்கள் என்று கேட்கின்றார்கள். அதற்கு அவர் என்னால் முடியாது; நீங்களே சென்று கேட்டுப்பாருங்கள் என்று கூறிவிட்டார். உடனே தஞ்சி கவுண்டர் தனியாக ஏ.எஸ்.ஏ. வை வந்து

பார்த்துப் பேசுகின்றார். ஏ.எஸ்.ஏ.வும் மறுத்து விட்டு அனுப்பி விட்டார். தஞ்சி கவுண்டர் சென்று பிறகு அவர் மனைவி, அண்ணியை அனுப்பி வைக்கின்றார். இரண்டு பெண்மணிகளும் வீட்டிற்கு வந்து முத்தம்மாளிடம் பேசுகின்றார்கள். தயவு செய்து எல்லாவற்றையும் மன்னித்து விடுங்கள். உங்கள் பெண்ணைக் கொடுங்கள் என்று கேட்கின்றார்கள். முத்தம்மாள் கோபமாக, ''முடியாது! நீங்கள் தயவுசெய்து போங்கள்'' என் பேத்தி பாதியாக இளைத்து விட்டாள்.

'எங்கள் குடும்பத்தில் யாரும் மலடு கிடையாது. எப்படி உங்கள் பையன் அப்படி எழுதலாம்' என்று கேள்விமேல், கேள்வி கேட்டு முடியாது என்று சொல்லி அனுப்பிவிட்டார்கள். மறுபடியும் அவர்கள் யோகப்பாவிடம் வருத்தப்பட்டு எப்படியாவது நீங்கள்தான் இந்த இடத்தை முடித்து தர வேண்டும் என்று கூறுகின்றார்கள். முத்தம்மாள் அந்த பெண்மணிகளிடம், உங்கள் பையனே நேரில் வந்து மன்னிப்பு கேட்டு எனக்கு பெண் பிடித்துள்ளது. சம்மதம் என்று சொன்னால் தான் நான் நம்புவேன். பெண்ணை வைத்து வாழ வேண்டியவன் அவன். உங்கள் விருப்பத்துக்காக நான் பெண் தரமாட்டேன். நாங்கள் வைத்து இருப்பது ஒரே செல்லப்பெண். அவளுக்கு வேறு மாப்பிள்ளை பார்த்துக் கொண்டு இருக்கின்றோம். போய் வாருங்கள்'' என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார். மயிலுவுக்கும் விருப்பம் இல்லை. வேறு இடம் பாருங்கள் என்கின்றாள்.

பிறகு தாய், தந்தையர்கள் பிள்ளைக்கு எடுத்துக் கூறிப் பிள்ளையை அழைத்து வந்து யோக சுந்தரத்திடம் பேச விட்டு மறுபடியும் பெண் வீட்டிற்கு அழைத்துச் செல்லுங்கள். இவன் சம்மதம் என்று நேரில் வந்து சொல்ல வேண்டும் என்று பாட்டி சொல்கின்றார்கள் என்று கூறவே, மறுபடியும் திரு. யோகப்பா ஏ.எஸ்.ஏ.விடம் நேரில் வந்து நான் சொல்லியது



தவறு. தயவு செய்து மனதில் எதுவும் வைத்துக்கொள்ள வேண்டாம். எனக்கு பரிபூரண சம்மதம் என்று சொல்கின்றார். பிறகு யோகப்பாவும் ஏ.எஸ்.ஏ.விடம் பையன் நல்லவன் அவன் நண்பர்கள் போட்டோவைப் பார்த்து மனதைக் கெடுத்துவிட்டு இருக்கின்றார்கள். இவ்வளவு தூரம் நாம் மறுத்தும் குடும்பத்துடன் மூன்று முறை வந்து கேட்கின்றார்கள். ''நீங்கள் என்ன சொல்கின்றீர்கள்!'' என்று கேட்கின்றார். ஏ.எஸ்.ஏ.வும் எல்லாம் ஆண்டவன் செயல் விதி கூட்டி வைக்கின்றது. 'சரி! நாம் அவர்கள் வீட்டிற்கு சென்று பார்த்து வரலாம்!'' என்கின்றார்கள். ஏ.எஸ்.ஏ.வீட்டில் இருந்து அனைவரும் சென்று பார்த்துவிட்டு வருகின்றார்கள். கிராமம் என்று எல்லோருக்கும் வருத்தம், பஸ் போக்குவரத்து இல்லை. மாட்டு வண்டியில் தான் செல்ல வேண்டும். இவர்கள் காரில் சென்று பார்த்து வந்து நல்ல மனிதர்கள்! நல்ல குடும்பம்! பையன் டாக்டர்! என்று விருப்பம் தெரிவித்து 'சரி' என்கின்றார்கள்.



*மயிலாம்பிகை குமரகுரு திருமண வரவேற்பு வைபவம்*

முதலில் நிச்சயதாம்பூலம் சிறப்பாக நடத்துகின்றார் தன் வீட்டில்! பிறகு ஏ.எஸ்.ஏ.தன் ஒரே மகளின் திருமணம் தடபுடலாக நடக்க ஏற்பாடு செய்கின்றார். டாக்டர் லஷ்மணன் பங்களா என்று சொல்லுவார்கள். வேலூர் ஆபிஸர்ஸ் லைனில் இருந்தது. பெரிய வெள்ளைக்காரன் கட்டிய அந்த மாடல் பங்களா, பெரிய மைதானம் கொண்டது. அந்தப்பங்களா காலியாக இருந்தது. வேலூரில் அப்போது திருமண மண்டபம் பெரியதாக இல்லை. அதனால் ஏ.எஸ்.ஏ. அந்தப் பங்களாவைப் பேசி வாடகைக்கு எடுத்து பங்களாவைச் சுற்றி உள்ள மைதானத்தில் பெரிய பந்தல் போடுகின்றார். மகாநாட்டு பந்தல்போல் கம்பீரமாக அமைத்து மேடையெல்லாம் போட்டு வெகு ஜோராக வண்ண விளக்குகளுடன் ஜொலிக்கின்றது. வேலூரில் அப்போது எந்தத் திருமணமும் இவ்வளவு விமரிசையாக நடக்கவில்லை. அவ்வளவு விமரிசையாக ஏற்பாடு செய்தார். 7 ஆயிரம் பத்திரிக்கை அடித்தார். வடஆர்க்காடு மாவட்டம் முழுவதும் உறவினர்கள், நண்பர்கள், அனைவருக்கும் கொடுக்கின்றார்.

உறவினர்கள் அனைவருக்கும் துணி எடுத்துக் கொடுக்கின்றார். நெருங்கிய நண்பர்களுக்கும் துணிகள். கடை குமாஸ்தா திருமணம் ஆனவர்களுக்கு தம்பதியுடன் துணிகள், திருமணம் ஆகாத ஆண்களுக்கு, அவருக்கும், அவர் தாய்க்கும் புடவை என்று வாங்கிக் கொடுக்கின்றார். திருமணத்திற்குச் சமையல்காரர்கள் அந்தக் காலத்திலேயே 50 பேர்கள். 3 நாள் தடபுடலாக 3 வேளை சாப்பாடு தயார் செய்து அளித்தார்கள். சமையலுக்கு விருந்து மெனு புது விதமாக ஏற்பாடு செய்கின்றார். மா, பலா, வாழை என்று முக்கனியுடன் சாப்பாடு, காலை, மாலை, இரவு, ஒவ்வொரு வேலையும் மூன்று விதமான ஸ்வீட்டுகள் வித, விதமான பாயசம் வகைகள் அவியல், கூட்டு, பொரியல், மோர்க் குழம்பு, வத்தக் குழம்பு என்று அறுசுவை உணவு ஏற்பாடுகள். மயிலுவின் திருமணம்



நல்ல நாளாக தேர்ந்தெடுத்து 6.6.1962 அன்று நடப்பதாக ஏற்பாடு, 5.6.1962 அன்று மாப்பிள்ளை அழைப்பு. ஏ.எஸ்.ஏ. பேக்கரி ஊழியர்கள் அனைவரும் கூட்டாகப் பணம் போட்டு அவர்களுக்குப் பிடித்தமான புடவை, சோளி, துணி, பாத்திரங்கள் 50 தட்டு வரிசைகள், ஒரு காரில் அலங்காரமாக வைத்து எஜமானரின் மகள் திருமணத்திற்கு என்று சீர் கொண்டு வந்தார்கள். ஏ.எஸ்.ஏ. பேக்கரி லாங்கு பஜாரில் ஆரம்பித்து வாணவேடிக்கைகளுடன், பேண்டு, வாத்தியம் முழங்க அமர்க்களமாக எடுத்து வந்தார்கள். திருமண மண்டபத்திற்கு கொண்டு வந்து வைத்து, இதனை அன்போடு ஏற்றுக் கொள்ள வேண்டும் முதலாளி, நாங்கள் ஆசையுடன் முதலாளி மகளுக்குத் திருமண அன்பளிப்பாகக் கொண்டு வந்தோம். நீங்கள் எவ்வளவோ எங்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் செய்கின்றீர்கள். நாங்கள் எங்கள் திருப்திக்குச் சிறிதளவு செய்கின்றோம் என்கின்றார்கள். ஏ.எஸ்.ஏ.அன்புடன் குமாஸ்தாக்களை கண்டிக்கின்றார். ஏன் இவ்வளவு பணம் செலவு செய்ய வேண்டும். உங்கள் அன்பு ஆசீர்வாதம் போதும்; என் மகளுக்கு இந்தக் கலியாண வேலையை ஆளுக்கொருவராக எடுத்து நல்ல மாதிரி செய்தாலே போதும்! என்கின்றார். அன்று இரவு மாப்பிள்ளை அழைப்பு இனிது முடிந்தது. மறுநாள் திரு. முருக கிருபானந்த வாரியார் சுவாமி தங்க ஏற்பாடு செய்து காலை முகூர்த்தத்திற்கு கார் அனுப்பி நேரில் சென்று ஏ.எஸ்.ஏ.அழைத்து வருகின்றார். விடியற்காலை பிரம்ம முகூர்த்தம் 4.30 யில் இருந்து 6 மணி வரை முகூர்த்த நேரம் எல்லாச் சடங்குகளும் இனிது நடைபெறுகின்றது. மணவறைக்கு வாரியார் சுவாமிகளை அழைத்து வந்து சரியாக விடியற்காலை 5 மணிக்கு தாலி எடுத்துக் கொடுக்கச் சொல்கின்றார்.

சுவாமிகள் திருக்கரங்களால் மாங்கல்யசரடு எடுத்துக் குமரகுரு கையில் கொடுக்க, குமரகுரு மயிலாம்பிகையின்

கழுத்தில் அணிவிக்க மாங்கல்யதாரணம் சுபமாக இறையருளால் நடக்கின்றது. சுவாமிகள் அட்க்ஷதை போட்டு ஆசீர்வதிக்கின்றார். ஏ.எஸ்.ஏ.வும் மற்றவர்களும் ஆசீர்வதிக்கின்றார்கள். ஏ.எஸ்.ஏ. முத்தம்மாள், பரமசிவம் கண்களில் ஆனந்தக்கண்ணீர் துளிர்க்கின்றது. எல்லாம் நன்றாக முடிந்தது. காலை உணவும் மத்திய உணவும் மாலை 5 மணி வரை நடந்து கொண்டே இருக்கின்றது. சில போக்கு ஏ.எஸ்.ஏ.சீட்டு கொடுத்து நேரம் ஆவதால் ஓட்டலுக்கு அனுப்பி வைக்கின்றார். அன்று மாலை 6 1/2 மணியில் இருந்து இரவு 9 மணி வரை வாரியாரின் வள்ளித்திருமணம் கதை ஏற்பாடு செய்து இருந்தார். ஏ.எஸ்.ஏ. எந்த சினிமா பாட்டு, கச்சேரியும் வைக்கமாட்டேன். வாரியாரின் ஆன்மீக கதைகள்தான் நான் மாலை வரவேற்புக்கு வைப்பேன் என்று அவ்வாறே செய்தார். அந்தத் திருமணப் பந்தல் நிறைந்து வெளியில் தெருவெல்லாம் ஜனங்கள் நின்று கதையைக் கேட்டார்கள். அவ்வளவு அற்புதமாக வாரியார் சுவாமிகள் திருமண வரவேற்புக்கு வள்ளித் திருமணம் கதை கூறினார்.

பெரிய பிரமுகர்கள், பலர் வந்திருந்தனர். மந்திரி மாணிக்கவேலர் குடும்பத்துடன் வந்து வாழ்த்தினார். எம்.பி., என்.ஆர். முனுசாமி நாயக்கர், எம்.பி., டாக்டர் ராமச்சந்திரன், கலெக்டர், பாஸ்கர் தொண்டைமான் இன்னும் ஐ.ஏ.எஸ். ஆபிஸர்கள், ஐ.பி.எஸ். ஆபிஸர்கள், எம்.எல்.ஏ.க்கள் நிறைய பேர் வந்து வாழ்த்தினார்கள். உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் திரளாக வந்து வாழ்த்தி விருந்துண்டு சென்றார்கள். ஏ.எஸ்.ஏ.க்கு மிகவும் மனத்திருப்தி. தன் மகள் திருமணம் நல்ல படியாக முடிந்தது. திருமணம் முடிந்து மூன்றாவது நாள் தன் மகளுக்குக் கொடுக்கும் சீர் வரிசைகள் அனைத்தும் கொடுக்கின்றார். மாப்பிள்ளைக்கும் செய்ய வேண்டிய முறைப்படி சீர் செய்கின்றார். மயிலுவை 3வது நாள் மாமியார் வீட்டிற்கு அழைத்துச் செல்லக் குமரகுரு வீட்டில்



இருந்து வந்தார்கள். அவர்களுடன் அனுப்பும்போது அவர் கண்கள் கலங்குகின்றது. மயிலுவும் தன் பாட்டி அம்மா முத்தம்மாள், தந்தை, அண்ணன் பரமசிவம், அலமேலு இவர்களின் கால்களில் வீழ்ந்து நமஸ்கரித்துத் தேம்பித் தேம்பி அழுகின்றாள். ஏ.எஸ்.ஏ. ஆறுதல் கூறுகின்றார். பெண்ணாகப் பிறந்தால் புகுந்த வீடு போய்த்தான் ஆக வேண்டும். கவலைப்படாதே 'அதிக தூரத்தில் இல்லை அரசம்பட்டு ஊர்! அடிக்கடி வரலாம். நீ தாய் வீட்டிற்குப் பெருமை தேடித்தர வேண்டும்.

தாயில்லாத பெண் சரியாக வளர்க்கவில்லை என்று உன் மாமியார் சொல்லக்கூடாது. தாய் வளர்ப்பதை விட ஒரு படி மேலாக நானும், பாட்டியும் உன்னை வளர்த்துள்ளோம் என்று அறிவுரையும், ஆசியும் கூறி விடைகொடுத்து அனுப்புகின்றார். பிள்ளை வீட்டாரிடமும் எங்கள் மகளை கண் கலங்காமல் பார்த்துக் கொள்ளுங்கள் என்றும் செல்லமாக வளர்ந்தவள். தெரியாமல் தவறு செய்தாலும் பொறுத்துக் கொள்ளுங்கள் என்றும் கூறுகின்றார். அவர்களும் உங்கள் மகளை எங்கள் மகள் போல் பார்த்துக் கொள்வோம். கவலைப்படாதீர்கள் என்று கூறி அழைத்துச் செல்கின்றார்கள். அவர்கள் ஊரிலும் சம்மந்தி வீட்டார்க்கு எதிர் விருந்து சிறப்பாக வைக்கின்றார்கள். மயிலுவின் திருமணத்திற்கு முன்பே மகள் ராஜத்திற்கு குமார், கோபி, ஜான்சி, பாஸ்கர், திலகவதி என்ற குழந்தைகள் பிறக்கின்றது. ஏ.எஸ்.ஏ. முத்தம்மாளிடம் வேடிக்கையாகச் சொல்லிச் சிரிப்பார். கையில் ஒன்று வயிற்றில் ஒன்று பிள்ளைக் கொடுத்து விடுகின்றான் மாப்பிள்ளை என்பார். முதல் பேரன் குமார் தாத்தா வீட்டிலேயே படித்து வளர்ந்தான். அலமேலுவுக்கு உண்ணாமுலை ராணி பிறந்த பிறகு ஒரு ஆண் குழந்தை பிறக்கின்றது.

ஏ.எஸ்.ஏ.வுக்கு மிக்க மகிழ்ச்சி பேரன் பிறந்தது, பேரனுக்கு பழநி என்று பெயர் வைத்தார். எப்பொழுதும் அவர்

மட்டும் பழநி என்று தான் கூப்பிடுவார். பரமசிவம் தன் இணைபிரியா நண்பர் பெயர் ஷண்முகம். அவர் பெயரை ஷண்முகம் என்று வைத்துச் செல்லமாக 'ஷான்' என்று கூப்பிடுவது வழக்கம். அதன் பிறகு அலமேலுவுக்கு ஒரு பெண் குழந்தை பிறக்கின்றது. உமா மகேஸ்வரி என்ற பெயர் சூட்டுகின்றார்கள். பரமசிவத்திற்கு மூன்று குழந்தைகள்! மயிலு திருமணம் முடிந்ததும் குமரகுரு எம்.பி.பி.எஸ். ஹவுஸ் சர்ஜன் சென்னையில் ஒரு வருடம் முடிக்க வேண்டும். அதனால் குமரகுருவின் பெற்றோர்களும் குமரகுருவும் முடிவெடுத்து ஏ.எஸ்.ஏ.விடம் உங்கள் மகள் வேலூரிலேயே உங்கள் வீட்டில் இருக்கட்டும்; பையன் முடித்துவிட்டு வந்ததும், எந்த ஊரில் வேலை கிடைக்கின்றதோ அங்கு குடும்பம் அமைக்கலாம். அவன் சென்னையில் இருந்து வந்து வாராவாரம் மனைவியைப் பார்த்துச் செல்வான். கிராமத்திற்கு வந்ததும் எந்த ஊரில் வேலை கிடைக்கின்றதோ அங்கு குடும்பம் அமைக்கலாம்.

அவன் சென்னையில் இருந்து வாராவாரம் மனைவியை பார்த்துச் செல்வான். கிராமத்திற்கு வந்து போவது கடினமாக இருக்கும் என்றார்கள். மயிலுவுக்கு மிக்க மகிழ்ச்சி. அவர்கள் கூறியபடி வேலூரில் தாய் வீட்டில் இருந்தாள். குமரகுரு சனி இரவு 10 மணிக்கு வருவார். ஞாயிறு ஒருநாள் தங்கித் திங்கள் விடியற்காலை 4 மணிக்கு பஸ்ஸுக்குச் சென்று விடுவார். 7 மணிக்கு எம்.எம்.சி.யில் இருக்க வேண்டும். டாக்டர் மு.வ. மகன் டாக்டர். அரசு, குமரகுருவுடன் எம்.எம்.சி.யில். ஒன்றாகப் படித்த நெருங்கிய நண்பர். திருமணத்திற்கு மு.வ. குடும்பம் வந்து சென்றார்கள். குமரகுருவைத் திருமணம் முடிந்ததும் சென்னைக்கு அழைத்து விருந்து கொடுக்கின்றார்கள். ஜூலை 15ம் தேதி டாக்டர் அரசு மனைவி கலா, குமரகுரு, மனைவி மயிலாம்பிகை நால்வரும் தேனிலவு சென்று வர வழி அனுப்பி வைக்கின்றார்கள். டாக்டர் அரசுவுக்கு மே மாதம் 7ம் தேதி திருமணம் நடந்ததாம்.



ஜூன் 6ம் தேதி குமரகுருவுக்குத் திருமணம். புதுமணத் தம்பதிகளாக வேலூர் வந்தார்கள். குமரகுரு வேலூர் வந்து தன் மாமனார் வீட்டில் நாங்கள் இருவரும் என் நண்பன் தம்பதியுடன் தேனிலவு சென்று வருகின்றோம் என்று அழைத்துச் செல்கின்றார். பத்திரமாகச் சென்று வாருங்கள் என்று விடை கொடுத்து அனுப்புகின்றார்கள். சென்னையில் மு.வ. வீட்டிற்கு வந்து அவர்களுடன் சேர்ந்து தேனிலவு செல்கின்றார்கள். குற்றாலம், பழனி, திருச்செந்தூர், கொடைக்கானல் ஊட்டி சென்று 15நாள் உல்லாசமாகக் கழித்து வீடு திரும்புகின்றார்கள். மயிலு முதலில் பயத்துடன் இருக்கின்றாள். டாக்டர் அரசு மயிலுவிடம் எனக்குத் கூடப் பிறந்த சகோதரி கிடையாது. உன்னை எனக்குத் தங்கையாகக் கருதுகின்றேன். பயப்படாமல் பேசும்மா! என்று கூறுகின்றார். கலாவும் நன்றாகப் பழகுகின்றார்கள்.

மயிலு இருவரிடமும் அண்ணா, அண்ணி என்று கூப்பிட்டுப் பாசத்துடன் நால்வரும் பழகுகின்றார்கள். அன்று முதல் மு.வ.வீட்டு மகளாகக் கருதினார்கள். மு.வ. மனைவி ராதா அம்மாளுக்கு மயிலுவை மிகவும் பிடித்துவிட்டது. எப்போதும் அன்பாக இருவரும் பேசி உபசரிப்பார்கள். முதலில் கலாவும் பிறகு 2 மாதம் கழித்து மயிலுவும் தாய்மை யடைகின்றார்கள். இரு குடும்பத்திலும் மிக்க மகிழ்ச்சி. ஏ.எஸ்.ஏ. வீட்டில் அனைவரும் மிக்க மகிழ்ச்சியடைகின்றார்கள். மயிலு திருமணம் முடிந்த இரண்டாம் மாதமே கருவுற்றாள். மாப்பிள்ளை குமரகுரு சென்னையில் இருந்து வந்ததும் முத்தம்மாள் விடவில்லை. குமரகுருவின் வாயில் சர்க்கரையைச் சாப்பிடக் கொடுத்து என் பேத்திக்கு குழந்தை பிறக்காது என்றாயே! இப்ப என்ன சொல்கின்றாய்? என்று கேள்வி கேட்டுச் சிரிக்கின்றார்கள்.

# வள்ளி வருகின்றாள்

**குழலினிது யாழ்இனிது என்பதம் மக்கள்**
**மழலைச் சொல்கேளா தவர் (கு.51)**

*'தம் மக்களின் மழலைச் சொல்லைக் கேட்டு அதன் இனிமையை நுகராதவரே குழலின் இசை இனியது, யாழின் இசை இனியது என்று கூறுவர்.'*

**கு**மரகுரு அசடு வழிய, ''போங்கள் பாட்டி! நான் ஏதோ தெரியாத்தனமாக எதையோ எழுதிவிட்டேன். தப்புதான் பாட்டி நான் ஒத்துக்கொள்கின்றேன்'' என்று சிரிக்கின்றார். மயிலு நாணத்துடன் வெட்கமாகத் தலைகுனிந்து கணவரைப் பார்த்துச் சிரிக்கின்றாள். மயிலுவுக்கு தினமும் வாந்தி. எதையும் சாப்பிடமுடியவில்லை. மிகவும் இளைத்துவிட்டாள். ஏ.எஸ்.ஏ. மிகவும் கஷ்டப்படுகின்றார். நிறைய பழங்கள் வாங்கி வந்து கொடுக்கின்றார்கள். மயிலுவின் மாமனார், மாமியாருக்கும் மிக்க மகிழ்ச்சி! அவர்களும் வந்து பார்த்துச் செல்வார்கள்.

மயிலுவுக்கு ஏ.எஸ்.ஏ. ஆன்மீக கதைப் புத்தகங்களைக் கொடுத்து, இவைகளை தினமும் படிக்க வேண்டும். கருவுற்று இருக்கும் போது நல்ல புத்தகங்கள்



படிப்பது, நல்லவற்றைக் கேட்பது இப்படி செய்தால் ஞானமுள்ள குழந்தை பிறக்கும் என்று கூறுகின்றார். மயிலுவும் அவ்வாறே பின்பற்றுகின்றாள். குழந்தை பிறக்கும் வரை வாந்தியாக இருந்தது. எப்படியோ ஏற்றுக் கொள்வதைச் சாப்பிட்டுத் தந்தை சொன்னபடி நல்ல புத்தகங்களைப் படிப்பது, இறைவழிபாடு பூஜை செய்தல் இவைகளை செய்து வருகின்றாள். வளைகாப்பும் நடக்கின்றது. குமரகுரு வேலூர் அரசு மருத்துவமனையில் மயிலுவை லேடி டாக்டர் லோகாம்மாள் என்பவரிடம் அறிமுகப்படுத்தி மாதம் தோறும் உடல் பரிசோதனை செய்து கொள்ளும்படி ஏற்பாடு செய்து இருந்தார்.

அவ்வாறே ஒவ்வொரு மாதமும் அலமேலு மயிலுவை அழைத்துச் சென்று பரிசோதனை செய்து வருவார்கள். மயிலுவும் சந்தோஷமாக இருந்து வருகின்றாள். 1963ம் வருடம் ஏப்ரல் மாதம் 22ம் தேதி திங்கட்கிழமை விடியற்காலை 5 மணிக்கு பிரசவ வலி ஏற்படுகின்றது. பரமசிவமும், அலமேலுவும் வேலூர் கவர்மெண்ட் ஆஸ்ப்பிட்டலுக்கு அழைத்துச் சென்று 7 மணிக்கு அட்மிஷன் செய்கின்றார்கள். டாக்டர் லோகாம்பாள் பிரசவம் பார்க்க 9.15 மணிக்குச் சுகப்பிரசவமாக அழகான பெண்குழந்தை பிறக்கின்றது. பரமசிவம் வெளியில் காத்திருக்கின்றார்கள். மயிலு கட்டிலில் படுத்திருக்கின்றாள். குழந்தையைத் தொட்டிலில் படுக்க வைத்து இருக்கின்றார்கள். அலமேலு வெளியில் இருக்கும் தன் கணவர் பரமசிவத்திடம் குழந்தை பிறந்த விஷயத்தைக் கூறி அழைத்து வருகின்றார். பரமசிவம் தொட்டிலில் இருக்கும் குழந்தையைத் தூக்கி என் மருமகள் வள்ளி பிறந்து விட்டாள் என்று மனைவியைப் பார்த்துக் கூறுகின்றார். அலமேலு தன் கணவனைப் பார்த்து ''என்னங்க! இப்படித்தான் குழந்தை பிறந்தது. அதற்குள் பெயர் சொல்கின்றீர்கள்!'' என்று கேட்கின்றார்கள்.



*வள்ளலின் பேரக் குழந்தைகள் ஸ்ரீவள்ளி, சேந்தன், ஆனந்தன், திலகவதி*

'என் தங்கை கர்ப்பம் என்று சொன்னவுடன் நான் வள்ளிமலை வள்ளியை வேண்டிக்கொண்டேன். என் தங்கைக்கு முதலில் பெண்குழந்தை பிறக்க வேண்டும். உன் பெயரை வைக்கின்றேன்!'' என்று வேண்டிக் கொண்டேன் என்று சந்தோஷமாகக் கூறுகின்றார். சென்னையில் இருக்கும் டாக்டர் குமரகுருவுக்குப் போன்மூலம் தெரிவிக்க அவர் உடனே வந்து மனைவியையும், குழந்தையும் கண்டு பூரித்துப் போகின்றார். ஏ.எஸ்.ஏ.வும் குடும்பத்தினரும் பெரும் அளவில் மகிழ்ச்சியடைகின்றனர். அரசம்பட்டில் இருந்து தாத்தா, பாட்டி, அத்தைகள் அனைவரும் வந்து பார்த்துச் செல்கின்றனர். ஆஸ்பிட்டலில் இருந்து வந்தவுடன் 5வது நாள் தொட்டில் போடும் விழா விமரிசையாகச் செய்கின்றார்கள். குமரகுரு ஹவுஸ் சர்ஜன் முடித்து விட்டு வேலூர் கவர்மெண்ட் ஆஸ்ப்பிட்டலில் வேலைக்குச் சேருகின்றார். குமரகுருவின் தங்கை சரோஜா வேலப்பாடியில் வசித்து வருகின்றார். அவருக்கு 8 வருடம் குழந்தை இல்லாமல் இருந்து மயிலு கர்ப்பமாக இருக்கும்போது அவரும் 6 மாதம் கழித்து கர்ப்பம் ஆகி அவருக்கும் ஒரு பெண் குழந்தை (உஷா) பிறக்கின்றது.



''எங்க அண்ணி மயிலு வந்த யோகம் தான் மருத்துவம் பார்க்க நானும் குழந்தை உண்டானேன்!' என்று பேசுவார்கள். குமரகுருவுக்கு மாலை வேலையில் ஒரு சிறிய கிளினிக் வைத்து கொடுக்கின்றார் மாமனார். 2 வருடம் வேலூரில் வேலை செய்த பிறகு வடுகந்தாங்கல்-20 கி.மீ. தொலைவில் உள்ள சிறிய ஆஸ்ப்பிட்டலுக்கு மாற்றலாகி பிறகு வேட்டவலம் மாற்றலாகின்றது. ஊர், ஊராக மாற்றுவது ஏ.எஸ்.ஏ.வுக்குப் பிடிக்கவில்லை. மகளை விட்டுப் பிரிந்து இருக்கமுடியவில்லை. வருத்தமாக இருக்கின்றார்.

இந்தச் சமயத்தில் குமரகுருவும் யோசித்து மாமனாரிடம் கூறுகின்றார். நான் கவர்மெண்ட் வேலையை விட்டுவிட்டுப் பிரைவேட்டாக சிறிய கிளினிக் வைத்து நடத்துகின்றேன் என்று கூறுகின்றார். ஏ.எஸ்.ஏ.வும் செய்யுங்கள் என்று கூறுகின்றார். குமரகுரு தினமும் மாலை வேலையில் தன் மனைவியை அழைத்துக்கொண்டு வேலூர் முழுவதும் சுற்றிப் பார்க்கின்றார். பிறகு தோட்டப்பாளையத்தில் கிளினிக் வைக்கலாம் என்று கூறுகின்றார். தோட்டப்பாளையம் பிள்ளையார் கோவில் தெருவில் உள்ள சுந்தர் ரேடியோ அவுஸ் உரிமையாளர் துளசிராமன் முதலியார் வீட்டை வாடகைக்குப் பேசி அங்கு தன் மகளைக் குடித்தனம் வைக்கின்றார்.

பெரிய நீளமான வீடு, முன் பக்கம் கிளினிக், பின்பக்கம் வீட்டில் குடித்தனம். இப்படி அமைத்துக் கொடுக்கின்றார். கிளினிக் நடத்த வேண்டிய சாமான்கள் அனைத்தும் வாங்கிக் கொடுத்து நல்ல நாளில் பால் காய்ச்சி, பூஜை செய்து குடிபுகுகின்றார்கள். காலை 7 மணி முதல் 9 மணி வரை வேலூரில் பிராக்டிஸ். சரியாக 9 1/2 மணிக்கு கே.வி. குப்பம் சென்று மாலை 6 மணிக்குத் திரும்பி வருவார். 9 1/2 மணி முதல் 6 மணி வரையில் கே.வி. குப்பத்தில் சொந்தமாக கிளினிக் வைத்து நடத்தினார். ஏ.எஸ்.ஏ.முதலில் என் மருமகள்

பெட்ரோல் வாங்கச் சம்பாதனை வேண்டும். அதனால் முதலில் சைக்கிள் பிறகு தான் கார் என்று அப்படியே வாங்கிக் கொடுத்தார். வேலூரில் வேலை செய்யும் போது சைக்கிளில் சென்று வருவார். கே.வி. குப்பம் போகும்போது பியட் கார் வாங்கிக் கொடுத்தார். குமரகுரு மாமனார் மெச்சிய மருமகனாக வாழ்ந்தார்.

தோட்டப்பாளையத்தில் குடும்பம் ஆரம்பித்தவுடன் அரசம்பட்டில் இருந்து குமரகுருவின் தம்பி சண்முகமும், தங்கை பரமேஸ்வரியும் படிப்பதற்காக வேலூர் வந்து அண்ணன் வீட்டில் தங்கிப் படித்தார்கள். மயிலுவுக்கு ஒரு சிறிய வேலைக்காரப் பெண்-பெருக்க, துணி துவைக்க மட்டும். மற்ற வேலைகள் அனைத்தும் மயிலு திறமையாகச் செய்து வந்தாள். மயிலு காலை 5 மணிக்கு எழுந்து குளித்துப் பூஜை முடித்து கணவர், மைத்துனர், நாத்தனார் குழந்தை வள்ளி அனைவருக்கும் டிபன் செய்து, உடனே சமையல் முடித்துக் கணவருக்குக் கேரியரில் சாப்பாடு கட்டித் தருவார். 91/2 மணிக்கு அவர் கிளம்பிவிடுவார். பிள்ளைகளும் பள்ளி சென்று விடுவர். குமரகுரு கிளினிக் முடித்து அப்படியே சென்று விடுவார், கிளினிக் முழுவதும் சுத்தப்படுத்தி, டாக்டருக்கு ஊசி எல்லாம் கொதிக்க வைத்து, பட்ஸ் தயாரிப்பது மாத்திரை மடிக்க பேப்பர் கட் பண்ணி வைப்பது முதல் அனைத்தும் சுத்தமாக, ரெடியாக செய்து வைப்பாள். குமரகுரு வந்து காபி சாப்பிட்டு, முகம் அலம்பி 1/4 மணி நேரம் தான் செலவழிப்பார். உடனே கிளினிக்கில் உட்கார்ந்து விடுவார். வேலூரிலும், கே.வி. குப்பத்திலும் டாக்டருக்கு நல்ல பெயர். நோயாளிகள் அதிகம் வர ஆரம்பித்தார்கள். நோயாளிகளுக்கு வீட்டிலேயே இரண்டு அறைகளில் தங்க வைத்து சிகிச்சை அளித்து வந்தார். தன் மனைவியிடம் கூறுகின்றார். அசௌகர்யத்தை கொஞ்சம் பொறுத்துக் கொள், எத்தனையோ குடும்பங்கள் ஒண்டிக் குடித்தனம் செய்கின்றார்கள்.



நாம் நோயாளிகளுக்கு நல்லது செய்கின்றோம். பிறகு மருத்துவமனை தனியாக வைக்கலாம். அதற்கு நிறைய பணம் தேவை. சம்பாதித்தால்தான் முடியும். கொஞ்சம் கஷ்டத்தை பொறுத்துக் கொள் என்கின்றார். மயிலுவுக்குப் பிடிக்கா விட்டாலும் கணவனுக்கு அடி பணிந்து அவர் மனம் கோணாமல் நடந்து கொள்கின்றாள். ஒரே ஒரு நர்ஸ் தான் வேலை செய்வாள். குமரகுருவும் கற்றுக் கொடுத்து இருந்தார். ஏ.எஸ்.ஏ. தினமும் வந்து மாப்பிள்ளை கிளினிக் நடத்துவதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார். தன் மகளிடம் மைத்துனர், நாத்தனார் இவர்களை நன்றாக கவனித்துக் கொள். உனக்கு கஷ்டமாக இருந்தாலும் அவர்களை அன்பாக நடத்தி, நன்றாக கவனித்துக் கொள்ள வேண்டும் என்று புத்தி கூறுகின்றார்.

மாமியார், மாமனாரும் அடிக்கடி வந்து செல்வார்கள். மயிலு மத்தியான வேளையில் தன் தாய் வீட்டுக்குச் சென்று அப்பாவுடன் இருந்துவிட்டு மாலை 4 மணிக்கு வந்து விடுவாள். வருஷா வருஷம் சேண்பாக்கம் கோவிலுக்கு முத்தம்மாள், அலமேலு அனைவரும் மயிலுவையும் அழைத்துக் கொண்டு ஆடி வெள்ளியன்று சென்று வருவார்கள். ஒருமுறை என்ன காரணமோ மயிலுவைக் கூப்பிடாமல் சென்று விட்டு விட்டார்கள். அன்று இரவு கொழுக்கட்டை ஒரு டப்பியில் கொடுத்தனுப்புகின்றார்கள். அதை மயிலு கோபமாக வேண்டாம் என்று திருப்பி அனுப்பிவிட்டாள். என்னைக் கோவிலுக்கு அழைத்துப் போகவில்லை. எனக்குப் பலகாரம் வேண்டாம் என்று அனுப்பிவிட்டாள். இந்த விசயம் ஏ.எஸ்.ஏ.வுக்குத் தெரிந்து, அடுத்த நாள் மயிலுவின் வீட்டிற்கு வருகின்றார். தன் மகளை அழைத்து பக்கத்தில் உட்கார வைத்து, ''அவர்கள் கோவிலுக்குக் கூப்பிடாமல் சென்றது குற்றமாகவே இருந்தாலும் அண்ணி அனுப்பிய பலகாரத்தைத் திருப்பி அனுப்பி விட்டாயே! இது தவறும்மா! அப்படிச் செய்யக்கூடாது. அவள் உன்னை எப்படியெல்லாம் அன்பாக

வளர்த்தாள். அவள் மனம் புண்படும்படி நடக்கலாமா? நீ என் மகள். பெருந்தன்மையாக நடக்க வேண்டாமா? இனிமேல் அப்படி செய்யக்கூடாது. இதே மாதிரி உன் நாத்தனார் திருப்பி அனுப்பினால் உனக்குக் கோபம் வருமே; அதை நினைத்துப்பார்; தெரியாமல் செய்துவிட்டாய்! இனிமேல் அப்படி செய்யக் கூடாது! என்று அறிவுரை கூறிச் செல்கின்றார்.

கணவர் மனம் கோணாமல் நடந்து கொள். பாவம் நிறைய கஷ்டப்படுகின்றார். ஓய்வில்லாமல் வேலை செய்கின்றார். சிரித்த முகத்துடன் வரவேற்று, இனிமையாகப் பேசி, வாய்க்கு ருசியாக சமைத்துப்போட வேண்டும் என்று கூறுகின்றார். மயிலும் அப்படியே நடந்து கொள்கின்றார். மயிலு ருசியாக சமைக்கின்றாள். பரமசிவம் தன் தங்கை மிகவும் ருசியாக சமைக்கின்றாள் என்று வீட்டில் பெருமையாகச் சொல்வாராம். அடிக்கடி தங்கையை வந்து பார்த்துச் செல்வார். சிலசமயம் சாப்பிட்டுச் செல்வார். அவருக்குத் தங்கையின் ரசம் மிகவும் பிடித்து விட்டது. தினமும் எனக்கு மிளகு ரசம் கொடுத்தனுப்பும்மா என்று பிரியமாகச் சொல்கின்றார். தினமும் காலை 12 மணிக்கு ஒரு கடை குமாஸ்தா தோட்டப்பாளையம் வந்து ஒரு தூக்கில் ரசம் வாங்கிச் செல்வார். மயிலுவும் தன் அண்ணனுக்காக ருசியாக மிளகு ரசம் வைத்து அனுப்புவார். மூன்று மாதம் தினம் ரசம் அனுப்பப்படுகின்றது. அங்கு மருமகள் அலமேலு மூஞ்சியைத் தூக்கி வைத்துக் கொண்டு நான் வைக்கும் ரசம் பிடிக்கவில்லையாம். தங்கை வீட்டு ரசம் தான் நன்றாக உள்ளதாம் என்று சலிப்புடன் வருத்தமாக பேசுவது ஏ.எஸ்.ஏ.காதுக்கு எட்டவே மகனுக்கு கடையில் அறிவுரை கூறுகின்றாராம்.

''உன் தங்கையின் ரசம் ருசியாக இருக்கின்றது என்று அவ்விடமே வாங்கி நீண்டநாள் சாப்பிடுவதால் உன் மனைவி வருத்தப்படுவது அறிந்தேன். உனக்கு இஷ்டமாக இருக்கும் போது தங்கை வீட்டில் வாங்கி சாப்பிடு. தினமும் வேண்டாம், வீணாக உன் மனைவி வருத்தப்படும்படி நடக்காதே'' என்று மகனுக்கும், மகளுக்கும் அன்பும், பாசமும், கண்டிப்பும் சொல்லி வளர்க்கின்றார்.



பிறகு வளர்ப்பு மகன் நீலகண்டனுக்குத் திருமணம் செய்ய மாண்டியாவில் திரு சம்பங்கிராமன் மகள் செல்வி. துளசியை பெண் பார்க்க அனைவரையும் அழைத்துச் செல்கின்றார். பெண்ணை அனைவருக்கும் மிகவும் பிடித்து விட்டது. ஜாதகமும் பொருத்தமாக இருந்தது. பெண்ணுக்குத் தமிழ் படிக்கத் தெரியாது. கன்னடம், ஆங்கிலம் தான் படித்தாள் என்று பெண் வீட்டில் சொல்கின்றார்கள். உடனே ஏ.எஸ்.ஏ. அரிச்சுவடி வாங்கிக் கொடுத்துத் திருமணத்திற்கு மூன்று மாதம் உள்ளது. அதற்குள் கூட்டி படிக்க கற்றுக் கொள்ளும்மா என்று கூறுகின்றார். முதலில் நிச்சயதாம்பூலம் நடத்தி, பிறகு வெகு விமரிசையாக மாண்டியாவில் திருமணம் நடக்கின்றது. மகன் நீலகண்டனையும், மருமகள் துளசியையும் அழைத்து வரச் சொல்லி மகள் மயிலுவையும், மருமகன் குமரகுருவையும்



*வள்ளித் திருமணம்*

விட்டு அனைவரும் வேலூர் செல்கின்றனர். அவ்வாறே மாப்பிள்ளை, பெண்ணை அழைத்துக்கொண்டு வேலூர் வருகின்றார்கள். வேலூரில் வரவேற்பு விமரிசையாக நடத்துகின்றார்.

ஏ.எஸ்.ஏ. மருமகள் துளசி மீதும் மிகுந்த பாசம் காட்டுகின்றார். அலமேலுவிடம் கூறுகின்றார். சின்ன பொண்ணு, வேறு மாநிலம், கன்னடம் பேசிப் பழக்கம்! சமையலும் சரியாகத் தெரியாது. நீ கூடப்பிறந்த தங்கையாகக் கவனித்து சமையல் கற்றுக் கொடும்மா! என்று அன்போடு மருமகளிடம் கூறுகின்றார். அலமேலுவும் துளிசியிடம் அன்பாகப் பழகி அனைத்துக் குடும்பப் பொறுப்பும் கற்றுக்கொடுக்கின்றார். இப்போது ஒரு கவிதை உதாரணமாக கூறுகின்றேன். கம்பன் வீட்டு கட்டுத்தறியும் கவிபாடும் என்று சொல்வது போல் ஏ.எஸ்.ஏ.வீட்டுச் சமையலை அனைவரும் ருசியாகச் சமைப்பார்கள் என்பதற்கேற்ப மருமகள் துளசி சமையலில் பெயர் எடுத்தார்கள். அடக்கமே உருவமாக சிரித்தமுகத்துடன் அனைவரிடமும் பழகி, மாமனார் மெச்சிய மருமகளாக திகழ்ந்தாள். ஏ.எஸ்.ஏ.வுக்குப் பரமதிருப்தி. துளசி நல்ல பெண்ணாக அமைந்தாள் என்று பெருமையாகக் கூறுவார். சம்மந்தி சம்பங்கிராமன் பில்டிங் கான்ராக்டர். அவரும் ஏ.எஸ்.ஏ. போல அடக்கமான, நல்ல உள்ளம் படைத்தவர். இருவரும் நெருங்கிய நண்பர்களாக வாழ்ந்தார்கள். மாண்டியா சென்று 2 நாள் ஏ.எஸ்.ஏ. தங்கி வருவார். சம்மங்கிராமன் வேலூர் வந்து இரண்டு நாள் தங்கிச் செல்வார். மிகவும் சந்தோஷமாக வாழ்ந்தார்கள். நீலகண்டனுக்கு ஒரு பெண் குழந்தை மாண்டியாவில் பிறக்கின்றது.

ஏ.எஸ்.ஏ. அனைவரையும் அழைத்துச் சென்று குழந்தையைப் பார்த்து வருகின்றார். 3வது மாதம் தொட்டில் போட்டு விழா நடத்தி விட்டு, வீட்டிற்கு வேலூர் அழைத்து வருகின்றார். குழந்தை கொழு, கொழு என்று கிளாஸ்கோ



விளம்பரப் படத்தின் குழந்தை போல் செக்கச் செவேல் என்று பால் மாதிரி வெள்ளையாக இருக்கின்றாள். குழந்தைக்கு லலிதா லட்சுமி என்று பெயர் சூட்டுகின்றார். எல்லாப்பாசமும் பன்மடங்காகச் சேர்த்து குழந்தை லல்லி தாத்தாவை கவர்ந்து விட்டாள். குழந்தை லல்லியிடம் அளவுக்கு அதிகமாகப் பாசம் செலுத்துகின்றார். அந்தக் குழந்தை தாத்தா, தாத்தா அவரையே சுற்றிச் சுற்றி வரும். அவர் வந்தால் அவர் கிட்டப்போய் கட்டிலில் படுத்துக் கொள்ளும். எல்லாக் குழந்தைகளையும் விட இவள் தான் தாத்தா வயிற்று மேல் ஏறி உட்கார்ந்து கொண்டு குதிப்பாள். ஏ.எஸ்.ஏ.வுக்கு மகிழ்ச்சி தாள முடியாது அவ்வளவு சந்தோஷமாக இருந்தார்.

டாக்டர் குமரகுரு கிளினிக் போதவில்லை. தனியாக ஒரு பெரிய ஆஸ்ப்பிட்டல் கட்ட வேண்டும் என்று நினைக்கின்றார். வேலூரில் நிறைய டாக்டர்கள், தனியார் சிறிய அளவில் ஆஸ்ப்பிட்டல்கள் இருக்கின்றன. அதனால்



*'குமரன் மருத்துவமனை'க்கான பூமி பூஜை நிகழ்த்துகிறார் வள்ளல்*

ஆஸ்ப்பிட்டல் இல்லாத இடத்தில் வைக்க வேண்டும் என்று விரும்பிப் பாலாற்றைக் கடந்து டவுன்சிப் வந்து பார்க்கின்றார். டவுன்சிப் முழுவதும் நிலமாக உள்ளது. காங்கேயநல்லூர் ஊரும், விருதம்பட்டு ஊரும் தான் உள்ளது. விருதம்பட்டு ரோடு ஓரம் உள்ள நிலம் காலியாக இருந்தது. இந்த இடத்தில் ஆஸ்ப்பிட்டல் கட்டினால் நன்றாக இருக்கும் என்று தன் மனைவியிடம் கூறுகின்றார். நல்ல வேளை அந்த இடம் காலி மனை, ஏ.எஸ்.ஏ. வாங்கி பரமசிவத்தின் பெயரில் இருந்தது. மயிலு தன் தந்தையிடம் விருதம்பட்டு ரோடு ஓரம் உள்ள நிலத்தில் ஆஸ்ப்பிட்டல் கட்டலாம் என்று தன் கணவர் கூறியதைக் கூறுகின்றாள்.

உடனே ஏ.எஸ்.ஏ.சரிம்மா!'' என்று கூறிவிட்டுத் தன் மகன் பரமசிவத்தை கேட்கின்றார். ''என்னப்பா உன் மைத்துனருக்கு ஆஸ்ப்பிட்டல் கட்ட அந்த இடம்



*குமரன் மருத்துவமனை திறப்பு விழாவிற்கு வருகைத் தரும் வாரியார் சுவாமிகள்*



பிடித்துள்ளதாக உன் தங்கை கேட்கின்றாள். உனக்கு சம்மதமா? நீ என்ன சொல்கின்றாய்?'' என்று கேட்கின்றார். அதற்கு, பரமசிவமும், ''எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை! உங்கள் விருப்பப்படி செய்யுங்கள் அப்பா!'' என்று சந்தோஷமாகக் கூறுகின்றார். உடனே பரமசிவம் அந்த நிலத்தைத் தங்கைக்குத் தானமாக எழுதிக் கொடுக்கின்றார். பிறகு ஆஸ்ப்பிட்டல் கட்ட முடிவு எடுக்கின்றார். ஏ.எஸ்.ஏ. பேக்கரிக்கு பிளான் போட்டு கொடுத்த இன்ஜினியர் அன்சாரி பேக் அவர்களை வரவழைத்துக் காண்பித்து விருதம்பட்டு நிலத்தில் ஆஸ்ப்பிட்டல் கட்டப் பிளான் போட்டுத் தரச் சொல்கின்றார். அவர் பிளான் போட்டு கொடுக்க எங்கள் குடும்ப மேஸ்திரி எல்லப்பனைக் கட்டிடம் கட்ட நியமிக்கின்றார். ஒரு நல்ல நாளில் பூமி பூஜை போட்டுக் கட்டிடம் ஆரம்பிக்கப்படுகின்றது.

ஏ.எஸ்.ஏ.வும், மேஸ்திரி எல்லப்பாவும் மனையடி சாஸ்திரப்படி இன்ஜினியர் பிளான்படி எல்லாம் அமைக்கின்றார்கள். மருமகப் பிள்ளையிடம் ''ஆஸ்ப்பிட்டலில் எந்த, எந்த இடத்தில் எந்த ரூம் வரவேண்டும்; அதற்கு உன் ஆலோசனையும் சொல்லி விட்டுப் போப்பா!'' என்பார். தினமும் ஏ.எஸ்.ஏ. காலை 5 மணிக்கு பேக்கிரி திறந்து விட்டு மகன் 8 மணிக்குக் கடைக்கு வந்ததும் குப்புசாமி கார் ஓட்ட அம்பாஸிடர் காரில் பேத்திகள் ஸ்ரீ வள்ளி, உமா இருவரையும் ஏற்றிக் கொண்டு புறப்பட்டு, விருதம்பட்டு கட்டிடம் கட்டும் இடத்திற்கு வந்து உட்கார்ந்து கொள்வார். குழந்தைகள் டவுன் சிப் இங்கிலீஸ் மீடியம் வில்லியம்ஸ் ஸ்கூலில் படித்தனர். டிரைவர் விட்டு, விட்டு வருவார். வேலையாட்கள் வந்து வேலை ஆரம்பித்து நடக்கும். கல் மணல் சிமெண்ட் அனைத்தும் வாங்கிப்போட்டு இரவு, பகல் வாட்சுமேன் போட்டுக் கவனித்து வந்தார். பகல் 1 மணி வேலை விட்டதும் புறப்பட்டு வேலூர் கடைக்குச் சென்று பிறகு வீட்டில் சாப்பிட்டு ஓய்வு எடுத்துச் சரியாக 3 மணிக்கு கிளம்பிக்

கட்டிடம் நடக்கும் இடத்தில் இறங்கிவிட்டுப் பேத்திகளுக்குக் கார் அனுப்புவார்.

இவர் வேலைகள் நடப்பதைக் கவனிப்பார். குழந்தைகள் 4 மணிக்கு வந்ததும் குழந்தைகளுக்குப் பால் வாங்கிக் வரச் சொல்லி குடிக்கச் செய்வார். சில சமயம் டிபன் வாங்கியும் கொடுப்பார். அங்கு வேலை செய்யும் அனைவருக்கும் டீ வாங்கிக் கொடுப்பார். பிறகு வேலை முடிந்ததும் 5 மணிக்குக் குழந்தைகளை அழைத்துக் கொண்டு புறப்பட்டு இவர் கடையில் இறங்கிவிட்டுக் குழந்தைகளை வீட்டிற்கு அனுப்பி வைப்பார். தினமும் இப்படித்தான் ஈடுபாட்டோடு செய்து வந்தார். மழை வந்தால் பெண் ஆட்களை காரில் பின் சீட்டில் பிடிக்கும் வரை 5 பேர் (அ) 6 பேர் ஏற்றிக் கொண்டு வந்து வேலூரில் விடுவாராம்.

குமரகுரு தினம் காலை கே.வி. குப்பம் கிளினிக் போகும் போது 9 1/2 மணிக்குக் கட்டிடத்தைப் பார்த்துவிட்டு மாமனாரிடம் பேசிவிட்டுச் செல்வார். மாலை 6 மணிக்கு திரும்பும் போதும் கட்டிடத்தைப் பார்த்துவிட்டு வருவார். தோட்டப்பாளையம் சென்று மகளிடம் கட்டிடத்தைப் பற்றிச் சந்தோஷமாகப் பேசுவார். மகளையும் ஒவ்வொரு முறையும் அழைத்துக் காண்பிப்பார். வாசற்கால் வைத்தல் எல்லாம் நல்ல நாளில் முறைப்படி மருமகள், மகளுடன் பூஜை செய்தார். மகளுக்காகத் தானே அந்த ஆஸ்ப்பிட்டல் கட்டிக்கொடுத்தார். கட்டிடம் இனிது கட்டி முடிந்தது, கட்டிடத் திறப்பு விழாவுக்குத் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளை அழைத்து வந்து, அவர் திருக்கரங்களால் திறந்துவைத்தார்கள். மந்திரி மாணிக்க வேலர் தலைமை தாங்கினார். அனைத்து உறவினர்களும், நண்பர்களும் இன்ஜீனியர் அன்சாரி பேக், கட்டிடத் தொழிலாளிகள் அனைவரும் அழைக்கப்பட்டனர்; விருந்து கொடுத்தார். கட்டிடத் தொழிலாளர் அனைவருக்கும் துணிகள், பணம், மரியாதை செய்தார்.



# குமரன் மருத்துவமனை

**நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் செயல் (கு.948)**

*“நோய் இன்னதென்று ஆர்ய்ந்து நோயின் கராணம் ஆராய்ந்து, அதைத் தணிக்கும் வழியையும் ஆராய்ந்து உடலுக்கு ஏற்ப மருத்துவம் பார்க்க வேண்டும்..!’’*

**ஒ**ரு திருமணம் போலவே விழா இனிது (17.4.1972) நடந்தது. வாரியார் சுவாமிகள் முருகன் ஆப்ரேஷன் தியேட்டரில் வைத்துச் சுவாமி பூஜை செய்தார்கள். அன்று மத்தியம் சுவாமிகளின் பிரசங்கம் நடந்தது. மிகவும் சிறப்பாக மருத்துவத்தைப் பற்றித் திருமூலர் திருமந்திரம், திருக்குறள் இவைகளில் இருந்து நல்ல கருத்துகளைப் பிரித்துக் கூறினார். வேலூரிலேயே முதன் முதல் கட்டிய பெரிய தனியார் மருத்துவமனையாக அமைந்தது. ஆஸ்ப்பிட்டல் அமைப்பு மிகவும் நன்றாக அமைந்தது. எல்லாம் ஏ.எஸ்.ஏ.வின் தூய்மையான மனம் தான் காரணம் என்று சொல்வேன். ஆஸ்பிட்டலுக்கு என்ன பெயர் வைப்பது என்று திறப்பு விழாவிற்கு முன்பே குமரகுரு மாமனாரிடம் கேட்கின்றார்.

உங்கள் பெயரை வைத்து விடலாம் மாமா நீங்கள் தான் என் விருப்பப்படி தனியார் மருத்துவமனை கட்டிக் கொடுத்தீர்கள். அதனால் உங்கள் பெயர் வைக்கலாம் ஏ.எஸ்.ஏ. ஆஸ்ப்பிட்டல் என்று கூறுகின்றார் அதற்கு ஏ.எஸ்.ஏ.கண்டிப்பாக மறுத்துவிட்டார். நான் கட்டிகொடுத்து என் பெயருக்காகச் செய்தேன் என்று ஊர் சொல்லும். எனக்கு அந்த விளம்பரம் தேவையில்லை. என் மகளுக்காகச் செய்யவேண்டிய கடமை. நான் அன்போடு செய்தேன். எனக்கு அந்த மனத்திருப்தி போதும். உன் தந்தையார்தான் உன்னை டாக்டருக்குப் படிக்க வைத்து ஆளாக்கினார். அவர் பெயரை வேண்டுமானால் வைத்து விடுங்கள் என்கின்றார்.

குமரகுரு தன் தந்தையாரிடமும் கேட்கின்றார். (மாமனார் சொன்னபடி) அதற்கு அவரும் கண்டிப்பாக என் பெயர் வைக்கக்கூடாது. அவர்தான் தன் சொந்தச் செலவில் அந்த ஆஸ்பிட்டலை கட்டிக்கொடுத்தவர். இரவு, பகலாக உழைத்தார். அவர் பெயர் வைப்பதுதான் நியாயம் என்று கூறிவிட்டார். இங்கு கவனிக்க வேண்டும். இரண்டு சம்மந்திகளும் ஒருவருக்கொருவர் எவ்வளவு பெருந் தன்மையுடன் பேசுகின்றார்கள் என்று! குமரகுரு தர்மசங்கடமாக யோசிக்கின்றார். அப்போது மனைவி மயிலாம்பிகை மந்திரி போல் ஒரு ஆலோசனை சொல்கின்றார். நம் இருவர் அப்பாக்களும் பிடிவாதமாகத் தங்கள் பெயர் வைக்க வேண்டாம் என்று கூறிவிட்டார்கள். நான் சிறு வயது முதல் முருகனைத் தான் வணங்குவேன். நம் வாரியார் அப்பாவுக்கும் முருகன்தான் கண் கண்ட தெய்வம். என் தந்தையாரும் எப்போதும் முருகா, முருகா என்று தான் சொல்லுவார். அந்த முருகனின் மற்றொரு பெயர் குமரன். உங்கள் பெயரும் குமரகுரு என்று அமைந்துள்ளது. அதனால் ''குமரன் மருத்துவமனை'' என்று பெயர் வைத்துவிட்டால் கடவுள் பெயராகவும் இருக்கும். உங்களின் பெயரும் அடங்கி



விடுகின்றது. சுருக்கமாகவும் வாயில் எளிதாக வரக்கூடியதும், நல்ல தமிழ்ப்பெயராகவும் உள்ளது என்று கூறினேன்.

டாக்டருக்கு மிகவும் பிடித்துவிட்டது. இரண்டு தந்தையரும் ''பொருத்தமான பெயர். அதையே வைத்துவிடச் சொன்னார்கள்.'' அதன்படி குமரன் மருத்துவமனை என்று பெயர் சூட்டினோம். ஆஸ்பிட்டல் இனிது ஆரம்பிக்கப்பட்டு நன்றாக நடைபெறுகின்றது. ஏ.எஸ்.ஏ. தினமும் ஆஸ்பிட்டல் சென்று பார்வையிடுவார். வெளியில் ஒரு ஓரமாக பெஞ்ச் மீது உட்கார்ந்து விடுவார். எவ்வளவு பேஷண்ட் வருகின்றார்கள். மருமகன் எப்படிக் கவனிக்கின்றார் என்று கூர்ந்து கவனிப்பார். வார்டுகளில் உள்ள நோயாளிகளிடம் சென்று டாக்டர் நர்ஸ் நன்றாக கவனிக்கின்றார்களா? எந்தக் குறையாவது உள்ளதா என்று விசாரிப்பார். மருமகனுக்கு அட்வைஸ் பண்ணுவார். ஏழைகளுக்கு இலவசமாக வைத்தியம் பண்ணவேண்டும். அதிகமாக பீஸ் வாங்கக்கூடாது. கவனிப்பு அதிகமாக இருக்க வேண்டும். இன்முகத்தோடு பேச வேண்டும். பணியாளர்களைத் தட்டிக் கொடுத்து வேலை வாங்க வேண்டும். இந்த சின்ன வயதில் சலிப்பே வரக்கூடாது. இரவு, பகலாக உழைத்து முன்னுக்கு வரவேண்டும். டாக்டர்கள் கடவுள் மாதிரி! ஒரு மனிதன் மருத்துவரிடமும் வக்கீலிடமும் தான் உண்மையைச் சொல்லுவான். அதனால் நோயாளிகள் சொல்வதைக் கேட்டுப் பரிசோதித்து நோயைக் குணப்படுத்த வேண்டும். கைராசியான டாக்டர் என்று நீ பெயர் எடுக்கவேண்டும், என்றெல்லாம் அறிவுரை கூறுகின்றார். குமரகுரு தன் மாமனார் கூறிய பொன் மொழிகளாகிய அறிவுரைகளைத் தாரக மந்திரமாகச் சிரம் மேல் ஏற்று அந்த ஆஸ்ப்பிட்டலை நடத்தி வருகின்றார் என்று மயிலுவிடம் சென்று கூறுவார்.

''என் மருமகன் என்னமா உழைக்கின்றார். எல்லோரிடமும் விசாரித்தேன். அவர் கைராசி டாக்டர் என்று

கூறுகின்றார்கள்'' என்று பெருமையாகக் கூறுவார். நீயும் அடிக்கடி ஆஸ்ப்பிட்டல் சென்று கவனித்து உன் கணவருக்கு உதவியாக வாழவேண்டும் என்று கூறுகின்றார். அவ்வாறே மயிலும் நடந்து கொள்கின்றார். தோட்டப்பாளையத்திலிருந்து சென்றுவர கடினமாக உள்ளதால் டவுன்ஷிப்புக்கு வீடு மாற்றி குடித்தனம் வைக்கின்றார். ஆஸ்ப்பிட்டலும் குடும்பமும் இனிது நடந்துவருகின்றது. ஏ.எஸ்.ஏ. வேலூர் குருடர் இல்லத்திற்கும் தலைவராக நியமிக்கப்பட்டு அதனையும் சென்று நல்லமுறையில் கவனித்து வந்தார். அந்த இல்லத்திற்கு தேவையான உதவிகளை அவ்வப்போது செய்துவந்தார். அந்த இல்லத்தில் உள்ள அனைவருக்கும் வருடத்திற்கு ஒருமுறை பொங்கல் பண்டிகைக்குப் புதுத் துணிகள் வாங்கிக் கொடுப்பார். சாப்பாடும் அனுப்பிவைப்பார். எப்போது நினைத்தாலும் சாப்பாடு அனுப்புவார்.

சிந்தாதிரிப் பேட்டையில் திருப்புகழ் அமிர்தம் காரியாலயம் வாரியார் சுவாமிகளால் நடைபெற்று வந்தது. அதிலும் ஒரு உறுப்பினராக இருந்து பணியாற்றி வாரியாரின் நன் மதிப்பைப் பெற்றார். அடிக்கடி கோவில் திருப்பணிகளுக்காக வெளியூர் சென்று வருவார். எப்போது வெளியூர் சென்றாலும் தன் தாயிடம் காலில் விழுந்து வணங்கி விடைபெற்றுச் செல்வது வழக்கம். திரும்பி வந்ததும் அம்மா எப்படியிருக்கின்றீர்கள்? சாப்பிட்டீர்களா? உடம்பு நன்றாக உள்ளதா? என்று அன்போடு கேட்பார். முத்தம்மாள் மகன் போகும் போது பத்திரமாகச் சென்று வாப்பா!'' என்று ஆசீர்வதிப்பார். வீட்டிற்கு வந்ததும் வந்திட்டாயா! என்று அன்போடு அணைத்து முத்தமிடுவார். முத்தம்மாள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் தன் மகனுக்குத் திருஷ்டி சுற்றிப்போடுவார்கள். ஒரு டப்பி நிறைய கற்பூரம் தாம்பாளத் தட்டு தீப்பெட்டி அவர்கள் தன் பக்கத்தில் வைத்துக் கொள்வார்கள். பேரன் பேத்திகள் அனைவருக்கும்



தனித்தனியாகத் திருஷ்டி சுற்றுவார்கள். மயிலு வீட்டிற்கு வந்தாலும் குமரகுருவுக்கு நிறைய கண் திருஷ்டி; நன்றாக ஆஸ்ப்பிட்டல் நடத்துகின்றானாம் என்று தனியாகத் திருஷ்டி சுற்றுவார்கள்.



*சேந்தன் தொட்டில் விழாவில் வள்ளலின் தங்கை மகள் ஆனந்தாயி*

பிறகு மயிலுவுக்கு இரண்டாவது குழந்தை உண்டாகின்றது. அப்போதும் வாந்தி மயக்கம் தினமும் வீட்டில் இருந்து சாப்பாடு அனுப்புவார்கள். 9ம் மாதம் வீட்டிற்கு அழைத்து வந்து பிரசவம் பார்க்கின்றார்கள். 1967 ஏப்ரல் 17ம் தேதி ஆண் குழந்தை பிறக்கின்றது. சுகப்பிரசவம்! குழந்தைக்கு ஆனந்தன் என்று பெயரிட்டுத் தொட்டில் போடும் விழா நடைபெறுகின்றது. சீர் செய்து 5வது மாதம் மகளை அனுப்பி வைக்கின்றார். அரசம்பட்டில் குமரகுருவின் பெற்றோர்கள் குழந்தைகளுக்குத் காதணி விழா நடத்துகின்றார்கள். ஏ.எஸ்.ஏ.பேரன் பேத்தி காதணி விழாவிற்கு வேலூரில் இருந்து உறவினர்கள் அனைவரையும் அந்தக் காலத்தில் ஒரு பஸ் நிறைய அழைத்துச் சென்று நகை துணிகள், வரிசைகள் என்று

அதிக அளவில் வைத்து சீர்செய்கின்றார். அந்தக் கிராமமே வியப்புடன் பார்த்தார்கள். பிறகு பேரன் ஆனந்தன் 1 வருடம் ஆகியும் சரியாகப் பேசவில்லை. மகள், மருமகன், குழந்தைகளைப் பழனிக்கு அழைத்துச் சென்று பேரனுக்கு இரண்டாவது மொட்டை போட்டு முருகனுக்குச் சந்தன அபிஷேகம் நடத்துகின்றார். பேரனுக்குப் பேச்சு வரவேண்டும் என்று உள்ளம் உருகத் தியானிக்கின்றார். வேலூர் இளைய பெருமாள் முருகன் கோவிலிலும் அபிஷேகம் செய்கின்றார். நிறைய முருகன் கோவில்களில் பேரன் பெயரில் அபிஷேகம் நடத்துகின்றார். அவரின் பிரார்த்தனைப்படி குழந்தை பேச ஆரம்பித்தது. எடுத்தவுடன் அம்மா தாத்தா என்றான். கொஞ்சம் கொஞ்சமாகப் பேச்சு வந்தது. ஏ.எஸ்.ஏ.வுக்கு மிக்க மகிழ்ச்சி, அதன் பிறகு 3 வருடம் கழித்து மயிலுவுக்கு இன்னொரு ஆண் குழந்தை உண்டாகி 3வது பிரசவம், அப்போதும் வாந்தி மயக்கம், தினம் சாப்பாடு அனுப்புவார்கள்.



*சேந்தன் தொட்டில் விழாவில் வள்ளல் உண்ணாமுலை ராணி, ஸ்ரீவள்ளி, உமாமகேஸ்வரி, லல்லி*




தாய் வீட்டில் 3வது பிரசவம் நடக்கக் கூடாது என்று பெரியவர்கள் சொல்வார்கள், மாமியார் வீடோ கிராமம். நாம் என்ன செய்வது என்று முத்தம்மாள் மகனிடம் கூறுகின்றார்கள். அதற்கு ஏ.எஸ்.ஏ.கூறுகின்றார். அதெல்லாம் ஒன்றும் குறைவராது. தெய்வம் துணை இருக்கும். நம் குழந்தையை எங்கு அனுப்புவது நாமே நம்வீட்டில் பிரசவம் பார்த்து அனுப்பலாம் என்று கூறிவிட்டார். வழக்கம்போல் 9வது மாதம் பிரசவத்திற்கு அழைத்து வந்து வீட்டில் வைத்துக் கொண்டார்கள். இரண்டாவது குழந்தை ஏ.எஸ்.ஏ.வீட்டிலேயே பிறந்தது. 3வது குழந்தை பிரசவம் மட்டும் வெளியில் நடக்கட்டும் என்று முத்தம்மாள் சொல்படி பிரசவவலி ஏற்பட்டதும் வேலப்பாடியில் உள்ள லேடி டாக்டர் லலிதா செல்வின் கிளினிக் அழைத்துச் சென்றனர். 1970ம் ஆண்டு ஜூலை மாதம் 25ம் தேதி இரவு 11 மணிக்கு அழகான ஆண் குழந்தை சுகப்பிரசவமாகப் பிறக்கின்றது. டாக்டர் குமரகுருவின் நண்பர் ஆவார்கள் லலிதா செல்வின். மேலும் டாக்டர் குமரகுருவின் தந்தையின் வீட்டை அவர்கள் விலைக்கு வாங்கினார்கள். நல்ல நட்புடன் பழகுவார்கள். அவர்கள் பிரசவம் பார்த்து நல்லபடியாக அனுப்பிவைத்தார்கள்.



*குழந்தை சேந்தன்*

ஆனந்தாயும், அலமேலுவும் தாய்ப்போல மயிலுவை கவனித்துக்கொள்வார்கள். குழந்தையுடன் வீடு திரும்புகின்றார். முத்தம்மாள் பேத்திக்குத் திருஷ்டி சுற்றுகின்றார்கள். நல்ல நாளில் பேரனுக்குத் தொட்டில் விழா இனிது நடைபெறுகின்றது. பேரனுக்குப் பெயர் வைக்க மாத ஜோதிடத்தில் குறிப்பு கேட்டு அவர்கள் நட்ஷத்திர எழுத்து (சே) என்று கொடுத்தார்கள். மயிலுவை அழைத்து பக்கத்தில் வைத்துப் புத்தக பீரோவில் இருந்து சேந்தன் திவாகரம் என்ற புத்தகத்தை எடுக்கச் சொல்கின்றார். அந்தப் புத்தகத்தில் இறைவனாகிய சிவன், பார்வதி, விநாயகர், முருகர், பெருமாள்



*வள்ளல் பேத்தி லல்லியை கொஞ்சுகிறார்*

லக்ஷ்மி இவர்களின் நாமாவளிகள் என்று போட்டு இருந்தது அதில் முருகனுக்கு 15 பெயர்கள் இருந்தன. சேந்தன் என்பது முருகனின் மறுபெயர் என்று இருந்தது. உடனே ஏ.எஸ்.ஏ. நட்ஷத்திர முதல் எழுத்து (சே) சேந்தன் என்ற முருகனின்



பெயரை வைத்து விடலாம் என்று பெயர் சூட்டுகின்றார். இரண்டாவது பேரன் ஆனந்தன் நட்ஷத்திர எழுத்தும் முதல் எழுத்து (ஆ) ஆனந்தன் என்பதும் முருகனின் மறுபெயர். அவனுக்கும் ஆனந்தன் என்று பெயர் என்று பெயர் சூட்டியவரும் இவரே. சேந்தன் பேரக் குழந்தை! கறுப்பாக கொழு, கொழு என்று மூக்கு கூறாக இருக்கும். பார்ப்பவர்கள் அனைவரும் ஏ.எஸ்.ஏ. தாத்தா போலவே மூக்கு அவரைப் போலவே குழந்தை உள்ளது என்று கூறுவார்கள். இவர் வீட்டில் பார்த்த கடைசி குழந்தை. இரவில் மயிலு அயர்ந்து தூங்கிக் கொண்டு இருப்பாள். பேரன் அழும் சத்தம் கேட்டு மகளை எழுப்புவார். குழந்தை பசிக்கு அழுகின்றான் என்று சொல்லிவிட்டுச் செல்வார்.




*குமரன் மருத்துவமனை*

# மௌன குரு சுவாமிகள்

## துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
## இறந்தாரை எண்ணிக்கொண் டற்று (கு.22)

*'பற்றுக்களைத் துறந்தவர்களின் பெருமையை அளந்து கூறுதல், உலகத்தில் இதுவரையில் பிறந்து இறந்தவர்களை எண்ணிக் கணக்கிடுவதைப் போன்றது.'*

**ஏ**.எஸ்.ஏ. வீட்டு ஹாலில் ராசியான பழைய மரத் தொட்டில் மாட்டி இருக்கும். அதில் தான் குழந்தைகள் 5 மாதம் வரை தூங்கும். மதியம் சாப்பிட்டு முடிந்ததும் வீட்டில் அனைவரும் தூங்குவோம். குழந்தை சேந்தனைத் தொட்டிலில் தூங்க வைத்துவிட்டு மயிலு பக்கத்து ரூமில் படுத்து இருப்பாள். குழந்தை 3 மணிக்கு எழுந்து கை காலை ஆட்டி ஹா! ஹீ! என்று சிரித்துக்கொண்டு இருக்கும். தொட்டிலில் கட்டியுள்ள பொம்மையை பார்த்துக் கொண்டு சிரிப்பான். அவன் சிரித்து குலாவும் மழலைச் சத்தம் கேட்டு தாத்தா ஏ.எஸ்.ஏ. எழுந்து வந்து தொட்டில் அருகே ஒரு சேரில் அமர்ந்து குழந்தையிடம் பேசி மகிழ்வார். பேரன் தாத்தா, தாத்தா என்று அவரைப் பார்த்துச் சிரிப்பான். அவருக்குப் பேரானந்தம். தொட்டிலை ஆட்டி விட்டுக் கொண்டு பேசி மகிழ்வார். பசிக்கு அழுதவுடன்



மகளை எழுப்புவார். குழந்தை தனியாக யாரும் இல்லை என்று பார்க்கின்றது. அவனுடன் பேச வேண்டும் என்று சொல்கின்றான், அம்மா!'' என்று சொல்லி மகிழ்வார். எல்லா பேரன் பேத்திகளும் தாத்தா தாத்தா என்று தான் கூப்பிட்டு அவரை ஆனந்தத் கடலில் ஆழ்த்துகின்றார்கள். குழந்தை 2 மாதம் ஆகின்றது. ஒரு நாள் ஜூரம் காய்கின்றது. குழந்தை கண்ணே திறக்கவில்லை. சரியாகப் பால் குடிக்கவில்லை. அசைவற்று கிடக்கின்றது. குமரகுரு அவரே முதலில் வைத்தியம் செய்தார். பிறகு குழந்தை மருத்துவர் டாக்டர். பிரகாசம் அவர்களை வீட்டிற்கு அழைத்து வந்து காண்பித்தார். அவரும் ட்ரிட்மெண்ட் தந்தார். குணமாகவில்லை! பிறகு 'யுரின் இன்பெக்ஷன்' என்று கண்டுபிடித்து தினமும் ஊசி போட்டு மருந்து கொடுத்து வந்தார். சீக்கிரம் குழந்தை குணமாகவில்லை. மகள், மயிலு அப்பாவைப் பார்த்து அழுகின்றாள்.

ஏ.எஸ்.ஏ. முகம் மிகவும் வாடி விட்டது. தன் மகளிடம் சண்முகக் கவசம்-பாம்பன் குமரகுரு சுவாமிகள் எழுதிய புத்தகத்தைக் கொடுத்து இதை தினமும் 6 முறை படித்து வாம்மா குழந்தையை மடியில் வைத்துக் கொண்டு முருகனை உள்ளம் உருக வேண்டி, உன் கண்ணீரால் ஆராதித்து வேண்டிக் கொள் உயிர் பிச்சை கொடு!'' என்று கண்ணீர் மல்க, நெஞ்சு அடைக்கக் கூறி விட்டுச் செல்கிறார். வீட்டில் அனைவரும் வருத்தமாகி விட்டனர். மயிலு சரியாகச் சாப்பிடுவது இல்லை; அழுது கொண்டே இருப்பாள். அப்போது தற்செயலாக அன்றைய தினம் தோகை விரித்த மயில் மீது முருகன் வள்ளி தெய்வானை பொம்மை தெருவில் போகின்றது. அதை மயிலு விலை கொடுத்து வாங்கி வந்து ஏ.எஸ்.ஏ. வீட்டில் தங்கியிருந்த ரூமில் டேபிள் மீது வைத்து விளக்கு ஏற்று ஊதுபத்தி செருகி, சண்முகக் கவசத்தை வைத்து முருகனை வேண்டிக் கொண்டு குழந்தையை மடிமேல்

வைத்துக் கொண்டு சண்முகக் கவசத்தை ஒரு நாளைக்கு 6 முறை படிக்கின்றாள். நெஞ்சம் உருகி கண்ணீர் மல்கத் தினமும் 6 முறை படித்து முருகனை வேண்டுகின்றாள். குழந்தை நல்ல படியாகக் குணமாகி பிழைத்து வாழ வேண்டும்! முருகா! நான் குழந்தையை காவடி எடுக்கச் சொல்கிறேன்! என்று மனதார வேண்டிக் கொள்கின்றாள். குழந்தை இறையருளால் அதன் பிறகு தான் குணமடைகின்றான். பழைய படி, குழந்தை ஜுரம் விலகிப் பூரண குணமடைந்து ஆரோக்கியமானது. வீட்டில் அனைவருக்கும் மகிழ்ச்சி ஏற்பட்டது. ஏ.எஸ்.ஏ.தாயிடம் கூறுகின்றார். கஷ்டப்பட்டு வாந்தி எடுத்து பெறுகின்றாள்; எங்கு குழந்தை ஏமாற்றி விடுமோ என்று பயந்தேன். முருகன் காப்பாற்றி விட்டான் என்கிறார். மயிலுவிடமும் நம்பினார் கெடுவதில்லை. உன் பக்திக்கு மெச்சி முருகன் அருள் புரிந்தான். எப்போதும் தெய்வ சிந்தனையுடன் இரு' என்று கூறுகின்றார், இன்று வரை தந்தை சொல்படி எவ்வளவு செல்வம் வந்தாலும் தெய்வ சிந்தனையுடன் பய பக்தியுடன் அறம் தவறாமல் வாழ்ந்து வருகின்றார்.

உண்ணமுலை அம்மாள் மகன் பரமசிவம் குழந்தையாக இருக்கும் போது உடல் நலம் இல்லாமல் இருக்கும் போது திருத்தணி முருகனுக்கு ஜன்மக் காவடி எடுப்பதாகப் பிரார்த்தித்துக் கொள்கின்றார். அவர் இறக்கும் போது தன் மாமியாருடன் அத்தை நான் என் மகன் ஜன்மக் காவடி எடுப்பதாக வேண்டிக்கொண்டேன். இப்போது நான் காவடி செலுத்தாமலே செல்கின்றேன். தெய்வக் குற்றம் என்மகனுக்கு வரக்கூடாது. உங்களால் வருஷா வருஷம் எடுக்க முடியாது. நீங்கள் இருக்கும் போது மூன்று வருடம் காவடி எடுத்து முடித்து விடுங்கள், அத்தை!'' என்று கண்ணீர் மல்கக் கூறுகின்றார். அப்படியே செய்கின்றேன் என்று முத்தம்மாள் மருமகள் கையைப் பிடித்து அழுகின்றார்கள்.



மருமகள் சொன்னபடி பரமசிவம் திருமணம் ஆன பிறகு 3 வருடம் திருத்தணிக்குக் காவடி சிறப்பாக எடுத்துச் செலுத்துவதை முத்தம்மாள் செய்து முடித்தார்கள். தன் தாயைப் போலவே மகள் மயிலும் மகனுக்காகக் காவடி எடுப்பதாக வேண்டிக்கொண்டு, அவ்வாறே மகன் சேந்தன் ஜென்மக் காவடி செலுத்தி வருகின்றார்கள். பிறகு மயிலுவைக் குழந்தையுடன் 5ம் மாதம் வீட்டிற்குச் சீருடன் அனுப்பிவைக்கின்றார். சுவாமிகள் ஒவ்வொரு கடிதத்திலும் மகள் மயிலாம்பிகைக்கும் மருமகன் டாக்டர் குமரகுருவுக்கும் ஆசிர்வாதம் என்று தான் கடிதம் எழுதுவார். எப்போது எங்கு பார்த்தாலும் குமரகுருவிடம் ஆஸ்பிட்டல் நன்றாக நடக்கின்றதா? என்று அன்போடு விசாரிப்பார்.

ஏ.எஸ்.ஏ. திருவலம் கோவிலுக்குச் சென்று மௌனகுரு சிவானந்த சுவாமிகளிடம் பக்தியுடன் பழுகுவார். சுவாமிகளிடம் அண்ணாமலையார் கார்த்திகை தீபத்தன்று நடைபெறும் விழாவுக்கு ஏ.எஸ்.ஏ. பணம் கட்டி அபிஷேக ஆராதனை செய்து வந்தார். இரத்தினகிரி டிரஸ்ட் பூஜையிலும் பங்கு பெற்றார். சுவாமிகளிடத்தில் ஏ.எஸ்.ஏ. வுக்கும் பற்றுதல் சுவாமிகளும் ஏ.எஸ்.ஏ. இடத்தில் மிகுந்த ஈடுபாடுடன் அன்புடன் பழகுவார். சுவாமி கிருபானந்தவாரியார், திருவலம் மௌன குரு சிவானந்த சாமியார், இரத்தினகிரி பாலமுருகனடிமை சுவாமிகள் இவர்கள் மூவரும் ஏ.எஸ்.ஏ. குடும்பத்தின் குடும்ப சுவாமிகளாகத் திகழ்ந்தார்கள். அந்தக் குடும்பமே இன்று வரை பயபக்தியுடன் போற்றி வாரியார் குரு பூஜை திருவலம் சுவாமிகள் குருபூஜை, இவற்றில் எல்லாம் தவறாமல் கலந்து கொண்டு வழிபடுவார்கள். ஏ.எஸ்.ஏ. குடும்பம், இரத்தினகிரி பால முருகனடிமை சுவாமிகள் அவர் தியானம் செய்யும் இடத்தை திரு. ஏ.எஸ்.ஏ. வுக்கு அழைத்துச் சென்று காட்டினார். அப்போது நான் மட்டும் என் தந்தையுடன் சென்றிருந்தேன். எனக்கும் அந்த பாக்கியம் கிட்டியது. சுவாமிக்கு அன்பார்ந்த பக்தர் ஆனார் என் தந்தை.

# ஆருத்ரா தரிசனம் திருவண்ணாமலை

**இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல் (கு.517)**

*'இந்தப் பொறுப்பினை இந்தப் பொருளால் இவர் நன்கு நிறைவேற்றுவார் என்று ஆராய்ந்த பிறகு அந்தப் பொறுப்பை அவரிடம் ஒப்படைக்க வேண்டும்.'*

**தி**ருவண்ணாமலை கோவிலில் மார்கழி மாதம் நடக்கும் ஆருத்ரா தரிசனம் விழாவை நகரத்தார் குடும்பங்களில் ஒருவர் செய்து வந்தாராம். அவர் அந்த விழாவை மேற்கொண்டு நடத்தமுடியாமல் திருவண்ணாமலை கோவில் திருப்பணிக் குழுவிடம் இனிமேல் நாங்கள் நடத்தவில்லை என்று கூறிவிட்டார்களாம். கோவில் அதிகாரிகள் அனைவரும் மீட்டிங் போட்டு இந்தத் திருப்பணியை யாரிடம் ஒப்புவிக்கலாம் என்று ஆலோசனை நடத்தியிருக்கின்றார்கள். அப்போது கோவில் கமிட்டியில் மாணிக்கவேலு கவுண்டர், ஆறுமுக கவுண்டர் இருவரும் இருந்தார்கள். அவர்கள் ஏ.எஸ்.ஏ.வின் நெருங்கிய நண்பர்கள். பின்னால் உறவினர்களாகவும் ஆகிவிட்டார்கள்.



கோவில் குழுவிடம் வேலூரில் எங்கள் நண்பர் ஏ.எஸ்.ஏ. பிள்ளை சிறந்த பக்திமான், நேர்மையானவர், வாரியாரின் நண்பர்! அவரிடம் கேட்டு இந்த உபயத்தை அளிக்கலாம் என்று பரிந்துரைத்தார்களாம். ஏ.எஸ்.ஏ.வுக்குத் திருவண்ணாமலை கோவிலில் இருந்து கடிதம் வருகின்றது. ஆருத்ரா தரிசனம் நடத்த உங்களுக்கு விருப்பம் இருந்தால் ஏற்று நடத்தச் சந்தர்ப்பம் தருகின்றோம். விரைவில் உங்கள் பதில் தேவை என்று கடிதம் வருகின்றது. ஏ.எஸ்.ஏ.வுக்கு அளவு கடந்த மகிழ்ச்சி! அண்ணாமலையாரே என்னை அழைத்து இந்த விழாவை நடத்த விரும்புகின்றார். எத்தனையோ பிரமுகர்கள் வேலூரிலும், திருவண்ணா மலையிலும் இருக்க, என்னை நாடி வந்தது நான் செய்த பெரும்பாக்கியம் என்று கூறி, உடனே காரில் புறப்பட்டுச் சென்று மாணிக்கவேலரையும் ஆறுமுக கவுண்டரையும் அழைத்துக் கொண்டு கோவிலுக்குச் சென்று அந்தத் திருப்பணியை நடத்த பூரண சம்மதத்துடன் ஒத்துக் கொண்டார். ஒவ்வொரு வருடமும் ஆருத்ரா தரிசனத்திற்குப் பத்திரிக்கைப் போட்டு உறவினர்கள், நண்பர்களுக்குக் கொடுத்து வெளியூரில் உள்ள தங்கள் சொந்த கிராமம், தம்பி குடும்பம், தங்கை குடும்பம், மைத்துனர் குடும்பம் அனைவருக்கும் பத்திரிகை அனுப்புவார். வேலூரில் இருந்து சமையல்காரர் பிச்சையை அழைத்துச் சென்று நான்கு வேளையும் ருசியாக சமைத்துப் போடச் சொன்னார் ஆருத்ரா இரவு விழா, பகல் விழா வெகு சீரும், சிறப்புமாக நடத்தினார். கோவில் நிர்வாகம் பெருமைப்பட்டது. வருடா, வருடம் திருமணத்திற்குச் செல்வதுபோல் அனைவரையும் அழைத்துச் சென்று அங்கு சத்தியவிலாஸ் சபா மண்டபத்தில் தங்க வைத்து, விழாவைக் கண்டுகளிக்கச்சொல்லி விருந்து வைத்துத் தாம்பூலம் பிரசாதம் கொடுத்து அனுப்புவார். எல்லா சம்மந்திகளையும் அழைத்துச்சென்று காண்பித்தார். சண்முகனடியார் சங்கத்தின் குழுக்கள், வள்ளிமலை குழுக்கள்

இப்படி ஆனந்தமாக எல்லா தரப்பினரையும் ஆருத்ரா தரிசனம் செய்ய அழைத்துச் சென்றார். ஆருத்ரா முன் நாள் வேலூரில் இருந்து மதியம் 1 மணிக்கு அழைத்துச் சென்று இரவு தரிசனம், பகல் தரிசனம் முடிந்து சாப்பாடு வழங்கி அனைவரையும் அனுப்பி விட்டு அவர் மட்டும் பெரிய மருமகன் வி.ஓ. கோவிந்தசாமியைத் துணைக்கு வைத்துக் கொண்டு தங்கிச் சுவாமி நடராஜர் புறப்பாடு ஆருத்ரா அன்று பகல் 10 மணிக்கு ஆரம்பித்து வீதி உலா முடிந்து 5 மணிக்குக் கோவிலுக்கு வந்தவுடன் அனைவருக்கும் விழாச் செலவின் பணம் பட்டு வாடா செய்து விட்டு இரவு 7 மணிக்கு வேலூர் வந்து சேருவார். அவர் முகத்தில் கொஞ்சம் கூட களைப்பே இருக்காது. தன் தாயிடம் மிகப் பிரமாதமாக நல்ல முறையில் இனிது நடந்தது என்று கூறி மகிழ்வார். தன் மகனின் ஒவ்வொரு செயலையும் கண்டு மகிழ்ந்து நெஞ்சார வாழ்த்தும் அந்தத் தாயின் உள்ளம்! மகனுக்கு உடனே அந்த நேரத்தில் திருஷ்டி சுற்றிப் போடுவார்கள். முத்தம்மாள் பாட்டி சில சமயம் பேத்தி மயிலுவிடம், கூறுகின்றார்கள் ‘‘உன் அப்பா அளவுக்கு மீறி வாரி இறைக்கின்றார்!’’ என்று கொஞ்சம் ஆதங்கத்துடன் கூறுகின்றார்கள்.

ஒருநாள் மயிலு தந்தையிடம் கேட்டிருக்கிறாள். ‘ஏம்பா! நீங்கள் அளவுக்கு அதிகமாக நன்கொடை வழங்குகின்றீர்கள்!’’ என்று பாட்டி சொல்கின்றார்கள். நிறைய செலவு செய்வதைக் குறைத்தால் நாம் இன்னும் மாடி வீடு கட்டலாம் இல்லையா?’ என்று வெகுளித்தனமாகக் கேட்கிறாள். அதற்கு ஏ.எஸ்.ஏ. மகளிடம் கூறுகின்றார். ‘இரைக்கின்ற கிணறுதான் சுரக்கும். நாம் கொடுக்கக் கொடுக்கத்தான் இறைவன் நமக்குக் கொடுப்பார். அவர் கொடுப்பதை நாம் மட்டும் அனுபவித்தால் போதாது. இல்லாதவர்களுக்கு கொடுத்து உதவ வேண்டும். போதும் என்ற மனம் நமக்கு வரவேண்டும். நாம் போகும் போது நம்மோடு எந்த வீடும் சொத்தும் வராது. எப்படியும் ஒன்றும் இல்லாமல்தான் நம்மை வழி அனுப்புவார்கள். நம்மோடு வருவது நாம் செய்த புண்ணியங்கள் தான். நம் புகழ் என்றும் நிலைத்து இருக்கும்!’’ என்று மகளிடம் கூறுகின்றார்.



நாம் கொடுக்கும் எந்தப் பணமும் இந்தக் கையால் கொடுப்பது அடுத்தக் கைக்குத் தெரியக்கூடாது. எதையும் கணக்கு பார்த்துச் செய்யக்கூடாது என்றெல்லாம் கூறுகின்றார். யாரும் அவரிடம் எதுவும் கேட்பதில்லை; எது செய்தாலும் நல்லதுதான் செய்வார் என்று நினைப்பார்கள். தாய் முத்தம்மாளுக்கு வயதாகின்றது. சாப்பாடு எதுவும் ஏற்றுக் கொள்வதில்லை. அவர் நீண்ட நாட்கள் திரவப் பொருளாக ஹார்லிக்ஸ் தான் குடித்து வந்தார். ஆனால் அவருக்கு வீட்டில் செய்யும் பலகாரங்கள் அவர் பங்கு என்று கொடுத்துவிடச் சொல்வார். அதை வாங்கி வைத்துக்கொண்டு வீட்டிற்கு வரும் வேலையாட்கள், கடை குமாஸ்தாக்கள் இவர்களுக்குக் கொடுத்து மகிழ்வார்; உடல் மெலிந்து சாப்பாடு இல்லாமல் பால், ஹார்லிக்ஸ் குடித்து உயிர் வாழ்ந்து வந்தார். அவருக்குப் பனிக்காலத்தில் ஆஸ்துமா தொந்தரவு வரும். குமரகுருதான் வைத்தியம் செய்து பாட்டியைக் கவனித்துக்கொள்வார். சில சமயம் குளுக்கோஸ் ஏற்றி விடுவார்;

சில சமயம் சீரியஸ்ஸாக ஆனாலும் உடனே சரியாகிவிடும். என் பேரன் கைராசி நான் எழுந்து உட்கார்ந்து விட்டேன் என்று பெருமையாகக் கூறுவார்கள். ஒருநாள் மகனைக் கூப்பிட்டு, ‘‘நீ வெளியூருக்குச் சென்றால் இரவு தங்காமல் வீடு வந்து சேரவேண்டும். எனக்கு வயதாகிவிட்டது. நான் இறந்தால் நீ தான் கொள்ளி போட வேண்டும். நீ வெளியூர் சென்று தங்கிவிட்டால் நீ வரும் வரை என் பிணம் காத்திருக்க வேண்டும். அதனால் இரவு தங்காமல் அன்றே வந்து விடவேண்டும்!’’ என்று சொல்கின்றார்கள். கண் கலங்க அம்மாவிடம் சத்தியம் செய்கின்றார். நான் கண்டிப்பாக இரவு தங்காமல் உடனே வந்து விடுவேன் என்று அம்மா இறக்கும் வரை அப்படியே கடைபிடித்தார்.

முத்தம்மாளும் ஏ.எஸ்.ஏ.வும் மயிலுவிடமும், பரமசிவத்திடமும் கூறுகின்றார்கள் பேரன் சண்முகத்திற்கு, பேத்தி வள்ளியைத் திருமணம் செய்யவேண்டும். உறவு விட்டுப் போகக்கூடாது. உறவு கலந்தால் நெருக்கம் பாசம் அதிகமாகும். நம் வீட்டுப்பெண் (மயிலு) உரிமையுடன் தாய் வீட்டுக்கு வந்து போவாள். அதனால் பேரனுக்குப் பேத்தியைத் திருமணம் செய்யவேண்டும் என்று அன்போடு சொல்கின்றார்கள். அண்ணனும், தங்கையும் சிரித்துக் கொண்டு அப்படியே ஆகட்டும்; மேலும் திருமணம் வரை நான் இருக்க மாட்டேன். அதற்கு கொடுப்பனை இருக்காது என்கின்றார். இன்னொரு நாள் ஏ.எஸ்.ஏ. மகளிடமும் மகனிடமும் கூறுகின்றார். 'நீ வசதியாக இருந்து அண்ணன் தாழ்ந்து விட்டாலோ அண்ணன் வசதியாக இருந்து நீ வசதி குறைந்துவிட்டாலோ அண்ணன் விட்டு விடக் கூடாது. யார் தாழ்ந்தாலும், உயர்ந்தாலும் திருமணத்தை மட்டும் மாற்றக் கூடாது'' என்று அன்போடு கூறுகின்றார். இருவரும், ''நாங்கள் உங்கள் சொல்படி தான் செய்வோம்!'' என்று உறுதி கூறுகின்றார்கள். அவர் மறைவுக்குப் பிறகு சொன்ன சொல் மாறாமல் அண்ணனும், தங்கையும் தங்கள் பிள்ளைகளுக்குத் திருமணம் செய்வித்தார்கள்.

முத்தம்மாள் பேத்தி மயிலுவிடம் உன் தாயாரின் பச்சைக்கலர் பட்டுப்புடவை ஒன்று ஞாபகமாக எடுத்து வைத்துள்ளேன். உங்க அம்மா ஞாபகமாக இதை வைத்துக் கொள். மற்ற புடவைகளை எல்லாம் என் மகன் தானம் கொடுத்துவிட்டான். உங்க அம்மா தாலி உருக்காமல் நீ கோர்த்துக்கொள் என்று கொடுக்கின்றார். பேத்தி அலமேலுவுக்குச் சில நகைகளைக் கொடுக்கின்றார்கள். இன்றும் அந்தப் பட்டுப் புடவையைப் பத்திரமாக வைத்து இருக்கின்றேன். முத்தம்மாள் 95 வயது நெருங்கி விட்டது. எல்லோரிடமும் நான் உயிரோடு இருக்கமாட்டேன். இன்னும்



இருக்கவும் வேண்டாம். எனக்குப் பிறகு பிறந்தவர்கள் உறவினர்கள் எவ்வளவோ பேர் இறந்துவிட்டார்கள். எல்லா வைபவமும் நான் பார்த்துவிட்டேன். என் பிள்ளைக்கு முன் நான் போகவேண்டும். இறைவா என்னைச் சீக்கிரம் அழைத்துக் கொள் என்று சொல்லுவார். அதே போல் ஒருநாள் அமைதியாக வீட்டில் உயிர் பிரிந்தது. உயிர்போகும் போது ஏ.எஸ்.ஏ. தாயாரின் வாயில் பால் விடுகின்றார். மகனிடம் பிரியாவிடை பெற்றுக் கண்கள் மூடுகின்றன. அனைத்துப் பேரன், பேத்திகள், கொள்ளுப் பேரன் பேத்திகள் கதறி அழுகின்றார்கள். ஆனந்தாய், அலமேலு, ராஜம், மயிலு பரமசிவம் ஆகியோரும் அம்மா, அம்மா என்று கதறுகின்றார்கள்.

ஏ.எஸ்.ஏ. தானும் விம்மி, விம்மி அழுது விட்டு இனிமேல் யாரும் அழக்கூடாது. அம்மா புண்ணிய லோகத்திற்குப் போக வேண்டும் என்று கூறிக் கற்பூரம் ஏற்றித் தேங்காய் உடைத்து விட்டு ஓதுவார் குழுவை வரவழைத்துத் திருவாசகம் - சிவபுராணம் பாடச் செல்லிவிட்டார். வீட்டில் எங்கும் சிவ சமயம் ஒலிக்கச் செய்தார். எளியமுறையில் கைப்பாடை கட்டிச் சங்கு, சேமக்கலம் வைத்து கொள்ளிச் சட்டியுடன் பாலாற்றிற்கு நடந்தே சென்று ஈமக்கிரியை செய்கின்றார். ஒருநாள் விளக்கு பார்க்க அரசம்பட்டு சென்று தங்கி வருகின்றார்.

16ம் நாள் காரியம் செய்து வாரியாரின் மோட்ஷம் கதை வைக்கின்றார்; வீட்டில் அன்று குருடர் சங்கம், செஷயர் ஹோம், செவிடர் இல்லம், வயோதிகர் விடுதி இங்கெல்லாம் சாப்பாடு அனுப்புகின்றார், தெருவில் அன்னதானமும் நடத்தினார்; தம்பி, தங்கை, மருமகள், பேரன், பேத்திகள், மகள், மருமகன் அனைவரையும் 2 வேன்களில் அழைத்துச்சென்று கன்னியாகுமாரி, இராமேஸ்வரம் சென்று அஸ்தியைக் கரைத்துவிட்டு வந்தார். தாயாரின் வருத்தம் நீங்கியதும் தன் வேலைகளை வழக்கப்படி கவனித்து வந்தார்.

சேண்பாக்கம் செல்வ விநாயகர் கோவில் பிரம்ம உற்சவம் சமயம் 6-ம் நாள் யானை வாகன உற்சவம் - வேலூர் ரொட்டிக்கார தெருவில் உள்ள அனைத்துக் கடைக்காரர்கள் (வன்னியர்கள்) சேர்ந்து செய்யப் பணம் வசூல் செய்து பெரும் பணம் இவரே போட்டு அன்று மாலை 6 மணிக்குச் சென்று இரவு 1 மணிக்கு வீடு திரும்புவார். அவ்வாறே வள்ளிமலையிலும் பிரம்ம உற்சவத்தில் 6-ம் நாள் யானை வாகன உற்சவம், வன்னிய சமூகத்தினர்கள் செய்வதாக ஒப்புக்கொண்டு திறமையாக நடத்தி வந்தார். விரிஞ்சிபுரம் கடை ஞாயிறு உற்சவத்திலும் இவர் பங்கு பெற்று நடத்தி வந்தார். இன்றும் இரண்டு கோவில் யானை வாகன உற்சவமும், மகன் பரமசிவம் தந்தையைப் பின்பற்றி விட்டுச் சென்றதை நடத்தி வருகின்றார்.

வருடத்திற்கு ஒருமுறை ரொட்டிக்காரத் தெருவில் உள்ள அனைத்து கடைகளின் குடும்பங்களுடன் குமாஸ்தாக்களும் ஞாயிற்றுக்கிழமை அன்று கோவிலுக்கு 1 நாள் முழுக்க தங்க ஏற்பாடு செய்து நடத்தினார். அதாவது கணவன், மனைவி, குழந்தைகளுடன் 10 மாட்டு வண்டிகள் புறப்படும். ஒரு குடும்பத்திற்கு ஒரு வண்டி வீதம் காலை 6 மணிக்கு எல்லோரும் ஒன்றாகப் புறப்பட்டுச் செல்வார்கள்; 7 மணிக்குக் கோவிலில் அபிஷேகம் நடக்கும்; 8 மணிக்குச் சிற்றுண்டி பிறகு 12 மணிக்குச் சாப்பாடு நடக்கும். சமையல்காரரை அழைத்துச் சென்று அவ்விடமே சமையல் நடக்கும்; வடை பாயசத்துடன் நல்ல திருமண விருந்து போல இருக்கும். அனைவரும் ஏழை, பணக்காரர், குமாஸ்தா, முதலாளி என்ற வித்தியாசம் இல்லாமல் தமாஷாகப் பேசிக்கொண்டும், சிரித்துக்கொண்டும், விளையாடிக் கொண்டும், குடும்பக் கேளிக்கையாகக் கழிப்பார்கள். மாலை 4 மணிக்கு அனைவருக்கும் பிஸ்கட், காபி கொடுக்கப்படும்; மாலை 5 மணிக்கு வீடு திரும்புவார்கள். ஏ.எஸ்.ஏ. இதை ஒரு



உல்லாசப் பயணமாக அவரே ஏற்பாடு செய்து நடத்தி வந்தார். அனைவரும் மகிழ்ச்சியுடன் கலந்து கொள்வார்கள். அந்த இனிமையான நாட்களை என்னால் இன்றும் மறக்க முடியவில்லை; இவையெல்லாம் இவரின் சொந்த ஏற்பாடாகும்.

முதலில் எல்லாம் நடந்தது. பின்னால் இவர் ஆன்மீக துறைக்கு வந்ததும் அந்த ஏற்பாடு மட்டும் நின்று விட்டது. ஏ.எஸ்.ஏ. வீட்டின் குலதெய்வம் மேல் மலையனூர் அங்காள பரமேஸ்வரி கோவிலாகும். அந்தக் கோவிலுக்கும் தவறாமல் குடும்பத்துடன் சென்று வருவார். அந்தக் கோவில் பூசாரிகள் அங்கு நடக்கும் பிரபலமான மயானத் திருவிழாவிற்கு முதலில் வேலூரில் இவரிடம் நன்கொடை வாங்கிச் சென்று பிறகு தான் பிறரிடம் வசூலிப்பார்கள். தாராளமாக அம்மாவுக்கு நன்கொடை வழங்குவார்.

எத்தனையோ கோவில்கள் திருப்பணிகளுக்கு இவர் நன்கொடை கொடுத்துள்ளார். அது கணக்கே தெரியாது அவ்வளவு தருமகுணம் படைத்தவர். இவர் வாழ்க்கையில் தருமரைப்போலவே தருமம் செய்து வந்தார். கொடையில் கர்ணனுக்கு நிகராக இவர் வழங்கினார் என்று சொன்னால் மிகையாகாது. இவரை நாளடைவில் கொடைவள்ளல் ஏ.எஸ்.அருணாசலம்பிள்ளை என்று வாரியார் சுவாமிகள்தான் ஒவ்வொரு பிரசங்கத்திலும் கூறுவார். அந்தப் பெரும் பெயரைப் பெற்றார்.

பிறகு நண்பர் என்.ஆர். முனிசாமி நாயக்கர் அன்போடு அழைக்கின்றார். ஏ.எஸ்.ஏ.வை ‘‘வாய்யா! உங்க அம்மாவின் சொல்படி வெளியில் வராமல் அம்மாவின் ஈமக்கிரியை முடித்துவிட்டாய். இனிமேல் வெளியில் வந்து ஊரைச் சுற்றிப்பார். வேலூரிலேயே உள் வட்டமாக இருக்கின்றாய்; நானும் எம்.பி. பதவி முடிந்து வேலூர் வந்து விடுவேன். அதற்குள் புறப்பட்டு வந்தால் டில்லியைச் சுற்றிக் காண்பித்து

விடுகின்றேன்!'' என்று அன்போடு டில்லிக்கு உடன் அழைத்துச் சென்று தன்னுடன் தங்க வைத்துக் கொள்கின்றார்.

டில்லியைச் சுற்றிக் காண்பிக்கின்றார். தாஜ்மஹாலும் அழைத்துச் செல்கின்றார். 1 வாரம் அங்கு தங்கியிருக்கின்றார். எம்.பி. வீட்டில் வேலை செய்யும் பணியாள் இவரை அன்போடு கவனிக்கின்றான். அவனைப்பற்றி விசாரித்துத் தெரிந்து கொண்டு அவனுக்குப் பொருள் உதவி செய்கின்றார். ஒருநாள் எம்.பி. வெளியில் சென்று விட்டார். இவர் மட்டும் தனியாக இருக்கும் போது, ஒருவர் தமிழில் பேசித் தெரிந்தவர் போல் போனாராம். உங்களை நன்றாகத் தெரியும்; நீங்கள் வேலூர் தானே! நானும் வேலூர்க்காரன்தான் ஒரு வேலையாக இங்கு வந்தேன். என் மணிபர்ஸை யாரோ பிக்பாக்கட் அடித்துவிட்டார்கள்; ஊருக்குத் திரும்பக் காசு வேண்டும். ரூ.300 கொடுங்கள் நான் வேலூர் வந்ததும் கொடுத்து விடுகின்றேன்! என்று சொன்னவுடன் இவரும் நம்பிக்கையுடன் ஆபத்துக்கு உதவ வேண்டும் என்று ரூபாய் கொடுத்து அனுப்பிவிட்டார். மதியம் எம்.பி. என்.ஆர். முனுசாமி வந்ததும் வேலைக்காரன் நடந்த விஷயத்தைக் கூறினவுடன் ஏ.எஸ்.ஏ.விடம் ''ஏம்ப்பா! நீ பணத்தைக் கொடுத்தாய். இங்கெல்லாம் இப்படித்தான் ஏமாற்றிப் பணம் வாங்குவார்கள்; உஷாராக இருக்கவேண்டும். வேலூர் போகும் வரை எதையும் கண்டு ஏமாறக் கூடாது'' என்று கூறுகின்றார். பிறகு வேலூர் கிளம்பும் போது அவரால் உடன் வரமுடியவில்லை அங்கு ரயில் ஏற்றி அனுப்புகின்றார். உடன் வீட்டில் வேலை செய்யும் பணியாளர் சேகர்சிங்கை வேலூருக்கு வரும்படி அழைப்பு விடுத்து வருகின்றார்.

சில மாதங்கள் கழித்து சேகர்சிங் வேலூருக்கு ஏ.எஸ்.ஏ. வீட்டிற்கு வருகின்றார். அவரைத் தகுந்த மரியாதையுடன் உபசரிக்கின்றார்; தன் பக்கத்தில் அமர்த்தி உணவருந்தச் செய்து, தன் காரில் சுற்றியுள்ள கோவில்களைக்



காண்பித்து, புதுத் துணிகள் உடுத்திக்கொள்ள எடுத்துக் கொடுத்து இரண்டு வாரங்கள் தங்கவைத்து டில்லிக்குப் போகவர பயணச்செலவையும் கொடுத்து, பிஸ்கட் பழம், ஸ்வீட், மனைவி, குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுத்து ஊருக்கு அனுப்புகின்றார். ஆனந்தக் கண்ணீர் மல்க ஏ.எஸ்.ஏ.வின் பாதம் தொட்டு வணங்கி விடைபெற்றுச் செல்கின்றார் சேகர்சிங்! டில்லிக்குச் சென்று என்.ஆர். இடம் கூறுகின்றாராம். ''அச்சா பகுத் தெய்வம் பிள்ளைவாள்!'' நான் கடவுளைப் பார்த்தது இல்லை. ஏ.எஸ்.ஏ.வைத்தான் கடவுளாக நினைக்கின்றேன் என்று இவரிடம் மட்டும் அல்ல. எல்லோரிடமும் வாயாரப் புகழ்ந்து கூறுகின்றான். நான் ஒரு சாதாரண வேலைக்காரன். எனக்கு எவ்வளவு மரியாதை கொடுத்தார்; பக்கத்தில் உட்கார்ந்து சாப்பிடவைத்தார்; எனக்கு மிகவும் கூச்சமாக இருந்தது என்று கூறுகின்றாராம். என்.ஆர். மூத்த மகனுக்குத் திருமணம் பேசி முடிவு செய்து கொடுத்தார்.

நண்பர் யோக சுந்தரம் பிள்ளையின் மூத்த மகனுக்கும் சேலத்தில் மணம் முடித்து கொடுத்தார். எத்தனையோ கிராமத்து வாத்தியார்கள் எல்லாம் நிறைய பேருக்குத் தாலி துணிமணிகள் வாங்கிக் கொடுத்துத் திருமணம் நடத்தியிருக்கின்றார். அவர்கள் நன்றியுடன் ஏ.எஸ்.ஏ. வீட்டிற்குக் குழந்தைகளுடன் வந்து விருந்துண்டு ஆசிர்வாதம் பெற்றுச் செல்வார்கள். இவர் ''தி. ஆற்காடு பர்மனென்ட் பண்ட் பிரைவேட் லிமிடெட்'' என்ற நிர்வாகத்தில் ஒருவராகத் திறம்படப் பணியாற்றினார். வேலூர் வள்ளிமணாளர் திருப்புகழ் பாராயணச் சபையின் முக்கிய உறுப்பினராகவும் பணியாற்றினார். இவர் சென்ற இடமெல்லாம் சிறப்பாகப் புகழும்படி நடந்தது. தம்பிமகன் பி.பார்மஸி படித்து முடித்ததும் ஏ.எஸ்.ஏ. அன்ட் கம்பெனி மருந்து கடையில் 50% பார்ட்னராக நியமித்துக் கடையின் பொறுப்பை ஒப்படைத்தார்.

ராஜத்திற்கு ஒரு வீடும் நீலகண்டனுக்கு ஒரு வீடும் கட்டி அவர்கள் பெயருக்கு எழுதுகின்றார். பேத்தி உண்ணாமுலை ராணிக்கு 1 வீடும் உமாவுக்கு 1 வீடும் எழுதுகின்றார். ஆருத்ரா தரிசனம் ஏழைப்பிள்ளைகளுக்கு நோட்டுப் புத்தகம் நன்கொடைகள் வழங்க வேண்டும். இதற்குப் பணத் தேவைக்கு ஒரு வீட்டை தனியாக எழுதி அந்த வாடகைப் பணத்தைச் செலவுக்குக் கொடுங்கள். நான் ஏற்படுத்திய இந்த நல்ல காரியங்கள் நிற்காமல் தொடர்ந்து நடக்க வேண்டும். அதனால் என் சொத்தையே நான் எழுதி வைக்கின்றேன் என்றனர்.

ஒருநாள் மகள் மயிலுவையும், மருமகன் குமரகுருவையும் வீட்டிற்கு வரும்படி அழைத்தார். வீட்டிற்குச் சென்றதும் ஒரு பத்திரத்தை எடுத்து குமரகுருவிடம் கொடுத்து இதை படித்துப் பாருங்கள் இருவரும். பிறகு என் மகள் கையெழுத்து போடட்டும் என்று சொல்லிக் கொடுத்தார். என் கணவர் படித்து விட்டு மௌனமாக என்னிடம் கொடுத்துப் ‘‘படித்து விட்டுக் கையெழுத்து போடு!’’ என்கின்றார். அது வரைக்கும் என்னவென்று இருவரும் சொல்லவில்லை அந்தப் பத்திரத்தை வாங்கிப் படித்தேன். அது விடுதலைப் பத்திரம். என் தந்தையார் கொடுத்த ஒரு வீட்டை தவிர மற்ற சொத்துக்களில் நான் பங்கு கேட்கமாட்டேன்; அனைத்தும் என் தமையனுக்கு உரிமை என்று எழுதப்பட்டு இருந்தது. படித்து முடித்துத் தந்தையைப் பார்த்துக் கேட்கின்றேன்” என்னப்பா! என்மீது நம்பிக்கை இல்லையா? தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என்று நினைப்பவள்.

என் அண்ணன் மீது உயிரையே வைத்திருக்கின்றேன். எனக்குப் பரிபூரணசம்மதம் நீங்கள் எழுதி வாங்காவிட்டால் கூட நான் அண்ணனிடம் எதையும் கேட்கமாட்டேன்’’ என்று கூறினேன் கண்ணீர் மல்க! அவர் உடனே சமாதானம் செய்கின்றார். நீ என் மகள் அப்படிச் செய்யமாட்டாய். எனக்குத் தெரியும்; இருந்தாலும் பிற்காலத்திற்கு இது நல்லது. நான் செய்ய வேண்டியதை ஒழுங்காக செய்துவிட்டுப் போக வேண்டும்!’’ என்று கூறுகின்றார். கையெழுத்து மகிழ்ச்சியுடன் போட்டுக் கொடுத்துவிட்டு வீடு திரும்புகின்றேன். ஏ.எஸ்.ஏ. பேக்கரியின் கணக்குகளை வரி குறைப்புக்காகத் தந்தையும், மகனும் கணக்கு பிரித்துவிடலாம் என்று ஆடிட்டர் கூறுகின்றார். ஏ.எஸ்.ஏ. கண்டிப்பாக மறுத்துவிட்டார். ஒரே கணக்காக இருக்கட்டும். வரி அதிகமானால் பரவாயில்லை. இன்கம்டாக்ஸ் இன்னொரு மகன் என்று நினைத்துக் கொள்கின்றேன் என்று கடைசி வரையில் கணக்கைப் பிரிக்கவில்லை. என் மகன் வேறு; நான் வேறாக இருக்கக்கூடாது என்று கூறினார். அவ்வளவு பாசம் மகன் மீது பெயருக்குக்கூட மகனைப் பிரிக்காமல் வாழ்ந்தார்.

# தேர்தல் தந்த பாடம்


**யாதனின் யாதனின் நீங்கிலான் நோதல்**
**அதனின் அதனின் இலன் (கு.341)**

*“ஒருவர் எதிலிருக்கெல்லாம் பற்றற்று விலகி இருக்கின்றாரோ, அதிலிருந்தெல்லாம் அவர்க்குத் துன்பம் இல்லை.''*

**தோ**ட்டப்பாளையத்தில் மருமகன் வி.ஓ. கோவிந்தசாமி காங்கிரஸ் கட்சியில் கவுன்சிலராக நிற்க முன் வந்தார். ஏ.எஸ்.ஏ. எவ்வளவோ சொல்லியும் தேர்தலில் பிடிவாதமாக நின்றார். மகள் ராஜத்தின் முகத்திற்காக பொறுத்துக்கொண்டு மருமகனுக்குத் தேர்தல் செலவுகள் செய்தார். பரமசிவமும் இரவும் பகலும் தேர்தலுக்காக வேலை செய்தார். நிறைய பணம் செலவழிந்தது. தேர்தல் அன்று ஓட்டுச் சாவடி அருகில் மருமகனுக்காகக் காத்து இருந்தார். சைதாப்பேட்டை பூத்தின் அருகில் ஒரு சிறிய கோவில் இருந்தது. அந்தக் கோவில் அருகில் பகலில் உட்கார்ந்து இருந்தார். மதியம் தோட்டப்பாளையத்தில் மகள் மயிலாம்பிகையின் வீட்டில் ஏ.எஸ்.ஏ.வும் பரமசிவமும் சாப்பிட்டு விட்டுச் சென்று அவ்விடமே இருந்தனர். கோவில் பக்கத்து வீட்டு உறவினர் வீடு; அந்தத் திண்ணையில் உட்கார்ந்து



இருக்கின்றார். கூட 5 பேர் பேசிக் கொண்டு இருக்கின்றார்கள். பூத் இடத்தில் பரமசிவம் வி.ஓ.ஜி. இருந்தனர். நகைக்கடை ஜம்புலிங்கம்: உறவினர் அவர்! வி.ஓ.ஜி.யின் நெருங்கிய நண்பரும் ஆவார். அவரும் தேர்தல் பணிகளுக்கு உடன் இருந்து கவனித்தார். ஓட்டுப் பதிவினைக் காலையில் இருந்து கவனித்தார். ஓட்டுப் பதிவு காலையில் இருந்து நல்ல மாதிரியாக நடந்து கொண்டு இருந்தது; மாலை நேரம், நெருங்க நெருங்க எதிர்க்கட்சியினர் கள்ள ஓட்டுப் போட ஆரம்பிக்கவே ஜம்புலிங்கம் எதிர்த்துத் தடைசெய்து இருக்கின்றார். இதனால் வாய்ச்சண்டை, கைச்சண்டை யாகவும் கம்பு, கத்திச் சண்டையாகவும் மாறி தெருவே அல்லோல கல்லோலப்பட்டதாம்; உடனே ஏ.எஸ்.ஏ. உட்கார்ந்து இருந்த வீட்டிற்கு ஜம்புலிங்கம் சண்டை போட்டுக் கொண்டே வர ஒரு குடிகாரன் எதிர்க்கட்சியாள் ஏ.எஸ்.ஏ.வைக் கத்தியால் குத்த ஓடினாராம்!



*வள்ளலின் வளர்ப்பு மகள் ராஜம் - வி.ஓ. கோவிந்தசாமி*

''எல்லாம் இவர் தான் பணம் செலவு செய்து மருமகனுக்காக வேலை செய்கின்றார்!'' என்று ஆத்திரத்துடன் கத்தியை எடுத்து ஏ.எஸ்.ஏ.வைக் குத்த ஓடி வந்தாராம். உடனே இதைப் பார்த்த அந்த வீட்டுப் பெண்மனி ஏ.எஸ்.ஏ.வைக் கையைப் பிடித்து உள்ளே ரூமில் அழைத்துத் தாழ்ப்பாள் போட்டு விட்டார்கள்; ஜம்புலிங்கம், ''என்னடா அந்தப் பெரியவர் தெய்வத்திற்குச் சமம்; அவரைப் போய் கத்தியால் குத்த வருகின்றாயே!'' என்று அவனை வழிமறித்தாராம்! உடனே அந்த வெறிபிடித்த கொலையாளி ஜம்புலிங்கத்தை மார்பிலும் வயிற்றிலும் குத்திக் கொலை செய்துவிட்டு ஓடி விட்டான்.

ஜம்புலிங்கம் ரத்த வெள்ளத்தில் உயிர் விட்டார். எல்லோரும் கூடிக் கதறி அழுகின்றனர். ஜம்புலிங்கத்தின் மனைவி 9 மாதம் கர்ப்பிணி! ஏ.எஸ்.ஏ. மிகவும் அனலில் இட்ட புழுவாய்த் துடித்தார். எனக்காக வந்த கத்தி உன் மேல் பட்டு விட்டதே என்று வருத்தப்பட்டார். அவரின் ஈமக் கடன்களைக் கூட இருந்து கவனித்தார்; அன்று இரவு விஷமிகள் கொடுத்த பொய் வழக்கில் இவரை போலீஸ் கைது செய்கின்றது. வீட்டில் எல்லோரும் கதறி அழுகின்றனர். ஏ.எஸ்.ஏ.யாரும் அழவேண்டாம்; எல்லாம் பொல்லாத வேலை. படவேண்டியதை பட்டுத்தான் ஆகவேண்டும். கொலைக்குப் பதில் கைது ஆகின்றேன். நான் எந்த தப்பும் செய்யவில்லை; கடவுளுக்குத் தெரியும். அவர் பார்த்துக் கொள்வார் என்று கூறிவிட்டுப் போலீசுடன் ஸ்டேஷனுக்குச் சென்றார். அங்கு தீவிரமாக விசாரித்து இவர் மீது எந்தக் குற்றமும் இல்லை என்று 1 மணி நேரத்தில் அனுப்பிவிட்டார்கள். அப்போது திரு.செ. யோகசுந்தரம்தான் போலீஸ்காரர்களுக்குத் தகுந்த விளக்கங்கள் கூறி விடுவித்து அழைத்து வந்தார். ஒரு கெட்டநேரம் அவருக்கு ஒரு சோதனையாக அமைந்தது; தேர்தலில் வி.ஒ.ஜி. தோற்றும் விட்டார்.



ராஜத்திற்கு மிகவும் வேதனை; தன் புருஷனால்தான் தந்தைக்குப் பண நஷ்டமும், தலைக் குனிவும் நடந்தது என்று அழுகின்றாள்; தந்தையிடம் மன்னிப்பு கேட்கின்றாள். அவர் மகளைச் சமாதானப் படுத்துகின்றார். ''எல்லாம் நேரம்! நாம் ஒன்றும் செய்யமுடியாது; நடந்தது நடந்துவிட்டது நடந்ததை மன்னிப்போம்; மறப்போம்!'' என்கின்றார். சகஜமாகத் தன் பணியில் ஈடுபடுகின்றார். எந்த வேலைகள் எப்படியிருந்தாலும் வன்னியகுல ஆஸ்ட்டல் நிர்வாகத்தைக் கண்ணும், கருத்துமாக நடத்தி வந்தார். உடல் திடகாத்திரமாக இருக்கும். வேலூரில் டாக்டர் ராமலிங்கம், பில்ட்டர் பெட் ரோட்டில் கிளினிக் வைத்து இருந்தார். எப்போதாவது உடல்நலம் சரியில்லை என்றால், அவர் மருந்து கொடுக்கும் போது ஊசி போடுவார்; டாக்டர் இராமலிங்கம் கூறுவார். என்ன பிள்ளைவாள்! உங்கள் உடம்பு வைரம் பாய்ந்த நாட்டுக் கட்டை; ஊசி கையில் குத்தினால் சதையில் இறங்கி உள்ளே போகமால் வளைகிறது ஊசி உடைந்து விடும் போல் உள்ளது!'' என்று சிரிப்பார். அவர் எப்போதும் ஆரோக்கியமாகவே இருப்பார்; எந்த வியாதியும் வராது. சர்க்கரை, இரத்தக் கொதிப்பு, இருதய நோய் எதுவும் வரவில்லை. கடைசியில் 65வது வயதில்தான் சர்க்கரை நோய் அறிகுறி காண்பித்தது. அவர் இன்சுலின் எடுத்துக் கொள்ளவில்லை. உணவு கட்டுப்பாட்டிலேயே சர்க்கரை அளவைச் சரியாக வைத்துக் கொண்டார். பேத்தி உண்ணாமுலை பள்ளிப்படிப்பை முடித்துவிட்டாள். மெடிக்கல் சீட்டுக்குப் பரமசிவம் முயற்சி செய்து கொண்டு இருந்தார். வேலூர் மாத ஜோதிடம் டிரஸ்ட் வெங்கட்ராம அய்யருக்கு குழந்தைகள் இல்லை. ஏ.எஸ்.ஏ.வின் ஆலோசனைப்படி வேலூர் மாத ஜோதிடம் டிரஸ்ட் என்று வைத்து அரசமரம் பிள்ளையார் கோவிலுக்கு அவர் சொத்து பின்னர் சேர்ந்து விடும்படி ஏற்பாடு செய்து கொடுத்தார். பி.கே. சந்திரசேகர் அய்யர், வீரராகவன், நடராஜகுருக்கள், ஆர். தாமோதர

முதலியார், வி. அண்ணாமலை முதலியார், இவர்களை டிரஸ்ட் பொறுப்பாளராக அமைத்து அந்த மாத ஜோதிடம் பிரஸ் நடைபெற வழி வகுத்தார். மேற்கூறிய அனைவரும் இவருடைய நெருங்கிய நண்பர்கள். இந்த டிரஸ்ட்டின் சொந்தக்காரர் வெங்கட்ராம அய்யர் இறந்து விடுகின்றார். அவருக்கு ஈமக்காரியங்கள் நடத்த பிள்ளை கிடையாது. அக்கா மகன் தான் செய்தார். அதற்கு வேண்டிய எல்லா வேலைகளையும் ஆட்களை வைத்துப் பொறுப்புடன் செய்து முடிக்கின்றார்.

அதே போல ஏ.எஸ்.ஏ.வீட்டிற்கு இன்னொரு எதிர் வீடு! அந்த வீட்டில் ஓய்வு பெற்ற சப்இன்ஸ்பெக்டர் துரைசாமி முதலியார்-பட்டம்மாள் தம்பதிகள் வசித்து வந்தார்கள். அவர்களுக்குப் பத்மாசினி, சகுந்தலா, ஷண்முகம் என்ற பிள்ளைகள் இருந்தார்கள். பத்மாசினியின் பேத்தி தணிகைச் செல்வி தாத்தா, பாட்டியுடன் தங்கிப் படித்து வளர்ந்து வந்தாள். இரண்டு குடும்பமும் நட்புடன் பழகுவார்கள். மயிலுவுக்குத் தணிகைச் செல்வி தோழியாக அன்புடன் பழகி விளையாடுவார்கள். பக்கத்து வீட்டில் மணீஸ்கபே அய்யர் குடும்பம், இந்தியாகபே குப்புசாமி குடும்பம், நரசிங்கராவ் வக்கீல் சதாசிவம், ராஜேந்திரபவன் ஓட்டல் அய்யர் அவர்களின் குடும்பம் இப்படி அந்தத் தெருவில் உள்ள அனைத்து வெவ்வேறு மரபினரும் ஏ.எஸ்.ஏ.வீட்டுடன் அன்பாகக் கலந்து பழகி வந்தார்கள். பரமசிவம், நீலகண்டன், ராஜம், மயிலு நால்வருக்கும் அவர்கள் வீட்டுப் பிள்ளைகள் பெண்கள் நண்பர்களாகப் பள்ளியில் படித்துப் பழகி வந்தார்கள். மேலும் ஏ.எஸ்.ஏ.வுக்குத் திருக்குறளார் என்னும் பட்டப்பெயருடன் இருந்த முனிசாமி - விழுப்புரத்துக்காரர். அவருக்குத் திருக்குறள் முனுசாமி என்று பெயர்; அவரும் வன்னிய இனத்தவர். ஏ.எஸ்.ஏ.வின் நெருங்கிய நண்பர்களுள் ஒருவர்; அவர் எப்போது வேலூர் வந்தாலும் இவர் வீட்டில் தான் வந்து தங்குவார். வேலூரில் சண்முகனடியார் சங்கத்தில் அடிக்கடி



திருக்குறள் பிரசங்கம் செய்ய அழைப்பு கொடுப்பார். திருக்குறளார் சிரிக்கச் சிரிக்கப் பேசித் திருக்குறளை மக்கள் மனதில் படியும்படி அழகாகச் சொல்லுவார்.

அவர் ஏ.எஸ்.ஏ. வீட்டிற்கு வந்தால் அவர் அறையில் தான் படுத்துக்கொள்வார். இருவரும் ஒன்றாக அமர்ந்து சாப்பிடுவார்கள். ஒரு சமயம் சாப்பிடும்போது திருக்குறள் முனுசாமிக்கு தொண்டையில் ஏதோ மாட்டிக் கொண்டு கஷ்டப்பட்டுத் திணறுகிறார். உடனே ஏ.எஸ்.ஏ. பக்கத்தில் சாப்பிட்டுக் கொண்டு இருந்தவர் அவர் கழுத்தில் தட்டினாராம். தலையைச் சாய்த்து கீழே பிடித்து உடனே தொண்டையில் இருந்தது கீழே விழுந்து விட்டதாம். தண்ணீர் குடிக்கச் சொல்லி, விசிறி விட்டாராம். அதைத் திருக்குறளார் நன்றி மறவாமல் அடிக்கடி சொல்லுவார்; என்னை ஒரு விபத்தில் இருந்து தக்க சமயத்தில் உதவி செய்து காப்பாற்றினார் என்பார். அவ்வளவு நட்பு இருந்தது இருவருக்கும். வன்னியர் ராஜரிஷி வர்மா திருவண்ணாமலையில் இறந்து விட்ட செய்தி கேட்டு மிகவும் வருத்தமடைகின்றார். திருவண்ணாமலைக்குச் சென்று இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு திரும்புகின்றார். அவர் காரியம் எல்லாம் நடக்கின்றது. அவருக்கு இரங்கற்பா மலரும் வெளியிடுவதில் பங்குபெற்று பணஉதவி செய்கின்றார். ஒவ்வொரு வருஷமும் அவருக்குச் சமாதி குருபுஜை நடக்கும். தவறாமல் சென்று கலந்துகொள்வார்.

மயிலு அப்பாவிடம் கேட்பாள்; நான் மட்டும் கறுப்பாக பிறந்து விட்டேன். அண்ணன் மட்டும் சிவப்பாக இருக்கிறார், எனக்கு வருத்தமாக உள்ளது என்பாள்; மேலும் அண்ணன் அடிக்கடி உன்னைத் தவிட்டுக்கு வாங்கினார்கள் என்று கேலி செய்வார். அதற்கு ஏ.எஸ்.ஏ. சொல்வார், ‘‘உங்க அம்மா சிவப்பு! அண்ணன் அவள் மாதிரி பிறந்துவிட்டான். இருந்தாலும் உங்க அம்மா சிவப்பு கிடையாது அவள் பால் வெள்ளையாக இருப்பாள்.

நீ என்னை மாதிரி நிறத்துடன் பிறந்துவிட்டாய் நிறத்தைப் பற்றிக் கவலைப்படக் கூடாது உள்ளம் வெள்ளையாக இருக்கப் பழகி நடந்து கொள்ள வேண்டும்; அதுதான் பெருமை மேலும் கறுப்பு உடம்புக்குதான் நகை போட்டால் அழகாக இருக்கும்; நீ களையாக அழகாக இருக்கம்மா கவலைப்படாதே! என்பார். இது சிறு வயதில் நடந்த பேச்சுக்கள்!

மயிலு படிக்கும் போது ஸ்கூலில் யார் யார் எந்த ஜாதி என்று ஆசிரியர் கேட்டு எழுதுவார்கள். மயிலு வீட்டிற்கு வந்து அப்பாவிடம், 'நைனா ஸ்கூலில் ஒவ்வொரு ஜாதி பெயர் சொல்லும் போதும் மாணவிகள் எழுந்து நிற்க வேண்டும். ஆசிரியர் பெயர்கள் எழுதி எத்தனை நபர் என்று குறித்துக் கொள்வார்கள். அப்படி கேட்கும் போது வன்னியர் என்று பெயர் சொன்னால் நான் ஒருத்தி மட்டும் எழுந்து நிற்கின்றேன். எனக்கு வெட்கமாக உள்ளது. மற்ற ஜாதி பிள்ளைகள் 5க்கு மேல் 10 வரை நிற்கின்றார்கள். ஏம்பா! நம்ம ஜாதியில் நிறைய பேர் இல்லை!'' என்று கேட்கின்றாள். ''நீ கவலைப்படாதே! நம் ஜாதி தான் உயர்ந்த ஜாதி; வீரவன்னியர் ஜாதி நாம்! நம் கோத்திரம் ஜம்புமகரிஷி கோத்திரம், நாம் அக்கினி குண்டத்தில் இருந்து பிறந்தவர்கள். நாம் தான் உயர்ந்த ஜாதி!'' என்று மகளிடம் கூறுகின்றார். ''பாவம்மா! நம்ம ஜாதி எல்லோரும் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர்கள். அதிகம் பணவசதி கிடையாது. பெரும்பாலும் நம் இன மக்கள் கிராமத்தில் வாழுகின்றார்கள். நம் இன மக்களுக்கு இன்னும் சரியாக விழிப்புணர்வு இல்லை; அதனால் பின்தங்கியிருக்கின்றார்கள். மாடு மாதிரி உழைப்பார்கள். ஆனால் ரோஷம் உள்ளவர்கள். நிறைய பேர் படிப்பதில்லை. கிராமத்தில் பயிர் வேலை, ஆடு, மாடு மேய்ப்பது இப்படியே வாழ்ந்துவிட்டார்கள். இப்போதுதான் கொஞ்சம், கொஞ்சமாகப் பிள்ளைகளைப் படிக்க அனுப்புகின்றார்கள். பிற்காலத்தில் எல்லோரும் முன்னுக்கு வந்து விடுவார்கள்!'' என்று மனதார வாழ்த்திச் சொல்லுகின்றார் மகளிடம்.



# கங்கைப் பயணம்

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன் அடிசேரா தார். (கு.10)**

*'இறைவனுடைய திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர் பிறவியாகிய பெரிய கடலைக் கடக்க முடியும்: மற்றவர் கடக்க முடியாது.'*

இவர் அறப்பணிக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்கினார். மாங்காய் மண்டி எஸ்.என். குப்புசாமி முதலியாரும் இவருக்கு நெருங்கிய நண்பர். வேலூர் சண்முகனடியார் சங்கத்தில் வாரியார் சுவாமிகளின் முன் ஒரு கூட்டம் நடைபெறுகின்றது. அரசமரம்பேட்டையில் உள்ள சில அன்பர்கள், ஷண்முகனடியார் சங்கத்தின் உறுப்பினர்கள். இவர்கள் எல்லாம் சேர்ந்து யாத்திரை செல்வதற்கு ஆலோசனை கூட்டம் நடத்தினார்கள். சுவாமிகள் இந்தியா முழுவதும் சுற்றியுள்ளதால் அவர் எந்த எந்த இடங்கள் போக வேண்டும், பார்க்கவேண்டும் என்று குறிப்புகள் கொடுத்தாராம்.

எல்லோருமாகச் சேர்ந்து வடநாட்டு யாத்தரை 48 நாள் சுற்றுப்பயணம் கொண்ட டூரிஸ்ட் ஒன்றைத் தேர்ந்



*வன்னியபுராணம் நூலுடன் வள்ளல்*

தெடுத்தார்கள். வடநாட்டு யாத்திரை 48 நாள் காட்பாடி ஸ்டேஷனில் புறப்பட்டுக் காட்பாடியில் வந்து இறங்குவது போல் ரயில் பயணம். தனிப்பெட்டியில் வேலூரில் இருந்து மொத்தம் 25 பேர்கள்; இதில் முக்கால் வாசிப்பேர் தம்பதிகள்; கால் பாகம் தனி மனிதர்கள். இரயிலேயே சாப்பாட்டு வசதியுடன் தனிப்பெட்டி இணைத்து இவர்கள் பெட்டியுடன் ரயிலில் இணையும். திரும்பி வரும் வரை இவர்கள் பெட்டி அந்த, அந்த ஊரில் அந்த, அந்த ரயிலில் இணைக்கப்படும் என்று கூறுகின்றார்கள். ஏகமனதாக இவர்கள் செல்வதற்குப் பெயர்கள் கொடுத்துப் பதிவு செய்தார்கள். அழைத்து செல்லும் டூரிஸ்ட்காரரும் புறப்படும் தேதியில் இருந்து முடியும் வரை தேதியுடன் ஒவ்வொரு ஊர், தங்கும் இடம் எல்லாம் விரிவாக அச்சடித்து கொடுத்திருந்தார்கள்.



என் தந்தை வீட்டிற்கு வந்து, என் தாயார் சொன்னதால் நான் வெளி ஊர் செல்லாமல் இருந்தேன். என் தாயாரின் வேலைகள் முடிந்து விட்டன. நான் செய்ய வேண்டிய வேலைகளையும் முடித்துவிட்டேன். நானும் யாத்திரை சென்று புனித நதிகளில் நீராடிப் புண்ணிய ஸ்தலங்களைத் தரிசனம் செய்து வருகின்றேன்; எல்லோரும் நம் சண்முகனடியார் சங்கத்தின் நண்பர்கள் குடும்பம்தான்! சென்று வரப்போகின்றேன் என்று மகிழ்ச்சியோடு கூறினார். மேலும் நான்தான் யாத்திரைக்கு அழைத்துச்செல்லும் தலைவன் என்று சிரிக்கின்றார். ஆம்! எல்லோரும் என் தந்தையாரை ஒரு மனதாக நீங்கள்தான் எங்களை வழி, நடத்திச் செல்ல வேண்டும்! என்று கேட்டுக் கொண்டார்களாம்!

ஏ.எஸ்.ஏ. யாத்திரைக்குச் செல்வதால் எல்லா பொறுப்புகளையும் கூர்ந்து கவனித்துச் செய்கின்றார். தன் மகளிடம் காந்தி நகரில் வசிக்கும் வீட்டிற்கு வருகின்றார். மயிலு, ''வாம்மா உட்கார்ந்து யாத்திரைக்கு போகப் பெட்டியில் துணிகள் எடுத்து வைக்க வேண்டும்! இன்னும் 10 நாள் தான் உள்ளது! நாளைக்கு நல்ல நாள் வீட்டிற்கு வாம்மா!'' என்று சொன்னார், பிறகு சந்தோஷமாக என்னுடன் துணைக்கு என் தம்பியை அழைத்துப்போகின்றேன் அவனுக்கும் சேர்த்து டிக்கட் புக் பண்ணியுள்ளேன் என்கின்றார். பிறகு ஆஸ்டலுக்கு 1 வருஷத்திற்கு வேண்டிய அரிசி, பருப்பு, மிளகாய், புளி முதலிய பெரிய பொருள்களும் 6 மாதத்திற்குத் தேவையான மளிகைச் சாமான்கள் மிளகு, சீரகம், கடுகு, வெந்தயம் போன்ற பொருள்களும் வாங்கிப்போட்டு விட்டேன். நான் பிறந்த ஊர் சென்று பார்த்து விட்டு தம்பியையும் வரச்சொல்லி விட்டு வந்து விட்டேன் என்று சந்தோஷமாகக் கூறுகின்றார்.

வளர்ப்பு மகன் நீலகண்டனின் மனைவி துளசி இரண்டாம் பிரசவத்திற்காகத் தாய் வீடு மாண்டியா சென்று இருந்தார். இரண்டாவது பெண்குழந்தை பிறந்தது.

குழந்தைக்கு ஜெயலஷ்மி என்று பெயர் வைத்தார். குழந்தை பிறந்து 5 மாதமாக அங்கு இருந்தார்கள்; யாத்திரை செல்வதால் மாண்டியாவிற்குச் சென்று மருமகளிடம் நான் ஊருக்கு சென்று வருகின்றேன் என்று கூறிவிட்டு சம்பந்தி சம்பங்கிராமனிடம் நல்ல நாள் பார்த்து மருமகளையும், குழந்தையும் அனுப்பி வையுங்கள். நான் யாத்திரைக்குச் சென்று வருகின்றேன்!'' என்று விடைபெற்று வருகின்றார்.



*வள்ளலின் வளர்ப்பு மகன் நீலகண்டன்-துளசி*

நீலகண்டன் துளசி இருவரையும் தன் வீட்டிலேயே வைத்து இருந்தார். ஊருக்குச் செல்லும் நேரத்திலும் பொறுப்போடு, அன்போடு சின்ன மருமகளையும், குழந்தையையும் பார்த்து வருகின்றார். தந்தை கூறியது போல் நான் அடுத்த நாள் வீட்டிற்கு செல்கின்றேன். அப்பாவின் சூட்கேஸில் மஞ்சள் குங்குமம் வைத்து பூஜை ரூமில் வைக்கின்றேன் அரிசி, பருப்பு, உப்பு இவையெல்லாம் கொடுத்தார்கள். அண்ணி. அப்பா, அவரின் வேஷ்ட சட்டை, டவல் கொண்டு வந்து கொடுக்கின்றார். அப்பாவும்,



அண்ணியும் நிற்கின்றார்கள். நான்தான் கற்பூரம் பூசை ஏற்றி செய்கின்றேன். மனதார இறைவனை வேண்டுகின்றேன். யாத்திரை சுகமாக முடிந்து பத்திரமாக என் தந்தையை வீட்டிற்குக் கொண்டு வந்து சேர்க்கவேண்டும் என்று.

யாத்திரை செல்பவர்களை அழைத்துச் செல்லும் டூரீஸ்ட்காரரின் நோட்டீஸில் இவையெல்லாம் கொண்டு வரவேண்டும் என்று எழுதியிருந்தார்கள். அதனால் அந்தச் சீட்டில் உள்ளபடி ஒன்றுவிடாமல் எடுத்துவைத்தோம். அவர் தினமும் பூஜை செய்ய ஒரு தனி சிறிய பெட்டியில் சுவாமிபடம், விபூதி, சந்தனம், குங்குமம், ஊதுவத்தி, விளக்கு, எண்ணெய், திரி, தட்டு, பஞ்சபாத்திரம், மணி இவையெல்லாம் அடங்கிய பூஜை பெட்டி சிறியதைப் பெரிய பெட்டியின் உள்வைத்துத் தயாராக வைக்கப்பட்டது. ஒரு வாரத்திற்கு முன்பாக இதைச் செய்துவிட்டோம்.

அதன் பிறகு திருவலம் சிவானந்த மௌனகுருவிடம் சென்று ''நான் யாத்திரை சென்று வருகின்றேன்; என்னை ஆசிர்வதியுங்கள் சுவாமி!'' என்று நமஸ்கரித்து எழுந்தாராம். சுவாமியும் ஆசிர்வதித்து விட்டு விபூதிப் பொட்டலம் கொடுத்தாராம். இவர் கைநீட்டி வாங்கும் போது விபூதி தவறி கீழே விழுந்துவிட்டதாம். பிறகு அதை எடுத்துக்கொண்டு விடைபெற்று வீட்டிற்கு வந்து விட்டார். யாரிடமும் இதைச் சொல்லவில்லை; சற்று மனம் வருத்தமடைந்து இருக்கின்றார். அடுத்து இரத்தினகிரி மலைக்குச் சென்று திரு. தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகளிடம் யாத்திரை சென்று வருகின்றேன். ஆசிர்வதியுங்கள் என்று கேட்கின்றார். சுவாமிகளும் முருகனுக்கு அர்ச்சனை செய்து சுவாமி பிரசாதம் விபூதி குங்குமம் கொடுத்து ஆசிர்வதிக்கின்றாராம். அடுத்ததாக, ஒருநாள் சண்முகனடியார் சங்கத்தில் யாத்திரை செல்லும் குழுவில் உள்ள அனைவரும் வாரியார் சுவாமிகளை அழைத்து அவரிடம் ஆசிபெறுகின்றார்கள். சென்னைக்குச்

சென்று நண்பர் மாணிக்கவேலு நாயக்கர் அவர்களிடம் யாத்திரை சென்று வருவதாகக் கூறுகின்றார். நண்பர் சாரங்கபாணி அவர்கள் இறந்துவிட்டார்கள். திரு.பூ.மு. ஏகாம்பரம், திரு.செ.யோகசுந்தரம் அவர்களிடம் எல்லாம் யாத்திரை சென்று வருகின்றேன். ஆஸ்ட்டலை பத்திரமாகப் கவனிக்குமாறு சொல்கின்றார். முக்கியமாக, மகன் பரமசிவத்திடம் ஆஸ்ட்டலைச் சென்று கவனித்து வரச் சொல்கின்றார். குமரன் மருத்துவமனையைச் சுற்றிப் பார்க்கின்றார். மருமகன் குமரகுருவிடமும் மருத்துவமனை நன்றாக நடைபெற வேண்டும். நல்ல பெயர் எடுக்கவேண்டும். மக்களுக்கு உன் சேவை சிறப்பாக அமையட்டும் ஏழைகளுக்குக் குறைத்துப் பில் போட வேண்டும் என்று அறிவுரைகளைக் கூறி வருகின்றார். மருத்துவமனை ஆரம்பித்து மூன்று மாதங்கள் முடிந்துவிட்டன. பிறகு தான் யாத்திரை சென்றார். எப்போதும், வீட்டில் என் கடமையெல்லாம் முடிந்துவிட்டது. நான் யாத்திரை சென்று வருகின்றேன் என்று சந்தோஷமாகக் கூறுகின்றார். யாத்திரை நோட்டீஸ் வேலூரில் இருந்து புறப்பட்டு வேலூர் வந்து சேரும் வரை மிக விரிவாக ஒவ்வொரு ஊரும் கோவில்களும் எழுதியிருந்தது.

இந்த நோட்டீசை என்னிடம் ஒன்று கொடுத்தார். நாங்கள் ஒரு நாள் தங்கும் ஊர்களுக்கு வருமாறு கடிதம் எழுதும்மா. எனக்குச் சரியாக கிடைக்கும், நானும் கடிதம் எழுதுகின்றேன் என்று சொல்லி நோட்டீஸைக் கொடுத்தார். வாங்கிப் பத்திரமாக வைத்துக்கொண்டேன். என் தந்தையார் ஊருக்குப் புறப்படுவதற்கு இரண்டு நாள் முன்னதாக என் தாய் வீட்டில் வந்து தந்தையுடன் தங்கியிருந்தேன். ஊருக்குப் புறப்படும் முந்நாள் எல்லோரிடமும் கலகலப்பாகப் பேசினார். சாப்பிட்டுவிட்டுத் தூங்கச் சென்றார். எல்லோரும் தீபாவளி போல் 4 மணிக்கு விடியற்காலை எழுந்து குளித்துவிட்டோம். அப்பா குளித்து பூஜை முடித்து கற்பூரத் தட்டுடன் வெளியில்



ஹாலுக்கு வந்து அவர் தாயார் படம், மனைவியிடம் ஆர்த்தி காட்டுகின்றார். பிறகு அனைவருக்கும் ஆரத்திக் காட்டினார், எல்லோரும் கண்ணில் ஒற்றிக் கொண்டோம். வீட்டில் பரமசிவம், அலமேலு, பேத்தி உண்ணாமுலை ராணி, பேரன் ஷான், நான், என் கணவர் குமரகுரு, குழந்தை சேந்தன், நீலகண்டன், ராஜம், கோவிந்தசாமி அவர்கள் குழந்தைகள், ஆனந்தாய், தங்கை பச்சம்மாள், ஊரிலிருந்து உடன் செல்ல வந்த என் சித்தப்பா வெள்ளைக்கண்ணு அனைவரும் அப்பா காலில் விழுந்து ஆசிர்வாதம் பெற்றோம்! எல்லோருக்கும் அட்ஷதை போட்டு இருகரம் கூப்பிக் கண்கள் கலங்க ஆசீர்வதித்தார்.

என் மகள் ஸ்ரீ வள்ளி, மகன் ஆனந்தன் 1 வாரம் லீவு என்று அரசம்பட்டுக்குப் பாட்டி வீட்டுக்குச் சென்றிருந்தார்கள். என் தந்தை ஊருக்குப் போகும் போது பேரக் குழந்தைகளைப் பார்க்க வேண்டும் என்று அழைத்து வரச் சொன்னார். அதனால் காலை 6 மணிக்கு டிரைவர் கண்ணன் கார் எடுத்துச் சென்றார். என் தந்தை ஆசீர்வதித்து விட்டு அவர் ரூமுக்குச் சென்று உடை உடுத்திக் கொண்டு இருக்கின்றார். ஒரு டம்ளர் ஹார்லிக்ஸ் கொண்டு வந்து கொடுத்தேன். குடித்து விட்டு ரூமை விட்டு வெளியில் வந்து அவர் ரூமைப் பூட்டுகின்றார்.

நாங்கள் அனைவரும் கும்பலாக 15 பேர் ஹாலில் நிற்கின்றோம். வெள்ளை கதர் வேஷ்டி கதர் ஜுப்பா, கதர் குல்லா, நெற்றியில் 3 பட்டை விபூதி, நடுவில் சந்தனப்பொட்டு, திடகாத்திரமான உடல் வாகு நாயன்மார் போல் ஜொலிக்கின்றார். பேரன் பழனியைக் கூப்பிடுகின்றார். பழனி இங்க வாப்பா! இந்தா என்னுடைய சாவி கொத்து வைத்துக்கொள்! வருங்கால வாரிசு அவனிடம் ஒப்படைக்கின்றேன்!'' என்று எங்களையெல்லாம் பார்த்து சிரித்துக் கொண்டு பேரன் கையில் கொடுக்கின்றார். அப்போது பேரன் 8 வயது சிறுவன், குழந்தை, தாத்தா கூப்பிட்டதும் தன்

பிஞ்சு கைகளில் பழனி சாவிக் கொத்தை வாங்கிக் கொண்டான். எல்லோரும் சிரிக்கின்றோம். அதுவரை வீட்டில் அனைவரும் மிக்க மகிழ்ச்சியாகத்தான் இருந்தோம்.

பிறகு என் தந்தை அனைவரிடமும் சென்று வருகின்றேன் என்று இறுதியாகக் கைகூப்புகின்றார். 14-06-1972 அன்று 8 மணிக்கு காட்பாடியில் ரயில் புறப் படுகின்றது. நான் கடைக்குச் சென்று பிறகு காரில் ரயில்வே ஸ்டேஷன் செல்கின்றேன். எல்லோரும் வரவேண்டாம் இங்கேயே விடைகொடுங்கள்!'' என்று கை கூப்புகின்றார்.

ஹாலுக்கு வெளியில் ஒரு சிறிய நடை இருக்கும். அங்கு என் தாயார் உண்ணாமுலை அம்மாள் பெரிய படமும், அதன் பக்கத்தில் பாட்டி முத்தம்மாள் படமும் மாட்டியிருக்கும். என் தந்தை எப்போதும் வெளியில் செல்லும் போதும் தன் தாயார், படத்தைப் பார்த்துக் கண்களால் விடைபெறுவார், மனதுக்குள். இதை நாங்கள் கவனித்திருக்கின்றோம்! அன்றும் அதே போல் தன் தாயார். மனைவி படத்தை நிமிர்ந்து பார்த்து விட்டு காலில் செருப்பு மாட்டுகின்றார். அவர் பின்னால் நாங்கள் அனைவரும் நிற்கின்றோம். அவர் தாயாரின் படம் கழன்று கீழே விழுகின்றது. டமார் என்று சத்தம்! கண்ணாடி நொறுங்கிவிட்டது. புறப்படும் போது இப்படி அபசகுணம் காட்டுகின்றதே! என்று அனைவரும் விழிக்கின்றோம்.

அலமேலு, ராஜம், இருவரும் படத்தைத் தட்டி எடுத்து வைத்துவிட்டு கண்ணாடிகளைப் பெருக்கி எடுக்கின்றார்கள். எல்லோரும் என் அப்பாவை உள்ளே ஹாலில் வந்து உட்காருங்கள். சிறிது நேரம் கழித்துச் செல்லலாம் என்று கூறி அவரை அமர்த்திக் குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் கொடுத்தோம். நான் தான் கொடுத்தேன். வாங்கிப் பருகிவிட்டு கிளம்பினார். முகம் கொஞ்சம் வாட்டமாகிவிட்டது. எல்லோருக்குமே மகிழ்ச்சி போய் பயம் வந்து விட்டது. அவர்



பின்னால் தெருப்படி வரை அனைவரும் இறங்கிவந்தோம். அவரும் சித்தப்பாவும் நடந்தே கடைக்குச் சென்றார்கள்.

நானும், என் கணவரும் கூடவே சென்று கடைக்கு வந்தோம். என் தந்தை கடையில் கல்லாமேல் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார். பேப்பர் படித்தார். அங்கு சில நண்பர்கள் வந்து விசாரித்தார்கள். யாத்திரை செல்பவர்கள் எல்லோரும் சண்முகனடியார் சங்கத்தில் மீண்டும் ஒன்று கூடி விட்டு அவரவர் காரில் ரயில்லே ஸ்டேஷனை அடைய வேண்டும் என்று கூறினார்கள். என் தந்தையுடன் நானும், என் கணவரும் காரில் சென்றோம். ரயில்வே ஸ்டேஷனில் அனைவரும் கூடி விட்டார்கள். என் அண்ணன் பரமசிவம் மட்டும் வந்து விட்டார். மற்றவர்கள் எல்லாம் வீட்டிலிருந்தார்கள். 8 மணிக்குப் புறப்படுவதற்கு ரயில் வரவில்லை ஏதோ இடையூறு தகராறு நடக்கின்றது; நேரம் ஓடிக்கொண்டே இருக்கின்றது. சிலர் நாளைக்கு போகலாம் என்கின்றார்கள். டூரிஸ்ட்காரருடன் வாக்குவாதம் நடைபெறுகின்றது; எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

என் தந்தை கண்டிப்பாகக் ''குறிப்பிட்டது போல் இன்றே போகவேண்டும்'' என்று சொல்லி ஒரு வழியாக டூரிஸ்ட் அழைத்துச் செல்பவர் எப்படியோ ரயில்வே துறையுடன் பேசி முடிவு செய்து காலை 10 மணிக்கு ரயில் வருகின்றது. என் தந்தைதான் யாத்திரை குழுவுக்குத் தலைமை பொறுப்பு எடுத்துக் கொண்டார். எல்லாருடைய குடும்பத்தில் இருந்தும் அவரவர் உறவினர்கள் வந்து இருந்தார்கள். காட்பாடி ரயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரம் முழுவதும் யாத்திரை குழுவின் அன்பர்கள்தான் பெருந்திரளாக இருந்தார்கள். என் குழந்தைகள் வரவில்லையே! தாத்தாவை பார்க்க! என்று என் மனம் துடிக்கின்றது! குழந்தைகள் வரவில்லை. ரயிலும் புறப்படத் தயாராகின்றது. ஏ.எஸ்.ஏ. அனைவரையும் ஒவ்வொருவராக ரயிலில் ஏற்றி விடுகின்றார். அவரவர்கள்

பெட்டியுடன் உள்ளே செல்கின்றார்கள். தன் தம்பியையும் பெட்டியுடன் உள்ளே அனுப்புகின்றார். கடைசியாக என் தந்தை படியில் கால் வைத்து ஏறி வாசப்படியில் நின்று கொண்டு கை அசைத்து விட்டு எங்களைப் பார்த்து இருகரம் கூப்பிக் கும்பிடுகின்றார். நான் படிக்கட்டில் நின்று கொண்டு 'நைனா! பத்திரமாக போய் வாருங்கள்' என்று அவர் கையை பிடித்து துக்கம் அடைக்கக் கண் கலங்கி நிற்கின்றேன். என் கையை விடுவித்துக் கண்ணால் விடைபெறுகின்றார். அதுதான் நான் பார்த்த என் தந்தையின் கடைசிப் பார்வை! ரயில் விசில் ஊதுகின்றது! 1 மணி அடிக்கின்றது. என் தந்தை படிக்கட்டில் சாந்தமே உருவமாக - அமைதியான - புன்முறுவல் முகத்துடன் இருகரம் கூப்பி அசையாமல் படிக்கட்டில் நின்று விடைபெறுகின்றார். ரயில் புறப்பட்டு விட்டது. சிறிது தூரம் ரயில் நகரும் போது கூடவே ஓடுகின்றேன். என் தந்தையின் முகத்தை கடைசியாகப் பார்க்கின்றேன்.

உண்மையாகக் கூறுகின்றேன். இது நடந்த சம்பவம். ரயில் வேகமாக நகர ஆரம்பித்தது. என் தந்தையின் உருவம் தெரியவில்லை. மற்றவர்கள் ஜன்னல் வழியாக கையை ஆட்டுகின்றனர். ரயில் நகர்ந்து சென்று மறையும் வரை அனைவரும் நின்று பிறகு கலைகின்றோம். அப்போதுதான் எங்கள் டிரைவர் மூச்சு இறைக்க என் மகள் ஸ்ரீ வள்ளி 5 வயது சிறுமி, மகன் ஆனந்தன் 3 வயது இவர்களை அழைத்துக் கொண்டு ஓடி வருகின்றார். குழந்தைகளைப் பார்த்ததும் எனக்கு துக்கம் மேலும் வருகின்றது. தாத்தா ஊருக்கு போய்விட்டார்கள் என்று கூறுகின்றேன். குழந்தைகளுக்குச் சரியாகப் புரியவில்லை. பிறகு வீட்டிற்கு வந்து ஒரு நாள் அன்று தங்கி விட்டு மறுநாள் அண்ணன் அண்ணியிடம் விடைபெற்றுக் காந்திநகரில் என் வீட்டிற்குத் தினமும் அவர் நல்லபடியாக யாத்திரை முடித்து வீடு வரவேண்டும் என்று பூஜை செய்து பிரார்த்திக் கொண்டு வருகின்றேன்.



எனக்கு என் தந்தைதான் தாய், சகோதரி, சிநேகிதி. அவருடன் நன்றாக உள்ளம் திறந்து பேசி மகிழ்வேன். என் தந்தை ஊருக்குச் சென்றது நீண்ட இடைவெளி! எனக்கு பெரும் ஏமாற்றமாக இருந்தது. அது பெரும் நீண்ட இடைவெளி என்று எனக்கு அப்போது புரியவில்லை. ஒரு வாரம் ஆகின்றது. எனக்கு என்னவோ பறிகொடுத்தது போல் இருக்கின்றது. என் மனம் தவிக்கின்றது! என் தந்தையிடம் இருந்து கடிதம் வந்தது. எனக்கு உயிர் வந்தது போல் உள்ளது. மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். என் அண்ணனிடம் போனில் சொல்கின்றேன், ''அண்ணா! நைனா லெட்டர் எழுதியிருக்கிறார்! என்றேன். அண்ணனும், ''எனக்கும் லட்டர் வந்துள்ளது'' என்று சந்தோஷமாகக் கூறுகின்றார். இரவு என் வீட்டிற்கு வந்து டிபன் சாப்பிட்டு விட்டு அவர் கடிதத்தை எனக்குக் காண்பித்தார். என் கடிதத்தை அவருக்குக் காண்பித்தேன். இருவரும் படித்து மகிழ்ச்சியடைந்தோம். இப்படியே எனக்கும் என் தமையனுக்கும் கடிதம் ஒரே நாளில் வரும். இப்படியாக 15 கடிதங்கள் வந்தன. நானும் உடனுக்குடன் கடிதம் அனுப்பிக்கொண்டு இருந்தேன். கடிதத்தைப் பார்த்து மகிழ்வேன். அந்த இன்பத்திற்கு அளவே இல்லை. ஒவ்வொரு கடிதமும் ஒவ்வொரு அறிவுரையுடன் வரும். அவர் கடிதத்தில் எழுதியவைகளைக் குறிப்பிடுகின்றேன்.

அன்புள்ள மகள் மயிலாம்பிகைக்கும் மருமகன் குமரகுருவுக்கும் ஆசிர்வாதம். குழந்தைகளைப் பத்திரமாகக் கவனித்துக் கொள்ளுங்கள். ஆஸ்ப்பிட்டல் எப்படி நடக்கின்றது. ஆஸ்ப்பிட்டலில் வரும் நோயாளிகளை நன்றாகக் கவனித்து அனுப்பவும். ஏழைகளிடம் குறைவாகப் பணம் வாங்கவேண்டும். மிக, மிக ஏழையாக இருப்பவர்களுக்கு இலவசமாகச் சிகிச்சை அளிக்கவும். எப்போதும் நல்ல காரியத்திற்குத் தருமம் செய்யவும். நான் நன்றாக இருக்கின்றேன். எந்தக் குறையும் இல்லை. எல்லோரும்

நன்றாக இருக்கின்றோம். சாப்பாடும் நன்றாக ஏற்பாடு செய்து உள்ளார்கள் என்று எழுதுகின்றார்.

இன்னொரு மடலில் வடக்கே நதிப்பெருமைகள் தான் உள்ளது. கோவில்கள் அவ்வளவு பிரமாதமாக இல்லை. நம் தென்னிந்தியாவில்தான் கோவில்கள் பெருமையாக உள்ளன என்கின்றார். அலகாபாத் திரிவேணி சங்கமத்தில் குளித்தேன். எனக்கு மிகவும் பிடித்திருந்தது. தண்ணீர் கண்ணடிபோல் ஓடினது என்கின்றார். அவர் திரிவேணி சங்கமத்தில் நதியில் மூழ்கி எழுந்ததும் நதியின் எதிர்க் கரையில் தன் மனைவி நின்று இருப்பது போல் அவர் கண்ணுக்குத் தெரிந்ததாம். இதைக் கடிதத்தில் எழுதியிருந்தார். அவ்விடம் தன் தம்பியிடமும் என் மனைவி என் எதிரில் தோன்றினாள் என்று சொன்னாராம்.

அடுத்து ரிஷிகேஷ் சென்று கங்கையில் நீராடிச் சுவாமி தரிசனம் செய்தேன் என்றார். பத்திரிநாத் சென்றேன். அங்கு கடும் குளிர்! என்னால் தாங்கமுடியவில்லை. இரவு லேசாக காய்ச்சல் வந்துவிட்டது. இறைவனைப் பிரார்த்தனை செய்து படுத்துக்கொண்டேன். காலையில் சரியாகிவிட்டது. காலையில் அங்கு வெந்நீர் குண்டத்தில் குளித்தோம். பனிமலையில் வெந்நீர் குண்டம் உள்ளது. லேசாக வெது வெதுப்பாக உள்ளது. அதில் நீராடினோம் என்று எழுதினார். காசியில் கங்கையில் குளித்து உங்க அம்மாவுக்கும், என் தாயாருக்கும் பிண்டபிரசாதம் கொடுத்தேன் என்று எழுதுகின்றார். 1 மாதம் யாத்திரை. அதனால் நிறைய இடங்கள் பார்க்கின்றார்கள். நிறைய நதிகளில் நீராடினார்களாம்.

ஒரு கடிதத்தில் உனக்கு என்ன வேண்டும். நான் வரும் போது வாங்கி வருகின்றேன் என்று எழுதினார். நான் பதில் கடிதத்தில் ‘நைனா எனக்கு எதுவும் வேண்டாம் நீங்கள் பத்திரமாக வந்து சேருங்கள். நான் தினமும் பூஜைசெய்து



பிரார்த்தித்துக் கொள்கின்றேன்! நைனா! உங்களுக்கு நேரம் கிடைத்தால் எனக்கு

1. கமண்டலம் (அபிஷேகம் செய்ய)
2. ருத்ராட்ஷைமாலை (கழுத்தில் அணிய)
3. ஜபமாலை (மந்திரம் சொல்லி உருட்ட)

இந்த மூன்று பொருள்கள் மட்டும் வாங்கி வாருங்கள். வேறு எதுவும் எனக்கு வேண்டாம் என்று எழுதியிருந்தேன். அந்தக் கடிதத்தைப் படித்து மகிழ்ச்சியடைந்தாராம். தன் தம்பியிடம் என் மகள் மிகவும் புத்திசாலி, புடவையோ, நகையோ, வேறு ஆடம்பரப்பொருளோ, கேட்காமல் பூஜைப் பொருள்கள் கேட்டு இருக்கின்றாள். பாருடா’’ என்று சந்தோஷமாகக் கூறினாராம். என் சித்தப்பா கூறினார். இந்த விஷயத்தை அடுத்து நேபாளம் சென்று பசுபதிநாதரைத் தரிசிக்கச் செல்வதாக இருந்தார்கள். அப்போது டூரிஸ்ட்கைடு பஸ் மலைமேல் போகவேண்டும். இருதயகோளாறு உள்ளவர்கள் மற்றும் உடல் நலம் குறைவாகத் தெரிபவர்கள் காட்மாண்டு வரவேண்டாம். அடிவாரத்தில் தங்க ஏற்பாடு செய்கின்றேன். வராதவர்கள் கீழே தங்குங்கள். வருபவர்களை மேலே அழைத்துச் செல்கின்றேன் என்று அறிவித்தார்களாம். அதைக் கேட்டவுடன் 3 தம்பதிகள் நாங்கள் வரவில்லை என்று நின்றுவிட்டார்களாம். மற்றவர்கள் காட்மாண்டு பயணம் செய்து இருக்கின்றார்கள்.

பின் தந்தையும் காட்மாண்டு சென்று பசுபதிநாதரைத் தரிசனம் செய்து அன்று ஒருநாள் தங்கியிருக்கின்றார்கள். அப்போது நான்கேட்ட மூன்று பொருள்களும் வாங்கியிருக்கின்றார். அப்படியே வாரியார் சுவாமிகளின் மனைவி ஞானம்பாள் கமண்டலம் வேண்டும் என்று கேட்டு இருக்கின்றார்கள். எனக்குச் செம்பில் நந்தி கமண்டலம் வாரியார் சுவாமிகளின் மனைவிக்கு பித்தளை கமண்டலம் (கோவிலில் உள்ளது போல்) எங்கள் வீட்டிற்கு 1 பித்தளை கமண்டலம், உத்திராஷைமாலைகள், ஜபமாலைகள், நிறைய

எல்லா கோவில் சுவாமிப் படங்கள், காசியில் பனாரஸ் புடவைகள் 20 வாங்கியிருக்கின்றார். இருபது பனாரஸ் புடவையின் முகப்பிலும் பேனாவினால் ஏ.எஸ்.ஏ. என்று மூன்றெழுத்து கையெழுத்துப் போட்டு இருந்தார். தன் தம்பியிடம் குறிப்பாக எல்லாவற்றையும் பெட்டியில் வைக்கும்போது என் மகளுக்கு (மயில்) செம்பு நந்தி கமண்டலம், பெரிய உத்திராட்ஷைமாலை, ஜபமாலை இவைகளைத் தனியாக எடுத்து வைத்துக் கொடுக்க வேண்டும். இது வாரியார் மனைவிக்கு, மற்றவைகள் பொதுவாக வீட்டில் எடுத்துக்கொள்ளட்டும். புடவை என் மகளுக்கு 2, மருமகளுக்கு 2, மற்றவை ஆளுக்கு ஒன்று சொன்னாராம். நவரத்தின மணிமாலைகள் இவையெல்லாம் வாங்கி வைத்திருந்தார். காட்மாண்டுவில் இருந்து கடிதம் எழுதியிருந்தார். எனக்கு மிகவும் இந்த இடம் பிடித்திருந்தது. பசுபதி நாதர் கோவிலில் சுவாமியைக் கண்குளிரக் கண்டுகளித்தேன். நீ கேட்டபடி கமண்டலம், ருத்ராட்ஷை ஜபமாலை வாங்கி வருகின்றேன் என்று எழுதியிருந்தார்.

புடவை வாங்கினது தெரியாது. வீட்டிற்குப் பெட்டி வந்தபிறகு தான் மற்றப்பொருள்கள் தெரியும். எல்லா இடங்களும் நல்லபடியாக சுற்றிப்பார்த்துவிட்டோம். இப்போது திரும்பிக்கொண்டு இருக்கின்றோம். மறுபடியும் காசி வழியாக வருகின்றோம் என்று எழுதினார். அண்ணனுக்கும் வீட்டைப்பற்றி கடையைப் பற்றி ஆஸ்ப்பிட்டலைப் பற்றிக் கேட்டுத் தனித்தனியாக எழுதுவாராம்.

பேத்தி உண்ணாமுலை ராணி +2 முடித்து விட்டாள்; கல்லூரிக்கு முயற்சி செய்து கொண்டு இருந்தோம். பேத்தியை மெடிக்கல் காலேஜ் சேர்க்கவேண்டும் என்று மகன் கூறினது அவருக்குத் தெரியும். அவருக்கும் விருப்பம். பேத்தியை அவ்வாறே சேருங்கள் என்று கூறிவிட்டுச் சென்றார். என் அண்ணனுக்குக் கடிதத்தில் எழுதுகின்றார். மந்திரி மாணிக்கவேலரிடம் சொல்லி விட்டு வந்து இருக்கின்றேன்.



அவர் மூலம் கிடைத்தால் பார்! யாரிடமும் பணத்தைக் கொடுத்து ஏமாந்துவிடாதே! தானாகச் சீட் கிடைத்தால் சேர், இல்லாவிட்டால் வருத்தப்படவேண்டாம்!'' என்று எழுதினாராம். என் தந்தை யாத்திரையின் போது விடியற்காலை 4 மணிக்கு எழுந்து முதலில் தினமும் ரயிலில் குளித்து விடுவாராம்! குளித்துவிட்டு புது கதர்வேட்டி அணிந்து நெற்றி, உடம்பு முழுவதும் விபூதிகுழைத்து 3 கோடுகளாக இட்டுக் கொள்வாராம். சந்தனப்பொட்டு இட்டுக்கொண்டு, குங்குமம் வைத்துக்கொள்வாராம். அவர் ரயில் சீட்டில் உட்கார்ந்து கொண்டு, சுவாமி படத்தை வைத்து விளக்கு ஏற்றி ஊதுவத்தி வைத்துக் கற்பூர ஆரத்திக் காட்டுவாராம். பிறகு 5 மணிக்கு எல்லோரையும் எழுப்புவாராம். தினமும் இப்படித்தான்! பார்த்தால் சிவனடியார் நாயன்மார்களில் ஒருவர் போல் காட்சியளிப்பாராம்! எல்லோரும் வீட்டில் வந்து கூறினார்கள்.

ஒருநாள் கூட அவர் தலைவலி, சளி, ஜுரம், என்று சொன்னதே இல்லையாம். மிகவும் நன்றாக இருந்து இருக்கின்றார். எல்லோரிடமும் கலகலப்பாகப் பேசிச் சிரிப்பாராம். எவ்வளவோ விஷயங்கள் கூறுவாராம். அனைவரும் சாப்பிட்டார்களா? தூங்கினார்களா? உடல் நலமாக உள்ளதா? இப்படிக் கேட்டு விசாரிப்பாராம். ஒரு வழியாக எல்லா ஊர்களும் சுற்றிப் பார்த்துவிட்டுக் கடைசிக் கடிதம் எழுதுகின்றார். ஒரேநாளில் எனக்கும், என் அண்ணனுக்கும் அந்தக் கடிதத்தில் அன்புள்ள மகள், மருமகனுக்கு ஆசீர்வாதம். நான் நலமாக எல்லா ஊர்களும் பார்த்து முடித்துவிட்டேன். இப்போது ஊர் திரும்பப் புறப்பட்டுவிட்டோம். காசி வழியாக வருகின்றோம். நாங்கள் புறப்பட்டு வரும் ரயில் மாலை 4 மணிக்கு அரக்கோணம் வந்து சேருகின்றது. அங்கிருந்து எங்கள் போகி மாற்று ரயிலில் இரவு 8 மணிக்குத் தான் சேர்ந்து ரயில் புறப்பட்டு 10 மணிக்குக் காட்பாடி வந்து சேரும். நான் விரைவில் வீட்டிற்கு வரவேண்டும் என்று நீங்கள் விரும்பினால் மாலை 4 மணிக்கு அரக்கோணத்திற்குக் கார் எடுத்துக் கொண்டு வந்தால் நான் வந்து விடுகின்றேன் என்று

எழுதியிருந்தார். எனக்கும், அண்ணனுக்கும் ஒரேமாதிரி இந்த விஷயத்தை எழுதியிருந்தார். அதுதான் என் தந்தையின் கடைசிக் கடிதம். எங்க அண்ணன் கடிதத்தைக் காண்பித்தார். நானும் காண்பித்தேன், இருவரும் சந்தோஷமாகச் சிரிக்கின்றோம். 'இன்னும் ஒரு வாரத்தில் வந்துவிடுவார் நைனா' என்று பேசுகின்றோம். அப்போது என் அண்ணன் கூறுகின்றார். ''பாரும்மா மயிலு! நைனா எப்படி எழுதியிருக்கின்றார் 4 மணிக்குக் கார் எடுத்து வாடா'ன்னு சொன்னால் எடுத்துக் கொண்டுபோகப் போகின்றோம். நீங்கள் விருப்பப்பட்டால் சீக்கிரம் 4 மணிக்குக் கார் எடுத்து வந்து அழைத்துப்போங்கள். இல்லாவிட்டால் ரயிலேயே வருகின்றேன் என்று சொல்கின்றார்! பாரும்மா! என்று கூறுகின்றார்.

நானும் ''பாருண்ணா! அவர் சம்பாதித்த கார்! நாம் எல்லோரும் எவ்வளவு ஆர்வமுடன் எப்ப வருவாரோ என்று காத்து இருக்கின்றோம்! நமக்குப் போய் விருப்பம் இல்லாமல் போய் விடுமா? என்கின்றேன். அண்ணா நானும் வருவேன் கண்டிப்பாக அழைத்துப்போக வேண்டும் என்கின்றேன். அவரும் நாம் இருவரும் மதியம் 2 மணிக்கே கிளம்பிப்போய் விடலாம். நீ தயாராக இரு என்கின்றார். நாங்கள் இருவரும் இப்படி பேசிக்கொண்டோம். நாட்கள் நகருகின்றன. என் தந்தையின் ரயில் காசி வழியாக வருகின்றது. மறுபடியும் ஒருநாள் கனவில் என் மனைவி வந்தாள். என் தாயார் வந்தார்கள் என்று தன் தம்பியிடம் கூறினாராம். அவர் கடைசி நாள் மாலை அவல் வறுத்தது-வாங்கிச் சாப்பிட்டாராம். மதியம் தயிர்ச் சாதம் சாப்பிட்டாராம். இரவு 8 மணிக்கு அனைவரும் ரயில் சாப்பாடு-தம்பி உள்படச் - சாப்பிட்டு இருக்கின்றார்கள். இவர் மட்டும் எனக்குச் சாப்பாடு வேண்டாம். பசியில்லை என்று ஒரு டம்ளர் பால் மட்டும் சாப்பிட்டாராம். அனைவரும் ஏ.எஸ்.ஏ.விடம் வழக்கம் போல் நமஸ்காரம், வணக்கம் என்று சொல்லிவிட்டு அவரவர் படுக்கையில் படுத்துக் கொண்டார்களாம்.



# கண்ணீர் வெள்ளம்

**நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு (கு.336)**

*'நேற்று இருந்தவர் ஒருவர் இன்று இல்லாமல் இறந்து போனார் என்று சொல்லப்படும் நிலையாமை ஆகிய பெருமை உடையது இவ்வுலகம்.'*

**எ**ன் தந்தையும் அவர் இருக்கை சீட்டில் படுத்துக்கொண்டாராம். தன் தம்பி கீழே விரிப்பின் மேல் படுத்துக்கொண்டாராம். படுக்கும்போது நெற்றியில் விபூதி பூசிக்கொண்டு முருகா, முருகா, என்று சொல்லிக்கொண்டு படுத்தாராம். நன்றாக அனைவரும் தூங்கிவிட்டனர். இரவு 9 மணிக்கு விளக்கு அணைத்து விட்டு ஒரு சிறிய விளக்கு மட்டும் எரிகின்றதாம். இரவு 12 மணிக்கு என் தந்தை எழுந்து உட்கார்ந்துக்கொண்டு தன் தம்பியை எழுப்பி கொஞ்சம் வெந்நீர் கொடுப்பா என்று கேட்டு வாங்கிக் குடித்தாராம். அப்போது தன் தம்பியிடம் லேசாக மார்பு வலிக்கின்றது. என்னவென்று தெரியவில்லை, வெந்நீர் குடித்திருக்கின்றேன், சரியாகப் போய்விடும்! நீ படுத்துக்கொள்!'' என்று கூறினாராம். அவர் தம்பி பரவாயில்லை; நான் உட்கார்ந்து இருக்கின்றேன்;

ஏதாவது மருந்து சாப்பிடுகின்றாயா?'' என்று கேட்டாராம். வேண்டாம்பா! சரியாகிவிடும்! நீபடுத்துக்கொள்!'' என்று சொன்னாராம். சிற்றப்பா படுத்துக் கொண்டாராம். மறுபடியும் 1 மணிக்கு எழுப்பியிருக்கின்றார். ''இந்தாப்பா இந்தச் சட்டையைபிடி! எனக்குப் புழுக்கமாக - வேர்த்துக் கொட்டுகின்றது'' என்று சட்டையைக் கழட்டி கொடுத்து விட்டாராம். சித்தப்பா அதை வாங்கிக்கொண்டாராம்! பிறகு இரவு 2 மணிக்கு கையில் கட்டியிருந்த வாட்சும், வாரியார் கொடுத்த நவரத்தினமாலை-கழுத்தில் எப்போதும் அணிந்திருப்பார்-சிறு உத்திராட்ஷைமாலையும், மோதிரமும்! நவரத்தினமாலையைக் கழற்றி, 'இந்தப்பா வைத்துக்கொள்!' என்று கொடுத்தாராம். 'ஏன்! எதற்கு கழற்றிக் கொடுக்கின்றீர்கள்! என்று கேட்டாராம். ஒன்றுமில்லை! எனக்கு உறுத்தலாக இருக்கின்றது. அதனால் நீ வைத்துக்கொள்! என்று கழற்றிக் கொடுத்துவிட்டு நீ படுத்துக்கொள்! இப்போது கொஞ்சம் சுகமாக உள்ளது! நான் தூங்கிவிடுவேன்! என்று தன் தம்பியிடம் கூறியுள்ளார். அதுவே கடைசியாகப் பேசிய பேச்சு. அண்ணன் மறுபடியும் மல்லார்ந்து படுத்துக் காலை நீட்டிக்கொண்டு படுத்துக் கண்ணைமூடித் தூங்க ஆரம்பித்தாராம். தினமும் அவருக்கு பிளாஸ்கில் வெந்நீர் ரயிலில் வைத்து இருப்பாராம். அப்போது யோசித்தாராம். ஏன் அண்ணன் சட்டை, வாசு, மோதிரம் எல்லாம் கழற்றிக் கொடுத்துவிட்டார் என்று யோசித்தாராம். அவருக்கு ஒன்றும் புரியவில்லையாம். மணி 3 ஆகிவிட்டது.

தன் அண்ணன் நன்றாக அயர்ந்து தூங்குவது தெரிந்ததாம். உடனே இரவெல்லாம் சரியாக தூங்காமல் இருந்தார். இப்போது தான் அண்ணன் தூங்குகின்றார் என்று நினைத்து இவரும் கீழேபடுத்துத் தூங்க ஆரம்பிக்கின்றார். அப்படியே நன்றாக அயர்ந்து தூங்கிவிட்டாராம். சரியாக 4 மணிக்கு என் தந்தை மீளாத் தூக்கத்தில் அயர்ந்து தூங்கிவிட்டு



இருக்கின்றார். யாருக்கும் தெரியவில்லை. காலை 6 மணி ஆகி இருக்கின்றது.

ஊ.வ.தட்சணாமூர்த்தி முதலியார் முதலில் எழுந்து கண் விழித்திருக்கின்றார். என் தந்தையின் அடுத்த பக்கம்தான் அவர் இருக்கை! அவர் எழுந்து பார்த்ததும் வியப்பாக இருந்ததாம். வழக்கமாக, ஏ.எஸ்.ஏ. சிவனடியார் போல உட்கார்ந்து இருப்பாராம். ஊதுவத்தி வாசனை அந்த இடம் முழுவதும் கம கம என்று வீசுமாம். அந்தக் காட்சியே இல்லை! ஏ.எஸ்.ஏ. மல்லார்ந்து படுத்திருக்கின்றார். தூங்குகின்றார். அவர் தம்பி கால்மாட்டில் தூங்குகின்றார். என்ன ஆச்சு? ஏ.எஸ்.ஏ.வுக்கு உடம்பு சரியில்லையா? இன்னும் எழுந்திருக்கவில்லையே! என்று நினைத்து அருகில் சென்று முதலில் வெள்ளைக்கண்ணுவை எழுப்புகின்றாராம். 'என்னப்பா உங்க அண்ணன் இன்னும் விழித்தெழவில்லை. உடம்பு சரியில்லையா? எழுப்பு?' என்றாராம். அப்போதுதான் என் சித்தப்பா அலறி எழுந்து அவர் இரவு முழுவதும் தூங்கவில்லை 3 மணிக்கு தூங்கினார் என்று அவரிடம் கூறிவிட்டு மெதுவாக 'அண்ணா' 'அண்ணா' என்று கூப்பிட்டாராம். 'அவர் நன்றாக தூங்குகின்றார் தூங்கட்டும்' என்று தட்சணாமூர்த்தி முதலியாரிடம் கூறுகின்றாராம். அதற்கு அவர் இல்லப்பா! இவ்வளவு நேரம் அவர் தூங்கமாட்டார்!' என்று எழுப்புப்பா! உடல் நலம் சரியில்லை என்றால் மருந்து கொடுக்கலாம்!' என்று கூறுகின்றாராம்.

சித்தப்பா அண்ணனைத் தொட்டு 'அண்ணா, அண்ணா' என்று உடலை அசைக்கின்றார். அவர் உடல் அசையவில்லை. ஆம்! எல்லோரையும் விட்டு விட்டு 17.7.1972 திங்கள் அன்று இறைவனடி சேர்ந்து விட்டார். நெற்றியில் விபூதி சந்தனம் கலையவில்லையாம். அமைதியாகச் சிரித்தமுகத்துடன் கண்களை மூடி தூங்கிக்கொண்டு இருப்பதுபோல் இருந்ததாம். மீளாத் தூக்கத்தில் இருக்கின்றார்.

அனைவரும் எழுந்து கொண்டு சொல்லமுடியாமல் அழுது புலம்புகின்றார்களாம். என்ன செய்வதென்று புரியவில்லையாம். அப்போது ரயில் சமஸ்த்திப்பூர் ஸ்டேஷனை வந்தடைகின்றதாம். இவர் விடியற்காலை ரயிலில் தூங்கும் போதே உயிர்பிரிந்திருக்கின்றது என்று சொல்கின்றார்கள். டூரிஸ்ட் கைடு ஏற்பாடு பண்ணி சமஸ்த்திப்பூரில் இவர்கள் பெட்டி கழற்றிவிடப்பட்டு நிறுத்திவைக்கப்பட்டதாம்! அனைவரும் மிகவும் மனவேதனை அடைந்து அழுது புலம்பியிருக்கின்றார்கள். எல்லோரும் பக்கத்து அறைக்குச் சென்று ரயிலில் உட்கார்ந்து கொண்டார்களாம். என் தந்தையின் உடல் ரயில் பெட்டியில் சீட்டில் இருக்கின்றது. என் சித்தப்பா தலைமாட்டில் உட்கார்ந்து ஊதுவத்தி ஏற்றி வைத்துக்கொண்டு இருந்தாராம். குமுறி அழுகின்றாராம். 'எனக்கு ஒன்றும் தெரியாது! நான் கிராமத்து மனுஷன் என் அண்ணன் என்னைத் தனியாக விட்டு, விட்டுச் சென்று விட்டார். என் மகனுக்கு சொல்லுங்கள்!'' என்று கதறுகின்றாராம். எல்லோரும் கொஞ்சம் தள்ளியே இருப்பார்களாம். ஆனால் தட்சணாமூர்த்தி முதலியார் மட்டும் என் தந்தையின் அருகில் அமர்ந்து இராமலிங்க சுவாமிகளின் திரு அருட்பா படித்துவிட்டுச் செல்வாராம்.

என் சித்தப்பா ''அவர் மட்டும்தான் மிகுந்த மரியாதையுடனும் பய பக்தியுடனும் எங்க அண்ணனைக் கவனித்தார்!'' என்று கூறுகின்றார். உடனே வேலூர்க்குத் உடன் சென்றவர்கள் தந்தி கொடுக்கின்றார்கள். ''ஏ.எஸ்.ஏ. மரணம்! உடனே புறப்பட்டு வரவும்!'' என்று தந்தி கடைக்கு வருகின்றது. அன்று ஆடி செவ்வாய் தோட்டப்பாளையத்தில் ராஜம் கூழ் ஊற்றிச் சாமி கும்பிடுவதால் எங்களை அழைத்து இருந்தார்கள். நான், என் அண்ணன், அண்ணி, குழந்தைகள் மதியம் பூஜையில் கலந்துகொண்டு சாப்பிட்டோம். என் கணவர் கே.வி. குப்பம் கிளினிக் சென்று விட்டார். அவர் வரவில்லை. என் அண்ணன் 1 மணிக்குச் சாப்பிட்டுவிட்டு கடைக்குக் கிளம்பிவிட்டார். அண்ணி அலமேலு, நான், குழந்தைகள் மட்டும் ராஜம் வீட்டில் இருந்தோம். சாப்பிட்டு எல்லோரும் தமாஷாகப் பேசிக்கொண்டு இருந்தோம். மாலை 4 மணியிருக்கும் ராஜம் காபிபோட்டு எடுத்து வந்து எங்களுக்கு கொடுக்கின்றார். காபியை வாங்கக் கையை நீட்டுகின்றோம். அப்போது என் மாமா-ராஜம் கணவர் வி.ஓ. கோவிந்தசாமி தலைமேல் அடித்துக்கொண்டு ஓடி வந்து அழுகின்றார்.



''யாத்திரை சென்ற மாமா சீரியஸ்ஸாக இருக்கின்றாராம். தந்தி வந்துள்ளது என்று எனக்கு போன்வந்தது!'' என்று விம்மி, விம்மி அழுகின்றார். நாங்கள் யாரும் காபி குடிக்கவில்லை. நானும், அண்ணி அலமேலுவும் அழுது கொண்டே ஓடுகின்றோம். தோட்டப்பாளையத்தில் இருந்து லாங்கு பஜார் கடைக்கு-பேக்கரிக்கு-வருகின்றோம். கடை ஷட்டர் பாதி மூடி உள்ளது. தெருவில் ஜனங்கள் திரளாக உள்ளனர். ஒன்றுமே புரியவில்லை. அப்பாவுக்கு என்னவோ தெரியவில்லையே! என்று கடைக்குள் ஓடுகின்றோம். அங்கு பரமசிவம், நீலகண்டன் அண்ணன் இருவரும் தேம்பித் தேம்பி அழுது கொண்டு இருக்கின்றார்கள். என்னைப் பார்த்ததும் அதிகம் அழுகின்றார் அண்ணா! ''அண்ணா! நைனாவுக்கு என்ன? ஏன் அழுகின்றீர்கள்? உடம்புக்கு என்னவாம் சொல்லுங்கள் அண்ணா? என்று அழுகின்றேன். அப்பா இறந்துவிட்டார் என்று தந்தி வந்துள்ளது என்று கூறுகின்றார். என் தலைமேல் இடி விழுந்தது போல் உள்ளது. 'நைனா, நைனா' என்று கதறி அழுகின்றேன். அண்ணன், 'நீங்கள் இருவரும் வீட்டிற்குப் போங்கள். நான் கடையை மூடிவிட்டு வருகின்றேன்! என்றார். நானும் அண்ணியும் கதறி அழுதுகொண்டே வீட்டிற்குச் செல்கின்றோம். தெரு முழுக்க திரளான மக்கள் வீட்டின் முன்னும் நின்று கொண்டிருக்கின்றார்கள். வீட்டிற்குச் சென்று கதறி, கதறி அழுகின்றோம். அண்ணன் வருகின்றார்.

அண்ணா, ‘நைனா நன்றாகத் தானே போனார்; நமக்கு அடிக்கடி கடிதம் எழுதிக்கொண்டிருந்தார், நான் நன்றாக இருக்கின்றேன் என்று தானே எழுதியிருந்தார்.


இன்னும் 4 நாளில் வரப்போகின்றேன் என்று எழுதியிருந்தாரே! நம்ம இரண்டு பேரும் கார் எடுத்துக்கொண்டு போய் அழைத்து வரலாம் என்று பேசிக்கொண்டோமே அதற்குள் எப்படி அண்ணா அப்பா இறந்தார்! நிச்சயமா அப்பா இறந்துவிட்டாரா? சொல்லுங்கண்ணா!'' என்று அழுகின்றேன் ‘ஆமாம்மா’ அப்பா ஹார்ட் அட்டாக்கில் இறந்துவிட்டதாகக் கூறினார்கள். இப்போது பாட்னாவில் இருக்கின்றார்களாம். நான் பாட்னா போய் அப்பாவை எடுத்துவரவேண்டும் என்று கூறினார். நானும் வருவேன் என்னையும் அழைத்துப்போங்கள்! என்று அழுகின்றேன். கே.வி. குப்பத்திற்கு என் கணவருக்கு போன் மூலம் விஷயம் சொல்லியிருக்கிறார் என் அண்ணன். உடனே டாக்டர் குமரகுரு வந்து அவரும் தலைமேல் அடித்துக்கொண்டு கதறி அழுகின்றார். அவரைச் சமாதானம் செய்துவிட்டு உடனே புறப்படத் தயாராகின்றார்கள். என்னை, ‘‘நீ பெண் பிள்ளை! நீ இங்கேயே இரும்மா! தொலைதூரப் பிரயாணம்! நாங்கள் மூன்று பேரும் (அதாவது பரமசிவம், நீலகண்டன், குமரகுரு) சென்னைக்குக் காரில் சென்று அங்கிருந்து பிளேனில் சென்று வருகின்றோம்!'' என்று கூறி என்னை அண்ணனும், என் கணவரும் சமாதானம் செய்து விட்டுக் காரில் உடனே ஒரு மணி நேரத்தில் கிளம்பிவிட்டார்கள். இவர்களுடன் எங்கள் குடும்ப நண்பர் வீரராகவன் அய்யர் உடன் சென்று சென்னையில் பிளேன் ஏற்றிவிட்டு வருகின்றேன் என்று உடன் சென்றார். மூன்று பேரும் அழுது கொண்டு செல்வதால் தானும் வருகின்றேன் என்று உடன் சென்று சென்னையில் ஏர்போர்ட்டில் டிக்கட் வாங்க உதவி செய்து இருக்கின்றார். மூன்று டிக்கட் தான் எப்படியோ கஷ்டப்பட்டு வாங்க முடிந்ததாம்.



அண்ணன் அய்யரையும் உடன் அழைத்துச் செல்ல டிக்கட் கேட்டார்; எவ்வளவோ முயன்றும் டிக்கட் கிடைக்கவில்லையாம். உடனே டாக்டரே, நான் இங்கு நின்று விடுகின்றேன்: நீங்கள் அவர்களுக்குத் துணையாக சென்று வாருங்கள்! என்று சென்னையில் நின்று விட்டார். காரணம் அய்யர்க்குத் தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, இந்தி, மலையாளம், மொழிகள் தெரியும், இந்தி மிகத் தெளிவாகத் தெரியும். மேலும் அவர் டில்லி வரை பலமுறை சென்று இருக்கின்றாராம். அதனால் குமரகுரு ‘‘நீங்களே மைத்துனருடன் சென்று வாருங்கள்!'' என்று சொல்லி வழி அனுப்பிவிட்டு சென்னையிலேயே காத்திருக்கின்றார். சென்னைக்கு என் தந்தையின் உடல் வந்ததும் உடன் வருவதற்காக தங்கியிருக்கின்றார். பகல் முழுவதும் ஏர்போர்ட்டில் இருப்பாராம். இரவு சென்னை ஷெனாய் நகரில் மு.வ. வீட்டில் சென்று தங்கிவிடுவாராம். மு.வ.மகன் டாக்டர் அரசு குமரகுருவின் கூடப் படித்த நெருங்கிய நண்பர். அதனால் அவர் வீட்டில் தங்கினார். வேலூரில் எல்லா ஊர்களில் இருந்தும் உறவினர்கள் வந்து கூடிவிட்டனர். வெளியூர், உள்ளூர், சென்னை, பெங்களூர், மற்ற தொலைதூரத்தில் இருந்தும் செய்தித்தாள்கள் பார்த்து வந்து விட்டார்கள். வட ஆர்க்காடு மாவட்டம் முழுவதும் உள்ள கிராமத்து மக்களும் திரளாக வந்து விட்டனர். எங்கள் தெரு முழுவதும் எல்லா வீட்டுத் திண்ணையிலும் மக்கள் நிரம்பி வழிந்தனர். மூன்று நாட்களாக ஜனங்கள் காத்துக்கிடந்தனர்.

ஏ.எஸ்.ஏ. என்ற அந்த உத்தமர் - கொடைவள்ளல் - ஏழைகளின் பங்காளன் - எப்போது வருவார்? அவர் முகத்தைப் பார்க்கவேண்டும். அவருக்கு நாம் இறுதி அஞ்சலி செலுத்தவேண்டும் என்று அவ்வளவு துக்கத்தோடு சாப்பாடு இல்லாமலும், தூக்கம் இல்லாமலும், வழிமேல் விழிவைத்துக் காத்திருந்தனர். அந்த அந்த வீட்டுத் திண்ணை மேல்

அப்படியே படுத்துக் கொண்டார்கள். அவர்மீது அவ்வளவு அன்பு கலந்த பாசம் மக்களுக்கு குமரகுருவுக்கு அண்ணன் அவ்வப்போது போன் பண்ணுவார். இவர் வீட்டிற்குப் பண்ணுவார் இப்படியாக மூன்று நாள் கடந்துவிட்டது. இவ்விடம் உடலை எரிப்பதற்காக மயானத்திலும் ஏற்பாடு செய்துவிட்டார்கள். மாலை 4 மணிக்குத் தகவல் வருகின்றது சென்னை வர விமானம் கிடைக்கவில்லை. அவ்விடம் மேகமூட்டம் அதிகமாக உள்ளது. அதனால் கங்கைக் கரையில் பாட்னாவில் தகனம் செய்துவிட்டு வருகின்றோம்!'' என்று கூறினார்களாம். இந்தச் செய்தியைக் குமரகுரு சென்னையில் இருந்து எங்களுக்கு தெரிவித்து விட்டு அவர் புறப்பட்டு வேலூர் வருகின்றார்.



*வள்ளலின் நினைவாஞ்சலி*



இந்தச் செய்தியைக் கேட்டு எங்கள் வீட்டில் அனைவரும் கதறுகின்றோம். கடைசி முறையாக அவர் முகத்தை பார்க்கமுடியவில்லையே!'' என்று நான் துடித்துப் போனேன். கூட போகாமல் போய்விட்டேனே!' அண்ணன் அழைத்துப்போகாமல் ஏமாற்றிவிட்டாரே! அவருக்கு மட்டும் கடைசியாக பார்க்கும் வாய்ப்பு கிடைத்ததே!' எனக்கு கிடைக்கவில்லையே!' நான் எங்க அப்பாவுக்குப் பையனாகப் பிறந்து இருந்தால் என்னை அழைத்துப்போய் இருப்பார்களே! 'நைனா, நைனா' உன்னை மீண்டும் எப்போது காண்பேன்? என்று அழுகின்றேன். எல்லோரும் சமாதானப் படுத்துகின்றார்கள். வெளியில் இருந்த நண்பர்கள் அனைவரும் வீட்டிற்கு உள்ளே வருகின்றார்கள். அப்பா இறந்த செய்தி கேட்டதும் வீட்டு ஹாலில் டேபிள் மீது அவர் படம்வைத்து மாலைபோட்டு விளக்கு ஏற்றி-ஊதுபத்தி ஏற்றி-தேங்காய் உடைத்து-வைத்து இருந்தோம். எல்லோரும் உள்ளே வந்து அவர் படத்தைப் பார்த்துக் கதறிக் கதறி வாய் விட்டு அழுது விட்டுச் சென்றார்கள். இன்றும் என் நினைவில் உள்ளது. பாத்திரக் கடை அண்ணாமலை முதலியார்-பெண்களைப் போல கேவிக் கேவி அழுதார். பிறகு எங்கள் உறவினர்கள், நண்பர்கள், குமாஸ்தாக்கள் அனைவரும் ஈமக்கிரியைக்குத் தயாராக வாங்கிவைத்த அனைத்துப் பொருட்களையும் ஒரு வண்டியில் ஏற்றிக் கொண்டு மக்கள் கொண்டு வந்த பூமாலைகள் ஒரு பெரிய லாரி ஆனது, எங்க அப்பாவின் படம் ஒரு வேனில் முன்புறம் கட்டி மாலைபோட்டு அது முன்னேபோக பின்னால் எல்லாம் போக மக்கள் அனைவரும் ஊர்வலமாக மயானத்தில் அவற்றை வைத்து விட்டு அஞ்சலி செலுத்தினார்களாம். பிறகு எல்லோரும் அவரவர்கள் தங்கள் ஊருக்குக் கலைந்து சென்றார்கள் என்று கூறினார்கள். எங்கள் வீட்டில் அனைவரும் குளித்து விட்டு வந்து 'அப்பா படம் முன்பு உட்கார்ந்து இருப்போம்; பித்து பிடித்தவர்கள் போல் இருப்போம்; எல்லோரும் வந்து வந்து

துக்கம் விசாரித்து விட்டுச் செல்வார்கள். எங்க அண்ணன் எப்போது வருவார் என்று காத்திருந்தோம். அண்ணனும் மூன்று நாள் கழித்து வந்தார்கள். சென்னைக்கு என் கணவர் கார் எடுத்துச் சென்று அழைத்து வந்தார். வீட்டிற்கு என் அண்ணன் பரமசிவம், நீலகண்டன் அண்ணன், பெரியவர் வீரராகவன் அய்யர் மூவரும் உள்ளே வருகின்றார்கள்.

ஏற்கனவே வீட்டில் பெரியவர்கள் என்னிடம் கூறியிருந்தார்கள். அண்ணனை பார்த்ததும் ஆவேசமாக எதுவும் கேட்டுவிடாதேம்மா! நீ அப்பாவை நேரில் பார்க்கவில்லை என்று எல்லோரையும் விட அதிகதுக்கத்தில் இருக்கின்றாய்! அண்ணன் மனம் கஷ்டப்படும்! நிதானமாக அவரை உடலைக் கொண்டு வராத காரணத்தைக் கேட்கலாம் என்று கூறினார்கள். அவ்வாறே நான் சோகமே உருவாக இருந்தேன். அண்ணனைப் பார்த்துத் தேம்பித் தேம்பி அழுகின்றேன். அவர்களும் எங்களைப்பார்த்து அழுகின்றார்கள்.

பிறகு அவர்களைக் குளித்துவிட்டு வரச்சொல்லி சாப்பாடு போட்டு முடிந்ததும் எல்லோரும் ஹாலில் உட்கார்ந்து கொண்டோம். எங்கள் குடும்பம் முழுவதும் பேரன் பேத்திகள் அனைவரும் கூடினோம். அண்ணன் அழுதுகொண்டே சொல்கின்றார்: ''நாங்கள் மூவரும் செல்கின்றோம். பாட்னா ரயில் ஸ்டேஷனில் இருந்து கொஞ்சம் தள்ளி அவுட்டரில் இவர்கள் பெட்டி நின்று கொண்டு இருக்கின்றது. உடன் சென்றவர்கள் ரயில்வே ஸ்டேஷனில் அண்ணனிடம் விஷயத்தைச் சொல்லிவிட்டு அதோ அந்தக் கடைசி இடத்தில் ரயில் பெட்டியில் உன் தந்தை உடல் உள்ளது.

உன் சித்தப்பா அங்கு இருக்கின்றார் என்று கூறிவிட்டு எல்லோரும் புறப்பட்டு விட்டார்களாம். அந்த ரயில் தண்டவாளத்தில் மூன்று பேரும் நடந்து செல்கின்றார்கள். மாலை 6 மணி இருட்டு நெருங்குகின்றதாம். கதிரவன்



மறைகின்றானாம். அந்த ரயில் பெட்டியில் என் தந்தை அமைதியாக உறங்குவது போல் இருந்தாராம். நெற்றியில் விபூதி சந்தனப்பொட்டு அப்படியே அழியாமல் இருந்தன. முகத்தில் எந்த வாட்டமும் இல்லை; வாடாமல் - வதங்காமல் - முகம் பொலிவுடன் தூங்குவது போல் இருந்ததாம். அப்பாவைப் பார்த்து என் இரு அண்ணன்களும் கதறி அழுதார்களாம். நம் அப்பா இப்படித் தன்னந்தனியாக அநாதையாக இந்தப் பெட்டியில் உள்ளாரே என்று வருத்தமாக நினைத்தோம். சித்தப்பா அங்கு அப்போது இல்லை. அப்பொழுதுதான் கையில் பூ. ஊது வத்தி, கற்பூரம் வாங்கிக் கொண்டு ஓடி வருகின்றார்களாம். அவரும் இவர்களைப் பார்த்து கட்டிப்பிடித்து அழுதாராம். வீரராகவ அய்யர்தான் எல்லோரையும் சமாதானப்படுத்தி ஆகவேண்டிய வேலைகளைப் பார்க்கலாம் என்று கூறிவிட்டு ஒரு வாடகைக்கார் பேசி உடலை ஆஸ்பிட்டலுக்கு எடுத்து சென்றுள்ளார்கள்.

*வள்ளலின்*
*தம்பி*
*வெள்ளைய கவுண்டர்*

எங்க சித்தப்பாவை மூவரும் யாத்திரை சென்றவர்களுடன் ரயிலில் வந்து விடுங்கள், சாமான்களுடன் என்று நிறுத்திவிட்டார்கள். டாக்டர்களும் இவர் முகத்தைப் பார்த்து நாங்கள் போஸ்ட்மார்ட்டம் செய்யவில்லை என்று கூறிச் செய்யவேண்டிய முறைகளை செய்து மரணச் சான்றிதழ் கொடுத்துவிட்டார்களாம். உடனே சவப்பெட்டிக்கு ஆர்டர் செய்து வாங்கி விட்டார்களாம். பாடியைச் சவப்பெட்டியில் வைத்து அவசரமாக ஏர்போர்ட்டுக்கு வந்து சேர்ந்தார்களாம். அன்று விமானம் நிறுத்தப்பட்டு விட்டதாம். அதிகமான மூடுபனி மேகங்கள் என்று காரணம் கூறினார்களாம். நாளைக்கு எப்போது புறப்படும் விமானம் என்று திட்டமாக முன் கூட்டியே சொல்ல முடியாது. நாளைக்குக் காலநிலவரப்படிதான் அறிவிப்போம் என்று சொன்னார்களாம். அப்போது அங்கிருந்தவர்கள் கூறினார்களாம். எல்லோரும் காசியில் இறந்தால் முக்தி என்று சொல்வார்கள். அப்படி இறக்க வாய்ப்பில்லாதவர்கள் அஸ்தியை இங்குக் கொண்டு வந்து கரைக்கின்றார்கள். இவர் புண்ணிய ஆத்மா காசியில் இறந்து இருக்கின்றார். இவ்விடமே தகனம் செய்தால் மிகுந்த புண்ணியம் என்று சொல்லியிருக்கின்றார்கள். வீரராகவ அய்யரும், ''நன்றாக யோசியுங்கள். எனக்கும் இவ்விடமே அடக்கம் செய்துவிடலாம் என்று தோன்றுகின்றது. இப்படி தடங்கல் வருவதும் இதற்காகத்தானோ என்று தோன்றுகின்றது. சவக்கிடங்கில் வைத்துப் பிறகு எடுத்துச் சென்று நாள் கடப்பதை விட இப்போதே இங்குத் தூய்மையாக அடக்கம் செய்துவிடலாம்!'' என்று சொன்னாராம். அண்ணன், ''வீட்டில் எல்லோரும் காத்திருப்பார்கள். அவர்களுக்கு என்ன சொல்வது?'' என்று தயங்கினாராம். பிறகு நம் அப்பா காசியில் இறந்தார். காசியிலேயே அடக்கம் செய்துவிடலாம் என்று முடிவு செய்து விட்டு அவ்வாறே உடலைக் காரில் ஏற்றிக் கொண்டு கங்கை கரைக்குச் சென்றார்களாம். விமானதளத்தில் இருந்து புறப்பட்டு பாட்னா கங்கைக்குச் செல்ல 3 கிலோ



மீட்டர் தொலைவில் செல்லும் போது திடீரென்று ஒரு சந்தில் இருந்து ராம்பஜனை கோஷ்டி முன்னால் செல்ல இவர்கள் கார் பின்னாலேயே சென்றதாம். கங்கை கரை தகன மேடைக்கு செல்லும் வழிக்கு அருகில் வரை அந்த பஜனை கோஷ்டியுடன் சென்று பாடியை இறக்கிவைத்து விட்டு எரிப்பதற்கு சந்தனக்கட்டை, நெய், கற்பூரம் மற்ற பொருட்கள் வாங்கி வந்து விட்டு இரண்டு அண்ணன்களும் நதியில் குளித்து விட்டு வந்தார்களாம். எரிக்கும் மேடை ஒன்று, இரண்டு, மூன்று என்று மூன்று தகன மேடையிருந்ததாம். இரண்டாவது, மூன்றாவது மேடையில் சவம் எரிந்து கொண்டு இருந்ததாம். முதல் மேடையில் யாரையோ எரித்து முடித்து - கழுவி விட்டு- அப்போது தான் காலியானதாம். இவர்கள் பெட்டியுடன் சென்றதும் முதல் மேடையில் உடலை வைக்கச் சொன்னார்களாம். அப்படியே வைத்து வெறும் சந்தனக் கட்டைகள் அடுக்கி முடித்துவிட்டு நெய் ஊற்றினார்களாம். பிறகு அண்ணன் மூன்று முறை வலம் வந்து கற்பூரம் ஏற்றி அப்பாவுக்குக் கொள்ளி வைத்தாராம். உடலை முழுக்க எரிந்து சாம்பல் ஆகும் வரை அவ்விடமே அமர்ந்து இருக்கின்றார்கள். அஸ்தி (சாம்பலை) ஊருக்கு எடுத்து வரலாம் என்று நினைத்துள்ளார்கள். அப்போது அந்த முதல் தகன மேடையில் எரியூட்டுபவன் இவர்களிடம் கூறியிருக்கின்றான்: உடல் முழுவதும் எரிந்து சாம்பல் ஆனதும் அப்படியே ஒரு அவுட்லைன் உருவம்படுத்து இருப்பது போல் தெரிந்ததாம். ஒரு சிறு எலும்பு துண்டுகூட இல்லையாம். முழு உடல் பஸ்பமாக இருந்ததாம்: இவர் மகா புண்ணியவான் என்று நினைக்கின்றேன். ஒரு எலும்பு கூட இல்லாமல் பூரணமாக சாம்பல் வந்துள்ளது. இந்த மேடை பெரிய, பெரிய தலைவர்கள் எரித்த இடம்! ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத் அவர்களை இங்கு தான் தகனம் செய்தார்கள். இந்த முதல் மேடை வேண்டும் என்று காத்திருந்து தகனம் செய்வார்கள். உங்களுக்கு வந்த உடனேயே இந்த மேடை காலியாக இவருக்கு கிடைத்தது

எல்லாம் இறைவன் வகுப்பது. அதனால் இவர் அஸ்தியை இங்கேயே இப்போதே கரைத்து விடுங்கள். இங்கிருந்து கொண்டு போய் மறுபடியும் இங்கு கொண்டு வந்து கரைப்பது தேவையில்லை என்று நினைக்கின்றேன். எல்லோரும் தெற்கில் கடைசியில் உள்ளவர்கள் கூட வடக்கே காசிக்கு வந்து அஸ்தி கரைக்கின்றார்கள்!'' என்று கூறியுள்ளார். இவர்களும் நன்கு யோசித்து நாம் நினைத்துக் கூட பார்க்கவில்லை இப்படி நடக்கும் என்று அவருக்கு, எல்லாப் புண்ணியமும் அவ்வாறே நடக்கட்டும்! என்று அஸ்தியைக் கங்கையில் இறங்கிக் கரைத்து விட்டார்களாம். எல்லாம் முடித்து விட்டு மன அழுத்தத்துடன் ஓட்டல் அறைக்குச் சென்றார்களாம்.

*



# இன்றும் வாழ்கின்றார்

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும் (கு.50)**

*'உலகத்தில் வாழ வேண்டிய அறநெறியில் நின்று வாழ்கின்றவர், வானுலகத்தில் உள்ள தெய்வமுறையில் வைத்து மதிக்கப்படுவார்.'*

**ந**ம் அப்பாவுக்கு எவ்வளவு சொந்தங்கள்-பந்தங்கள்-நண்பர்கள் இருக்க இப்படித் தன்னந் தனியாக அடக்கம் செய்யவேண்டியாகி விட்டதே என்று அண்ணன் வருத்தப்பட்டாராம். ஐயர் தான் ''நீ கொஞ்சமும் வருத்தப்படாதே! அப்பாவுக்கு இறைவனே காட்சி கொடுத்து யாத்திரையின் போது எதுவும் குறையில்லாமல் யாத்திரையை முடித்த பிறகு காசியில் மரணம் அடைந்து, காசியிலேயே தகனம் செய்து, அஸ்தியைக் கரைக்க எல்லாம் அமைவது அவன் செயலே! இது யாருக்கும்கிட்டாத வாய்ப்பு. எனக்கே நடப்பனவெல்லாம் வியப்பாக உள்ளது என்று கூறிச் சமாதனப்படுத்தினாராம். மூன்று பேரும் அப்பாவைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பார்கள். இரண்டு நாள் ஓட்டலிலேயே

தங்கிக் கொண்டு ஏர்போர்ட்டுக்குத் தொலைபேசி மூலம் தகவல் கேட்டுத் தெரிந்து கொண்டிருந்து பிறகு விமானம் புறப்படுகின்றது என்பதை அறிந்து உடனே சென்னைக்குப் புறப்பட்டு வந்து சேர்ந்தார்கள் என்று முழு விபரக் கதையையும் சொன்னார்கள். எங்கள் அனைவருக்கும் கொஞ்சம் ஆறுதலாக இருந்தது. பிறகு 5 நாள் கழித்து யாத்திரை சென்றவர்கள் ரயில் காட்பாடி வந்து சேர்ந்தது விடியற்காலை 5 மணிக்கு காட்பாடிக்குச் சென்று சித்தப்பாவை அழைத்து வந்தோம். சித்தப்பா எல்லோரையும் பார்த்து அழுதார். எங்க அண்ணனை விட்டு விட்டு நான் தனியாக வந்து விட்டேன் என்று சொல்ல நாங்களும் அழுகின்றோம். சித்தப்பா விடிந்ததும் குளித்து விட்டு வந்தார். அப்பாவின் பெட்டியைக் கொடுத்தார். பார்த்துப் பார்த்து அடுக்கி கொடுத்தனுப்பிய பெட்டியைப் பார்த்ததும் துக்கம் தாளமுடியவில்லை. அப்படியே வாங்கி பூஜை ரூமில் வைத்துப் பிறகு பிரித்துப்பார்த்தோம். அந்தப்பெட்டியில் 20 பனாரஸ் புடவைகள் இருந்தன. கலர் கலராக அழகாக இருந்தன. ஒவ்வொரு புடவை முந்தியிலும் பேனாவில் எழுதியிருந்தார். ஏ.எஸ்.ஏ. என்று கையெழுத்து போட்டு இருந்தார். நாங்கள் மறக்காமல் இருக்க கடைசியாகக் கையெழுத்து போட்டு அனுப்பியிருந்தார்.

அதைப்பார்த்து கண்கள் கலங்கின. உருத்ராட்ஷைமாலைகள், ஜபமாலைகள், கோவில் சாமி படங்கள், காசி தீர்த்தச் செம்புகள், கமண்டலம், விபூதி, குங்குமம், சந்தனம், கற்கண்டு, கோவில் பிரசாதங்கள், கட்டுக் கட்டாகக் காசி கயிறுகள் - அட்ஷதை - காய்ந்த உதிரிபுஷ்பங்கள் - இப்படி வாங்கி வைத்திருந்தார். பெட்டியைத் திறந்ததும் ஒரு தெய்வீக மணம் வீசியது. இதை உணர்ந்தோம். யார், யாருக்கு எது என்று சித்தப்பாவிடம் சொல்லியிருக்கின்றார். சித்தப்பா அழுதுகொண்டே எந்த, எந்தக் கோவிலில் வாங்கினார். இவைகள் யாருக்கு எது கொடுக்கவேண்டும் என்று சொன்னார்,



எல்லாவற்றையும் கூறினார். பிறகு 10ம் நாள் காரியம் வீட்டில் சிறப்பாக நடத்தப்பட்டது. காரியத்திற்கு எல்லோரும் வந்து கலந்து கொண்டார்கள். யாத்திரைக்கு உடன் சென்றவர்கள் எல்லாம் வந்து அழுதுகொண்டு 1 மாதமாக என் தந்தையுடன் பிரயாணம் செய்த - அனுபவங்கள் - அறிவுரைகள் - அவர்களிடம் அவர் அன்புடன் நடந்து கொண்டது எல்லாம் கூறி அழுதார்கள். வாரியார் சுவாமிகளும் வீட்டிற்கு வந்தார். எல்லோரும் அவரைப் பார்த்து அழுகின்றோம். அவர் அழுது நான் பார்க்கவில்லை. அன்று எங்கள் வீட்டில் அப்பா படத்தைப் பார்த்து அழுதுகொண்டே எங்களுக்கு ஆறுதல் கூறினார். எங்கள் அப்பாவின் அறைக்குச் சென்று சிறிது நேரம் உட்காருகின்றார். அடுத்த நாள் வேலூர் பாலாற்றங்கரையில் வாரியாரின் இரங்கல் கூட்டம் ஏற்பாடு செய்து இருந்தார் என் தமையனார். பெரிய பந்தல் போட்டு மேடை அமைந்திருந்தார்கள். சுமார் ஆயிரம் பேர் அன்று அங்கு கூடினார்கள். உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஆவலுடன் என் தந்தையின் இரங்கல் கூட்டத்தைக் காணவும் கேட்கவும் ஆர்வமுடன் இருந்தார்கள். எங்கள் குடும்ப சுவாமிகள் தந்தையைப் போன்ற வாரியார் சுவாமிகள் மேடையில் அமர்ந்து பேசுகின்றார். என் தந்தையின் பெருமைகள், அவரின் தொண்டுகள் அனைத்தும் உள்ளம் உருக, கண்களில் நீர்மல்க, தொண்டை அடைக்க விளக்கி மிக அழகாக எடுத்துரைத்தார். சுவாமிகள் கூறினார்:-

ஏ.எஸ்.ஏ. எனக்கு வலது கரம் போன்றவர். என்னுடன் எல்லாத் திருப்பணிகளிலும் பங்குபெற்றவர். அவரிடம் பொறுப்புகளை ஒப்படைத்துவிட்டு நான் மன நிம்மதியுடன் கதாகாலட்ஷேபத்திற்குச் சென்று வருவேன். அவர் திருப்பணியைத் திருப்திகரமாக முடித்துக் கணக்குகளை ஒரு பைசா தவறாமல் புள்ளி விவரத்துடன் கணக்கு எழுதிக் கொடுப்பார். ஒரு பைசா கூட அவருக்காகச் செலவு

எழுதமாட்டார். அவ்வப்போது பற்றக்குறைக்கு அவர் பணமே செலவழிப்பார். அதைக் கணக்கு காட்டி வாங்கமாட்டார். அப்பேர்பட்ட மாமனிதரை நாம் காணவே முடியாது. உத்தமமான - நேர்மையான - மனிதர்! எல்லோருக்கும் இந்த மரணம் கிடைக்காது. காசியில் அவருக்கு முக்தியை கொடுத்து இறைவன் அழைத்துக்கொண்டார். அவர் பூத உடல் மறைந்தாலும் அவர் புகழ் என்றும் மறையாது; அவர் மறைவு நம் அனைவருக்கும் பெரிய இழப்பாகும். இந்தத் துயரத்தை நம்மால் தாங்க முடியாமல் தவிக்கின்றோம். தெய்வத்துள் தெய்வமாக மறைந்த அந்த அருணாசலத் தெய்வம் விண்ணுலகில் இருந்து நம்மை ஆசீர்வதிக்கும். அவர் ஆன்மா சாந்தியடைய நாம் அனைவரும் மௌன அஞ்சலி செலுத்துவோம் என்று கூறினார். திரளான கூட்டமும் கண்ணீர் மல்க வாரியாரின் விரிவுரைகேட்டு அவருக்கு மௌன அஞ்சலி செலுத்தினார்கள். வள்ளிமலை தெப்பக் குளம் பணி ஏ.எஸ்.ஏ. முடித்து விட்டுச் சென்றதும் திறப்பு விழா செய்யாமல் இருந்தது. உடனே வாரியார் சுவாமிகள் வள்ளிமலை குளத்தின் அருகில் இரண்டு மேடை அமைத்து ஒருபுறம் ஏ.எஸ்.ஏ. சிலையும் - இன்னொரு புறம் வாரியார் சுவாமிகள் சிலையும் வைத்து 12-4-78 திருக்குளத் திறப்பு விழா நடத்தினார். அன்றும் ஏ.எஸ்.ஏ.வின் உயர்ந்த ஆன்மீகச் சேவைகளை உளம் நெகிழ எடுத்துரைத்தார்.

இன்னும் அந்த இணைபிரியா ஆன்மீகப் பெரியவர்களின் சிலைகள் வள்ளிமலையில் உள்ளன. ஏ.எஸ்.ஏ. வாலாஜா தீனபந்து ஆசிரமத்திற்குச் சென்று அங்குள்ள குழந்தைகளின் கல்விக்கும் சீருடைக்கும் நன்கொடை கொடுத்து வருவார். தீனபந்து ஆசிரமத்துக் குழந்தைகளுக்கு ஆண்டுக்கு ஒருமுறை சாப்பாடும் தாயார் பெயரில் வழங்கினார். ராமகிருஷ்ண மடம் - நாட்டறம்பள்ளி மடம் - இந்த இடத்திற்கு எல்லாம் அன்னதானம் ஏற்பாடு செய்திருந்தார்



என் தந்தை. என் தந்தை எந்த எந்த இடத்தில் ஏற்பாடு செய்து இருந்தாரோ அதெல்லாம் அப்படியே நடந்து வருகின்றது. என் தமையனார் ஏ.எஸ்.ஏ. பரமசிவமும் என் தந்தையார் பெயருக்கே எல்லாத் தர்மமும் செய்து வருகின்றார். தந்தை காட்டிய வழியே என் தமையனும் பின் தொடர்கின்றார்.

நானும் என்னால் முடிந்ததை என் தந்தை பெயரில் கொடுத்து வருகின்றேன். என் தந்தை இறந்து விட்டதாகவே எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால் அவர் படுக்கையில் படுத்துப் பார்க்கவில்லை. அவர் வியாதியினால் துன்பப் படுவதோ, இனி அவர் பிழைக்கமாட்டார் என்று டாக்டர்கள் சொல்லியோ-இது மாதிரி எதுவுமே நடக்கவில்லை. நல்ல திடகாத்திரமான உடலுடன் ஆரோக்கியமாக துரு, துரு வென்று இருந்து சிரித்த முகத்துடன் விடைபெற்றுச் சென்றார். என் தந்தை ரயிலில் ஏறி நின்று கொண்டு மேல்படியில் இருகரம் கூப்பி வணக்கம் செய்தார். அப்படியே ரயில் நகர்ந்தது. அந்த உருவம் தான் எனக்கு அப்படியே என் கண்முன் நிற்கின்றது.

எனக்கு ரொம்ப வருஷமாக, அப்பா ஊருக்குப் போய் இருக்கின்றார்; வருவார்; வருவார் என்று தான் ஞாபகம் இருந்தது. எனக்குக் கனவில் 3 மாதத்திற்கு ஒருமுறை வருகின்றார். நான் வீட்டில் இருப்பது போலவும் என் தந்தை தூய வெள்ளை கதர் ஆடையுடன் நெற்றியில் விபூதி பட்டையும், சந்தனப் பொட்டுடனும் சிரித்த முகத்துடன் வீட்டிற்குள் வருவார். நான் ஓடிப் போய் ''வாங்க நைனா'' எவ்வளவு நாள் ஆச்சு உங்களைப் பார்த்து நீங்க சீக்கிரம் வரவில்லையே? இனிமேல் போகாதிங்க நைனா! என்று கேட்பேன். அவர் ''உங்களையெல்லாம் பார்த்துவிட்டுப் போகலாம்னு வந்தேன்; எனக்கு அங்கே நிறைய வேலை உள்ளது! நான் போகணும்! என்று சொல்லுவார், உடனே மறைந்து விடுவார். உட்காருவதோ, சாப்பிடுவதோ எதுவும் இல்லை. கனவில் நான் ரொம்ப சந்தோஷமாக ''வாங்க

நைனா! வாங்க! என்று ஓடிப்போய் கூப்பிடுவேன்! இனிமேல் நீங்க போகக் கூடாது, நீங்கள் இல்லாமல் நல்லாவே இல்லை என்பேன். அதான் வந்துட்டேனே உங்களையெல்லாம் பார்க்க என்று, சொல்லுவார், உடனே மறைந்து விடுவார். அப்படியே நான் 'நைனா' என்று எழுந்து உட்கார்ந்து விளக்கு போட்டுப் பார்ப்பேன்.

சரியாக அதிகாலை 4.30 மணி கொஞ்ச நேரமாக அப்பாவைப் பார்த்த சந்தோஷமான திருப்தி, பிறகு அப்பாவை நினைத்துக் கொண்டே அவர் என்னுடன் பழகியது, பேசியது அப்படியே நினைவு கூர்ந்து படுத்திருப்பேன். பொழுது விடிந்து விடும். உண்மையாகச் சொல்கின்றேன். இதே மாதிரி தான் என் கனவில் என் தந்தை வருகின்றார். அவர் கருமமே கண்ணானவர். இறைவன் அவருக்கு மண்ணுலகில் செய்த வேலைகள் போதாது என்று விண்ணுலகிலும் அவருக்குப் பணி கொடுத்துள்ளார்போல் உள்ளது. மிக்க மகிழ்ச்சியாகச் சொல்லிவிட்டுச் செல்கின்றார். இறைவன் அவர் அருகில் வைத்துள்ளார் போல் உள்ளது என்று நான் பெருமைப் படுகின்றேன். அவர் மறக்காமல் வந்து பார்த்துவிட்டுச் செல்வது எனக்கு பெரும் ஆறுதலாக உள்ளது. அவர் பூத உடல் மறைந்தாலும் அவர் புகழ் என்றும் நிலைத்திருக்கும். அவரைத் தெரியாதவர்களே இல்லை. எங்கு சென்றாலும் ஏ.எஸ்.ஏ. மகள் என்று சொன்னால் ஒரு தனி மரியாதை. அவரைப் பற்றி எங்களுக்குத் தெரியாததை எவ்வளவோ பிறர் சொல்லிக் கேள்விப்பட்டோம். அவரால் பயன் அடைந்தவர்கள் - அவர் கூறிய நல்லுரைகள்-அவற்றைக் கேட்கும்போது என் தந்தையைப் பற்றி அளவில்லாத பெருமை ஏற்படுகின்றது. எத்தனை பிறவி எடுத்தாலும் அவருக்கே நான் மகளாக பிறக்க வேண்டும் என்று இறைவனை வேண்டுவேன். என் தந்தை படுக்கும்போது 'முருகா, முருகா, ஓம் நமச்சிவாயா' என்பார். இறைவா ''மறுபிறவி எனக்கு வேண்டாம். மரண



உபாதையில்லாத மரணத்தைக் கொடு!'' என்று வாய்விட்டுச் சொல்லுவார். நான் பக்கத்தில் இருந்து கேட்டிருக்கின்றேன்.

அவர் படுக்கும்போது கால்களை அழுத்துவேன். அப்போது இதைக் கேட்டிருக்கின்றேன். கொஞ்சம் நேரம் கழித்து, ''போதும்மா நீ போ! லைட்டு நிறுத்திவிட்டு போ!' என்பார். அப்பாவுக்குப் போர்வை போர்த்தி விட்டு அவர் சொன்னபடி செய்து விட்டு வருவேன். அவர் அடிக்கடி நான் வாழ்க்கையில் பட்டகஷ்டங்கள்-நான் எப்படி முன்னுக்கு வந்தேன்-இதையெல்லாம் ஒரு கதையாக எழுதினால் நோட்டு கொள்ளாது. பலருக்கு என் கதை முன்னுக்கு வரப்பயன்படும் என்று சொல்லியிருக்கின்றார். இதை என் காதால் கேட்டு இருக்கின்றேன்; அப்பா ஏன் இப்படி சொல்கின்றார்; என்று எனக்குச் சரியாகப் புரியவில்லை. ரொம்ப நாள் அவர் மறைவு எனக்குத் தாங்கமுடியவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக மனதை தேற்றிக்கொண்டு என் குடும்பத்தை கவனித்து அப்பாவின் அறிவுரைப்படி வாழ்க்கை நடத்தி வருகின்றேன்.

# இந்த நூல் பிறந்த கதை

வேலூர் ரோட்டரி கிளப்பில் என் அண்ணன் உறுப்பினராக இருந்தார். வேலூர் மாசிலாமணி முதலியார் விடுதியில் மாதம் ஒரு ஞாயிற்றுக்கிழமை திருக்குறள் விரிவுரை வாணியம்பாடி கவிக்கோ அப்துல் ரகுமான் பேசுவாராம். அந்தச் சமயம் என் தந்தையார் நினைவு நாள் வரவே அன்று சொற்பொழிவுக்கு வந்தவர்கள் அனைவருக்கும் ஸ்வீட், காரம், காபி, வழங்கப் பரமசிவம் ஏற்பாடு செய்துள்ளார்கள். உடன் நண்பர்கள் ''ஏ.எஸ்.ஏ.வை பற்றி அவர் நினைவு நாளாக இருப்பதால் சில வார்த்தைகள் பேசுங்கள்! அனைவரும் கேட்கட்டும்'' என்று சொன்னார்களாம். என் தமையனார் அவரே பேசியிருக்கலாம்!'' என்ன நினைத்தாரோ!'' எங்கள் வீட்டிற்கு வந்து ''மயிலு! நீ அப்பாவைப் பற்றிச் சுருக்கமாக நாலு வார்த்தை பேசும்மா! கவிக்கோ நிகழ்ச்சி நடக்கும்; நீ முதலில் பேசிவிடு!'' என்றார். எனக்கு முதலில் பயமாக இருந்தது. அண்ணன்தான் உற்சாகப்படுத்தினார். ''சும்மா நாலு வார்த்தை பேசும்மா! என்றார்.

என்னை அழைத்துக்கொண்டும் சென்றார். மாலை 4 மணிக்கு மாசிலாமணி முதலியார் விடுதியில் வெளித்திடலில் மேசை நாற்காலி போட்டிருந்தது கவிக்கோ. அப்துல்ரகுமான் வந்து உட்கார்ந்தார். பெஞ்சில் ஒரு 100 பேர் உட்கார்ந்து இருந்தார்கள். பிறகு 150 பேர் சேர்ந்தார்கள். எல்லோருக்கும் ஸ்வீட், காரம், காபி, வழங்கப்பட்டது. அனைவரும் சந்தோஷமாகச் சாப்பிட்டு முடிந்ததும் 4.30 மணிக்கு அமைதியானார்கள். முதலில், ஏ.எஸ்.ஏ.வைப் பற்றி அவர் மகள் மயிலாம்பிகை சில வார்த்தைகள் அவரது நினைவு நாளாக இருப்பதால் பேசுவார்கள் என்று சொன்னார்கள். என் அண்ணன் அருகில் வந்து, ''மயிலு! அப்துல்ரகுமான் மிகப்பெரியவர்; அவர் திருக்குறள் விரிவுரை ஒரு மணிநேரம் நடக்கும், மிக நன்றாகச் சொல்லுவார்; நீ சீக்கிரம் பயப்படாமல் நாலு வார்த்தை பேசி முடித்து விடு!'' என்றார். ''நானும் சரிங்க அண்ணா!'' என்று சொல்லிவிட்டு எழுந்தேன். பேராசிரியர் அப்துல்ரகுமானுக்கு முதலில் வணக்கம் கூறினேன். அவரும் பதிலுக்குப் புன்னகையுடன் வணக்கம் தெரிவித்தார். அண்ணன் என் தங்கை என்று அறிமுகப்படுத்தினார். என் தந்தையை மனதில் வணங்கினேன். பிறகு அவர் பிறந்தது முதல் இறந்தது வரை பேசிக்கொண்டே இருந்தேன். மடைதிறந்த வெள்ளம் போல் பேச்சு வருகின்றது. எல்லோரும் நிசப்தமாகக் கேட்டுக்கொண்டு இருக்கின்றார்கள்.



4.30 மணிக்கு ஆரம்பித்தது 5.30 மணி ஆனது, கதிரவன் மறைகின்றான். இருள் வருகின்றது. என் அண்ணன் போதும் கவிக்கோ பேசவேண்டும் என்று கூறினார். அப்போது கவிக்கோ சொல்கின்றார்; ''பொறுத்திருங்கள். அம்மையார் மிக அழகாகப் பேசுகின்றார்கள். சொல்ல வேண்டியதைச் சொல்லி முடிக்கட்டும்! நீ பேசும்மா!'' என்றார். நான் பேசிக்கொண்டே இருக்கின்றேன். மணி 6 ஆகி விட்டது. என் அண்ணன் என் எதிரில் நேராகப் பின்னால் நின்று கொண்டு கைக்கடிகாரத்தைக் காட்டிச் சைகை காட்டினார். ஒரு வழியாக அப்பாவின் கதையைப் பேசிமுடித்தேன். எல்லோரும் பலத்த கரகோஷம் செய்தார்கள். பிறகு கவிக்கோ அப்துல் ரகுமான் கூறினார். ''மிக

அழகாகப் பேசினீர்கள்; உன் தந்தையின் கதையை அவசியம் புத்தகமாக வெளியிடலாம்! நீங்கள் கதை எழுதுங்கள்'' என்று கூறினார். அவரிடம் நான் எனக்குக் கதை எழுதிப் பழக்கமில்லை! தெரியாது! என்றேன்! அதற்கு ''அவர் நீ எழுதும்மா! நான் உனக்கு திருத்தம் செய்து தருகின்றேன்!'' என்று கூறினார். வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷி பட்டம் பெற்றது போல் நான் நினைத்துக்கொண்டேன். பிறகு அவர் திருக்குறள் பேசிமுடித்தார். இரவு 7.30 மணி ஆனது. அவர் போகும் போதும் கண்டிப்பாகக் கதை எழுதும்மா என்று கையை உயர்த்தி ஆசீர்வாதம் செய்தார். அன்றுதான் நான் கதை எழுத வேண்டும் என்று நினைத்தேன். எப்படி திருவருள் கூட்டினது பாருங்கள். கூட்டம் முடிந்ததும் என் கணவர் குமரகுரு, வக்கீல் சமரசம், பேராசிரியர் திரு.செ. யோகசுந்தரம், இரா. சந்திரசேகரன் மற்றும் அனைவரும் மிகவும் நன்றாகப் பேசினீர்கள். உருக்கமாக உள்ளது பெரியவர் வாழ்ந்தது! கண்டிப்பாக, அவர் வரலாறு எழுதுங்கள் என்று கூறினார்கள். என்னையே என்னால் நம்பமுடியவில்லை. 'அப்படியா நன்றாகப் பேசினோம்' என்று வியப்படைந்தேன். எல்லாம் என் தந்தையின் ஆசீர்வாதம் என்று எண்ணினேன்.

வீட்டிற்கு வந்து மறுநாள் ஒரு நோட்டு எடுத்து வைத்துக்கொண்டு அப்பாவை மனதில் நினைத்து, என்னை ஆசிர்வதித்து நான் நன்றாக எழுத என் நினைவில் வாருங்கள்' என்று பிரார்த்தித்து எழுத ஆரம்பித்தேன். அவ்வாறு நினைத்து கைகள் எழுதும்போது, கண்களில் நீர் அழுகையாக வரும். நீர் மறைப்பதால் எழுதவே முடியாது. ஒரு பக்கம் எழுதிவிட்டு நிறுத்திவிடுவேன். கொஞ்சநாள் பிறகு மனதே தேற்றிக் கொண்டேன். என் சோம்பேறித்தனத்தால் கொஞ்சம் எழுதி விட்டு விட்டேன். சமரசம் ரோட்டரி மீட்டிங் போது இரண்டுமுறை கேட்டார். 'எழுதுகின்றீர்களா?' என்று! எழுதுகின்றேன்' என்று கூறுவேன். யோகப்பாவும் கேட்டார் 'எழுதுகின்றேன்' என்றேன். அதற்குள் அவர் காலமாகி விட்டார், நான் மகளிர் மன்றத் தலைவி, இன்னர்வீல் தலைவி, சமூக நற்பணிமன்றத் தலைவி இப்படிப் பல பொறுப்புகளை ஏற்றுக்கொண்டு குடும்பத்தையும் மருத்துவமனையையும் சமூக சேவையும் செய்வதால் என் கவனம் மாறிவிட்டது.



கதை எழுதுவதைச் சுத்தமாக மறந்துவிட்டேன். ஆனால் கடைசி வரையில் என்னை அன்போடு கேட்டுக்கொண்டு இருந்தவர் இரா. சந்திரசேகரன் அவர்கள்தான். எங்கு பார்த்தாலும் அப்பாவின் வரலாறு எழுதுகின்றீர்களா?' விடாமல் எழுதுங்கள் - கண்டிப்பாகப் புத்தகம் வெளிவரவேண்டும். முயற்சியை விடாதீர்கள்!' என்பார். சரி, சரி என்று சொல்லி அவர் கேட்ட அன்று வந்து இரண்டு நாள் எழுதுவேன். பிறகு அவர் மாதம் ஒரு தபால் கார்டு அனுப்புவார். கதை எழுதிக்கொண்டு இருப்பீர்கள் என்று நினைக்கின்றேன்; முயற்சியை விடாதீர்கள் ஆசிர்வாதம் என்று எழுதுவார். ஒவ்வொரு கடிதமும் ஆஸ்ப்பிட்டல் முகவரிக்கு வரும். அதை என் கணவர் வீட்டிற்குக் கொண்டு வந்து, கொடுத்து, ''நீ கண்டிப்பாக வரலாறு சீக்கிரம் எழுது! வெளியிடலாம்!'' என்று அன்பாகச் சொல்லிக்கொண்டு இருந்தார். பிறகு அவருக்கு கோபம் வந்துவிட்டது.

சந்திரசேகரன் தபாலைக் கொண்டு வந்து கொடுத்து ''அவருக்கு என்ன தலையெழுத்தா,? வேலை வெட்டி இல்லாமல் சும்மா இருக்கின்றாரா? உங்க அப்பாவின் மீது எவ்வளவு பற்று இருந்தால் இப்படி மாதம் ஒரு கடிதம் எழுதி உன்னை ஊக்குவிப்பார். நீ நிறைய வேலைகள் குறிப்பிட்டபடி நல்ல மாதிரி செய்கின்றாய்; அறிவேன்! ஆனால் வாழ்க்கை வரலாறு எழுதுவது என்று மனம் வைத்தால் அதற்காக ஒரு மணிநேரம் ஒதுக்கி வைத்து உட்கார்ந்து எழுதினால் முடிந்து விடும். பெரியவர் சொல்லிவிட்டுபோனது நடந்தால் அவர்

ஆத்மா சாந்தியடையும், பலபேர் பயனடைவார்கள். உனக்கும் நல்ல பெயர் கிடைக்கும். அவ்வளவுதான் சொல்வேன். உனக்கு சூடு, சொரணை, மனிதாபிமானம் இருந்தால் சீக்கிரம் எழுதி முடித்துவிடு! அந்தப் புத்தகத்தின் முழுச் செலவையும், நூல் வெளியீட்டு விழாவும் நானே என் சொந்த செலவில் பொறுப்பேற்றுச் செய்கின்றேன்!'' என்று கூறினார். அப்போதுதான் எனக்கு விழிப்பு வந்தது. மருமகப் பிள்ளையாக வந்தவர் எவ்வளவு விசுவாசத்துடன் சொல்கின்றார். நாம் தாமதப்படுத்திவிட்டோமே! என்று மனம் வருந்தினேன்.'' பிறகு எழுத ஆரம்பித்தேன்.

எழுதிக்கொண்டே இருக்கும்போது, என் உடன்பிறவா சகோதரி அவள் தந்தை திரு. யோகப்பாவின் வாழ்க்கை வரலாறு வெளியிட்டாள். நம் தந்தைக்குப் பின்னால் இறந்தவர். அவர் மகள் வெளியிட்டாள். நாம் இன்னும் வெளிடவில்லையே என்று ஆதங்கத்துடன் செ.யோ. நூற்றாண்டு விழாவில் என் தந்தையின் வரலாறு நானும் எழுதுகின்றேன். விரைவில் வெளியிடுவேன்' என்று கூறினேன். அன்று நான் பேசியதை கேட்ட திருப்பத்தூர் ஆர். சுவாமிநாதன் விழா முடிந்ததும் நீங்கள் நன்றாகப் பேசீனீர்கள். நான் வன்னியகுல ஆஸ்ட்டலில் படித்தவன். உங்கள் தந்தைப்பற்றி உணர்ந்தவன்-கேட்டவன்-நான். தயவு செய்து அவர் வரலாறு எழுதி வெளியிடுங்கள் என்று கூறி, அவரும் உடனே எனக்கு மாதம் ஒரு கடிதம் எழுதுவார். என் தந்தையைப்பற்றிய பல தகவல்கள் எனக்கு எழுதி ஞாபகப்படுத்தினார். கடைசியாக எங்கள் குடும்ப நண்பர் கோ.இருசன் அவர்கள் எங்கள் ஆஸ்ட்டலில் படித்தவர். என் தந்தையிடம் பழகியவர். அவரும் ஆர்வம் காட்டிச் சீக்கிரம் அவசியம் எழுதி முடியுங்கள் என்று கூறினார். இரத்தினகிரியில் உலகத் திருக்குறள் பேரவை மாநாடு நடந்தது. அப்போது தாமாகவே கேட்டார்; எழுதிவிட்டிருந்தால் கொடுங்கள். நான் தொகுத்துத்



தருகின்றேன். அச்சிற்குத் தொகுத்து-திருத்தம் பார்த்துத் தருகின்றேன் என்றார். எல்லாம் இறையருள் எனக்கு எப்படி கூடி வந்தது பாருங்கள். உடனே என் கணவரும் என் தமையனாரும் கவிஞர் இருசனிடமே கொடுக்கலாம். அவர் நம் பெரியவர் ஏ.எஸ்.ஏ.வை பற்றி நன்கு தெரிந்தவர்-புரிந்தவர்-பொருத்தமானவர்-என்று முடிவு செய்தார்கள். சகோதரர் கவிஞர், இருசனிடம் நான் எழுதிய இரண்டு நோட்டுக்கள்-ஏ.எஸ்.ஏ. வாழ்க்கை வரலாறு ஒப்படைத்தோம். எவ்வளவோ பணிகள் இருந்தும் அவர் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டு வாங்கிச் சென்றார். அவருக்கு என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

☆

## வள்ளல் தன் மகளுக்கு எழுதிய கடிதங்கள்